# CITRA VACAKAM

FORM IV & V

POTHU & CIRAPPU

K. S NAGARAJAN & A. ARULAPPAN

# சித்ரா வாசகம்

## நான்காம் படிவம்

### பொதுப் பகுதி

ஆசிரியர்கள் :
K. S. நாகராசன், M.A.,
விரிவுரையாளர், ஜெயின் கல்லூரி, சென்னை.
&
ஆபிரகாம் அருளப்பன், B.A.,
தமிழ்த்துறைத் தலைவர், அர்ச். சேவியர் கல்லூரி,
பாளையங்கோட்டை.

சித்ரா பதிப்பகம்
ஸ்ரீவைகுண்டம்

பதிப்புரிமை]

[விலை ரூ. 1-4-0

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

இப்பாட நூல் நான்காம் படிவம்—பொதுப்பகுதிக்கு உரியது. அண்மையில் கல்வித் துறையினர் வெளியிட்ட பாடத் திட்டத்தை ஒட்டி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பகுதியில் 400 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதியும், 50 பக்கங்களைக் கொண்ட உரைநடைப்பகுதியும் வேண்டும் என்று பாடத்திட்டம் விதித்துள்ளது. ஆனால், இங்கு அவ்வளவிற்கு மேலும் பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஆகவே, பயிலும் மாணவர்கள் தம் மன நிலைமைக்கும், ஆசிரியர் தம் விருப்பத்திற்கும் ஏற்றவாறு வேண்டிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள இந்நூல் இடமளிக்கிறது.

ஒவ்வொரு செய்யுட் பாடத்தின் தொடக்கத்திலும் ஆசிரியர், நூல் ஆகியவை பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியின் ஈற்றில் அருஞ் சொற் பொருள் தரப்பட்டுள்ளது. இவை மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

உரைநடைப் பகுதியில் பழந்தமிழ் உரைநடைக்கு எடுத்துக் காட்டாக ஒரு பாடமும், வாழும் தமிழுக்கு எடுத்துக் காட்டாகப் பேரறிஞர் பலருடைய எழுத்தோவியங்களும் காணப்படுகின்றன. விஞ்ஞானம், வரலாறு, பிரயாணம், இலக்கியம், சிற்பம், பொருளாதாரம் முதலிய பலதுறைகளைப் பற்றிய இன்தமிழ்க் கட்டுரைகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. இறுதியில் சுவை மிகுந்த நாடகம் ஒன்று தரப்பட்டுள்ளது. 'எக்கருத்தையும் தமிழில் செவ்வனே விளக்க முடியும்' என்ற நம்பிக்கை மாணவர் மனத்தில் தோன்ற இவை துணை புரியும் என்பதில் ஐயமில்லை. இவற்றைப் படிக்கும் மாணவர் தமிழறிவு பெறுவதுடன், தமிழின்பம் நுகரவும் இயலும். அதற்கு வேண்டிய முயற்சியில் மாணவர்களை ஊக்குவிக்குமாறு தமிழாசிரியப் பெருமக்களைப் பெரிதும் வேண்டுகிறோம்.

தத்தம் பாடல்களையும் உரைநடைப் பாடங்களையும் இந்நூலில் சேர்த்துக்கொள்ள இசைவு தந்துதவிய பெரியோர் அனைவர்க்கும் எமது நன்றி உரியது.

ஆசிரியர்கள்.

# உள்ளுறை

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | வாழ்த்துப் பகுதி | | |
| 1. | கலைமகள் | ... | 1 |
| 2. | சிவபெருமான் | ... | 2 |
| 3. | திருமால் | ... | 2 |
| 4. | இயேசுநாதர் | ... | 3 |
| 5. | முகம்மது நபி | ... | 4 |
| II | அறவுரைப் பகுதி | | |
| 1. | திருக்குறள் | ... | 5 |
| 2. | பழமொழி | ... | 8 |
| III | கதைப் பகுதி | | |
| 1. | குசேலோபாக்கியானம் | ... | 9 |
| 2. | பெரிய புராணம் | ... | 13 |
| 3. | இரட்சணிய யாத்திரிகம் | ... | 16 |
| 4. | வீரபாண்டியக் கட்டபொம்மன் | ... | 19 |
| IV | பல்சுவைப் பகுதி | ... | 22 |
| | குறிப்புரை | ... | 28 |


## உரைநடை


| | | | |
|---|---|---|---|
| 1. | சோலையில் தலைவி<br>இறையனார். | ... | 33 |
| 2. | முள்ளால் எழுதிய ஓலை<br>டாக்டர். உ. வே. சாமிநாதையர். | ... | 34 |
| 3. | இளமை விருந்து<br>திரு. வி. கலியாணசுந்தர முதலியார். | ... | 40 |
| 4. | ஆனந்தரங்கர்<br>பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை. | ... | 46 |
| 5. | சர்க்கரை<br>திரு. R. K. விசுவநாதன். | ... | 52 |
| 6. | நல்லுரை<br>திரு. N. D. சுந்தரவடிவேலு. | ... | 58 |
| 7. | இலண்டன்<br>சோம. லெ. இலக்குமணச் செட்டியார். | ... | 65 |
| 8. | பல்லவர் காலத்துச் சிற்பங்கள்<br>திருவாட்டி. R. ஜனாபாய் அம்மையார். | ... | 72 |
| 9. | சீறாப்புராணம்<br>ஜனாப். K. M. K. அப்துல் காதர். | ... | 76 |
| 10. | கூட்டுறவு இயக்கம்<br>திரு. K. S. நாகராசன் | ... | 81 |
| 11. | ஜப்பானைப் பார்<br>சுவாமி விவேகானந்தர். | ... | 86 |
| 12. | உழவப் புலவன்<br>திரு. வ. சு. ப. மாணிக்கம். | ... | 90 |

# I. வாழ்த்துப் பகுதி

## 1. கலைமகள்

### சி. சுப்பிரமணிய பாரதியார்

பாரதியார் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டில் தோன்றியவர். இளமை முதலே கவிபாடும் திறமை உடையவராக விளங்கினார். சென்னையிலும், பின்னர் புதுவையிலும் இருந்து பல்லாண்டுகள் தமிழுக்கும் தேசியத்துக்கும் சிறந்த தொண்டாற்றி வந்தார். 'பாட்டுக்கொரு புலவர் பாரதி' என்பது அறிஞர் வாக்கு. தமிழ்த்தாய்த் தோற்றுவித்த தலைசிறந்த கவிஞர்களிலே பாரதி ஒருவர்.

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
　　வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
　　கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
　　ஓது வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
　　கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (1)

மாதர் தீங்குரல் பாட்டி லிருப்பாள்
　　மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
　　கிளியி னாவை யிருப்பிடங் கொண்டாள்

கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள். (2)

## 2. சிவபெருமான்

### இராமலிங்க சுவாமிகள்

இராமலிங்க சுவாமிகள் 19-ஆம் நூற்றாண்டில் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் தோன்றினார். இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர். ஆயினும் எச்சமயமும் சம்மதம் என்னும் சமரச சன்மார்க்க நோக்குடன் விளங்கினார். ஆழ்ந்த கல்வியும் அளவிலா பக்தியும் கொண்டவர். இவர் அருளிய திருவருட்பா என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது.

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துள்ளுணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத் தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே!
வேர்த்தாவி மயங்காது கனித்தநறுங் கனியே!
மெய்ம்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே!
தீர்த்தாவென் றன்பரெலாம் தொழப்பொதுவில் நடிக்கும்
தெய்வநடத் தரசே! என் சிறுமொழியேற் றருளே.

## 3. திருமால்

### வில்லிபுத்தூர் ஆழ்வார்

இவ்வாழ்வார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் தோன்றியவர். இவர் வைணவ சமயத்தினர். இவர் வரபதியாட் கொண்டான் என்ற சிற்றரசனிடம் அரசவைப் புலவராக இருந்தார். அவன் வேண்டுகோளின்படி தமிழில் பாரதத்தில் முதல் பத்துப் பருவங்களைப் பாடினார். இவருடையகாலம் 14-ஆம் நூற்றாண்டு. அவர் இயற்றிய பாரதத்திலிருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது.

மீனாமை கோலநெடு நரசிங்க மாகி நிலம்
விரகா லளந்த குறளாய்
ஆறாது சிறுமழு வல்வில்லும் வெல்லுமுனை
அலமுற்ற செங்கை யவராய்
வானாடர் வந்துதொழ மண்ணாடர் யாவரையும்
வாழ்விக்க வந்த வடிவாய்
நானாவி தங்கொள்பரி யாளாகி நின்றருளும்
நாராயணாய நமவே.

## 4. இயேசு நாதர்

### -வீரமாமுனிவர்

இப்பாடல் தேம்பாவணி என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் ஆசிரியர் 'பெஸ்கி' என்னும் இயற்பெயர் கொண்டவர்; இத்தாலி நாட்டினர். கிருத்துவ சமயப்போதனைக்காகத் தமிழ்நாடு வந்த இவர் தமிழ்மொழியை நன்கு பயின்று சிறந்த புலமை பெற்றார். இவர் தேம்பாவணி என்னும் அரிய காப்பியத்தை எழுதியுள்ளார். அதை அரங்கேற்றியபொழுது, புலவர்கள் அவருக்கு 'வீரமாமுனிவர்' என்ற பட்டம் வழங்கினர். இவர் இயற்றிய பிறநூல்கள்: திருக்காவலூர் கலம்பகம், சதுர் அகராதி, வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குரு கதை முதலியன. இவர் விளங்கிய காலம் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

தேறுந் தயையின் முனிவோய் நீ
சினத்திற் கருள்செய் கனிவோய் நீ
கூறுங் கலையற் றுணர்வோய் நீ
கூறுந் தொனியற் றுரைப்போய் நீ
மாறும் பொருள் யாவிலும் நின்றே
மாறா நிலைகொள் மரபோய் நீ
ஈறுந் தவிர்ந்துன் புகழ்க்கட லாழ்ந்து
எனக்கே கரை காட்டருளாயோ!

## 5. முகம்மது நபி

### (உமறுப் புலவர்)

இப்பாடல் 'சீறாப் புராணம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. 'சீறா' என்னும் சொல் 'ஸீரத்' என்னும் அரபி மொழியின் திரிபு; வாழ்க்கை வரலாறு என்பது இதன் பொருள். இது நபிநாயகத்தின் வரலாற்றைக் கூறும் நூல். இதனைப் பாடியவர் உமறுப்புலவர். இவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எட்டயபுரத்தைச் சேர்ந்தவர். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவாய் வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

# II. அறவுரைப் பகுதி

## 1. திருக்குறள்

### திருவள்ளுவர்

*திருக்குறள் என்னும் நூல் 133 அதிகாரங்களைக் கொண்ட ஓரரும் நீதி நூல். ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட் பாக்கள் உள. உலக இலக்கியத்தில் சிறந்த ஓரிடத்தை இந்நூல் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் வள்ளுவக் குடியைச் சேர்ந்த வர். அரசனது ஆணையை முரசறைந்து மக்களுக்குத் தெரிவிப் போர் அக்குடியினர். இவர் மதுரையைச் சேர்ந்தவரென்றும் மயிலையைச் சேர்ந்தவரென்றும் வேறுபட்ட கொள்கைகள் உள்ளன. இப்பெரு நூலுக்குப் பதின்மர் உரை இயற்றி யுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சாலச் சிறந்ததாம். திருவள்ளுவர் கடைச்சங்க காலத்தவர்.*

### கடவுள் வாழ்த்து

*கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றா டொழாஅ ரெனின்.* (1)

### வான் சிறப்பு

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉ மழை.* (2)

### அறன்வலியுறுத்தல்

*அழுக்கா றவாவெஃகுளி யின்னாச்சொ னான்கும்*
*இழுக்கா வியன்ற தறம்.* (3)

### அன்புடைமை

*அன்பீனு மார்வ முடைமை அதுவீனும்*
*நண்பென்னும் நாடாச் சிறப்பு.* (4)

### விருந்தோம்பல்

*செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு.* (5)

### இனியவை கூறல்

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். (6)

### செய்ந்நன்றி யறிதல்

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (7)

### நடுவு நிலைமை

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. (8)

### அடக்கமுடைமை

தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு. (9)

### ஒழுக்கமுடைமை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும். (10)

### பொறையுடைமை

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. (11)

### தீவினையச்சம்

தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று. (12)

### ஒப்புரவறிதல்

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (13)

### ஈகை

சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை. (14)

### புகழ்

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். (15)

### அருளுடைமை

*வலியார்முற் றன்னை நினைக்க தான்றன்னின்*
*மெலியார்மேற் செல்லு மிடத்து.* (16)

### தவம்

*சுடச்சுடரும் பொன்போ லொளிவிடும் துன்பஞ்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.* (17)

### கூடாவொழுக்கம்

*கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன*
*வினைபடு பாலாற் கொளல்.* (18)

### வாய்மை

*வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்*
*தீமை யிலாத சொலல்.* (19)

### வெகுளாமை

*செல்லிடத்துக் காப்பன் சினங்காப்பான் அல்லிடத்துக்*
*காக்கிலென் ? காவாக்கா லென் ?* (20)

### இன்னா செய்யாமை

*தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ*
*மன்னுயிர்க் கின்னா செயல்.* (21)

### நிலையாமை

*நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்.* (22)

### துறவு

*யாதலின் யாதனி னீங்கியா னோதல்*
*அதனி னதனி னிலன்.* (23)

### அவாவறுத்தல்

*அஞ்சுவ தோரு மறனே யொருவனை*
*வஞ்சிப்ப தோரு மவா.* (24)

### இறைமாட்சி

*இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்*
*றான்கண் டனைத்திவ் வுலகு.* (25)

## 2. பழமொழி

### முன்றுறையரையனார்

'பழமொழி' என்னும் நூல் நானூறு வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொன்றின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருக்கும். இது மிகப் பழைய உரையாசிரியர்களாலும் எடுத்தாளப்பட்ட ஒரு நூல். இதன் ஆசிரியர் முன்றுறை என்னும் ஊரை ஆண்டு வந்த ஒரு குறுநில மன்னர். அவர் கடைச் சங்க காலத்தினர் என்று கொள்வது பொருந்தும்.

*உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்லென்னும்*
*கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் ;—கணக்கினை*
*முற்றப் பகலும் முனியா தினிதோதிக்*
*கற்றலிற் கேட்டலே நன்று.* (1)

*உரைமுடிவு காணான் இளமையோன் என்ற*
*நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்*
*சொல்லால் முறைசெய்தான் சோழன் ; குலவிச்சை*
*கல்லாமற் பாகம் படும்.* (2)

*முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்*
*தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்*
*நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப !*
*அறிமடமும் சான்றோர்க் கணி.* (3)

*கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்*
*விழுமியோன் மேற்சென் றதனால்,—விழுமிய*
*வேண்டினும் வேண்டா விடினும், உறற்பால*
*தீண்டா விடுதல் அரிது.* (4)

*பொலந்தா ரிராமன் துணையாகத் தான்போந்*
*திலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே*
*போந்திறை யாயதூஉம் பெற்றான் ; பெரியாரைச்*
*சார்ந்து கெழீஇயிலா ரில்.* (5)

# III. கதைப் பகுதி

## 1. குசேலோ பாக்கியானம்

### வல்லூர் தேவராசப் பிள்ளை

பாகவதத்தில் வரும் குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் இது. உப ஆக்கியானம்—கிளைக் கதை. இதன் ஆசிரியர் தொண்டை நாட்டினர்; கருணீகர் குலத்தினர்; மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்றவர்; சைவ சமயத்தவர். இவருடைய காலம் சற்று ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்னர் என்னலாம்.

எண்ணனைக் கிலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலமிடம் உறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான். (1)

காண்டலும் உவகை பூத்துக்
கால்விசை கொடுந டந்தான்
ஆண்டகை யவனுங் கண்ணுற்
றனையுடைத் தெழுநீத் தம்போல்
நீண்டபூம் பள்ளி நீத்து
நிலவுபே ரன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று
பொன்னடி வணங்கி னுைல். (2)

வழிநடந் திளைத்த வேயிம்
மலரடி யிரண்டும் என்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல
வருடினுன் கமலக் கண்ணன்;
பழியில்பல் லுபசா ரங்கள்
பண்ணவும் தெரியா னுகி
ஓழிவறு தவக்கு சேலன்
ஒன்றும்பே சாதி ருந்தான். (3)

மன்னுடைய மறையனைத்தும்
வகுத்துணர்ந்த மாதவனே!
உன்னுடைய தரிசனத்தால்
உடம்பூ ரித்தனன்யான்;
மின்னுடை ய விளங்கொளிவேல்
வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பேறு
யார்பெற்றூர்? யார்பெறுவார்? (4)

ஆயின்மறை முதற்கலைகள்
அனைத்துமுணர்ந் தறம்மறம்பாத்
தேயினிது நன்றிதுதீ
தென்றுணர்த்து மவர் நட்பை
வீயினுந்தான் மறப்பர்களோ
மேதையோர் மறப்பரேல்
நாயினுங்கீழ்ப் பட்டவர்கள்
அவர்காண் இந் நானிலத்தே. (5)

நல்லார் சொல் விரும்புவதும்
நல்லாரைக் காண்பதுவும்
நல்லார்க்கொன் றுதவுவதும்
நல்லாரைப் புகழ்வதுவும்
நல்லார்நன் றென்றுரைப்ப
நவிற்றிய இவ் வெலாமடங்க
நல்லார் நட் பென்றுமுறல்
நன்றன்றே நான்மறையோய்? (6)

பொன்னுள்ளான் பூமியுள்ளான்
புந்தியுள்ளான் ஆயிடினும்
என்னுள்ளான் ஆவனவன்
இருந்தவர்நட் பில்லானேல்?
பொன்னில்லான் பூமியில்லான்
புந்தியில்லான் ஆயிடினும்
என்னில்லான் ஆவனவன்
இருந்தவர்நட் புள்ளானேல்? (7)

பேயோடு பழகுறினும்
பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால்
தூயோரும் புகழ்தூயோய்
ஆயோர்கள் பெருநட்பை
அருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோஎண் மையிற்கிடைப்பின்
இகழ்வரோ இகழ்வில்லார் ? (8)

கூடுதற்குக் கூடாத
கூட்டத்துப் படுநட்பு
விடுதற்குத் தக்கதாய்
நாடோறும் மெலிந்தொழியும் ;
நீடுதற்குத் தக்கதுநன்
னெறிநின்றோர் நட்பொன்றே
தேடுதற்குக் கிடையாத
திரவியமும் அஃதாமால். (9)

முத்திக்கு வித்தாகும்
முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கும் நாடோறும்
தேவர்பெறற் கருந்திருவுஞ்
சித்திக்கும் படியருளும்
செப்பரிதால் அதுநிற்க
எத்திக்கும் புகழுநினக்
கியன்மணம்நன் காயிற்றே ? (10)

நின்னுடைய மனைக்கிழத்தி
நிரம்புபெரு நீர்மையளே ?
மன்னுடைய சொற்காத்துச்
சோர்விலா மாண்பினளே ?
தன்னுடைய வுயிராநின்
றனைப்பேணுந் தன்மையளே ?
உன்னுடைய வருவாய்க்குத்
தக்கசெல வுஞற்றுவளே ? (11)

பைங்குதலை வாய்மைந்தர்
பலர்பிறக்க வேண்டுமே ?
எங்குமரும் புகழுடையாய் ?
எத்தனைமைந் தர்கள்பிறந்தார் ?
அங்கவரைப் பேரவையோர்
அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கலறப் புரிந்தனையோ ?
செய்தனையோ உபநயனம் ? (12)

நள்ளார்கள் அண்மைக்கண்
இருந்தாலும் நட்புறுத்தார்
விள்ளார்கள் சேய்மைக்கண்
இருந்தாலும் விருப்பொழியார்
தள்ளாத பலபொருள்கள்
தனைச்சூழ இருந்தாலும்
உள்ளாத வன்கதிரை
உறநோக்கும் நெரிஞ்சியே. (13)

ஐயரீ குடியிருக்கும்
அணிநாட்டில் அதிகமழை
பெய்யுமழை யின்மைகிளி
விட்டில்முதற் பெருங்கேடு
வெய்யகொடுங் கள்வர்வன
விருகமுதற் பலகேடு
நையவினி துயிரெலாம்
நன்குதழைக் கின்றனவே ? (14)

இருவேழும் முன்னாளில்
இலங்குசாந் தீபமுனி
வருகாம ரடிவணங்கி
மாமறைகற் றுணர்ந்திடுநாள்
பெருகார்வத் தொடும்பேசிக்
கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகாரா வுளத்துனினைத்
திருக்கின்றாயோசிறப்ப ? (15)

## 2. பெரிய புராணம்

### சேக்கிழார் சுவாமிகள்

சேக்கிழார் சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர். அருண்மொழித்தேவர் என்பது இவரது இயற்பெயர். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனது முதல் அமைச்சராயிருந்தார். 'உத்தமசோழப்பல்லவர்' என்ற பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. தில்லை நடராசப் பெருமான் 'உலகெலாம்' என்று அடி எடுத்துத் தர, இவர் திருத் தொண்டர் புராணத்தைப் பாடி முடித்தார். நல்ல தமிழறிவும் சிறந்த பக்திச் சுவையும் நிரம்பிய இவருடைய நூல் தமிழ்க் காவி யங்களில் தலைசிறந்ததாக விளங்குகிறது. இவரது காலம் பதி னோராம் நூற்றாண்டு என்பர். கீழ் வரும் பாடல்கள் பெரிய புராணத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்திலிருந்து தொகுக்கப் பெற்றவை.

### அப்பூதியடிகள் சரித்திரம்

நாவுக்கு மன்னர்திரு நல்லூரின் நம்பர்பால்
மேவுற்ற திருப்பணிகள் மேவுறநா ளும்செய்து
பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்தொழுகிச் செல்லும்நாள், (1)

கருகாவூர் முதலாகக் கண்ணுதலோன் அமர்ந்தருளும்
திருவாரூர் திருப்பாலைத் துறைபிறவும் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு செய்துபெருந் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே உள்ளுருகிப் பணிகின்றார். (2)

ஆளுடைய நாயகன்தன் அருள்பெற்றங் ககன்றுபோய்,
வாளைபாய் புனல்பழனத் திருப்பழனம் மருங்கணைந்து
காளவிடம் உண்டிருண்ட கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிரவில் ஆடுவார் கழல்வணங்க நேர்பெற்றார். (3)

அப்பதியைச் சூழ்ந்ததிருப் பதியில்அர னார்மகிழும்
ஒப்பரிய தானங்கள் உள்உருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர் நாவினுக்கு வேந்தர்தாம் மேவினார்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகள்ஊர் திங்களூர். (4)

அந்தணரில் மேம்பட்ட அப்பூதி அடிகளார்
தந்தையுடன்சாலை கூவல்குளம் தருதண்ணீர்ப்
பந்தல்பல ஆண்டஅர செனும்பெயரால் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர் கேட்டு அவர்தம் மனைநண்ண, (5)

மற்றவரும் மனமகிழ்ந்து மனைவியார் மைந்தர்பெருஞ்
சுற்றமுடன் களிகூரத் தொழுதெழுந்து, சூழ்ந்துமொழிக்
கொற்றவரை அமுதுசெயக் குறைகொள்வார் இறைகொள்ளப்
பெற்றபெருந் தவத்தொண்டர் திருவுள்ளம் பெறப்பெற்றார்.(6)

காண்டகைமை இன்றியும்முன் கலந்தபெரும் கேண்மையினார்
பூண்டபெரும் காதலுடன் போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅர சமுதுசெயத் திருஅமுதாம் படியமைத்து, (7

திருநாவுக் கரசமுது செய்தருள, மற்றவர்தம்
பெருநாமம் சாற்றியஅப் பிள்ளைதனை அழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார். (8)

ஆங்கவனும் விரைந்தெய்தி, அம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப் புகுமளவில், ஒரு நாகம்
தீங்கிழைக்க, அதுபேணான் திருஅமுது செய்தருள
ஓங்குகதலிக் குருத்துக் கொண்டோல்லை வந்தணைந்தான். (9)

தீயவிடம் தலைக்கொள்ளத் தெருமந்து, செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினில்நீட்டித் தளர்ந்துதனைத் தழல்நாகம்
மேயபடி உரைசெய்யான் விழக்கண்டு, "கெட்டொழிந்தேம்
தூயவர்இங் கமுதுசெயத் தொடங்கார்"என் றதுஒளித்தார்.(10)

தம்புதல்வன் சவம்மறைத்துத் தடுமாற்றம் இலராகி
"எம்பெருமான், அமுதுசெய வேண்டும்"என வந்திறைஞ்ச
உம்பர்பிரான் திருத்தொண்டர் உள்ளத்தில் தடுமாற்றம்
நம்பர்திரு அருளாலே அறிந்தருளி, நவைதீர்ப்பார் : (11)

அன்றவர்கள் மறைத்ததனுக் களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறும் சடையார்தம் கோயிலின்முன் கொணர்வித்தே
'ஒன்று கொலாம்' எனப்பதிகம் எடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப் பிள்ளை உணர்ந்தெழுந்திருந்தான்(12)

அருந்தனையன் உயிர்பெற்ற அதுகண்டும் அமுதுசெயாது
இருந்ததற்குத் தளர்வெய்தி இடர்உழந்தார் துயர்நீங்க,
வருந்துமவர் மனைபுகுந்து, வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய்தருளி விருப்பினுடன் மேவும்நாள் ; (13)

திங்களூர் தனில்நின்றும் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து,
தங்குபெரும் காதலொடு தம்பெருமான் கழல்சார்ந்து,
பொங்கிய அன் பொடுவணங்கி முன்னின்று போற்றிசைப்பார்.

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொன்கழற்கீழ்
அடைமாலை சீலமுடை அப்பூதி அடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
தொடைமாலை திருப்பதிகச் சொல்மாலை பாடினார். (15)

## 3. இரட்சணிய யாத்திரிகம்

(H. A. கிருஷ்ண பிள்ளை)

*இந்நூல் ஜான் பனியன் என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றியுள்ள ஒரு நூலின் தழுவல். இரட்சிப்பு அடையவேண்டிய ஆன்மாவினுடைய மோட்ச யாத்திரையைப் பற்றிக் கூறுவது இந்நூல். இதன் ஆசிரியர் பாளையங்கோட்டைக்கு அருகாமையிலுள்ள ரெட்டியார்பட்டி என்ற ஊரில் 1827 இல் பிறந்தவர்; வேளாள குலத்தைச் சேர்ந்தவர். தம் நாற்பதாம் வயதில் இவர் கிருத்துவ சமயத்தைத் தழுவினார். சிறந்த புலவரான இவர் கிருத்துவ சார்புடைய பல நூல்களை இயற்றியுள்ளார்.*

### தீய மகன் நல்லொழுக்கம் பெற்றது

### தந்தை இளைய மகனுக்கு உரிமையைப் பகுத்துக் கொடுத்தல்

*ஒருவன் அன்புடைய தந்தைக் கோரிரு புதல்வர் உள்ளார்;*
*இருவரில் இளையான் 'ஐய! என்னொரு பாகம் ஏற்குத்*
*தருக' என்றிரந்து கேட்பத்தந்தை தன் உரிமையாவும்*
*இருவிகற் பாகப் பங்கிட் டுதவினன் நேர்மையாக.* (1)

### இளையவன் கைப்பொருளை இழத்தல்

*கைப்பொருள் கண்டான்; தந்தை*
*கரைந்த சொற் பொருளைக் காணான்;*
*மெய்ப்பொருள் அறியான்; உள்ளம்*
*விழைந்த சிற் றின்பமாய*

*பொய்ப் பொருள் நச்சி ஓடிப்*
*புறம்பு போய்த் தந்தை ஈந்த*
*அப்பொருள் இழந்தான்; அந்தோ!*
*அகதியா யினன்சின் னாளில்* (2)

### இளையவன் வறுமையால் துன்பப்படுதல்

*அங்கொரு குடும்பி தன்னை*
*அடுத்தவன் பன்றி மேய்த்துத்*
*திங்களோர் இரண்டு மூன்று*
*செல்லவத் தேசம் எங்கும்*
*வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து*
*வெதுப்பிடும் பசிக்காற்றாய்*
*நுங்கினன் பன்றிக் கூட்டும்*
*நொறுங்கு குற்றுமித்த விட்டை.* (3)

குற்றுமித் தவிடும் கிட்டாக்
கொடும் பஞ்சம் அதிகரிக்கச்
சற்று உளம் தெளிந்தா னாகிச்
சஞ்சலித் தழுது 'என்தந்தைக்கு
உற்ற ஊழியர் அனேகர்
உண்டுதேக் கெறிய யான்ஓர்
துற்றுணவின்றி ஆவி
சோர்குவல் : இதென் துர்ப்புத்தி (4)

'புகலொன்றும் இல்லேன்' என்னாப்
புந்தியில் பிழையை உள்ளி
மிகவுள முடைந்து நைந்தான் ;
மெய்ம் மனத் தாபங்கொண்டான் ;
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்தான் பெற்ற
மகவெனப் பரிவர் அல்லால்
மறுத்திடார்' எனத் தேறுற்றான் (5)

**இளையவன் தந்தை முன் அடைய, அவன் வரவேற்றல்**

ஒல்லையே எழுந்தான், தந்தை
உத்தம குணமுன் ஈர்க்க
அல்லல்செய் பசியின்உந்த
அடுத்தனன் ; அறிந்து, தந்தை
வல்லை வந்தணைத்து, முத்தி,
மகிழ்ந்தனன் ; மகவாசைக்கோர்
எல்லையும் உளவோ ? மைந்தன்
எத்தனை பிழைசெய்தாலும் (6)

**தந்தையிடம் இளையவன் தன் குற்றத்தை எடுத்துக் கூறல்**

'எந்தையே ! எந்தையே ! என்று
ஏங்கி நெட்டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந்து 'உமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற் றளவில் பாவம்
புரிந்தனன் ; இனியான் உந்தம்
மைந்தனென் றுரைக்கத் தானும்
அபாத்திரன், மதியொன்றில்லேன்' (7)

'ஐய ! மன்னிக்கச்சித்த
மாயின் மற்றளியனேன் யான்
உய்யுமா றருளி, நுப்பால்
ஊழியத் தொருவ னாக்கி
வையகத் திருத்து' கென்று
வாய் திறந் தரற்றி நிற்ப,
'ஐயல்' என்றருளிற் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பால் (8)

### தந்தை இளையமகனை ஆதரித்தல்

மகன் இவன் மரித்தான் ; இன்னே
மறுத்துயிர் பெற்றானாகத்
தகவுடை விருந்தெ மர்க்குச்
சமைக்க' எனப் பணிந்து மைந்தற்கு
உவகையின் வத்திராதி
உடுத்தருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ் கொண்டாடி
இருந்தனன் புதல்வனோடும் (9)

### மூத்த மகன் தந்தையைக் கோபிக்கத் தந்தை இன்னுரை கூறல்

ஆயிடைச் சேட்டன் வந்தான் ;
அகக்களி யாட்டுக் கண்டான் ;
'மேயதென்?' என வினவி
அறிந்தனன் ; வெஃகுண்டு நின்றான் ;
நேயமார் தந்தை நேர்ந்து
'நின்னொரு கனிட்டன் மாண்டு
போயவன் பிழைத்து வந்த
புதுமையின் களியிது' என்றான். (10)

மைந்த ! நீ என்னோடுள்ளாய்;
வாழ்வெ னக்குள்ள யாவுஞ்
சொந்தமற் றுனக்கே அன்றோ ?
சோதரன் மதியிற் றேகி
நொந்து வந் தணைந்தான் மீண்டு
நுண்மதி யுடைய நீயுன்
சிந்தனை திருகல் நன்றோ ?
சேர்ந்துடன் களித்தி' என்றான் (11)

# 4. வீரபாண்டியக் கட்டபொம்மன்

## (கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)

கட்டபொம்மன் ஆந்திர நாட்டிலிருந்து வந்து தமிழ் நாட்டிற் குடிபுகுந்த ஓர் உயர்குடியில் தோன்றியவன். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து நின்று தனியே போராடிய அவ்வீரமகனுடைய வரலாற்றைக் கூறுவன பின் வரும் பாடல்கள். அவற்றின் ஆசிரியர் நாகர்கோயிலுக்கு அருகிலுள்ள புத்தேரியில் வாழ்ந்து வருபவர்; சிறந்த புலவர்; பாவலர்; ஆராய்ச்சியாளர். தேவியின் கீர்த்தனைகள், கவிமணியின் உரைமணிகள், மலரும் மாலையும், ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம், உமர் கய்யாம் பாடல்கள் ஆகியவை இந்நாஞ்சில் நாட்டுக் கவிஞர் இயற்றிய நூல்களிற் சிலவாம். அவருடைய அன்பின் பெருக்கும், குழந்தை உள்ளமும், கடவுட்பற்றும் அவரது கவிதைகளில் எங்கும் நிறைந்திருக்கும்.

1. மீசை முறுக்கி நின்று வெள்ளையரே உங்களுக்கோர்
காசும் தரோமென்று கர்ஜித்த—கேசரியாம்
பாஞ்சைப் பதிவீர பாண்டியனை நெஞ்சமே!
வாஞ்சையொடு பாடுவோம் வா.

(வேறு)

2. செந்தில் முருகன் சேவடியைத்
தினமும் போற்றித் தொழுதிடுவோன்;
சந்தக் கவிகேட் டுளமகிழ்ந்து
தரளம் வாரி அளித்திடுவோன்;
வந்த பொல்லா வெள்ளையரை
மதியா வீர பாண்டியனைச்
சிந்தை மறவா தோவியத்தில்
சிலையில் கண்டு போற்றுவமே.

3. தஞ்சம் என்று வந்தவரைத்
தாங்கும் இனிய குணசீலன்;
பஞ்சம் அறியாப் பழம்பதியாம்
பாஞ்சைப் பதியில் அரசாண்ட

விஞ்சு புகழ்சேர் வீராதி
வீரன் கட்டபொம்மன் பேர்
நெஞ்சில் எழுதி வைத்தன்பால்
நித்தம் நித்தம் போற்றுவமே.

4. தானம் வேண்டில் தருகின்றேன் ;
தருமம் வேண்டில் தருகின்றேன் ;
வானம் இடிந்து விழுந்திடினும்
வரிதந் தும்மை வணங்கேன் என்று
ஏனை வெள்ளைக்கம் பெனியார்க்கு
எடுத்துக் கூறித் தென்னாட்டின்
மானம் காத்த பாண்டியனை
மறவா தென்றும் போற்றுவமே.

5. சீமை வெள்ளைக் காரர் படை
சிதறி ஓட முறியடித்தோன்
ஊமைத் துரையென் றுலகுபுகழ்
ஒப்பில் விஜயன் முன்வந்த
வீமன் வீர பாண்டியனின்
வெற்றி முரசு முழக்கியிந்தப்
பூமி மீதெந் நாளுமவன்
புகழைப் பாடிப் போற்றுவமே.

6. காய்ந்து போரில் வெள்ளையரைக்
கறங்கச் செய்த ஆண்சிங்கம்;
ஆய்ந்து வினைகள் செய்துநிதம்
அறங்கள் காத்த அறிவுடையோன்;
பாய்ந்து நாயை முயல் விரட்டும்
பாஞ்சை ஆண்ட பாண்டியனுக்கு
ஏய்ந்த புகழை இனியதமிழ்
இசையிற் பாடிப் போற்றுவமே.

7. மான முற்றும் விலைகொடுத்து
மண்ணை வாங்கி அரசாளும்
ஈன வாழ்வை உள்ளத்தில்
எள்ளத் தனையும் எண்ணாதோன்

ஊனை உடலை வெறுத்துதறி
உலகி லழியாப் புகழ் நாட்டி
வானம் சென்ற வீரனை நாம்
மறவா தென்றும் போற்றுவமே.

8. கட்ட பொம்மன் சீமையிலே
காகம் பறவா தெனுமாறு
சட்ட திட்டம் செய்துகுடி
தாங்கி நின்ற ஜகவீரன்;
துட்டர் அஞ்சும் துரைராஜன்
துணிந்த வீரன் என்றுலகில்
எட்டுத்திசையும் புகழ் பெற்றோன்
எங்கள் வீர பாண்டியனே.

9. அன்னசாலை அமைத்திடுவோம்;
ஆலயங்கள் கட்டிடுவோம்;
பன்னற் கரிய கலைகளெலாம்
பயிலக் கழகம் கண்டிடுவோம்;
தென்னர் போற்றும் பாஞ்சையினைத்
திருத்தி அளகை யாக்கிடுவோம்
மன்னன் வீர பாண்டியன் பேர்
வையத் தென்றும் வழங்கிடவே.

10. கெஞ்சி வாழும் வாழ்க்கையினைக்
கிஞ்சித் தேனும் விரும்பாத
செஞ்சி யாண்ட தேசிங்கத்
திறலோன் அனைய போர்வீரன்
வஞ்சர் இழைத்த தீவினையால்
மாண்ட கட்ட பொம்மன்பேர்
விஞ்சும் ஆண்மை பெறுதற்கு
வீரர் போற்றும் மந்திரமே.

(வெண்பா)

11. அஞ்சினவர்க் கென்றும் அபயம் அளித்திடுவோன்
வஞ்சகர்க்கு வாழ்வு மறுத்திடுவோன்—விஞ்சுபுகழ்
தென்னாட்டுப் பஞ்சைத் திறல்வீர பாண்டியனின்
நன்னாமம் போற்றுவோம் நாம்.

# IV. பல்சுவைப் பகுதி

## 1. காஞ்சிபுரச் சிறப்பு

### ஒளவையார்

தொண்டை நாட்டின் திலகமென விளங்குவது காஞ்சிபுரம். இந்நகரம் எக்காலத்தும் பலவகைகளிலும் சிறப்புற்று விளங்கிய தொன்றாகும். இதன் சிறப்பை எடுத்துரைக்கும் பின் வரும் பாடலை இயற்றியவர் ஒளவையார். இவர் தமிழறிவும் துறவுள்ளமும் நிரம்பப் பெற்றவர். பிறர்க்கு இன்பம் விளைவிக்கும் பொருட்டு இளமையிலேயே இவர் மூப்பை விரும்பிப் பெற்றார். இவர் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த 2-ம் ஒளவையார் என்று தோன்றுகிறது.

வையகம் எல்லாம் கழனியாய், வையகத்துள்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள், செய்யகத்துள்
வான் கரும்பே தொண்டைவள நாடு, வான் கரும்பின்
சாறே அந்நாட்டின் தலையூர்கள், சாறு அட்ட
கட்டியே கச்சிப்புறம் எல்லாம், கட்டியுள்
தான்ஏற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி அகம்.

## 2. இளவேனில்

### திருத்தக்கதேவர்

இளவேனிற்காலத்தின் செவ்வியை எடுத்துக் கூறுவது இப் பாட்டு. இதை இயற்றியவர் திருத்தக்க தேவர் என்னும் சைன முனிவர். இவர் 'சீவக சிந்தாமணி' என்னும் தன்னிகரில்லாக் காப்பியத்தை எழுதியுள்ளார். அக்காப்பியத்திலிருந்து எடுக்கப் பட்டுள்ளது இப்பாடல். தேவரது காலம் 10 ஆம் நூற்றாண்டு என்பர்.

இளிவாய்ப் பிரசம் யாழாக
  விருங்கட் டும்பி குழலாகக்
களிவாய்க் குயில்கள் முழவாகக்
  கடிபூம் பொழில்க ளரங்காகத்
தளிர்போன் மடவார் தணந்தார்தந்
  தடந்தோள் வளையு மாமையும்
விளியாக் கொண்டிங் கிளவேனில்
  விருந்தா வாட றொடங்கிற்றே..

## 3. பந்தாட்டக் காட்சி

### இளங்கோவடிகள்

இப்பாடல் 'சிலப்பதிகாரம்' என்னும் காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் சேரன் செங்குட்டுவனுடைய தம்பி; துறவறம் பூண்டு அறநெறியிலேயே வாழ்க்கை நடத்திய பெரியார். இவர் சைன சமயத்தினர். இவருடைய காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர். பெண்கள் பந்தாடும் காட்சியைப் பின்வரும் பாடலிற்கண்டு மகிழலாம்.

பொன்னி லங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னி லங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க வென்று சென்று பந்த டித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க வென்று பந்த டித்துமே.

## 4. சூரியன் மறைவு

### புகழேந்தியார்

புகழேந்தியார் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள களத்தூரில் பிறந்தவர்; வேளாள குலத்தினர்; வைணவ சமயத்தினர். இவர் வெண்பாப் பாடுவதில் ஒப்புயர்வற்றவர். இவருடைய காலம் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்னலாம். இவரெழுதிய 'நளவெண்பா' என்னும் நூலிலிருந்து பின் வரும் பாடல் எடுக்கப்பட்டுள்ளது.

வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய் அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

## 5. கிளி

### பாரதிதாசனார்

பாரதிதாசனார் புதுவையில் வாழ்பவர். தேசிய கவி சுப்ரமணிய பாரதியாரின் மாணவர். புரட்சிக் கருத்துக்கள் மிகுந்த பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். இவருடைய கவிதைகள் எளிமையும் இனிமையும் பொருந்தியவை. கீழ்வரும் பாடல்கள் இயற்கையின் படைப்புக்களில் ஒன்றான கிளியின் பெருமையை விளக்குவன. இவை 'அழகின் சிரிப்பு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

தென்னைதான் ஊஞ்சல்! விண்தான்
திருவுலா வீதி! வாரித்
தின்னத்தான் பழங்கொட் டைகள்!
திருநாடு வையம் போலும்
புன்னைக்காய்த் தலையில் செம்மைப்
புதுமுடி புனைந்தி ருப்பாய்!
உன்னைத்தான் காணு கின்றேன்
கிள்ளாய்! நீ ஆட்சி உள்ளாய்! (1)

கொஞ்சுவாய் அழகு தன்னைக்
கொழிப்பாய் நீ! அரசர் வீட்டு
வஞ்சியர் தமையும் மற்ற
வறியவர் தமையும் ஒக்க
நெஞ்சினில் மகிழ்ச்சி வெள்ளம்
நிரப்புவா யவர ளிக்கும்
நைஞ்சநற் பழத்தை உண்பாய்;
கூழேனும் நன்றே என்பாய்! (2)

## 6. சிலேடைப்பாக்கள்

### அழகிய சொக்கநாத பிள்ளை

இவர் திருநெல்வேலியில் வேளாளர் மரபில் பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் வள்ளியப்பப் பிள்ளை என்பது. இராசவல்லிபுரம் முத்துசாமி பிள்ளை என்பவரால் ஆதரிக்கப் பெற்றார் இப்புலவர். காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், முத்துசாமி மடல் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். இற்றைக்கு 65 ஆண்டுகட்கு முன் இப்புலவர் வாழ்ந்திருந்தார்.

### சிவனுக்கும் தேங்காய்க்கும்

கல்லா வடியுறலாற் கண்மூன் றிருப்பதனால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையாற் கங்கா குலமுத்து சாமிமன்னு
கள்ளிதழி யாவிகர்தேங் காய். (1)

### திருமாலுக்கும் கைக்கடியாரத்துக்கும்

சக்கரத்தி னலரவங் தாங்குதலி னேடுமுள்ளெட்
டக்கரத்தி னல்வேலை யார்வதினுன்—மிக்கவன்பர்
முக்கியமாய்க் கைக்கொளலான் முத்துசுவா மித்துரையே
கைக்கடியா ரக்திருமால் காண். (2)

## 7. திருவரங்கக் கலம்பகம்

### அழகிய மணவாள தாசர்

இந்நூல் திருவரங்கமென்னும் தலத்தைப்பற்றியதாகும். கலம்பகம் என்பது பலவகைச் செய்யுட்களும் கலந்துவரும் ஒரு வகைப் பிரபந்தம். இதன் ஆசிரியர் சோழ நாட்டிலுள்ள வெண் மணி என்னுமூரில் பிறந்து, பெரும்பாலும் திருவரங்கத்திலேயே வாழ்ந்திருந்தவர். இவரது இயற்பெயர் பிள்ளைப் பெருமாளையங் கார் என்பது. இவரது காலம் 17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியா வண்ணம்
கருமாயத் தன்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி
மருமாலைத் துளவசைய ஆடிரூசல்
மணிமகரக் குழையசைய ஆடிரூசல்
திருமாது புவிமாதோ டாடிரூசல்
திருவரங்க ராசரே யாடிரூசல்.

## 8. ஏரெழுபது

### கம்ப நாடர்

இந்நாட்டின் வளத்தைப் பெருக்குவதில் இன்றியமையாத ஏரின் பெருமையை எடுத்துக் கூறும் எழுபது பாடல்கள் கொண் டது இந்நூல். இதைப் பாடியவர் கம்பர். இவர் தஞ்சை ஜில் லாவிலுள்ள தேரழுந்தூர் என்னுமிடத்தில் உவச்சர் மரபில் தோன்றியவர். இவரை குலோத்துங்க சோழனும், திருவெண் ணெய்நல்லூரிலிருந்த சடையப்ப வள்ளலும் ஆதரித்தனர். இவரது சமயம் வைணவம். இவரது காலம் 12-ஆம் நூற்றாண்டு என்னலாம். இவர் இயற்றிய பிற நூல்கள்: கம்பராமாயணம், சடகோபரந்தாதி, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி யந்தாதி என்பன.

### அலப்படைச் சிறப்பு

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளு மிவைநான்கும் படைத்துடைய ராறுலென்
மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்களலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே. (1)

### மேழிச் சிறப்பு

வாழிநான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியா னுலகளிக்கு மடல்வேந்தர் பெருந்திருவும்
ஊழிபெ யரினும்பெயரா வுரையுடைய பெருக்காளர்
மேழியால் விளைவதலால் வேறொன்றால் விளையாவே. (2)

### நுகத்தடிச் சிறப்பு

உரையேற்ற செங்கதிரோ னொளிநெடுந்தேர் பூண்டநுகம்
திரையேற்ற கடலுலகிற் செறியிருளை மாற்றுவது
விரையேற்ற விருநிலத்தோர் வெறுமையொடு வீழாமே
கரையேற்று நுகமன்றோ காராள ருழுநுகமே. (3)

### தொடைச் சிறப்பு

தடுத்தநெடு வரையாலுந் தடவரைக ளெட்டாலும்
உடுத்ததிரைக் கடலாலு முலகினிலை வலியாமோ
எடுத்தபுகழ்ப் பெருக்காள ரெழுநுகத்தோ டிணைப்பகடு
தொடுத்ததொடை நெகிழாதே லுலகுதொடை நெகிழாதே.(4)

### கொழுச் சிறப்பு

வேதநூன் முதலாக விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரு முழுவார்தந் தலைக்கடைக்கே
கோதைவேன் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே
ஆதலா லிவர்பெருமை யாருரைக்க வல்லாரே. (5)

### தாற்றுக்கோற் சிறப்பு

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதைக் கடற்றானைப் போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோ லேரடிக்குஞ் சிறுகோலே. (6)

### உழவெருத்தின் சிறப்பு

வானமழை பொழிந்தாலும் வளம்படுவ தெவராலே
ஞானமறை யவர்வேள்வி நலம்பெறுவ தெவராலே
சேனைகொடு பொருமன்னர் செருக்களத்திற் செகுத்தமத
யானைவலி யெவராலே யிவரெருதின் வலியாலே. (7)

### உழவெருத்தின் சுவற்கறைச் சிறப்பு

கண்ணுதலோன் றனதுதிருக் கண்டத்தில் படிந்த கறை
விண்ணவரை யமுதூட்டி விளங்குகின்ற கறையென்பார்
மண்ணவரை யமுதூட்டி வானுலகங் காப்பதுவும்
எண்ணருஞ்சீர்ப் பெருக்காள ரெருதுசுவ டுகறையே. (8)

### ஏர் நடத்தற் சிறப்பு

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சா லியலிசைநா டகநடக்கும்
சீர்நடக்குந் திறனடக்குந் திருவறத்தின் செயனடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே. (9)

### உழவின் சிறப்பு

அலகிலா மறைவிளங்கு மந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகை விளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும்
உலகெலா மொளிவிளங்கு முழவருழ முழவாலே. (10)

# குறிப்புரை

## I. வாழ்த்துப் பகுதி

1. குலவு - விளங்குகின்ற. கள்ளம் - வஞ்சனை. வாசகம் - சொல்.

2. தீங்குரல் - இனிய குரல். கோது - குற்றம். எழில் - அழகு.

3. கோலம் - பன்றி. விரகால் - சாமர்த்தியத்தால். குறளாய் - வாமனனாய். ஆறாது - நீங்காது. முனை அலம் - கூர்மையான கலப்பை. பரி - குதிரை.

4. கனிவோய் - இரக்கமுடையவரே. மரபு - முறை.

5. திரு - செல்வம். மரு - வாசனை. பொரு - உவமை. கரு - அன்னையின் கருப்பை. கருத்தன் - கடவுள்.

## II. அறவுரைப் பகுதி

### திருக்குறள்

1. தாள் - அடி. வால் அறிவன் - தூய்மையான அறிவை உடையவன்.

2. துப்பார்க்கு - உண்பவர்க்கு. துப்பு - உணவு.

3. அவா - ஆசை. வெகுளி - கோபம். இன்னா - துன்பந் தரும்; (கடுமையான). இழுக்கா - இல்லாமல்,

4. ஈனும் - கொடுக்கும். நாடா - நாடாத.

5. செல்விருந்து - வந்து சேர்ந்த விருந்தினர். ஓம்பி - பேணி.

6. அகன் அமர்ந்து - உள்ளம் விரும்பி. முகன் அமர்ந்து - முகம் மலர்ந்து.

7. பயன் தூக்கார் - பயனைக் கருதாதவராய்.

8. உலகம் - உலக மக்கள்.

9. வடு - வசை.

10. இடும்பை - துன்பம்.

11. ஒறுத்தாரை - தண்டித்தவர்களை. பொதிந்து - மூடி.

12. வியாது - நீங்காமல். உறைந்தற்று-தங்கியதுபோலாகும்.

13. தாள் ஆற்றி - முயற்சி செய்து. தக்கார் - நல்லவர். வேளாண்மை - கொடை.

14. இயையாக் கடை - பொருந்தாத இடத்து.

15. ஒன்று - ஒரு நிலைப்படாத. பொன்றுது - அழியாமல்.

16. வலியார் - வலிமையுடையவர்.

17. சுடரும் - ஒளிவிடும். ஒளிவிடும் - அறிவு மிகும்.

18. கணை - அம்பு. யாழ் கோடு - யாழின் தண்டு. செவ்விது - இனிமையானது. பால் - வகை.

19. வாய்மை - உண்மை.

20. செல் இடத்து - செல்லுமிடத்தில். காப்பான் - அடக்கி கொள்பவன்.

21. இன்னாமை - துன்பம். மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்.

22. நாச்செற்று - பேச்சு அடங்கி.

23. நோதல் - துன்பம் அடைதல்.

24. ஒரும் - அசைநிலை. அஞ்சுவது - பழிபாவங்கட்கு பயப் படுதல்.

25. ஈத்தளிக்க - கொடுத்துப் பாதுகாக்க. இறைமாட்சி - அரசர் பெருமை.

## III. கதைப் பகுதி

### குசேலோபாக்கியானம்

1. எண் - நினைக்கப்படுகின்ற. அனை - அன்னையாகிய இலட் சுமி. இலங்கு - விளங்குகின்ற. திகிரி - சக்கரம். புரக்கும் - பாது காக்கும். கண்ணனை - கள் + நனை = தேனுல் நனைக்கப்படும். துள வம் - துளசி.

2. நீத்தம் - வெள்ளம். மாதவன் - குசேலன்.

3. கழி - மிகுதி. கமலக்கண்ணன் - தாமரை போன்ற கண்ணை உடையவன்.

4. மன்னுடைய - நிலைபெற்றுள்ள. மறை - வேதம். பெறல் அரும் - பெறுவதற்கரிய.

5. ஆயின் - ஆராய்ந்தால். மறம் - பாவம். பாத்து - பிரித் துணர்ந்து. வீயினும் - இறந்தாலும். எயின் - சமயம் நேரிடும் போதெல்லாம். மேதையோர் - அறிஞர்.

6. நவிற்றிய - சொன்ன.

7. புந்தி - அறிவு. இரும்தவர் - பெரிய தவத்தை உடையவர்.

8. எண்மை - எளிமை. இகழ்வு இல்லார் - பெரியோர்.

9. படு நட்பு - தோன்றும் நட்பு. விடுதல் - அழிதல்.

10. செப்பரிது - சொல்லுதற்கு முடியாதது.

11. உஞற்றுபவள் - செய்பவள். நீர்மை - தன்மை.

12. குதலை - மழலைச் சொல். சிங்கல் - கெடுதல்.

13. நள்ளார்கள் - மனத்தால் சேராதிருக்கின்றவர்கள். அண் மை - அருகில். வின்னார்கள் - மனத்திஞல் பிரிக்க முடியாதவர் கள். சேய்மை - தூரம். ஆதவன் - சூரியன்.

14 விருகம் - மிருகம். நைய - கெட

15. காமர் - அழகிய. திருகு - மாறுபாடு. ஆரா ணத்து - சேராத மனத்தில்.

## பெரிய புராணம்

2. கண்ணுதலோன் - சிவபெருமான். வாளை - ஒருவகைமீன்.

3. புனற்பழனம் - நீர் நிரம்பிய பொய்கைகள் சூழ்ந்த. மருங்கு - அருகே. இருண்ட - கறுத்த. கண்டர் - கழுத்தை உடையவர். பணிக்கலன் - பாம்பாகிய ஆபரணம்.

5. அப்பூதியடிகள் சாதிச் செருக்கின்றி அன்பில் திளைத்துத் திருநாவுக்கரசைக் குருவாகக் கொண்டவராதலின் 'அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்' எனப்பட்டார். தனயருடன்- புதல்வர்களுடன். சாலை - அறச்சாலைகள். கூவல் - கிணறுகள். தரு - நிழல் மரங்கள்.

6. மொழிக்கொற்றவரை - திருநாவுக்கரசரை. குறைகொள் வார் - குறையிரந்து வேண்டுவார். இறை - விடை. இறை - சிவ பெருமானுமாம். திருவுள்ளம் - சம்மதம்.

7. கேண்மையினார் - ஆன்ம நேயம் பூண்ட அப்பூதியார். போனகம் - சோறு.

8. தண்டலையின்...அரிந்து - தோட்டத்தில் வளப்பமுடைய வாழையின் நிறமுள்ள தண்டமைந்த குருத்தை அரிந்து.

9. பேணான் - பொருட்படுத்தாதவனாய்.

10. தெருமந்து - சுழன்று. அது - பிணத்தை

11. நவை - துன்பத்தை.

12. உடையான் - சிவபெருமான்.

13. இடர் - துன்பம். உழந்தார் - வருந்தியவர்.

14. திருமறையோர் - அப்பூதி அடிகள். பசிய கண்கள் பொருந்திய இடப வாகனத்தை உடைய சிவபிரான் வீற்றிருந்து அருளும்.

15. புடை - பக்கம். அடைமாலைச் சீலமுடை - சார்ந்த இயல் பும் ஒழுக்கமும் உடைய. நடைமாண - ஒழுக்கம் மேன்மையுற.

## இரட்சணிய யாத்திரிகம்

1. நிருவிகற்பாக - வேறுபாடில்லாமல்.

2. கைப்பொருள் - கையிலுள்ள பொருள். மெய்ப்பொருள்- உண்மையான பொருள்.

3. திங்கள் - மாதம். நுங்கினான் - தின்றான்.

4. துற்று - ஒரு கவள உணவு.

5. புந்தி - அறிவு. நைந்தான் - வருந்தினான்.

6. முத்தி - முத்தமிட்டு.

7. எந்தை=என்+தந்தை. அபாத்திரன் - தகுதியற்றவன்.

8. அளி - அன்பு. நையல் - வருந்தேல்.

9. உகவை - விருப்பம்.

10. சேட்டன் - (மூத்தவன்) அண்ணன். கனிட்டன் - (சிறியவன்) தம்பி. மாண்டு - இறந்து. களி - மகிழ்ச்சி.

11. சோதரன் - சகோதரன் - திருகல் - கோபித்தல்.

### வீர பாண்டியக் கட்ட பொம்மன்

1. கேசரி - வீரன். பாஞ்சை - பாஞ்சாலங் குறிச்சி (கட்ட பொம்மனுடைய ஊர்) வாஞ்சை - அன்பு.

2. செந்தில் - திருச்செந்தூர். சந்தக்கவி - தாளம் ஓசை இனிமை அமைந்த பாட்டு. தரளம் - முத்து.

3. விஞ்சு - மிகுந்த.

4. வெள்ளைக் கம்பெனியார் - ஆங்கிலேயருடைய கிழக்கிந்தியக் கம்பெனியார்.

5. ஒப்பில் - ஈடு இல்லாத.

6. கறங்க - ஒலமிட. நிதம் - நாள்தோறும். ஏய்ந்த - பொருந்திய.

7. ஈன - இழிந்த.

8. குடிதாங்கி - குடிகளைக்காத்து. துட்டர் - கெட்டவர்கள்.

9. பன்னற்கு - சொல்லுவதற்கு. தென்னர்-தென்னாட்டவர். அளகை - அளகாபுரி (குபேரனது நகரம்) வழங்கிட - யாவரும் பாராட்ட.

10. இஞ்சித்தேனும் - சிறிதளவும். திறலோன் -வீரமுடையவன். விஞ்சும் - மிகும்.

11. அபயம் - தஞ்சம்.

## IV. பல்சுவைப் பகுதி

### காஞ்சிபுரச் சிறப்பு

வையகம் - பூமி. செய் - நிலம். ஆனேறு - எருது. அடுதல் - காய்ச்சுதல். கச்சி - காஞ்சிபுரம்.

### இளவேனில்

இளிவாய் - இளி என்னும் நரம்பினையுடைய. பிரசம் - வண்டு. இருங்கண் - கரிய கண்ணினையுடைய. கடி - வாசனை பொருந்திய. பூம்பொழில் - அழகிய சோலை. அரங்கு - நாடகமேடை. தணந்தார் - பிரிந்தார். விளி - அழைப்பு. விருந்தா - புதிதாக.

### பந்தாட்டக்காட்சி

ஆர்ப்ப - ஒலிக்க. தென்னன் - பாண்டியன்.

### சூரியன் மறைவு

பொய்கை - குளம். புள் - பறவை. பைய - மெல்ல. அன்றில் - ஒரு வகைப் பறவை.

## கிளி

விண் - வானம். வையம்-பூமி. புனைந்திருப்பாய் - அணிந்திருப் பாய். வஞ்சியர் - பெண்கள். வறியவர் - ஏழைகள். ஒக்க-சமமாக.

## சிலேடைப் பாக்கள்

1. கல்லால் அடியுறலால்—i கல்லில் அடித்து உடைக்கப் படுவதால்; ii. கல்லால் மரத்தின் அடியில் எழுந்தருளியிருப் பதால்.

வல்லோடு கொள்ளுகையால்–ii வலிய தலையோட்டைப் பிச்சைக்காகக் கையில் கொண்டமையால்; i. வலிய சிரட்டை உடைமையால்.

2. சக்கரத்தினால் – சக்கரமாகிய கருவியை உடைமையால். அரவம் தாங்குதலினாலும் - ஆதிசேடனாகிய பாம்பு மேல் தாங்கப்படுவதனால்; ஓசை கொண்டுள்ளமையால். உள் எட்டு அக்கரத்தினால் - தியானிக்கப்படுகின்ற அட்டாட்சரம் என் கிற மந்திரத்தினால்; முள் எட்டு அக்கரத்தினால் - முள் தொடு கின்ற எழுத்துக்களை உடைமையால். வேலையார்வதினால் - திருப் பாற்கடலில் தங்குவதினால்; வேலைப்பாடு உடைமையால். கைக் கொளலால்-கைகூப்புவதினால்; கையில் வைத்துக் கொள்வதினால்.

## திருவரங்கக் கலம்பகம்

மருமாலை- வாசனை பொருந்திய மாலை. திருமாது -இலக்குமி. புவிமாது - பூதேவி.

## ஏரெழுபது

1. கொலை - கொல்லும் தொழிலை உடைய. புரவி - குதிரை. பொன்னி - காவேரி. அலம் - கலப்பை.

2. ஆழி - ஆக்ஞாசக்கரம். அடல் - பலம் பொருந்திய. ஊழி- உலக முடிவுக்காலம். பெயரா உரை - தவறாத வாக்கு. மேழி - கலப்பை.

3. காராளர் - வேளாளர்.

4. தட - விசாலமான. வரை - மலை.

5. கோதை - மாலை சூட்டப்பட்ட. இணைப்பகடு - கட்டப் பட்ட எருமை.

6. கலி - பஞ்சம். பைங்கோல - பசுமையான நாற்றுமுடி. பொங்கு+ஓதம் - மேன் மேல் எழுகின்ற ஓசை.

9. கார் - மேகம். படி - உலக நடை. பார் - உலக இயல்பு.

10. அலகு இலா - அளவு இல்லாத. குலாம் - குலாவும்; விளங்குகின்ற. மனு - மனுதர்மம்.

# 1. சோலையில் தலைவி

## இறையனார் அகப்பொருளுரை

*ஆயத்திடை மேனாட் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோவெனின், நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்தினோடு ஒக்குமாகலானென்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோகமுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசை பாடத் தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து, மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவிவல்லி மண்டபத்துப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து ஞாலான்றுவந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரமுந்தி அணிகிளரருவி ஆடகப்பாறைமேல் அதிர்குரன் முரசின் கண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயிலுங் கிளியும் பாடத் தண்டாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை, நீல ஆலவட்டம் விரித்தாற் போலத் தன் கோலக் கலாவங்கொள்ள விரித்து முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள்..*

# 2. முள்ளால் எழுதிய ஓலை

[டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்]

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" —குறள்.

சிவகங்கை ஸம்ஸ்தானத்திற்குத் தலைவராக ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன்பு மருத சேர்வைகாரர் என்று ஒருவர் இருந்தார். அவருடைய பெருமையையும் நல்லியல்பையும் அறிந்த குடிகளும், வித்துவான்களும் அவரை மருதபாண்டியர் என்று வழங்கி வந்தனர்; மகாராஜாவென்றும் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வார்கள். அவர் பல வித்துவான்களை ஆதரித்துப் பலவகையான பரிசுகளை வழங்கினார். தமிழறிவுடையவராதலால், வந்த வித்துவான்களோடு சல்லாபம் செய்து சாதுர்யமாக அவர்களுக்கு ஏற்பப் பேசுதலும், அவர்கள் கூறுவனவற்றைக் கேட்டு மகிழ்ந்து உடனுடன் பரிசளிப்பதும் அவருக்கு இயல்பு. அவர்மீது வித்துவான்கள் பாடிய பிரபந்தங்களும், சமயத்திற்கேற்ப இயற்றியுள்ள பல தனிப்பாடல்களும் அங்கங்கே வழங்கி வருகின்றன. அவர் சிறந்த வீரர். அவர் ஆட்சியின் எல்லையில் திருடர்கள் பயம் முதலியன இல்லையென்று சொல்லுவார்கள். அவருடைய ஆணைக்கு அஞ்சி யாவரும் நடந்து வந்தனர்.

அவர் பரோபகார சிந்தையும், சிவபக்திச் செல்வமும், புலவர்களை யாதரிக்கும் இயல்பும், தம் குடிகளைத் தாய்போல் காப்பாற்றும் தகைமையும் வாய்ந்தவர்.

அவருடைய முன்னோர்கள் அந்த ஸம்ஸ்தானத்து அதிபதிகள் அல்லர்; ஆயினும் அவருக்கு முன்பு இருந்த அரசருடைய உயிரை அவர் புலிவாயினின்றும் காப்பாற்றியதனாலும், இணையற்ற வீரராக இருந்ததனாலும் அந்த ஸம்ஸ்தானத்தின் தலைவராக அவர் பின்பு ஆக்கப்பட்டார்.

அவருடைய ஆஸ்தானத்தில் 21 தமிழ் வித்துவான்கள் இருந்தார்களென்பர். சவ்வாதுப் புலவர், முத்துவேலுப் புலவர் முதலிய பலர் அவரைப்பற்றிப் பாடிய செய்யுட்கள் இப்பொழுதும் வழங்குகின்றன. அவரால் அப்புலவர்களுக்கு அப்பொழு

தப்பொழுது சுரோத்திரியமாக விடப்பட்ட கிராமங்கள் உண்டு. அவருடைய வீரப்பிரதாபமும், கொடைப்புகழும் புலவர்களாலே பலவாறு பாராட்டப் பெற்றவை. சில வருஷங்களுக்கு முன் வரையிலும் சிவகங்கையைச் சுற்றிய இடங்களில் கிராமந்தோறும் அவரைப்பற்றிய செய்திகளையெல்லாம் கதை கதையாக முதியவர்கள் சொல்லி வந்ததுண்டு.

மருதபாண்டியர் தம் இறுதிக் காலத்தில் வலியவரான சிலருடைய பகைமைக்கு இலக்கானார். பகை வீரர்கள் பல முறை அவரைப் பிடிக்க எண்ணி முயன்றனர். அவர்களுடன் போராடியும், தந்திரமான செயல்கள் புரிந்தும் பாண்டியர் அவர்கள் கையில் அகப்படாமலே இருந்தார். ஒரு சமயம் அவர் தம் ஸம்ஸ்தானத்தைச் சார்ந்த திருக்கோஷ்டியூரென்னும் தலத்தில் பெருமாள் கோயிலுக்கு எதிரிலுள்ள மண்டபமொன்றில் தங்கி இருந்தார். அவருடைய வலக்கையில் ஒரு சிலந்தி உண்டாகி அவரை வருத்தியது. அதனால் அவர் சிறிது துன்புற்று அங்கே இருக்கையில், "பகைவருடைய காலாட்கள் தேடி வருகிறார்கள்; இந்த ஊர் எல்லைக்குள் வந்துவிட்டனர்" என்ற செய்தியை ஓர் அந்தரங்க வேலையாள் அவரிடம் வந்து தெரிவித்தான்.

அவன் கூறியதை மருதபாண்டியர் கேட்டவுடன் வீரத்தால் அவருடைய இரத்தம் கொதித்தது; ஓர் ஆடையை உடனே கிழித்து அவர் கைச்சிலந்தியை இறுகக் கட்டிக்கொண்டார். தம்முடைய குதிரையை வருவித்து அதன் மேலேறிக் குதிரைக்காரனையும் உடனழைத்துக் கொண்டு புறப்பட்டார். கையிலுள்ள வளரி ஒன்றுதான் அவருடைய தனித்துணையாக இருந்தது. அவ்வாயுதம் மரத்தாலேனும், இரும்பினாலேனும், வெண்கலத்தினாலேனும் செய்யப்பட்டிருக்கும். அதை வீசுவதன்மூலம் பலரை ஒரே தடவையில் கொன்று விடும் ஆற்றல் மருதபாண்டியருக்கு உண்டு.

மருதபாண்டியர் குதிரைமேல் வருவதை அறிந்த விரோதிகள் அவரை வளைந்து கொண்டனர்; அப்பொழுது மாலைக் காலம். தம்மை வளைந்துகொண்ட வீரர்கள்மேல் தம் வளரியை வீசி வெறிந்து பாண்டியர் கலக்கினார். அதை எறிவதும், அது

பட்ட வீரர்கள் வீழ்வதும், அவர்களை வீழ்த்தி நெடுந் தூரத்தில் விழுந்த அவ்வாயுதத்தை அவரிடம் குதிரைக்காரன் கொணர்ந்து கொடுப்பதுமாகச் சிறிது நேரம் போர் நிகழ்ந்தது. எதிர்த்த வீரர்களை மருதபாண்டியர் சின்னபின்னமாக்கினர். அவர்களையெல்லாம் சிதைத்து வேகமாகக் குதிரையை அவர் செலுத்தலானர். பின்னே வந்த சிலர் மேலும்மேலும் அவரைத் துரத்தினர். அவர்கள் கண்ணிற்கும் கைக்கும் அகப்படாமல் இரவெல்லாம் குதிரையை மனோவேகத்தில் அவர் விட்டுக் கொண்டு போனர்.

விடியற்காலையில் ஒரு கிராமத்தை அவர் அடைந்தார். இரவு முழுவதும் உணவில்லாமையாலும் பிடிக்க வந்தவர் களோடு போராடியதாலும் அவருக்கு அதிகமான பசியும் தாகமும் உண்டாயின. பிறகு அவர் அவ்வூர் அக்கிரகாரத்தை நோக்கி வந்தார். அங்கே ஒரு கூரை வீட்டின் வெளியே சில குழந்தைகள் நிற்க, ஒரு கிழவி கோலம் போட்டுக்கொண்டிருந் தாள். அவ்வீட்டின் முன்னே பாண்டியர் தம் குதிரையை நிறுத்தினர்.

கிழவி தலையை நிமிர்ந்து பார்க்கையில் மருத பாண்டிய ருடைய கம்பீரமான தோற்றம் அவள் மனத்தில் அன்பை உண்டாக்கியது; உடனே அவள், "யாரப்பா! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள். "அம்மா! பசியும் தாகமும் என்னை மிகவும் வருத்துகின்றன. ஏதாவது இருந்தால் போட வேண்டும்" என்முர் பாண்டியர். அவருடைய குரல் இரவில் அவர் அடைந்த களைப்பை விளக்கியது "இராத்திரி தண்ணீரில் போட்டுள்ள பழைய சோறுதான் இருக்கிறது; வேண்டுமானல் போடுகிறேன் அப்பா!" என்று அன்பு கனிந்த வார்த்தைகளில் அக்கிழவி விடையளித்தாள். "ஏதாயிருந்தாலும் எனக்கு இப் போது அமிர்தமாகும். மற்றொரு சமாசாரம்; நான் இராத்திரி முழுவதும் பிரயாணம் செய்து தூக்கமேயில்லாமல் கஷ்ட மடைந்தேன். ஆகையால் உண்ட பிறகு மறைவாக ஓரிடத்தில் இந்தக் குதிரையைக் கட்டி விட்டு நான் படுத்துத் தூங்க வேண்டும்; அதற்கு இடம் கிடைக்குமா?" என்முர். "இது தானு பெரிது! இந்த வீட்டிற்குப் பின்னே ஒரு கொட்டகை இருக்கிறது. அதன் பக்கத்தில் குதிரையை நீ கட்டிவிட்டுப்

படுத்துத் தூங்கலாம். இன்றைக்கெல்லாம் தூங்கினாலும் யாரும் எழுப்பமாட்டார்கள். குதிரைக்கு ஏதாவது தீனி கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டு, அவள் அன்போடு பழைய முதும் பழங்கறியும் மருதபாண்டியருக்கு இட்டாள். அவற்றை யுண்ட அவரது பசி அடங்கியது. அந்த உணவு ராஜபோஜனத்திலும் சிறந்ததாக அவருக்கு இருந்தது. உண்ட பிறகு அந்தக் கிழவி கொடுத்த ஓலைப் பாயொன்றை விரித்துக் குதிரைச் சேணத்தையே தலையணையாக வைத்துக்கொண்டு அவர் கொட்டகையில் படுத்துக்கொண்டார். கணநேரத்தில் தூக்கம் வந்துவிட்டது. மெய்மறந்து நெடுநேரம் அவர் தூங்கினார். குதிரைக்காரனும் உண்டுவிட்டு ஒரு பக்கத்தில் படுத்துக் கொண்டான்.

மருதபாண்டியர் விழித்து எழுகையில் சூரியன் உச்சியில் இருந்தான்; அந்தக் கூரை வீட்டில் உண்ட உணவும், உறங்கிய உறக்கமும் அவர் உடலுக்கு ஒரு புது வன்மையையும், உள்ளத்திற்கு ஒரு புது உணர்ச்சியையும் அளித்தன. அவர் மனத்தில் நன்றியறிவு பொங்கி வழிந்தது. தமக்கு அன்போடு உணவு தந்த அந்தக் கிழவிக்குரிய கைம்மாறாக இந்த உலகத்தைக் கொடுத்தாலும் ஈடாகாதென்று அவர் கருதினார்.

"அம்மா!" என்று கிழவியை அழைத்தார் மருதபாண்டியர். கிழவி வந்தாள். "உங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்களா? இந்தக் குழந்தைகள் யார்?" என்று அவர் கேட்க, "அயலூருக்கு ஒரு விசேஷத்துக்காக என்னுடைய பிள்ளைகள் போயிருக்கிறார்கள். இவர்கள் அவர்களுடைய குழந்தைகள்" என்றாள் கிழவி. "உங்கள் வீட்டில் ஏடு எழுத்தாணி இருந்தால் கொண்டு வாருங்கள்" என்று பாண்டியர் சொல்லவே, கிழவி, "இங்கே ஏடேது? எழுத்தாணி யேது? அவர்கள் எங்கே வைத்திருக்கிறார்களோ, தெரியாதப்பா" என்றாள். உடனே அவர் குதிரைக்காரனை அழைத்து அந்த வீட்டுக் கூரையிலிருந்து ஒரு பனையோலையையும், பக்கத்திலிருந்த வேலியிலிருந்து ஒரு முள்ளையும் கொண்டு வரச் சொன்னார். அவன் கொணர்ந்து கொடுத்தான். அந்த முள்ளைக் கொண்டு அவ்வோலையில் அவர் ஏதோ எழுதலானார். கிழவி அவர் எழுதுவதை வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றாள். மருத

பாண்டியர் அந்த கிராமம் அக் கிழவிக்குச் சுரோத்திரியமாக விடப்பட்டதென்று எழுதிக் கையெழுத்திட்டார். பிறகு முள்ளாலெழுதிய அந்தத் தர்ம சாஸனத்தைக் கிழவியின் கையிலே கொடுத்து "அம்மா! சிவகங்கை ஸம்ஸ்தான அதிகாரிகளிடம் இதை நீங்கள் கொடுத்தால் உங்களுக்கு ஏதாவது அனுகூலம் உண்டாகும்" என்று சொல்லிவிட்டு அவர் குதிரைமேலேறிக் குதிரைக்காரனையும் அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

பழையது போட்ட கிழவி தன் குமாரர்கள் ஊரிலிருந்து வந்தபிறகு அவர்களைக் கொண்டு அவ்வோலையைச் சிவகங்கை அதிகாரிகளிடம் காட்ட எண்ணினாள். ஆனால், சிலநாள் கழித்து அந்த ஸம்ஸ்தானத்தை விரோதிகள் கைப்பற்றிக் கொண்டதாக அறிந்து வருந்தினாள்.

மருதபாண்டியரை அப்பால் பகைவர்கள் பிடித்துச் சிறையில் வைத்தனர். சிலகாலஞ் சென்றபிறகு அவருடைய அந்திய காலத்தில், "உம்முடைய விருப்பம் யாது?" என்று பகைவருடைய முக்கிய அதிகாரிகள் கேட்டார்கள். "நான் சுரோத்திரியமாக யார் யாருக்கு எந்த எந்த கிராமத்தை அளித்தேனோ, எந்த எந்தப் பொருளை வழங்கினேனோ அவைகளெல்லாம் அவரவர்களுக்கு உரியனவாகவே இருக்கும்படி செய்ய வேண்டும், இதுதான் என் பிரார்த்தனை; வேறு ஒன்றும் இல்லை" என்று அவர் வேண்டிக்கொண்டார். நன்றியறிவின் மிகுதியால் எழுந்த அவருடைய இறுதி விருப்பத்தை விரோதிகள் அங்கீகரித்து நிறைவேற்றினார்கள்.

மருதபாண்டியர் வழங்கிய பொருள்கள் உரியவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவென்ற செய்தியை அறிந்த அக்கிழவி, தன்னிடமுள்ள ஓலையைக் காட்டினால் ஏதாவது கிடைக்கலாம் என்ற நம்பிக்கையினால் அதனை அனுப்புவித்தாள்; தான் இருந்த * கிராமத்தைச் சுரோத்திரியமாகப் பெற்றாள். தன் வீட்டிலே பழையது உண்ட வீரர் மருதபாண்டியரென்பதை அப்பொழுதுதான் அவள் உணர்ந்தாள். முள்ளாலெழுதிய

---

* இக் கிராமத்தின் பெயர் இப்பொழுது 'பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்' என்று வழங்குகிறதென்பர்.

ஓலைக்கு அவ்வளவு மதிப்பிருந்ததைக் கண்டு அவள் வியந்தாள். மருதபாண்டியருக்கு இருந்த நன்றியறிவை நினைந்து உருகினாள்; அவருடைய முடிவையறிந்து அவள் அடைந்த வருத்தத்திற்கு எல்லையேயில்லை. கையிற் சிலந்தியைக் கட்டிய கட்டுடன் வீட்டிறப்பிலுள்ள பனையோலையையும் வேலி முள்ளையும் ஏடெழுத்தாணியாகக்கொண்டு முகமலர்ச்சியுடன் மருத பாண்டியர் எழுதிய காட்சியைத் தன் மரணகாலம் வரையில் அக் கிழவி தன் மனத்திற் பதித்துவைத்து வாழ்த்தினாள். அங்ஙனம் அவள் செய்தது ஆச்சரியமில்லை யல்லவா?

# 3. இளமை விருந்து

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

## உடலோம்பல்

'சுவரை வைத்தே சித்திரம் எழுதல் வேண்டும்' என்பது பழமொழி. எதற்கும் உடல் நலன் வேண்டற்பாலது. பெரும் பொறுப்பை ஏற்கப்போகும் நீங்கள், உடல் நலனைப் பேணுதல் வேண்டுமா, வேண்டாமா என்பதை உன்னுங்கள். கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், எஃகு நரம்பும், ஏக் கழுத்தும், பீடுநடையும் உடையவர்களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்.

'இஃதென்ன மாயும் உடல்; இவ்விழிந்த உடலைப் போற்றி ஓம்பப் புகுதல் அறியாமை' என்று சிலர் சொல்வதுண்டு. அருமை மாணுக்கர்களே! இப்போலிக் கூற்றுக்குச் செவிசாயாதேயுங்கள். உடலை வெறுத்தல், பெண்ணை வெறுத்தல், மண்ணை வெறுத்தல், பொன்னை வெறுத்தல் முதலியவற்றைக் கொண்ட வெறுப்புத் துறவு, நாட்டிற்கு என்புருக்கி நோயாய், நாட்டை அலைத்து அரித்துக் குலைத்து வருகிறது.

தனு கரண புவன போகங்கள் ஆண்டவனால் அளிக்கப் பட்டன. அவைகளை ஏன் நீத்தல் வேண்டும்? அவைகளை நீத்தல் என்பது ஆண்டவன் படைப்பையே அவமதிப்பதாகும். தொல்காப்பியனுர், திருவள்ளுவனுர் முதலிய அறிஞர்களது மொழிகளை எடுத்துக்காட்டிப் பொல்லாத் துறவுக்கோளை நிறுத்தச் சிலர் முயல்வதை யான் அறிவேன். அவர்தங் கூற்றுக்கு உரையாசிரியர்கள் கூற்றுக்கள் துணை நிற்குமேயன்றித் தொல்காப்பியனுர், திருவள்ளுவர் கூற்றுக்கள் துணை நில்லா.

தொல்காப்பியனுர், திருவள்ளுவனுர் உள்ளிட்ட பெரியோர்கள் பொல்லாத 'வெறுப்புத் துறவை' அறிவுறுத்தவில்லை என்பதையும், இயற்கையோடியைந்த இன்ப அன்பு வாழ்வை நடாத்தி, உலகுக்கு நலஞ்செய்யும் பேரறத்தை ஓம்புமாறு அவர்கள் அறிவுறுத்தி யிருக்கிறுர்கள் என்பதையும் என்னுடைய நூல்கள் பலவற்றில் ஓல்லும்வகை விளக்கியிருக்கிறேன்.

சில மாணுக்கர்கள் உடலை ஓம்பாது, இரவும் பகலும் ஏடுகளைக் கட்டியழுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் வாழ்வு இரங்கத்தக்கதாக முடியும்; சில விடங்களில் அவ்வாறு முடிந்ததும் எனக்குத் தெரியும். ஆண்டவன் அளித்த அரிய உடலை நல்லவழியில் ஓம்பாதாரை இயற்கையன்னை ஒறுத்தே தீர்வாள். அவ்வொறுத்தலுக்கு ஆளாகாத வழியில் உடலை ஓம்பவேண்டுவது உங்கள் கடன்; தலையாய கடன் என்றுங் கூறுவேன்.

மாணுக்கர் பார்வைக்கு இனியரா யிருத்தல் வேண்டும். இளமையழகுள்ள இடத்தில் இனிமையுண்டு. மாணுக்கர் உடலில் இளமை மணங்கமழின் அதன்கண் அழகொளி வீசும். 'கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப, விண்கொள்ளாப் பேரொளியான்' என வருஉஞ் சேக்கிழார் மொழியின் பொருளாக மாணுக்கர் இலங்க விரும்புவர் என்றே நினைக்கிறேன். கம்பனும் 'கந்தலை யிலையர் கலைதெரி கழகம்' என்று கூறியது ஈண்டுக் கருதற்பாற்று.

இளமையழகுக்கு இயற்கை யாழ்வு வேண்டற்பாலது. அதற்கு முதலாவது ஒழுங்கு வேண்டும். இயற்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஒழுங்கு என்னுங் கோட்டின் வழியே இயங்குகிறது. ஆகவே, இயற்கையோடியைந்த வாழ்விற்கு ஒழுங்கு இன்றியமையாதது.

நம்மிடத்தில் ஒழுங்கில்லை என்று உலகமே நம்மீது பழி சுமத்துகிறது. லார்ட் நார்த்கிளிப் என்பவர், 'கண்ட இடங்களில் எச்சில் துப்புதலும், வாழ்வில் ஒழுங்கினமும் இந்தியரை விட்டகலாத குற்றங்கள்,' என்னுங் கருத்துப்பட ஒருபோது சொற்றனர். இக் குற்றங்கள் நம்பால் ஊடுருவிக் குருதியிற் கலந்து நிற்றல் உண்மையே. 'ஒழுங்கு ஊராளும்' என்பது பழமொழி. ஐரோப்பியரது வாழ்வில் ஒழுங்கு என்பது ஊடுருவிப் பாய்ந்து நிற்கின்றது. அவர்தம் ஒழுங்கு ஊரையும் ஆள்கின்றது; உலகத்தையும் ஆள்கின்றது. அவரிடத்திருந்து நாம் கற்கத்தக்கனவற்றுள் ஒழுங்கும் ஒன்று.

ஒழுங்கை மாணுக்கர்கள் உறுதியாகக் கடைப் பிடித்து ஒழுகுவார்களானுல், வருங்காலத்தில் நாடே நன்னிலை எய்

தும். படுக்கை விட்டெழுதல், உலவல், உண்ணல், படித்தல், ஆடல், உறங்கல் முதலியன குறித்த காலத்தில் நிகழுமாறு பயிற்சி செய்யின், அவைகளினின்றும் வாழ்வு நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்கிற்கு வரும்.

காலையிலும், மாலையிலும் உலவுதல் நல்லது. உலாவரவில் கதிரொளியில் மூழ்கலும், காற்றில் தோய்தலும் நிகழ்கின்றன. உலவ இயலாதார், ஏதாயினும் வேறுவிதப் பயிற்சி செய்யலாம். அன்னூர், குதிரை ஏற்றம், நீச்சு, சிலம்பம், ஆசனம் முதலியவற்றில் ஏதாவதொன்றைக் கொள்ளலாம் பயிற்சியின் பின்னை நீராடுதல் சிறப்பு.

உடற்பயிற்சியை ஒழுங்காகச் செய்தும், பொருந்திய உணவைத் திருந்த உண்டும், நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச் செய்யப் பயிலல்வேண்டும். இல்லையேல், உடல் நலனுருது. தீய எண்ணங்கள் நரப்புக் கட்டைக் குலைத்து, நரப்புக் குழாய்களில் நஞ்சூட்டி உறுப்புக்களை அரிக்கும்.

மனிதன் எவன்? அவன் எதனுல் ஆக்கப்படுகிருன்? 'மனிதன் எண்ணம்.' அவன் எண்ணத்தால் ஆக்கப்படுகிருன். எண்ணங்கட்கு நுண்ணிய உருவங்கள் உண்டென்பதும், நிறங்கள் உண்டென்பதும் இந்நாளில் ஆராயப்பட்டு வருகின்றன. இங்கே சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் பிரான்சு தேசத்து டாக்டர் பாரடக் என்பவர். எண்ணமே மனிதனுகக் காரியப்படுதலால், எத்தகைய எண்ணம் நெஞ்சில் எழுதல் வேண்டும்?

நல்லெண்ணங்களைப்பற்றிப் பேசலாம்; எழுதலாம். பேச்சும் எழுத்தும் என் செய்யும்? மன்பதையை எத்துணையோ தீமைகள் சூழ்ந்து நிற்கின்றன! 'ஜனநாயகம்' என்னும் 'நாகரிகத் தாய்' ஈன்றுவரும் நச்சுக் குழவிகள் பெருகிக்கொண்டே போகின்றன. பத்திரிகை யுலகிலும், தேர்தல் திருவிழாவிலும் ஈடுபட்டவர்கட்கு அக் குழவிகளின் இயல்புகள் நன்கு தெரியும். மன்பதையை அடிமையாக்கும் பேய்கள் கோடிக்கணக்கில் நடமாடுகின்றன. அவைகளிடையில் மக்கள் நல்லெண்ணம் உடையவர்களாக வாழ்தலின் அருமையை விளக்கவேண்டுவதில்லை. பின்னை எங்ஙனம் நல்லெண்ணங்களை நெஞ்சில் பிறக்கச் செய்வது?

உள்ளத்தின் இயல், ஒன்றைச் சார்ந்து நிற்பது. அச் சார்பு தீயதாயிருந்தால் தீய எண்ணம் பிறக்கும்; நல்லதா யிருந்தால் நல்ல எண்ணம் பிறக்கும். தீய எண்ணத்துக்குரிய சார்புகள் பல உண்டு. நல்லெண்ணத்துக்கும் சார்புவேண்டு மன்றோ? மன 'நெடுந்தேரேறிப்' பாருங்கள்.

நல்லெண்ணத்துக்குக் கொழு கொம்பாக அன்புக் கட வுளைக் கொள்வது சிறந்தவழி. நெஞ்சம் மேலான பொருளை நினைந்து நினைந்து பண்படும்போது, அதன்பால் அம் மேலான பொருள்களின் இயல்கள் படிகின்றன. அவை படியப்படிய நல்லெண்ணங்களே பெருகும். இம்முறையின் இன்றியமை யாமை, உள்ளத்தின் இயலை நன்கு ஆராய்ந்துணர்ந்த வில்லி யம் ஜேம்ஸ் முதலிய பேரறிஞர்கட்கும் விளங்கியிருக்கிறது.

தியானம் என்பது பொது. அதற்குரிய முறைகள் அவரவர் அறிவு, ஆற்றல், இயல்பு முதலியவற்றிற்கு ஏற்ற வண்ணம் தாமே அமையும். எல்லாங் கடந்து அறிவாய், அன் பாய், இன்பாய், யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள பரம் பொருளை அவரவர் விரும்புமாறு நினைக்கலாம்.

மக்கள் அனைவரும் ஒரு நெறிபற்றி நடப்பதில்லை. ஒவ் வொருவருக்கு ஒவ்வொன்றில் ஒவ்வொரு வித விருப்பம் நிகழ் தல் இயல்பு. எல்லாரும் ஒருவித உணவுகொள்வதில்லை; எல்லாரும் ஒருவிதக் கல்வி பயில்வதில்லை; எல்லாரும் ஒருவித உடையணிய விரும்புவதில்லை. இப் பலவகையால் விளையும் பயன் மட்டும் ஒன்றே. அவ்வாறே தியானமுறைகள் அவரவர் இயல்புக்கேற்பப் பலபடினும், விளைவுமட்டும் ஒன்றே என்பது உன்னற்பாலது. விரிவஞ்சி இவ்வளவில் நின்று மேற்செல் கிறேன்.

## கல்வி

உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்து வரல் வேண்டும். இல்லையேல் வாழ்வில் அறிவியற் கூறுகள் இடர்ப் பட நேரும். அறிவோம்பலுக்குக் கல்வி வேண்டற்பாலது. அறியாமை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். அக் கல்விப்பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே 'இளமையிற் கல்' என்னும் முதுமொழி பிறந்தது.

இந் நாளில் பெரிதும் 'ஏட்டுக் கல்வியே கல்வி' என்னும் ஒரு கொள்கை யாண்டும் நிலவிவருகிறது. ஏட்டுக் கல்வி மட்டுங் கல்வியாகாது. தொழிற் கல்வி முதலியனவும் கல்வியின் பாற் பட்டனவே.

கல்வித்துறைகள் பலதிறத்தன. அவற்றுள் ஒவ்வொன்று. ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப் பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும், பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும்.

இக் காலத்தில் கல்லூரியில் படிப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்குப் போற்றற் குரியதே. ஆனால், பெரும்பான்மையோர் அக் கல்வியை எந் நோக்குடன் பயில்கிறார்? 'உத்தியோக நோக்குடன்' என்று சொல்லவேண்டுவதில்லை. அந் நோக்குடன் கல்வி பயின்றோர் நிலை எவ்வாறிருக்கிறது? அவர்தம் நிலை இரங்கத்தக்கதா யிருக்கிறது. வேலையின் பொருட்டு இளங்கொழுந்துகள் படும் துன்பம் அளவிடற்பாலதன்று. இவ் வேளையில், உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டாமென்றும், அறிவு விளக் கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டுமென்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமாயிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர்கள் செவிசாய்த்து நடப்பார்க ளாக; செவிசாய்த்து, அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில் துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவார்களாக.

நமது நாட்டில் பலதிற ஆராய்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமா யிருக்கின்றன. அவைகளுள் ஒன்று, எம்மொழியிற் கல்வி பயில வேண்டுமென்பது. சீர்குலைந்த ஒரு நாட்டில், கட்டில்லாத ஒரு நாட்டில், கலையறி விழந்த ஒரு நாட்டில், தலைகீழாராய்ச்சி கள் பல நாளுக்கு நாள் பெருகுதல் இயல்பு போலும்!

தாய் மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய் மொழிப் புலமை நிரம்பப்பெற்ற பின்னை வேறுபல மொழி களைப் பயிலலாம்; ஆராயலாம். முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். 'தாய் நாடு' என்னும் பெயர் தாய்மொழியைக்கொண்டே பிறப்பது. அத் தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

மேல் நாட்டினர் ஒவ்வொருவரும் தாய்மொழிப் பற்றுடையவராய் வாழ்தல் கண்கூடு. காலஞ்சென்ற அறிஞர் கிரிபத்தைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அவர் ஐர்லாந்து தேசபக்தர்; ஐரிஷ் மொழியில் புலவர். ஐரிஷ் மொழியின் ஆக்கத்தால் ஐர்லந்துக்கு நலன் விளையும் என்று உறுதிகொண்டு, அதை வாழ்விடை நடாத்தி, அவர் வெற்றியும் பெற்றார். வட இந்தியரும் தாய்மொழிப் பற்றுடையவராகவே வாழ்கிறார். கவி மன்னராகிய ரவீந்திரநாதர், கீதாஞ்சலி என்னும் உலகம் போற்றும் ஒரு நூலை முதல் முதலில் எம் மொழியில் யாத்தனர்? தம் தாய்மொழியாக உள்ள வங்கத்திலன்றோ அச் சிரியநூலை அவர் முதல் முதல் யாத்தனர்? பின்னரே அவர் அதனை ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதினார். கல்விக்கடல் என்று போற்றப்பெற்ற பால கங்காதர திலகரை நீங்கள் அறிவீர்கள். அவர் ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர். அம் மொழியிலுள்ள பல கலைகளை ஆய்ந்தவர். அப்பெரியார் மூன்றுமுறை சிறைபுகுந்தபோது, சிறைக் கோட்டத்தில் கீதாரகசியம் என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றினார். அவர் அதை எம் மொழியில் எழுதினார்? தம் தாய்மொழியாக உள்ள மகாராஷ்டிரத்திலன்றோ அவர் அதை எழுதினார்? இப் பெரியோர்களது வாழ்வுஞ் செயலும் பிறவும் உலகுக்கு எடுத்துக் காட்டுகளாக நின்று துணைசெய்வன. 'தாய்மொழிப் பற்றே தாய் நாட்டுப்பற்று' என்பதை அவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல உணர்ந்தே தாய் மொழிக்கு ஆக்கந் தேடினார்கள் ஆங்கிலம் பயின்ற இக்காலத் தமிழன் ஒருவன், ஒரு துறையில் பெரியனாய்த் தன் வரலாற்றைத் தானே எழுதும் வாய்ப்புத் தனக்கு நேருமேல், அவன் அதைத் தாய் மொழியாகிய தமிழில் எழுதப் புகுவானா, அல்லது ஆங்கிலத்தில் எழுதப்புகுவானா என்று கேட்கிறேன். நீங்களே விடை இறுத்தல் வேண்டும். தமிழனுக்குத் தாய் மொழிப்பற்றுப் போதிய அளவு இல்லையென்பது உலகறிந்தவொன்று. தமிழனுக்குத் தாய் மொழியினிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ, அன்றே அவன் வாழ்வு மணம் பெறும்.

# 4. ஆனந்த ரங்கர்

[பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.]

புதுவை என்னும் புதுச்சேரி இன்று பிரெஞ்சு ஆட்சியி லுள்ள துறைமுக நகரம். புதுச்சேரியைப் பாண்டிச்சேரி என்று வழங்கலாயினர் வெள்ளைப்பரங்கியர். அந்நகரில் வாணிகத்தால் வளம் பெற்றவருள் ஒருவர் ஆனந்தரங்கர். மதிநலத்தால் அவர் மன்னரும் மதிக்க வாழ்ந்தார். புதுவையில் ஆட்சி புரிந்த பிரெஞ்சு கவர்னர்களில் தலை சிறந்தவன் டூப்ளே என்பர். அவ னுடைய நன்மதிப்பை நிரம்பப் பெற்றவர் ஆனந்த ரங்கர். நாள்தோறும் நாட்டிலே தாம் கண்ட காட்சியையும், கேட்ட செய்தியையும் ஒழுங்காகக் குறித்து வைத்தார் அவர். அதுவே இப்பொழுது சிறந்த சரித்திரக் களஞ்சியமாக விளங்குகின்றது.

பன்னீராண்டு புதுவையில் கவர்னராயிருந்து பணி செய்த டூப்ளேயின் பெருமையை அன்று பிரெஞ்சு நாட்டார் அறிந்தா ரல்லர். அரசியலாளரின் கோபத்திற்கு ஆளாகி, அப்பெருமகன் பதவியிழந்து, விரசு கோலந்துறந்து, பாரீசுக்குக் கப்பலேறிய நாளில் பழைய நினைவுகளெல்லாம் ஆனந்த ரங்கர் உள்ளத்தில் பொங்கி எழுந்தன. அவற்றை எவரிடமும் சொல்லி ஆற்றிக் கொள்ள விரும்பாது அந்தி மாலையில் அவர் கடற்கரையில் நின்று பேசலுற்றார் :—

"பொங்கு மாகடலே! புதுவையின் கவர்னராய்ப் பன்னீ ராண்டு ஆட்சி புரிந்த பெருமகன் இன்று காலையில் கப்பலேறிச் சென்றான். இந்நாளை நான் எந்நாளும் மறக்க முடியுமா? இத் தனை காலமும் என் இன்ப துன்பங்களுக்கெல்லாம் காரணனாய் இருந்த அக் கவர்னரையே நினைத்துக் கரைகின்றது என் நெஞ் சம். ஐயோ! பெருங்கடலே! என் கதையை உன்னிடம் சொல் லாமல் வேறு யாரிடம் சொல்வேன்? நான் சென்னையின் அரு கேயுள்ள ஒரு சிற்றூரில் பிறந்தேன். என் தந்தையாரோடு இளமையிலேயே இந்த ஊரை வந்தடைந்தேன். 'புதுவையை அடைந்தவர் புது வாழ்வு பெறுவர்' என்று என் தந்தையார் நம்பினார். அவர் முயற்சியுடையவர்; 'வர்த்தகமே அர்த்த சாத னம்' என்று அடிக்கடி சொல்வார். இத்தகைய பண்புடைய தந்தையார் என் பதினாறும் ஆண்டில் பரமபதம் அடைந்து விட்டார்.

"ஈர நெடுங்கடலே! அன்று தொட்டுக் குடும்பப் பொறுப் பெல்லாம் என் இளந்தலையில் விழுந்தது. ஆயினும், நான் தயங்கவில்லை; 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற முது மொழியை நம்பி வர்த்தகம் செய்யத் தலைப்பட்டேன்; புதுவை யில் அங்காடி வீதியிலே ஒரு சிறு பாக்குக்கடை வைத்தேன். அக் கடையே என் ஆக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்தது. ஆதலால், அக்கடையை விடாமல் இன்றுவரை நடத்தி வரு கின்றேன். அதில் ஆனந்தமாய் இருந்து என் தாய் மொழி யைக் கற்கவும் கேட்கவும் எனக்கு ஆசை அதிகம். 'செல்வத் துட் செல்வம் செவிச் செல்வம்' என்ற அருமைத் தமிழ் மறை யை நான் எந்நாளும் மறந்தறியேன். அந் தமிழ் விருந்தளிக் கும் அறிஞருக்குப் பெரும் பொருள் அளிக்கவேண்டும் என்பது என் ஆசை. ஒருநாள் மதுரகவி என்னும் பாவலர் என்னைக் காணவந்தார். மாலைப்பொழுது. நான் இன்றுபோலவே அன் றும் இக் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தேன். அவர் வந்ததும் தேன்மடை திறந்தாற்போல் பாடத்தொடங்கினர். நெடுங்கடலே! உன் மெல்லிய காற்றினும் இனிமையா யிருந் தது அவர் பாடிய தெள்ளிய தமிழ்ப்பாட்டு. அப்போது நான் நடையை மறந்தேன்; கடையை மறந்தேன்; ஆனந்த பரவச னுயினேன். அந் நிலையைக் கண்டார் கவிஞர்; அளவிறந்த அன்புகொண்டு என்னைப்பற்றியே ஒரு *பாட்டுப் பாடிவிட் டார்.

"புதுவைப் பெருங்கடலே! இப்போது புதுச்சேரி புத்துயிர் பெற்று வருகின்றது; வர்த்தகத்தால் வளம் பெருகுகின்றது; குச்சு வீடுகள் மச்சு வீடுகளாகின்றன; புதியவாகப் பல பேட்

---

* "உலங்கொண்ட மணிப்புயனே! பிரம்பூர்ஆ
 னந்தரங்கா! உன்பாற் செல்ல
வலங்கொண்ட கருடனையாம் இடம்கண்டோம்
 எழில்நரையான் வலத்தே கண்டோம்
பொலங்கொண்ட மணிமாட மீமிசையில்
 புயல்தவழும் புதுவை யென்னும்
தலங்கண்டோம் நினதுநகை முகங்கண்டோம்
 இனிவேண்டும் தனம்கண் டோமே!

—பெருந்தொகை, 1357.

டைகள் உண்டாகின்றன. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் வாணிகத் துறையிலே போட்டியிடுகின்றனர். இருதிறத்தாரும் தங்கள் பெயரை இத் தமிழ் நாட்டில் நிலைநாட்ட ஆசைப்படுகிறார்கள். ஆங்கிலேயரின் வர்த்தக நிலையமாகிய சென்னையில் 'காலட்' என்பவர் சிறிது காலம் கவர்னராயிருந்தார்; நெசவுத் தொழிலைப் பேணி வளர்ப்பதற்காக நல்ல நீரும்நிழலும் அமைந்த திருவொற்றியூரில் ஒரு பேட்டையை உண்டாக்கினார்; நூறு குடும்பங்களைக் கொண்ட அக்குடியிருப்புக்குக் 'காலட் பேட்டை' என்ற பெயர் கொடுத்தார் காலட் கவர்னர் கப்பலேறிப் போய்விட்டார். அவர் பெயர் தாங்கிய பேட்டை 'காலாடிப் பேட்டை' என்று இப்போது வழங்குகின்றது வெள்ளைப் பெயரால் விளையும் விபரீதத்திற்கு வேறு சான்றும் வேண்டுமா?

"முந்நீர்ப் பெருந்துறையே! இத்தகைய பேராசை டூப்ளே கவர்னரிடமும் இருந்தது. புதுச்சேரியின் பாக்கமாக அமைந்த ஒரு சிற்றூருக்கு அவர் டூப்ளேப் பேட்டை என்று பெயரிட்டார்; எல்லோரும் அவ்வூரை அப்படியே அழைக்கவேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்; துரைத்தன அதிகாரிகள் டூப்ளேப் பேட்டையிலேயே வீடுகட்டி வசிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். ஆயினும், நாட்டு மக்களுக்குப் புதுப்பெயரில் நாட்டமில்லை. 'தானாய்ப் பழுத்தால் பழமா, தடியால் அடித்தால் பழமா?' என்பது பழமொழியன்றோ? மேலும் டூப்ளேப் பேட்டை என்ற பெயர் நாட்டு மக்கள் நாவில் நல்லமுறையில் வருமா? இயற்கைக்கு மாறாக வற்புறுத்தினால் காலாடிப் பேட்டை போன்ற விபரீதந்தான் விளையும். டூப்ளேப் பேட்டை என்பது துவளைப் பேட்டையாகுமோ? அல்லது தவளைப் பேட்டையாகுமோ? யார் அறிவார்? பேராசையுடைய டூப்ளேயின் செவியில் இதைச் சொன்னால் ஏறாதென்று நான் சும்மா இருந்துவிட்டேன்.

"நலமார்ந்த நற்கடலே! ஒரு நன்றி செய்தாரை உள்ளத்தில் வைத்துப் போற்றுவது தமிழர் பண்பு. அந்த முறையில் எனக்குப் பெருநன்றி செய்த டூப்ளே துரையை நான் என்றென்றும் போற்றுவேன். புதுவையில் பிழைக்க வந்த எனக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தவர் அவரே! சிறப்

புடன் சிவிகையில் ஏறி, மேளதாளத்துடன் அவர் மாளிகைக் குச் செல்லும் உரிமையை எனக்குத் தந்தார் அவர்; அங்காடி விலைகளையும் அரசியல் முறைகளையும் அந்தரங்கமாக என் னுடன் ஆலோசித்தார்; நிறவேற்றுமை சிறிதும் இன்றி நெருங்கி என்னுடன் மனங்கலந்து பேசி மகிழ்ந்தார்; மாறு பட்ட கருத்தை நான் எடுத்துரைத்தாலும் சீறி விழ மாட்டார்; தம் செவியில் ஏற்று நிதானமாக ஆராய்வார். இதுவன்றோ நல்லமைச்சனுக்கும் அதிகாரிக்கும் ஏற்ற பண்பு?

"கரை காணாக் கருங்கடலே! ஆயினும், அவரிடம் ஒரு பெருங்குறை யுண்டு. அக் குறையினால் குன்று முட்டிய குருவி போல் மறுகினார் அப்பெருமகனார். அவருக்கு மனையாளாய் வாய்த்த மேடம், செருக்கும் சிறுமையும் உடையவள்: எல் லோரையும் அடக்கி ஆள்வதில் ஆசையுடையவள். வீட்டில் அவள் இட்டதே சட்டம். பொறியில் அகப்பட்ட எலிபோல் அடங்கி அவள் சொல்லின் வழியே சுழல்வார் டூப்ளே துரை: ஒன்றும் மறுத்துப் பேசமாட்டாமல் விழிப்பார். அவள் அதி காரம் வீட்டளவில் நின்றுவிடவில்லை. அரசியல் வேலைகளிலும் அவள் தலையிட்டு அல்லல் விளைப்பாள். அம் மேடம் தருக் குற்றுத் தகாத செயல்களைச் செய்யத் தூண்டும்பொழுது டூப்ளே தடுத்துச் சொல்ல அஞ்சுவார்; சில வேளைகளில் அடிமைபோல் கெஞ்சுவார்; அவர் கெஞ்சக் கெஞ்ச அவள் மிஞ்சுவாள். அந்தோ! பேய் கொண்டாலும் கொள்ளலாம்; இத்தகைய பெண் கொள்ளலாகா தம்மா!

"காலங் கண்ட நெடுங்கடலே! அன்றூடம் கவர்னர் வீட் டிலும் வெளிநாட்டிலும் நான் கண்டதும் கேட்டதும் பல உண்டு. அவற்றையெல்லாம் என் நாட் குறிப்பிலே நான் எழுதிவைக்கத் தொடங்கினேன். அவ்விதம் குறித்து வைப் பதில் ஒரு கருத்தும் எனக்கில்லை. பசித்தவன் பழங்கணக்கைப் பார்ப்பதுபோல், வேலையற்ற வேளைகளில் என் நாட் குறிப் பைப் பார்த்துப் பொழுது போக்குவேன். இக் காலம் மிகக் குழப்பமான காலம்; முத் திறத்தார் ஆதிக்கம் பெற முயலும் காலம்; மகமதியரும், ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் ஒரு வரை ஒருவர் ஆள்வினையாலும் சூழ்வினையாலும் வென்று

உயரக் கருதும் காலம். இந்தக் காலத்தில் டூப்ளே கவர்னராக வந்தது புதுவைக்கு ஒரு நல்ல காலம்.

"புகழார்ந்த புதுவைக் கடலே! தென்னாட்டில் பிரெஞ்சு ஆட்சியை நிறுவ ஆசைப்பட்டார் டூப்ளே; மகமதிய நவாப் போடு அரசியற் சதுரங்கம் ஆடினார்; சென்னையில் இருந்த ஆங்கிலேயர்மீது கப்பற்படை கொண்டு சாடினார். பிரெஞ்சுப் படை வென்றது. சென்னைக் கோட்டையில் பிரெஞ்சுக் கொடி பறந்தது. டூப்ளேயின் புகழ் உயர்ந்தது. பிரெஞ்சுக் கொடியை வணங்கிப் பணியாத ஆங்கிலப் படை வீரரை யெல்லாம் சிறைபிடித்துப் புதுவைக்குக் கொண்டுவரும்படி ஆணை பிறந்தது. சென்னைக் கவர்னராயிருந்த மார்ஸ் என்பவரும் அவர் பரிவாரமும் இப் புதுவைத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப் பெற்றனர். ஆங்கிலக் கவர்னருக்கு மரியாதை காட்டி வரவேற்கக் கருதியவர்போல் டூப்ளே ஆடம்பரமாக இத்துறை முகத்திற்கு வந்தார். அம்மம்ம! அப்போது இக் கடற்கரை யில் கூடியிருந்த மக்களுக்குக் கணக்குண்டா? ஆரவாரத்திற்கு ஓர் அளவுண்டா? புதுவைக் கடலினும் பெரிதாகப் பெருமுழக் கம் செய்த மக்களைக் கண்டு டூப்ளே மனங் குளிர்ந்தார்; மார்ஸ் மனந் தளர்ந்தார். அன்று மலர்ந்த செந்தாமரையை ஒத்தது டூப்ளேயின் முகம்; மாலைக் கமலம்போல் வாடிக் குவிந்தது மார்ஸின் முகம். இந்தக் கோலத்தில் வெற்றிபெற்ற கவர்ன ரும், தோல்வியுற்ற கவர்னரும் புதுவையின் வீதியின் வழியே சென்ற காட்சிக்கு நிகரானதொன்றை நான் என்றும் கண்ட தில்லை. மறுநாள் டூப்ளேயின் மாளிகைக்குச் சென்றேன். ஆனந்த மயமாக விளங்கிய அவர் 'ஆனந்த ரங்கரே வாரும்! என்றழைத்தபோது நான் என்றும் இல்லாததோர் இன்பம் பெற்றேன். அவர் மதிநலத்தை மனமாரப் புகழ்ந்துரைத் தேன்.

"புகழ் பூத்த புதுவைத் துறையே! சென்னையிலே பிரெஞ்சு ஆதிக்கம் பெருகக்கண்ட மகமதிய நவாபு பெருஞ் சீற்றமுற்றார்; முள்மரத்தை முளையிலே கிள்ளியெறிய வேண் டும் என்றெண்ணிச் சென்னையின்மீது படையெடுத்தார். நவாப் பின் மைந்தன் மாவுஸ்கானே படைத்தலைவனாயினான். இதை யறிந்த டூப்ளே புதுவையிலிருந்து ஒரு பட்டாளத்தைச் சென்னைக்கு அனுப்பினார். அடையாற்றின் வடகரையில் இரு

படைகளும் கை கலந்தன ; கடும்போர் புரிந்தன. சிறிது நேரத்தில் மகமதியர் படை சின்ன பின்னமாய்ச் சிதறி ஓடிற்று. 'மகம்மதியர் அதிசூரர் ; அவரை வெல்ல எவராலும் ஆகாது' என்று பொது மக்கள் எண்ணியிருந்த எண்ணம் அடையாற்றுப்போரில் அடிபட்டு ஒழிந்தது. மகமதியரது போராண்மையைத் தகர்த்த டூப்ளேயின் புகழ் மும்மடங்கு வளர்ந்தது.

"நிலையற்ற பெருங்கடலே! ஆயினும், இன்பமும் துன்பமும் கலந்ததே இவ்வுலக வாழ்க்கை. உயர்ந்தவர் தாழ்வர் ; தாழ்ந்தவர் உயர்வர். நாட்டிலே குழப்பம் பெருகிற்று : வர்த்தக வளம் குறுகிற்று. பாரிசு நகரம் பரபரப்புற்றது. டூப்ளேதான் இதற்கெல்லாம் காரணம் என்ற கருத்துப் பரவிற்று. எல்லோரும் அவரைக் கைவிட்டார். முன்பு கரும்பாய் இருந்தவரெல்லாம் வேம்பாயினர் ; வேலையைவிட்டு அவரை நீக்கினர். மற்றொருவரைக் கவர்னராக நியமித்தனர். புதிதாக வந்த கவர்னரிடம் புதுவையை ஒப்புவித்து, பாரீசை நோக்கிப் புறப்பட்டார் டூப்ளே.

"கதறும் பெருங்கடலே! அந்தோ! அன்று கவர்னராய் அவர் இந்தத் துறைமுகத்தில் வந்து இறங்கிய பெருமை என்ன! அவரை வரவேற்ற மாட்சி என்ன! அலங்காரக் காட்சி என்ன! பன்னீராண்டு அவர் ஆட்சி புரிந்தார். அப்போது அவர் நாவசைந்தால் இந்நாடசையுமே! அவர் அறிவிற் சிறந்தவர் ; ஆள் வினை யுடையவர் ; ஆங்கிலேயரை அலற வைத்தார் ; மகமதியரை மறுகவைத்தார் ; பாதுஷாவையும் பதற வைத்தார். இத்தகைய பிரெஞ்சு கவர்னர் எளியராய்த் தனியராய் இன்று இந்த நகரை விட்டுச் செல்கின்றார் ; நிதியிழந்து, நிமிர்ந்த நடையிழந்து, வழியனுப்ப நண்பர் யாருமின்றி வைகறைப் பொழுதிலே இப் பதியை விட்டுப் போகின்றார். காட்டில் அரசு வீற்றிருந்த சிங்கத்தைக் கூட்டில் அடைத்தாற்போல் அவரைக் கப்பலில் ஏற்றிக் குற்றவாளி போல் கொண்டு செல்கின்றார்களே! இன்று அக்டோபர்மாதம் பதினன்காம் தேதி ; இந் நாள் அவர்க்கு அட்டமத்தில் சனியாய் அமைந்ததே! பாரிசு நகரத்தில் இனி அவர் என்ன பாடு படப்போகின்றாரோ" என்று கண்ணீர் வடித்துக் கொண்டு கடற்கரையை விட்டகன்றார் ஆனந்த ரங்கர்.

# 5. சர்க்கரை

[திருவாளர் R. K. விசுவநாதன் அவர்கள் M.A.]

முன்னாளில் நமது இந்திய நாடே சர்க்கரை உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றிருந்தது. இது முதலில் மருந்தாகப் பயன் பட்டுப் பின்னர் உணவுப் பொருளாக ஆயிற்று. நம்மைக் காட்டிலும் வட இந்தியாவிலுள்ளவர்களே நாள்தோறும் சர்க்கரைப்பண்டங்களை மிகுதியாக உட்கொண்டு வருபவர்கள். அதிலும் வங்காளிகளுக்குத் தான் இதில் மிகுந்த விருப்பம். அவர்கள் உணவில் இரண்டு வேளையும் சர்க்கரைப் பண்டங்கள் இல்லாமல் இரா. ஒரு சமயம் இந்தியாவிலிருந்து பிற நாடு களுக்குச் சர்க்கரை ஏற்றுமதி ஆகி வந்தது. அந்நிலைமை மாறி அயல் நாடுகளிலிருந்து சர்க்கரையைப் பெருவாரியாக இப் பொழுது நாம் இறக்குமதி செய்து வருகின்றோம். சர்க்கரை யைத் தரும் கரும்புப் பயிர் வளர்வதற்குத் தகுந்த நிலம் இந்திய நாட்டிலேயே மிகுதி. இதற்கு வேண்டிய சூடு, நீர் வசதி, நில உரம் முதலியவை இங்கு மிகுதியாயுள. இப்பொழுது உலகின் பல இடங்களில் கரும்புப் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. முக்கியமாகத் தென் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் மக்கள் மிகுதியாகக் கரும்பைப் பயிர் செய்து வருகிறார்கள். ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளிலும் கரும்பு மிகுதியாகப் பயிரிடப்பட்டு வருகின்றது.

கரும்பில் பலவகைகள் இருக்கின்றன. யானைக் கரும்பு என்னும் வகை முதற்கொண்டு குச்சிக் கரும்பு என்னும் வகை வரை எண்ணற்ற வகைகள் இருக்கின்றன. இவை யனைத்தும் நன்றாக வளர்வதற்கு வேண்டிய சோதனைகள் கரும்புப் பண்ணை களில் நடந்து வருகின்றன. இச்சோதனைகளில் சிலவற்றைச் செய்து ஸர். டி. எஸ். வேங்கடராமன் என்பவர் எளிதில் கரும் பின் வகையை உயர்த்தும் வழியைக் கண்டுபிடித்தார். இதன் பயனாக நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தி பெருகிச் செல்வ நிலை உயர்ந்தது என்று கூறப்படுகிறது.

நன்றாக வளர்ந்த கரும்பில் நூற்றுக்கு எழுபது பங்கு தண்ணீரும், பதினெட்டுப் பங்கு சர்க்கரையும், பத்துப் பங்கு

"ஸெலுலோஸ்" என்று கூறப்படும் மூலதாவரப் பொருளும் இருக்கும். கரும்பை நசுக்கிச் சாறு எடுத்து அதைக் காய்ச்சிச் சர்க்கரையாக மாற்ற வேண்டும். சிற்றூர்களில் எண்ணெய் எடுப்பதற்குப் பயன்பட்டுவரும் செக்குகள் போன்றவற்றைக் கொண்டு இன்னும் பல இடங்களில் கரும்பிலிருந்து சாறு பிழிந்து வருகிறார்கள். செக்குகளில் மாடுகளைப் பூட்டி ஓட்டுவதற்குப் பதிலாக, மேனாட்டில் காற்றின் விசை அல்லது நீரின் விசையைப் பயன்படுத்திய காற்றாடியைக் கொண்டு இச்செக்குகளை இயக்கி வந்தார்கள். இக்காலத்தில் நீராவி இயந்திரத்தால் சுற்றப்படும் உருளைகள் இவ்வேலைக்குப் பல இடங்களில் பயன்பட்டு வருகின்றன. இதனால் சாறு சிறிதும் சேதமாகாமல் எடுக்கப்படுகிறது. நசுக்கும்போது கரும்புகளை நீராவியினால் தாக்கி நசுக்குவார்கள்; கரும்புச் சக்கையை வீணாக்காமல் அதையே பயன் படுத்தி நீரைக் கொதிக்க வைப்பார்கள்: இதற்கென்று தனி முறையில் அடுப்பையும் செய்திருக்கின்றார்கள். வேண்டுமென்றபோது சக்கைக்குப் பதிலாகக் கரியையோ அல்லது மரக்கட்டையையோ பயன்படுத்திக் கொள்ளுமாறு அந்த அடுப்பு அமைந்திருக்கும்.

சாறு எடுக்கப்பட்ட பின்னர் அதில் மிதக்கும் தூசி முதலியவை எந்திரத்தைக் கொண்டு நீக்கப்படும். இந்த எந்திரத்திலுள்ள உருளைகளின்மீது உருளும் நீண்ட சல்லடை அமைப்பினால் மிதக்கும் பொருள்களெல்லாம் நீக்கப்பட்டுவிடுகின்றன. இச்சல்லடையின் துளைகள் மிகச் சிறியனவாதலால் சாறு மிகத் தெளிவாக மாறி விடுகிறது. இதில் கரைந்துள்ள அசுத்தங்களையும் முக்கியமாகக் காடியையும் நிவர்த்தி செய்வதற்குச் சுண்ணாம்புத் தண்ணீரைச் சேர்த்துக் காய்ச்சுவார்கள். சேர்க்க வேண்டிய சுண்ணாம்புத் தண்ணீரின் அளவும், காய்ச்சப்பட வேண்டிய நேரமும், கூடும் சாற்றுக்குத் தகுந்தபடி மாறும். சுண்ணாம்பு, தண்ணீரின் மாசுகளை எல்லாம் மேலே மிதக்கச் செய்யும். சிறிது நேரம் கழித்து அதை வடிகட்டி மிதக்கும் மாசுகளை நீக்கிவிடுவார்கள்.

சாற்றிலுள்ள சர்க்கரையை மட்டும் பிரிக்க வேண்டுவது அடுத்த வேலை. இதற்காகச் சாறு காய்ச்சப்படும். நீர் கொதித்து ஆவியாக வெளிப்பட்டு விட்டால் சர்க்கரையை

மட்டும் பிரித்துவிடலாம். இங்கே கொதித்தல் நிகழ்ச்சியைப் பற்றிய விவரம் ஒன்றைக் கூற வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் எல்லாத் திரவங்களும் ஆவியாக மாறும் தன்மை வாய்ந்தனவே. ஆனால் சில திரவங்கள் மிக விரைவில் ஆவியாகிவிடும். சான்றாக "ஸ்பிரிட்" என்னும் திரவம் மிக விரைவில் ஆவியாகிவிடும். இத்துணை விரைவில் தண்ணீர் ஆவியாக மாறாது. கொதிக்க வைத்தே தண்ணீரை ஆவியாக மாற்ற முடியும். அதைக் காய்ச்சத் துவங்கியதும் அதன் சூடு உயர்ந்துகொண்டே சென்று ஒரு நிலையில் நின்றுவிடும். இச்சூட்டையே கொதிநிலைச் சூடு என்று கூறுவார்கள். சாதாரணமாகத் தண்ணீரின் கொதி நிலைச் சூடு சென்டிகிரேடு திட்டத்தில் நூறு டிகிரி இருக்கும். இதைப்போல ஒவ்வொரு திரவத்துக்கும் ஒரு கொதிநிலைச் சூடு உண்டு. இக்கொதிநிலைச் சூடு திரவப் பரப்பின் மீதுள்ள இறுக்கத்துக்குத் தகுந்தவாறு வேறுபடும் இறுக்கம் மிகுதியானால் கொதிநிலை உயரும். இறுக்கம் குறைந்தால் கொதிநிலை தாழும். சாற்றிலுள்ள நீரை அகற்ற வேண்டுமானால் அதன மீதுள்ள இறுக்கத்தைக் குறைத்துக் கொண்டு கொதிக்க வைப்பார்கள். எனவே நூறு டிகிரிக்குக் குறைந்த சூட்டிலேயே சாற்றிலுள்ள நீர் ஆவியாக மாறும்படி செய்யப்படும். நீர் நன்றாகச் சுண்டியவுடன் அதன் நிறத்தைப் போக்குவதற்கென்று நன்றாகப் பொடி செய்யப்பட்ட எலும்புக்கரியின் மூலம் அதைச் செலுத்துவார்கள். இவ்வேலை மிகவும் முக்கியமானது. இதற்காக எலும்புக்கரியைச் சிறந்த முறையில் ஆலைகளிலேயே செய்வார்கள்.

விலங்குகளின் எலும்புகளை உடைத்து, அவற்றிலுள்ள கொழுப்புப் பொருள்களை ஈதர், கரிகந்தக திரவம், பென்ஸீன் முதலிய திரவங்களால் கரைத்து முதலில் அவற்றை நீக்கிவிடுவார்கள். மிகுதியுள்ள பொருளை நீராவியைக் கொண்டும் சூடு செய்து அதிலிருந்து கோழை போன்ற பொருள் (Colloids) யாவும் பிரிக்கப்படும். இவ்விதம் துப்புரவாக்கப்பட்ட எலும்புகள் மீண்டும் இரும்பு உலைகளில் காற்றுப்படாமல் சூடு செய்யப்படும். இதனால் இதில் எஞ்சியுள்ள சேதனப் பொருள்கள் முழுவதும் வெளியேறிவிடும். சில வாயுப் பொருள்களாகவும் மற்றும் சில திரவங்களாகவும் பிரிந்துவிடும். தங்கி நிற்பது

தான் எலும்புக்கரி. இதை இயந்திரத்தினுல் பொடி செய்த பின் இப்பொடியே சர்க்கரையைத் துப்புரவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட சர்க்கரைப் பாகு பளிங்கு உரு கொள்ளுமாறு செய்யப்பட்டுச் சர்க்கரையாக்கப்படுகிறது. இதைச் செய்வதற்குப் பாகை மறுபடியும் குறைந்த இறுக்கத்தில் கொதிக்க வைத்து, குளிர் வித்துச் சர்க்கரை இறுகும்படி செய்யப்படுகிறது. பின்னர் இதை நொறுக்கிச் சீரான தூளாக ஆகுமாறு சுழற்சி எந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இத்தொழிலின் துவக்கம் முதல் இறுதி வரை பல தொழில் நுட்பங்கள் உண்டு. எனவே ஒவ் வொரு சமயத்திலும் வேலை சரியாக நடந்து வருகிறதா என்று கண்காணித்து வருதல் வேண்டும்.

ஐரோப்பாவில் பீட் என்னும் ஒரு வகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை உற்பத்தி ஆகிறது. முதன் முதலில் ஒரு ஜெர்மன் விஞ்ஞானி இக்கிழங்கில் சர்க்கரை இருப்பதை உணர்ந்தார். எனவே இம்முறை முதலில் ஜெர்மனியில் சிறப்படைந்தது. அமைப்பில் இக்கிழங்கு முள்ளங்கிக்கிழங்கைப்போல் இருக்கும். நன்ருகப் பயிர் செய்யப்பட்ட கிழங்கில் நூற்றுக்கு எண்பது பங்கு நீரும் பத்துப் பங்கு சர்க்கரையும் இருக்கும். கிழங்கு களின் உயர்வு தாழ்வை அவற்றிலிருந்து பெறப்படும் சாற்றின் செறிவைக் (Density) கொண்டு அறியலாம். சர்க்கரை மிகுதி யுள்ள கிழங்குகளின் சாறு மிகுந்த செறிவுகொண்டிருக்கும். கரும்புப் பண்ணைகளில் செய்வதுபோல இவற்றையும் பண்ணை களில் பயிராக்கி முதல்வகைக் கிழங்குகள் உற்பத்திக்கு வேண்டிய விவரங்களை அறிந்து வருகின்ருர்கள். இக்கிழங்கு கண்டு பிடித்த புதிதில் இதில் மிகக்குறைந்த அளவுக்கே சர்க் கரை இருந்தது. ஆனல் இக்காலத்தில் பயிர் செய்யப்படும் கிழங்குகளில் சர்க்கரையின் அளவு முன்பு இருந்ததைவிடப் பன்மடங்கு மிகுந்துள்ளது. இக்கிழங்குகளிலிருந்து சாறு எடுக் கப்படும் வகையினை இப்பொழுது பார்ப்போம் :

முதலில் கிழங்குகளிலிருந்து இலைகள் வேர்கள் முதலிய வை நீக்கப்படும். பின்னர் இவை நன்ருகக் கழுவப்பட்டு எந்திரத்திலிட்டுச் சிறிய வில்லைகளாகத் துண்டிக்கப்படும். இதைச் செய்யும் எந்திரம் சாதாரணமாக ஒரு நாளில் நூறு

டன் கிழங்குகளை வில்லைகளாகச் செய்துவிடும். ஒரு வில்லையின் கனம் ஒரு அங்குலத்தில் நூற்றில் நான்கு பங்கு இருக்கும். அகலம் சுமார் அரை அங்குலம் இருக்கும். நீரிட்ட பெரிய பாண்டங்களில் இவ்வில்லைகள் கொதிக்க வைக்கப்படும். நீரின் மேலுள்ள இறுக்கத்தைத் தக்கவாறு குறைத்துக் கொண்டே கொதிக்க வைக்கப்படும். இதனால் நீர் வில்லைகளினுள் செல்லும். வில்லைகளிலிருந்து சர்க்கரைச் சாறு வெளிப்படும். இந் நிகழ்ச்சியைப் பரவுதல் என்று கூறுவார்கள். வெளியிலிருக்கும் நீரின் செறிவும் உட்சென்ற நீரின் செறிவும் சரிசமானமாகும் வரை கொதிக்கவைக்கப்படும். இதனால் சர்க்கரைச் சத்து முழுவதும் கிழங்குகளிலிருந்து நீக்கப்பட்டு நீருடன் கலந்துவிடும். கரும்புச்சாற்றைத் துப்புரவு செய்தது போல இதையும் துப்புரவு செய்வார்கள். இதனுடன் சுண்ணாம்புத் தண்ணீரைக் கலந்து, காய்ச்சி, குளிர்வித்து பளிங்கு உருவை அடையச் செய்து சர்க்கரை உற்பத்தி செய்வார்கள். இதன் இனிப்பு கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையை விடக் குறைவு. இதில் சில உப்புக்கள் (Potash salts) பிரியாமல் சிறிதளவு தங்கிவிடுவதால் இதன் இனிப்புக் குறைந்து விடுகிறது.

மாப்பசையிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு மாப்பசையைக் கந்தகக் காடியுடன் கலந்து கொதிக்க வைப்பார்கள். நீண்ட நேரம் கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் இதில் தங்கியுள்ள காடியை நீக்கிவிட்டுக் கரும்புச்சாறு, பீட்கிழங்குச்சாறு இவற்றைத் துப்புரவு செய்தது போலவே இதையும் துப்புரவு செய்வார்கள். இவ்வாறு சர்க்கரையை உற்பத்தி செய்வதில் செலவு குறையும் என்று கூறப்படுகிறது. மற்றும் சர்க்கரையைப் பழங்களிலிருந்தும், பாலிலிருந்தும், ஈச்சஞ் சாறு, பனஞ்சாறு முதலிய வேறு சாறுகளிலிருந்தும் உற்பத்தி செய்யலாம். ஒவ்வொருவிதச் சர்க்கரையையும் சிறிது நீரில் கரைத்து அதன் மூலம் ஒரு வித ஒளியைச் செலுத்தி அதன் போக்கில் ஏற்படும் மாறுதலை உணர்ந்து சர்க்கரையின் இனிப்பு அளவைக் கணக்கிட்டு விடுவார்கள். இதனால் ஆலைகளில் சர்க்கரைகளின் இனிப்பு அளவு மிக்க விரைவில் கணக்கிடப்பட்டு விடும்.

சர்க்கரையை உற்பத்திசெய்யும் ஆலைகளில் அதன் கழிவுச் சரக்குகளை வீணுக்குவதில்லை. குளிர்விக்கும்போது சர்க்கரைப் பாகில் சிறிது பாகம் பளிங்கு உரு ஆகாமல் தங்கிவிடும். இதில் சிறிதளவு புரை சேர்த்துச் சிறிது நேரம் வைக்கப்படும். புரை யுடன் கலந்த பாகு சாராயமாகவும் கரியமிலவாயுவாகவும் பிரிந்து விடும். சாராயம் நீருடன் கலந்துவிடுவதால் அது காய்ச்சி வடித்தல் முறையினுல் பிரிக்கப்படும். கரியமில வாயு வையும் வீணுக்குவதில்லை. சோடாத் தண்ணீர் முதலிய பானங்கள் செய்வதற்கு அது பயன்படும்.

சர்க்கரை உற்பத்தியில், அதைத் துப்புரவு செய்து பகட் டாகச் செய்வதில்தான் செலவு மிகுதியாகிறது என்றும் பகட் டாகச்செய்யாமல் வெல்லமாகச்செய்து பயன்படுத்துவதில் கெடுதல் ஒன்றுமில்லை என்றும் சிலர் கூறுகிருர்கள் ; இதனுல் இத்தொழிலையும் குடிசைத்தொழில்களில் ஒன்ருக ஏன் செய்யக் கூடாது என்றும் கருதுகிருர்கள். சிற்றூர்களிலுள்ளவர்கள் தங்களுக்கு வேண்டிய அளவு வெல்லத்தைத் தாங்களே செய்து கொள்வதில் தடை ஒன்றுமிராது. விஞ்ஞானத்தின் துணை கொண்டு பெருத்த அளவில் சர்க்கரை செய்வதில் பல நன்மை கள் உண்டு.

# 6. நல்லுரை

[திரு. N. D. சுந்தர வடிவேலு அவர்கள், M.A., L.T.]

மாணவ மாணவியர்களே! உங்கள் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம்; பொன்போற் போற்றிப் பயன்படுத்தப் படவேண்டும் பருவம். வாய்ப்போ கிடைத்தற்கரிய வாய்ப்பு. தொடக்கப் பள்ளிக்கூடங்களே இல்லாத ஆயிரக்கணக்கான சிற்றூர்களும், படிக்க வாய்ப்பில்லாத பல இலட்சம் மக்களும் உள்ள இந்நாட்டில் உங்களுக்காவது ஏதோ படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கின்றதென்றால், அதை எளிதானதாகவோ அலட்சியப்படுத்தக் கூடியதாகவோ கருதாதீர்கள்; இப்பருவத்தையும் வாய்ப்பையும் நன்றாக முழுதும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்; மாணவப்பருவத்தில் கற்க வேண்டுவதை எல்லாம் கற்றுக்கொள்ளுங்கள்; பெறவேண்டும் திறமைகளை எல்லாம் பெற்றுக்கொள்ளுங்கள்; தேடிக்கொள்ளவேண்டுவன எல்லாம் தேடிக்கொள்ளுங்கள்.

**கல்வி கரையற்றது**: கற்கவேண்டுபவை உங்கள் பாட நூல்களோடு முடிந்துவிட்டனவாக எண்ணாதீர்கள். கற்கவேண்டுபவைகளை அறிமுகப்படுத்துவனவே அவை. பாட நூல்களுக்கு அப்பால் பரிட்சைகளுக்குத் தொடர்பில்லாதவை பல வற்றை நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும்; படிப்பை முடித்த பின், அவைகளைக் கற்கலாம் என்று மட்டும் காலந் தாழ்த்தாதீர்கள்.

வெறும் ஏட்டுப்படிப்புத் தகவல்களைக் கொடுக்கும்; அறிவொளியை வீசும். அவற்றை வாழ்க்கையோடு இணைத்துப் பயன்பெறும் திறமையை நீங்கள் பெற முயலவேண்டும். வாழ்க்கைக்கு ஊக்கம், உறுதி, உழைப்பு, தன்னம்பிக்கை இன்றியமையாதவை. அவற்றையெல்லாம் நீங்கள் இடைவிடாத பயிற்சியாற் பெறலாம்; அப்படிப் பெறத் தவற வேண்டா.

**பிஞ்சிற் பழுக்கவேண்டா**: இளம்பருவத்தே உங்களை மயக்கக் கூடியவை பற்பல.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்ற அறவுரையை மனத்திற் கொண்டு, கல்வியில் உங்கள் முழுக்கவனத்தையும் செலுத்துங்கள். கல்வியின் பகுதியாகவே நீங்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைப் பற்றிப் படித்துச் சிந்தித்துத் தெளிவு பெற வேண்டும். மாண வர்களாக இருக்கும்போதே அரசியல் வாதிகளாகிவிட வேண்டா என்று மட்டும் அறிவுறுத்த விரும்புகிறேன். எதற் கும் காலமுண்டு. காலம் வரும்போது கருத்தோடு செயலாற்ற ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுவதே மாணவர் கடமை. மாணவர்களாக இருக்கையிலேயே அரசியல் வாதிகளாவது பிஞ்சில் பழுப்பதாகும். அப்பழத்தின் சுவையும் பயனும் எப் படி இருக்குமென்பது நீங்கள் அறியாததன்று.

**உடலோம்பல்:** உடலோம்பலின் இன்றியமையாமையை நான் அதிகம் வற்புறுத்தத் தேவை இல்லை. அதன் தேவையை யும் சிறப்பையும் உணர்ந்திருந்தாலும் வசதிக்குறைவும் வேறு பொழுதுபோக்குக் கவர்ச்சிகளும் உடற்பயிற்சியை மறக்கச் செய்து வருகின்றன. இது பெருந்தீங்கு. "உடம்பை வளர்த் தேன் உயிர் வளர்த்தேனே." என்பது பொருள் நிறைந்த மொழி. உடல் வலிமை இல்லாதவன் எல்லா வலிமைகளும் பெற்றிருந்தாலும், தனக்கும் பிறருக்கும் முழுப்பயன் அற்றவ னாக இருக்கநேரிடும். எனவே, எப்படியும் ஒழுங்காக உடற் பயிற்சி செய்ய வழிவகை செய்து கொள்ளுங்கள்.

**ஒப்புரவு:**

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்ற பொய்யாமொழியையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கல்வி, ஏட்டுப் படிப்பு அல்லது தொழிலறிவு ஆகியவற்றை ஊட்டுவதோடு நிற்கக்கூடாது. அது நமக்குக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கற்பிக்கவேண்டும். ஒழுக்கம் என்னும்போது வழக்கமாகக் கூறும் ஐம்பெருங் குற்றங்களை நீக்குவதை மட்டும் நான் குறிக்கவில்லை; மக்களோடு மக்கள் எப்படிப் பழகுவது, எங்கெங்கு எப்படி நடப்பது, பொது

இடங்களில் எப்படி நடப்பது என்பவைகளையும் சேர்த்தே குறிக்கிறேன். கட்டுப்பாடும் ஒழுங்கும் அற்ற அறிவாளி, கூடிய இடமெல்லாம் புரண்டோடிக் கண்டதையெல்லாம் பாழாக்கும் காட்டாறு போன்று தீமை பயப்பவன் ஆவான். எனவே, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் இளமையிலேயே கற்றுக் கொள்க.

**கற்றதனால் ஆய பயன்** : நல்ல உறுதியான உடலும் கூரிய மதியும் கட்டுப்பாடும் ஒழுங்கும் எதற்குப் பயன்படவேண்டும்? யாருக்குப் பயன்படவேண்டும்? ஆக்கத்திற்கா? அழிவிற்கா? தனக்கா? பிறருக்கா?

அணுவைப் பிளந்து ஆற்றல் மிக்க சக்தியைக்கண்ட மனித சமுதாயம். அச்சக்தியால் உலகம் என்று அழிக்கப்படுமோ என்று அஞ்சி அஞ்சி அல்லலுறுகின்றதல்லவா? காரணம் என்ன? ஆக்க வேலைக்கு அவற்றைப் பயன்படுத்தத் தவறியதே. அறிவும் வலிவும் வளர்ந்த அளவு, மக்கள் உள்ளம் வளர்ந்தபாடில்லை. ஆகவே, வலிமை எல்லாம், அறிவெல்லாம் இதுவரை 'தான்' என்கிற சிறையிலிருந்து வெளிப்படவில்லை. தன்பெண்டு, தன்பிள்ளை என்கிற தன்னலம், பொது நலத்திற்கு ஊறாக நிற்கிறது. 'தான்' என்பதைக் குறைத்து, 'நாம்' என்பதைப் பெருக்கப் பெருக்க நாம் மக்கள் நிலையை எய்துவோம். தனி உணர்ச்சி குறைந்து, சமூக உணர்ச்சி வளர வளர நம் துன்பங்கள் தொலையும்.

**மக்கட் பண்பு** : பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் உள்ள குறள்,

> "அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர்."

என்று இடித்துரைப்பதை மறந்து விடாதீர்கள். கல்வியின் நோக்கம் மக்கட்பண்பைப் பெறுவதே. எது மக்கட் பண்பு என்று சிறிது சிந்திப்போம். மக்கட் பண்பாவது, பிறிதின்நோய் தந்நோய்போல் நோக்குதலாகும். எனவே, மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாக எவன் கருதுகிறானோ அவனே கல்விமான். மற்றவர்கள் எவ்வளவு அறிந்திருந்தாலும், எத்துணைப் பட்டங்கள் பெற்றிருந்தாலும், எவ்வளவு உயர்ந்த நிலையில்

இருந்தாலும் மக்கள் நிலையை அடையாதவர்களே. மக்கள் நிலையை அடையவே நாம் எல்லோரும் விரும்புவோம் என்பது உறுதி. எனவே, நம்மைச் சூழ்ந்துள்ளோர் அடைகிற துன்பங்கள் எவை எவை? அவற்றை நீக்க வழிகள் எவை எவை என்றும் கவனிப்போம்.

**துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் :** வறுமை, அதன் விளைவான பட்டினி; அறியாமை, அதன் விளைவான மூட நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள்; சாதி ஏற்றத் தாழ்வு, அதன் விளைவான சாதிச் சண்டை; சமயவெறி, அதன் விளைவான சமயப் போராட்டங்கள்; இவற்றின் கூட்டு விளைவான அமைதியின்மை-ஆகிய துன்பங்களை நாம் அநுபவித்து வருகிறோம். இத்துன்பங்களை நீக்க முடியுமா? இப்படியே விட்டு வைக்கலாமா? நீக்க முடியும், நீக்க வேண்டும் என்பதே என் முடிவு. பிற நாடுகள் செய்து காட்டிய முடிவுமாகும்.

**நல்குரவு :** வறுமை ஓர் சமூகத் தொற்று நோய். அதைப் போக்குவது சமூகத்தின் முதற் கடமை. அதனை எவ்வழியிற் போக்குவது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். 'உழைப்பைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்கினால் எல்லோரும் வறுமையின்றி வாழலாம் என்பது உண்மையா? பெற்ற பொருள்களை இப்போதுள்ள முறைக்கு மாறாக விநியோகிப்பதின் மூலம் வறுமையைப் போக்குவதா?' என்ற கேள்விகளுக்குப் பதில் என்னிடத்திலிருந்து எதிர்பார்க்காதீர்கள். இரண்டில் எதைக் கொண்டாலும், இரண்டும் மறந்து விட்ட மற்றொன்றை நான் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். அது எது? செலவு முறை; நம் மக்கள் செலவு முறையைக் குறிப்பிடுகிறேன். மயக்கத்திற்கோ, வீண் பெருமைக்கோ ஆனவற்றிற்கு நாம் ஏராளமான செல்வத்தைப் பாழாக்குகிறோம். அவற்றைத் தடுத்து வாழ்க்கையை நிரந்தரமாக நல்வழிப்படுத்தும் துறைகளுக்கு அதிகம் செலவிடக் கற்றுக் கொள்ள வேண்டும். அளவறிந்து செலவிடத் தெரியாத மக்களை எம்முறையும் காப்பாற்றாது என்பதை மறக்காதீர்கள்.

**அறியாமை :** தற்குறித்தன்மை நமக்குள்ள அடுத்த துன்பம். மக்கட் பெருக்கத்திற்குப் பெயர்போனதைப் போன்றே தற்

குறித்தன்மைக்கும் நம் நாடு உலகறிந்ததாய் இருக்கிறது. அறியாமையின் விளைவாய் நம்மிடையே உள்ள மூடநம்பிக்கைகளும் கண்மூடி வழக்கங்களும் எண்ணிறந்தன. நாம் முழு மக்கள் தன்மை அடைவதற்குக் குறுக்கே நிற்கும் இவற்றையெல்லாம் விரைவில் குழி தோண்டிப் புதைக்க வேண்டும். மன்னர்களாகி விட்டவர்களை மண்ணாங்கட்டி நிலையில் விட்டுவைப்பது இழிவு மட்டுமன்று, பெருந்தீங்குமாகும். எனவே, இத்தலைமுறையின் முழுக்கவனமும் முயற்சியும் 'எல்லோரும் கல்வி கற்றுப் பன்னரும் கலை ஞானத்தால், பராக்கிரமத்தால் உன்னத இமயமலை போல் கீர்த்தி எய்திடுவதற்கான பணிகளில் திருப்பப்பட வேண்டும். இதற்கான பொறுப்பையும் உழைப்பையும் நாட்டு அரசிற்கு மட்டுமே விட்டுவிடாமல் பொது மக்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும்: விரைவில் பகிர்ந்து கொண்டு வேகமாகப் பணி புரிய வேண்டும். 'அப்படிப் பகிர்ந்துகொள்ள முடியுமா?' என்ற ஐயம் எழலாம். முடியுமென்பதில் எனக்கு ஐயமில்லை. இன்றும் நாட்டில் நடக்கும் 'தர்மங்களை'ப் பார்த்தவர்களுக்கு ஐயமிராது. நாட்டில் நடக்கும் அறங்களையெல்லாம் கல்விக் கூடங்கள் மூலமாக நடக்கும்படி செய்வது நம்முடைய கடமை.

" அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
*         *         *
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்ற காலத்திற்கேற்ற நல்லுரையை எடுத்துக் காட்டி கல்விப்பணிக்கான எல்லா உதவிகளையும் செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**சாதி வேற்றுமை :** சாதி உயர்வு தாழ்வு நம்மைப் பிடித்துள்ள மற்றொரு பெருநோய் : தமிழர்கள் நல்ல நிலையில் இருந்த காலத்திலே இல்லாத நோய் : இடையிலே பெற்ற நோய் ; விரைவில் ஒழிக்கப்படவேண்டும் நோய். 'உயர்வு தாழ்வு எங்கு இல்லை ? ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் உருவில் இருக்கிறது.'

என்கிற முடக்குவாதம் நம்மை முன்னேற வொட்டாமல் தடுக்கும். அவ்வாதத்திற்குச் செவி கொடுத்தால் நீங்கள் மக்கள் தன்மையை எட்ட முடியாது.

"எல்லோரும் ஓர் குலம்," "எல்லோரும் ஓர் இனம்," "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற நல்லுரைகளை நாம் பல்லாண்டுகளாகப் பலப்பல மேடைகளிலும் கேட்டு வருகிறோம்; இவற்றைத் தமிழனின் உயர்விற்கு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால் நாம் உண்மையிலே சாதிகளை விட்டு மக்களாகும் பாதையில் நடக்கிறோமா? தேர்தல்களில் ஆதரவு தேடும் முறையைக் கவனித்தாலே போதுமே, நம்மை விட்டுச் சாதிவெறி போகவில்லை என்பதற்கு! காரணம் என்ன? சாதிகளை வைத்துக்கொண்டே சாதிப்பற்று வேண்டாமென்று கூறிக்கொண்டு பொழுதுபோக்கு வேலை செய்து கொண்டிருந்தோம். எனவே, இடமும் காலமும் கிடைத்த போது சாதிவெறி முழு ஆட்டம் ஆடுகிறது. மக்கட் பண்பை மறைக்கும் சாதிப்பற்று ஒழியவேண்டுமென்றால், சாதிகள் இல்லாத நிலை ஏற்பட வேண்டாவா? அதற்கான வழியை இனித்தானா அறிந்துகொள்ளப் போகிறீர்கள்? அந்நிலை வெறும் விறுவிறுப்பான பேச்சால் கிட்டுமா? கூட்டத்திற் கூடிநின்று, கூடிப் பிதற்றிவிட்டு, நாட்டத்திற் கொள்ளாவிட்டால் ஏற்படுமா? நெஞ்சில் உரத்தோடு நேர்மைத்திறனோடு எல்லாச் செயல்களிலும் சாதியை நீக்கினால் அல்லவா முடியும்? அந்த நேர்மையும் உரமும் உங்களிடம் எதிர்பார்ப்பது அதிகமா?

**சமய வெறி** : சமயப்பற்றும் சமயவெறியாக மாறி அடிக்கடி நம்மை அலைக்கழிக்கிறது. சமயம் மனிதனுடைய தனி விவகாரம். கூட்டு மொத்த வெளிச்சத்திற்காக அதைப்பொது விவகாரமாக்கிப் பகையை வளர்க்கும் வெறியாக மாற்றுவது நல்லதன்று. சமயம் மக்களை ஒழுங்குபடுத்திப் பண்படுத்தாமல் சண்டையை வளர்ப்பதா? சமயத்தின் மதிப்பு அதைப் பின்பற்றுபவர்களின் வேடத்தில் இல்லை, நடையில் இருக்கிறது என்பதை நினைந்து, அதற்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்.

முடிவுரை : உருவால் மக்களாய்ப் பிறந்த நாம் நிலையால் மக்களாகாமல் இருப்பதற்கான காரணங்கள் சிலவற்றை உங்களிடம் காட்டினேன். அவற்றைச் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதன் விளைவாக உங்களுக்குத் தெளிவு ஏற்படும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. உங்கள் தெளிவில் பிறக்கும் நேரிய வழியில் நடக்க உரமும் உறுதியும் இருக்குமா என்பதைக் காலந்தான் காட்டவேண்டும். அத்தகைய உரமும் உறுதியும் பெருக, உங்களுக்குத் துணையாக நிற்கும்படி நாட்டின் நலத்தில் நாட்டமுடைய பெரியோர்களை வணக்கத்துடன் வேண்டிக்கொள்கிறேன்.

"கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்ற வள்ளுவரின் வழிகாட்டியை நினைவூட்டுவதோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

# 7. இலண்டன்

[சோம. லெ. இலக்குமணச் செட்டியார், B.A.,]

நான் பம்பாயிலிருந்து நேரே இலண்டனுக்குப் பறந்தேன். அதற்குமுன் நான் இந்தியாவுக்கு வெளியே, கடாரத்துக்கும் இலங்கைக்குமே சென்றிருந்தேன்: ஆதலால், இலண்டனில் நான் பார்த்தவையெல்லாம் எனக்குப் புதுமையாயிருந்தன. அவை என் உள்ளத்தைக் கவர்ந்தன. இப்போது பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்த பின்னர், இலண்டன் என்றவுடன், பிக்காடில்லி சர்க்கஸ், ஹைட் பார்க், பிரிட்டிஷ் மக்கள், பாதாள ரயில்வே, லண்டன் போலீஸ்—இவைகளே என் நினைவுக்கு வருகின்றன.

**இதுதான் பிரிட்டன்**

தமிழ் நாட்டுக்கு நிகரான நிலப்பரப்புள்ள ஒரு தீவு, சென்னை மாகாணத்தின் மக்கள் தொகை, பாராளுமன்றம், சிறந்த நீதிமன்றம், உலகத்துப் பேரறிஞர் பலருக்குக் கல்வி கற்பிக்கும் பல்கலைக் கழகங்கள், இரும்பு, எஃகு, கப்பல் கட்டும் தளங்கள், மாட்சிமை தங்கிய மன்னர்பிரான், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், 'பஞ்ச்' பத்திரிகை—இவை தாம் பிரிட்டன்.

**உலகத்து முச்சந்தி**

இத்தகைய பிரிட்டனின் தலைநகரான இலண்டனே உலகிலேயே பெரிய நகரம் என்பர் பிரிட்டிஷார். நியூ யார்க்கும் ஒரு கோடி மக்களுடைய நகரமாதலால், அதுவே உலகிற்பெரு நகரம் என்பர் அமெரிக்கர். நியூயார்க் ஒரு தீவு என்பதையும் இலண்டன் 60 மைல் தொலைவு வரை பரவியிருப்பதையும் நோக்கும்போது அமெரிக்கர் சொல்லுவதே பொருத்தமானது. பெரிது எது வாயினும் ஆகுக: இலண்டன் தான் உலகத்து முச்சந்தி ; நடு நாயகமான இடம்.

**பிக்காடில்லி சர்க்கஸ்**

இலண்டனில் முச்சந்தி பிக்காடில்லி சர்க்கஸ். வழிப் போக்கருக்கெல்லாம் நல்வாழ்த்துக் கூறும். கிரேக்கர்களின்

காதற்கடவுளாகிய ஈராஸ் சிலை தான் பிக்காடில்லி சர்க்கஸ் என்பது. இதைச் சுற்றியுள்ள பகுதி பிக்காடில்லி எனப்படும். இங்கே பல தியேட்டர்களும், லண்டனில் கலைப்பகுதியும், கண்ணுக்கினிய வானளாவும் கட்டிடங்களும், வீராசாமி ஹோட்டலும், 'ரீஜண்ட்' தெருவும், 'பாண்ட்' தெருவும், செல்வம் பொழியும் பிற சாலைகளும் இருக்கின்றன. இவ்விரு தெருக்களிலும் பாரினிற் சிறந்த தையற்காரர் உளர். இங்கேயே தம் உடைகளைப் பெற வேண்டுமென்று உலகின் நாகரிகமான ஆடவர் அனைவரும் விரும்புவர்.

**ஹைட் பார்க்**

பிக்கா டில்லி சர்க்கசிலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஹைட் பார்க்கைப்பற்றிக் கேள்விப் படாதார் இரார். 600 ஏக்கர் பரப்புள்ள இந்தப் பூங்காவே பிரிட்டனிலுள்ள பேச்சுரிமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. இங்கே ஓரே நேரத்தில் நடைபெறும் கூட்டங்கள் எத்தனை என்பதைக் கணக்கிடுவதைக் காட்டிலும், காக்கைகளை எண்ணிவிடுதல் எளிது! எவரும் ஒரு மேடையை மட்டும் அமைத்துக்கொண்டு, அதன் மீது ஏறிநின்று தம் கொள்கையைத் தடையின்றி எடுத்துரைக்கலாம். அரசியல் கூட்டங்கள், தொழிலாளர் கிளர்ச்சி, மதப்பிரசாரம் எல்லாவற்றுக்கும் ஹைட் பார்க் ஒரு பொது இடமாகும். இங்கே பேசுபவர்கள் மன்னர் தவிர யாரையும் பழிப்பர். கடவுளும் இவர்களின் சொல்லம்புகளினின்றும் தப்புவது இயலாது! தக்கவர்கள் இந்த அரங்கத்தில் பேசுவதில்லை. ஹைட் பார்க் பெரிய சாலைகட்கு நடுவே, நல்ல சுற்றுப்புறங்களுக்குள் அமைந்துள்ளது. இந்த பூங்காவுக்குள்ளேயே படகோட்டவும், பிற வழிகளிற் பொழுது போக்கவும் வசதிகள் உள்ளன. இப்பூங்காவின் பசும்புல்லின்மேல், பல நூறு பேர் படுத்துப் புரளுவர்.

**நாட்டின் பெருமை**

ஒரு நாடானது தான் செய்யும் பொருள்களாலாவது, இயற்கை அழகாலாவது, அதன் தலைவர்களாலாவது, தன்மக்களின் குணங்களாலாவது புகழ் பெறலாம். பிரிட்டனின் புகழுக்குக் காரணமானவர் பிரிட்டிஷ் மக்களேயாவர்.

பொதுவாகப் பெரிய நகரத்து மக்கள் நாட்டு மக்களின் சரியான பிரதிநிதிகளாக இருப்பதில்லை. பம்பாய் அல்லது டில்லியில் வாழ்பவரை வைத்து, இந்தியரைப்பற்றி முடிவு கூறுவது பொருந்தாது. நியூயார்க்கில் வாழ்பவருக்கும், அமெரிக்காவின் பகுதிகளிலுள்ளவர்கட்கும் ஒற்றுமையே இல்லையெனத் துணிவுடன் கூறலாம். ஆனால், இவ்விதிக்கு இலண்டன் விலக்கானது. இலண்டன் தான் பிரிட்டன் ; லண்டனில் இருப்பவரே பிரிட்டிஷ் மக்களாவர்.

அமெரிக்கா தவிர ஏனைய வெளிநாட்டு வானொலிகட்கெல்லாம், பி. பி. சி. என்னும் பிரிட்டிஷ் வானொலி தான் அளவுகோலாக உள்ளது. உலகத்துப் பல்கலைக் கழகங்கட்கெல்லாம் ' ஆக்ஸ்போர்டு ' தான் மேற்கோள். பாரினிலுள்ள பாராளு மன்றங்கட்கெல்லாம் ' பிரிட்டிஷ் ' பாராளு மன்றந்தான் வழிகாட்டி. பலநாட்டு நீதி மன்றங்கள் யாவற்றிற்கும் பிரிட்டிஷ் ' பிரிவி கவுன்சில் 'தான் முன்னோடி. உலகத்துப் பத்திரிகைகட்கெல்லாம் தலைமை தாங்குவன இலண்டன் 'ப்ளீட் ஸ்டிரீட்' பத்திரிகைகளே. உலகத்தின் கால அளவும் ' கிரீன்விச் ' கடிகார நேரத்தை ஒட்டியே உள்ளது.

இவற்றால், பிரிட்டிஷார் தம் நாடு, தம் மொழி இவற்றைப்பற்றி மிகப் பெருமைப்படுவார்கள். பிறமொழி கற்பதில் பிரிட்டிஷார் சோம்பேறிகள். அதற்கு அவர்கள் சமாதானமாக, " எல்லோரும் தான் எங்கள் மொழியைக் கற்றுக் கொண்டு விடுகிறீர்களே, நாங்கள் ஏன் உங்கள் மொழியைக் கற்க வேண்டும் ?" என்று கூறுவர். பல்கலைக் கழகத்தார் கட்டாயத்துக்காக வேற்று மொழிகளைக் கற்ற பிரிட்டிஷாரும் அவற்றைத் தேர்வு முடிந்தபின் மறந்துவிடுவர்.

**பங்கீட்டு முறை**

பிரிட்டனில் உணவு, உடை, பெட்ரோல், சர்க்கரை இவை மட்டுமன்றிப் பால், தேயிலை பிஸ்கோத்து, சாக்லட், முட்டை, சோப்பு, சிகரட்டு, செருப்பு, மின்சாரம், வெளிநாட்டுப்பிரயாணம் இவைகளும் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. எனினும் பிரிட்டிஷார் தமது நாட்டுப்பற்றால், இப்பங்கீடுகள் செவ்வனே நடைபெற அரசியலாருக்கு உதவி புரிகின்றனர். அவற்றின் குறைகளைப்பற்றி அவர்கள் முணுமுணுப்பதில்லை.

பிரிட்டிஷ் பங்கீட்டு முறையில் ஒரு சிறப்பையும் ஈண்டுக் குறிப்பிடலாம். **உண்பது நாழி, உடுப்பவை இரண்டே** (புறநானூறு, 189) என்ற பண்டைத் தமிழ்க் கருத்து மிக்க குளிரான நாடாகிய பிரிட்டனுக்குப் பொருந்தாது. எனவே, குறைத்து உண்ண விரும்புவோர் மிகுதியாக உடுக்கவும், குறைத்து உடுப்போர் மிகுதியாக உண்ணவும், பங்கீட்டுமுறை இடம் தருகின்றது. உதாரணமாக, ஒவ்வொருவருக்கும் உணவுப் பங்கீட்டுச் சீட்டும், 10 துணிப் பங்கீட்டுச் சீட்டும் இருந்தால், ஒருவர் தமது துணிப் பங்கீட்டுச் சீட்டில் இரண்டுக்குப் பதிலாக, பிஸ்கோத்துச் சீட்டு ஒன்றும் தேயிலைச் சீட்டு ஒன்றும் வாங்கிக் கொள்ளலாம்.

**பிரிட்டிஷாரின் குணங்கள்**

பிரிட்டிஷார் மிக மிகப் பொறுமையுள்ளவர்கள். **பொறுத்தார் பூமியாள்வார்** என்பது இவர்களைப் பொறுத்த வரையில் உண்மையாகிவிட்டது. ஈகை இரக்கம் முதலிய குணங்களும் பிரிட்டிஷாரிடம் உண்டு. மேற்போக்காக நோக்குங்கால், இவர்கள் கவனக் குறைவானவர்கள் போல் தோன்றுவர். ஆயினும், தாம் ஈடுபடும் எவ்வேலையையும் ஊன்றிக் கவனித்துச் செய்வன திருந்தச் செய்யும் ஆற்றல் இவர்கட்கு உண்டு. "ஒரு நீதிபதி நியாயமாகத் தீர்ப்புக் கூறினால் மட்டும் போதியதாகாது; அவர் நியாயமாகவே தீர்ப்புக் கூறியிருப்பதாகக் குற்றவாளியும் ஏற்றுக்கொள்ளவேண்டும்." என்று காலஞ்சென்ற **எஸ். சத்தியமூர்த்தி** அவர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். இதைப் பிரிட்டிஷார் தம் வாழ்க்கையில் நாள்தோறும் பின்பற்றுவதைக் கண்டேன். மேலும், "குற்றஞ் செய்தவன் தண்டனையடையாமல் தப்பினாலும் தப்பலாம். குற்றமற்றவனை எக்காலத்தும் தண்டனைக்கு உள்ளாக்கி விடக் கூடாது." என்ற கொள்கையில் அவர்கள் உறுதியுடையவர்கள்.

ஏதாவதொரு உதவிக்கு நாம் பிரிட்டிஷாரிடம் சென்றால் அதைச் செய்ய இயலவில்லை யென்பதை அவர்கள் பொறுமையாகவும் இனிமையாகவுங் கூறுவர். இறுதியில் நாம் நம் காரியம் கைகூடவில்லை என்பதையும் மறந்து, 'பாவம், நமக்கு உதவிசெய்யத் தயாராயிருக்கிறார். அதற்குத் தக்க சூழ்நிலை

இல்லையே!' என்று அந்தப் பிரிட்டிஷார் மீது நாம் இரக்கங் காட்டுவோம். இந்த தந்திரமான பேச்சால்தான் தங்க வைரச் சுரங்கங்கள் தென்னாப்பிரிக்காவிலும், அவற்றை வாங்குவோர் அமெரிக்காவிலும், வைரத்தை அறுத்து மெருகு கொடுப்போர் பெல்ஜியத்திலும் இருந்தும், தங்கத்தின் விலையும் வைரத்தின் விலையும் இன்னும் இலண்டனிலேயே முடிவு செய்யப்படுகின்றன. பெட்ரோல் மத்திய கிழக்கு நாடுகளிலும் பர்மாவிலும் இருக்கலாம்; அதன் தலைவிதி இலண்டனில் தீர்மானிக்கப்படுகிறது. தேயிலை இந்தியாவிலும் இலங்கையிலும் உற்பத்தியாகிறது ; எனினும் தேயிலைச் சந்தைக்கு இருப்பிடம் இலண்டனேயாகும். இரப்பர் இந்தியாவிலும் இலங்கையிலும் மலேயாவிலும் கிடைக்கின்றது; ஆயினும், இப்பொருளின் விலை இலண்டனில் வரையறுக்கப்படுகிறது. நம் நாட்டுச் சரக்குகளையும் வெளிநாட்டார் நம்மிடமிருந்து நேரே வாங்குவதற்குப் பதிலாக இலண்டன் வாயிலாக வாங்க விரும்புகின்றனர். ஆகவே, நாமும், யாரையும் மகிழ்விக்கும் பேச்சைப் பின்பற்றவேண்டும். பிறரை ஏமாற்றுவதற்காக அன்று ; வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காகவேயாம்.

பிரிட்டிஷார் பழமையில் நம்பிக்கையுடையோர் ; புதுமைப் பித்தர் அல்லர். உலகமுழுவதும் போக்குவரவு வலதுகைப் புறமாகச் சென்றும், பிரிட்டிஷார் மட்டும் இன்னும் இடது கைப்புறமாகவே போக்குவரவு முறை வைத்துள்ளனர். உலக முழுவதும் நீட்டல், நிறுத்தல், முகத்தல் அளவைகளையும் நாணயத்தையும் தசாம்ச முறைப்படியே வகுத்தும், பிரிட்டிஷார் மட்டும் தங்கள் முறைகளை மாற்றவில்லை. இவைபோன்ற நிகழ்ச்சிகள் மிகப் பல.

### பாதாள இரயில்வே

உலகின் பெரு நகரங்களில், பூமிக்குக் கீழ் இரயில் ஓடுகிறது. இவற்றுள் சிறந்தது, இலண்டன் நகரத்து 'ட்யூப்' இரயில்வே. இரயில் நிலையங்களை இணைக்கும் இந்த இரயில்வேயின் படம் விலையின்றி யாவருக்கும் கொடுக்கப்படுகிறது. இயந்திர உதவி கொண்டே இங்கே பிரயாணச் சீட்டுக்களை விற்கின்றனர். நாம் ஏறும் இரயில், நாம் செல்லவேண்டிய இடத்துக்கு நேராகச் செல்லாவிட்டால், எந்த இடத்தில் நாம் வண்டி மாற

வேண்டுமென்பது பிரயாணச் சீட்டிலேயே அச்சிடப்பட்டிருக்கும். பிரயாணச் சீட்டு வாங்குமிடத்திலிருந்து பாதாளத்துக்குச் செல்லவும், பாதாளத்திலிருந்து சாலைக்கு வரவும், பெரிய நிலையங்களில் 'எஸ்கலேட்டர்' என்னும் மின்சாரத்தால் எப்போதும் சுழன்ற வண்ணமாக இருக்கும் மாடிப்படியும், சிறு நிலையங்களில் 'லிப்ட்' என்னும் கருவியும் இருக்கின்றன.

ஒவ்வொரு திக்கிலே செல்லும் இரயிலுக்கும் தனித்தனிப் பிளாட்பாரங்கள் மட்டுமன்றி, இரயில் நிலையத்திலேயே தனித்தனிப் பகுதிகளும் உண்டு. புகை பிடிப்பவர்கட்கும் புகை பிடிக்காதவர்க்கும் இரயிலில் தனி இடங்கள் உண்டு. இரயில் வண்டிகளில், மின்சாரத்தால் இயங்கும் கதவுகள், வண்டி நின்றதும் தாமே திறந்துகொள்ளும்; வண்டிப் புறப்படு முன் தாமே மூடிக்கொள்ளும். இந்த இரயில்களில் ஒரே வகுப்புத் தான் உண்டு. ஒவ்வொரு வண்டியிலும் பல இடங்களில், எந்த வரிசையில் எந்த நிலையம் இருக்கிறது என்பது படங்கள் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டப்பட்டிருக்கிறது. வண்டிகளும் மிகத் தூய்மையாக உள்ளன. மிகத் தூய்மையாகவுள்ள 'ட்யூப்' நிலையத்து ஊழியர்கட்கு இலண்டன் போக்குவரவு இயக்கத்தார் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்குகின்றனராம்.

## போலீஸ்

இலண்டன் போலீசாரை வாயார வாழ்த்தாதார் இல்லை. யாவரும் கேளிர் எனக் கருதி, இவர்கள் பிறருக்குத் தொண்டாற்றுகின்றனர். அரசியல் விடுதலை அடைந்த இந்தியாவில், போலீசாருடன் ஒத்துழைக்க வேண்டிய நாம், இலண்டன் போலிசாரைப்பற்றி நன்கு தெரிந்துகொள்வது இன்றியமையாதது. இலண்டன் போலீசில் வேலை கிடைக்க 5 அடி 10 அங்குலம் உயரமும், 36 அங்குலம் மார்பு அகலமும், மெட்ரிகுலேஷன் படிப்பும், ஆங்கிலம் தவிர ஒரு வேற்று மொழியறிவும் வேண்டும். வேலை கிடைத்தவுடன் போலீஸ் கல்லூரியில் போலீஸ் சட்டங்கள், கார் ஓட்டுதல், மோட்டார் சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல், குதிரைமீது சவாரிசெய்தல், துப்பாக்கியால் சுடுதல், டைப் அடித்தல், சுருக்கெழுத்து எழுதுதல், குமஸ்தா வேலை, தந்தி அடித்தல், டெலிபோன் கருவியை இயக்குதல்

முதற் சிகிச்சை செய்தல், கைவிரல் ரேகையைத் தெளிவாக எடுக்கும் முறை இவற்றை எல்லாம் படிக்க வேண்டுமாம். கத்திக்குத்தைத் தடுக்கவும் தற்காப்புடனிருக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறதாம். போலி நீதி மன்றங்கள் நடத்தி, உண்மை நீதி மன்றங்களில் சாட்சி கூறும் முறையைச் சொல்லிக் கொடுக்கிறார்களாம்.

சாலைகளில் எப்படி நடக்க வேண்டும், போலீசார் வகை வகையாய்க் கை காட்டுவதன் பொருள் என்ன என்பவைகளை எல்லாம் பள்ளிச்சிறுவர்களுக்கு வாரந்தோறும் சொற்பொழிவுகள் மூலம் பள்ளிக்கூடங்களில் போலீசார் விளக்கிக் கூறுகின்றனர். மேலும், போலீசார் பள்ளிக்கூட விளையாட்டிடங்களுக்குச் சென்று, எல்லா வகையான வாகனங்களையும் ஓட்டி, விபத்துக்கள் எப்படி உண்டாகின்றன, அவைகளை எவ்வாறு தடுக்கலாம், என்பவற்றை விளக்கிக் காட்டுகிறார்கள் ; போக்கு வரவுச் சட்டங்களையும் மாணவருக்குச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றனர்.

இவற்றால், இலண்டனில் போலீசாருக்குப் பெரும் மதிப்பு உண்டு. இலண்டன் போலீசாரை அறிவுக்களஞ்சியம் என்றுங் கூறுவதுண்டு. நமது போலீசாரும் இங்ஙனே எய்த, அரசியலாரும் போலீசாரும் ஆவன செய்ய வேண்டும். அதுமட்டும் போதியதாகுமா ? பொது மக்களாகிய நாமும் புதிய (நட்புக்) கண்களோடு போலீசாரை நோக்க வேண்டும்.

# 8. பல்லவர் காலத்துச் சிற்பங்கள்

[திருவாட்டி R. ஜெபாய் அம்மையார் அவர்கள், B. Sc. (Hons)]

உயர்திணை அஃறிணைப் பொருள்களைப் படமாக வரைந்து காட்டும் கலை ஓவியக்கலை எனப்படும். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், மெழுகு முதலியவற்றில் உருவங்களைத் திறம்பட அமைக்கும் கலை சிற்பக்கலை எனப் பெயர் பெறும். இக்கலையைப் பலபட விரித்துக்கூறும் மயம் முதலிய சிற்பக்கலை நூல்கள் முப்பத்திரண்டு நமது நாட்டில் இருந்தன எனின், நம் முன்னோர் பெற்றிருந்த சிற்பக்கலை அறிவை என்னென்பது !

வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிகப் புதை பொருள்களில் வெண்கலத்தால் இயன்ற நடனமாதின் உருவச் சிலை கண்டெடுக்கப்பட்டது. அஃது இந்தியச் சிற்பக் கலையின் பழைமையைப் பாங்குற உணர்த்துவதாகும். காந்தாரச் சிற்பங்கள், எல்லோராக் குகைச் சிற்பங்கள், அஜாந்தாச் சிற்பங்கள், அமராவதிச் சிற்பங்கள் என்பன இந்தியாவின் சிற்பக்கலை அறிவை உலகறியச் செய்வன.

இச்சிற்பக் கலைப் பயிற்சியில் நமது தமிழகம் பிற்பட்டதன்று. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் காஞ்சியை ஆண்ட மகேந்திர பல்லவன் குடைவித்த மண்டபப் பட்டுக் குகைக்கோவிற் கல்வெட்டில், 'அழியத்தகும் மண், மரம், சுதை என்பவற்றால் கோவில் அமைப்பதை விடுத்து, விசித்திர சித்தன் மும்மூர்த்திகட்கு இக் கற்கோவில் அமைத்தான்' என்னும் செய்தி காணப்படுகின்றது. இதனை நோக்க, அவன் காலத்துக்கு முற்பட்ட தமிழ்நாட்டுக் கோவில்கள் (கட்டடங்கள் உட்பட) அழியத்தக்க பொருள்களால் ஆனவை என்பதை ஐயமற அறியலாம். ஆதலால், அவை இன்று நாம் கண்டு களிக்குமாறில்லை.

மகேந்திரன் காலத்தவரான திருநாவுக்கரசர் திருப்பதிகங்களையும் மகேந்திரன் காலத்தை அடுத்து வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருப்பதிகங்களையும் காண, தமிழகத்தில் ஏறத்தாழ ஐந்நூறு சிவன் கோவில்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்

தன என்பது உறுதிப்படுகின்றது. அப்பாடல் பெற்ற கோவில்களே பல்லவர் காலத்திலும் பிற்பட்ட சோழர் காலத்திலும் கற்றளிகளாக மாற்றப்பட்டன என்பதை நாமறிவோம். அப் பழங்கோவில்கள் பலவற்றில் சுதையாலான வாயிற் காவலர், கஜலட்சுமி உருவங்கள் இருத்தலை இன்றும் காணலாம். திருவாரூர்ப் பூங்கோவிலிலும், திருவிடைமருதூர்ப் பெருங்கோவிலிலும் உள்ள சுதைச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும் திருநாவுக்கரசரைச் சைவத்திற் புகுத்திப் பேறு பெறச்செய்த திருவதிகையில் உள்ள சிவபெருமான் கருவறை தேர்வடிவில் அமைந்துள்ளது. அதனிடம் காணப்பெறும் சுதைச் சிற்பங்கள் விழிகட்கு விருந்தளிப்பன அல்லவா? அவற்றை ஒவ்வொரு தமிழரும் தம் செல்வமாகக் கருதிக் கண்டு களிக்கவேண்டும்.

இக்கோவில்கள் அல்லாமல், பல்லவர் (கி. பி. 600-900) அமைத்த மூவகைக் கோவில்கள் தமிழகத்தில் உண்டு. அவை (1) குடைவரைக் கோவில்கள், (2) ஒற்றைக் கற்கோவில்கள், (3) திருச்சுற்றும் விமானமும் கொண்ட கற்கோவில்கள் என்பன.

மலைச்சரிவில் அல்லது பெரும்பாறையின் ஒரு பக்கத்தில் குடையப்பட்டதே குடைவரைக் கோவில். இக்கோவிலில் இரண்டு அல்லது மூன்று தூண்கள் அமைந்த முன் மண்டபமும், கடவுளர் திருவுருவங்களை வைக்க எதிர்ப்புறப்பாறைச் சுவரில் சிறிய புரைகளும் அமைந்திருக்கும். அப்புரைகளின் இருபுறங்களிலும் வாயிற்காவலர் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். அக்காவலர் பாகையணிந்து, இடக்கையைக் கதை மீது ஊன்றி, அக்கையின் மீது வலக்கையை வைத்துக்கொண்டு, சிறிது முன்புறம் சாய்ந்து, பெருமிதத் தோற்றத்துடன் காணப்படுவர். இவ்வாறு அமைந்த குடைவரைக் கோவில்கள் மாமண்டூர், மகேந்திரவாடி, பல்லாவரம் (பல்லவபுரம்), சீயமங்கலம், தளவானூர், மண்டபப்பட்டு, வல்லம், திருச்சிராப்பள்ளி, திருமய்யம், குடுமியான்மலை முதலிய இடங்களிற் காணப்படுகின்றன.

மகேந்திரவாடியில் உள்ள குடைவரைக்கோவில் மகேந்திர பல்லவன் காலத்தது ; அவனுக்கு அறுபதாண்டுகட்குப் பின்

வந்த இராஜ சிங்கன் காலத்தது மாமல்லபுரத்தை அடுத்த சாளுவன் குப்பத்தில் இருப்பது. குகைவாயிலைச் சுற்றியும் புலித்தலைகளைப் பார்க்கலாம். அப்புலித்தலைகளிலும் குகைத் தூண்களிலும் அமைந்துள்ள நுண்ணிய சிற்ப வேலைப்பாட்டினைக் கூர்ந்து நோக்குக.

ஒற்றைக் கற்கோவில்களை அமைக்கத் தொடங்கிய பேரரசன் நரசிம்ம பல்லவன். அவைதாம் மாமல்லபுரத்தில் உள்ள— உலகத்தார் கண்டு வியப்புறுகின்ற—பஞ்சபாண்டவர் இரதங்கள். இக் கோவில்களின் புறச்சுவர்களில் காணப்படும் உருவங்களின் வேலைப்பாடும் கட்டடத்தின் பிற வேலைப்பாடுகளும் அக்காலச் சிற்பக் கலைத்திறனை நமக்கு நன்முறையில் அறிவிப்பனவாகும். தமிழகத்துச் சிற்பக் கலைக்கூடமாகவுள்ள மாமல்லபுரம் சென்று கலையுணர்ச்சியோடு இவற்றைக் காண்பவரே இவற்றின் வேலைப்பாட்டை நன்கறிதல் கூடும்.

செங்கற்களை அடுக்கிக் கோவில் அமைப்பதுபோலக் கருங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்டவையே இராஜசிங்கன் எடுப்பித்த மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோவில்; காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோவில். காஞ்சி கயிலாசநாதர் கோவிற் சிற்பங்கள் காணத்தக்கவை. அவற்றுட் சிவபிரான் ஆடிய நடன வகைகள் விழிகளைக் கொள்ளை கொள்வனவாகும்.

பல்லவர் வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தையும் சிற்பங்களாகக் காட்டுவது காஞ்சி-வைகுந்தப்பெருமாள் கோவில். அங்குள்ள திருச்சுற்றுச் சுவர்களில் எண்ணிறந்த சிற்பக் காட்சிகளைக் கண்டு களிக்கலாம். இத்தகைய சுவர்ச் சிற்பங்களில் இன்றளவும் சிறந்த வேலைப்பாட்டுடன் காணப்படுவது திருச்சிராப்பள்ளிக் குகைக்கோவிலில் உள்ள கங்காதரர் சிற்பமாகும். சிவபெருமான் நான்கு கைகளுடன் காணப்படுகிறார். அவற்றுள் ஒன்று சடையிலிருந்து விழும் கங்கையைத் தாங்குகின்றது; ஒரு கை உருத்திராக்க மாலையை வைத்துள்ளது; வேறொரு கை மார்பின்மீதுள்ள பையரவின் தலையைப் பிடித்துள்ளது; பிறிதொரு கை இடைமீது பொருந்தியுள்ளது. சிவபெருமானை அடியார் வழிபடுகின்றனர். மேற்புறத்திற் பக்கத்துக்கு ஒருவராகக் கந்தருவர் காட்சியளிக்கின்றனர்.

ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் என்பன நாகரிகக் கலைகள். இவை 'நுண்கலைகள்' எனப்படும். உள்ளத்தின் உணர்ச்சிப் பெருக்கை நுட்பமாக வெளிக்காட்டுவதே 'நுண்கலை' என்பது. அந்நுண்கலைகளுள் சிற்பம் ஒன்று. இதனிற் பயிற்சி பெறும் சிற்பி, முதலில் தான் அமைக்க விரும்பும் உருவத்தைச் சித்திரமாகத் தீட்டிக்கொள்ளவேண்டும். எனவே, அவன் ஓரளவேனும் ஓவியக்கலையில் அறிவு பெற்றவனாக இருத்தல் வேண்டும்; அடுத்துக் காவியப் புலவனாக-தான் செதுக்கும் திருவுருவத்தின் நிலையை நன்கறிந்தவனாக-இருத்தல் தேவையாகும். அவன் இசை, நடனக் கலைகளையும் நன்கு அறிந்திருந்தால் மட்டுமே கலைகளை விளக்கும் சிற்பங்களைச் சிறந்த முறையில் அமைத்தல் இயலும். இப் பல்வகை அறிவும் பொருந்திய சிற்பி அமைக்கும் சிற்பமே காண்பவர் விழிகளைக் கவர வல்லது. இத்தகைய உயர்நிலையில் அமைந்துள்ள சிற்பங்களுள் ஒன்றே மேலே கூறப்பட்ட கங்காதரர் சிற்பம். இவ்வுயர் வகைச் சிற்பங்கள் நம் தமிழகத்தில் கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் செய்யப்பட்டன எனின், அக்காலத் தமிழகம் சிற்பக் கலையிற் கொண்டிருந்த பெருவிருப்பையும் அதனோடு ஒருபடித் தான பிற கலைகளிற் பெற்றிருந்த மேம்பாட்டையும் நாம் நன்கறியலாம் அல்லவா?

# 9. சீறாப் புராணம்

[ஜனாப் K. M. K. அப்துல் காதர் அவர்கள், M. A.]

கலை வளமும் கல்வி வளமும் மலை வளமும் நில வளமும் நிரம்பியது திருநெல்வேலிச்சீமை. இதில் எட்டயபுரம் என்னும் ஒரு பாளையப்பட்டு உண்டு. அதன் மன்னர்கள் நாயக்கர் குலத்தினர். தம் தாய் மொழி தெலுங்கு மொழியாய் இருந்தும், அவர்கள் நெடுகிலும் சிறந்த தமிழ் அன்பர்களாயும், அபிமானிகளாயும் திகழ்ந்து வந்திருக்கின்றனர்; பாவலரையும் நாவலரையும் பொன்னும் துகிலும் கொடுத்துப் போற்றினர்.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எட்டப்ப மன்னனின் சபையில் தலைமைத் தமிழ்ப் புலவராய்க் கடிகை முத்துப் பிள்ளை என்ற பெரியார் இருந்தார். அவரது பிள்ளைப் பெயர் 'முத்து' என்பது. அவர் களத்தூர்க் கோட்டத்திலுள்ள 'கடிகை' என்ற தமிழ்ச் சங்கத்தில் கற்றவர். ஆகவே, அவர் கடிகை முத்துப் பிள்ளை என்று அழைக்கப்பட்டார். 'கடிகை' என்பது குலப்பெயர் என்று கூறுவாரும் உளர். முத்துப்பிள்ளை இலக்கண இலக்கியங்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தவர்; அறிவோடு திறமையும் ஆற்றலோடு அனுபவமும் வாய்ந்தவர்; எட்டப்ப பூபதிமீது பல சாதுரியமான தனிக்கவிகள் பாடியவர். சமுத்திர விலாசம், காமரச மஞ்சரி என்ற நூல்களும் இவர் இயற்றியனவே.

முத்துப்பிள்ளை அவர்கள் காலத்தில் எட்டயபுரத்தில் சேகு முதலியார் என்ற ஒரு முஸ்லிம் வணிகர் வாழ்ந்துவந்தார். அவர் அத்தர், புனுகு, சவ்வாது, ஊதுவர்த்தி முதலிய மணப்பொருள்களை விற்கும் வணிகர். அரசரும் அவரிடம் வாசனைப் பண்டங்களை வாங்கி வந்தார். அரசவையில் அணியெனத் திகழ்ந்த பிள்ளையவர்களுக்கும் வணிகருக்கும் ஏற்பட்ட அறிமுகம் நாளடைவில் ஆழ்ந்த நட்பாக மலர்ந்தது.

சேகு முதலியார் உமறு என்ற திருநாமம் கொண்ட தம் அருமை மகனைப் பிள்ளையவர்களிடம் தமிழ் கற்கும்படி ஏற்பாடு செய்தார். அவர் அடக்கமும் ஒடுக்கமும் கொண்டு பரிவுடனும் ஆர்வத்துடனும் ஆசிரியர்பால் கற்பன கற்றுக்

கேட்பன கேட்டுக் காளைப் பருவம் எய்தினார்; கள்ளமற்ற பேச்சும் கலகலத்த சிரிப்பும் துள்ளி விளையாடும் சுறுசுறுப்பும் உடையவராய் விளங்கினார். அவரிடம் வித்தையின் வித்துக்கள் வேரூன்றி முளைத்துக் கிளைத்திருந்தன.

அக்காலை வாலைவாரிதி என்ற புலவன் வடக்கிருந்து வந்தான். அவன் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவன்; மந்திர தந்திரமும் தெரிந்த மாயாவி. தமிழ் நாட்டிலுள்ள அரசவைகளுக்கெல்லாம் சென்று ஆங்குள்ள தமிழ்ப் புலவர்களை வாதுக்கழைத்து வென்ற பெருமிதத்தோடும் விருதுகளோடும் எட்டயபுரத்திற்கு வந்தான்; 'வித்தையைச் சோதித்து வெகுமதி தருக', என அரசரை வேண்டினான். அரசரும் இசைந்தார்; விவாத நாளைக் குறிப்பிட்டுத் தம் அவைக்களப்புலவர் முத்துப்பிள்ளைக்குச் சொல்லி அனுப்பினார்.

அன்று முத்துப் பிள்ளையவர்கள் உடல் நலிவு கொண்டு சுரங்கண்டு பாயும் படுக்கையுமானார்; 'வாலைவாரிதியுடன் வாதிடும் நாளில் இப்படியாயிற்றே!' என உள்ளூர வருந்தினார்; தம் மானத்திற்கே ஈனம் வந்துவிட்டதாக எண்ணி எண்ணி ஏங்கினார்; தம் பக்கத்தே அமர்ந்திருந்த மாணவர் உமறிடம் தம் அவல நிலையைக் கூறி உளம் நொந்தார். மாணவர் மனத்தில் அப்பொழுது ஓர் எண்ணம் எழுந்தது. ஆசிரியர் சார்பாகச் சபைக்குச் சென்று தாம் ஏன் வாதிடலாகாது என்பதே அது. அவர் உடனே ஆசிரியரிடம் பணிவுடன் அனுமதி கேட்டார். 'இளங்கன்று பயமறியாது' என்பது போலத் துணிவுடன் பேசிய மாணவரது முக விலாசத்தையும், அவர் கண்களிலே தோன்றும் உறுதியையும் கண்ட புலவர், 'போய் வா, அப்பா', என்று ஆசிர்வதித்துத் தம் பல்லக்கிலேயே உமறுப் புலவரை அனுப்பிவைத்தார். அன்றைய விவாதத்தின் முடிவு யாவரையும் வியப்பில் ஆழ்த்தியது. உமறு வென்றார். அரசர் அவையிலேயே உமறுப் புலவரைக் கட்டித் தழுவிக் கொண்டார்; பல்லக்கும் பதினறு வாள் வீரரும் இன்னும் பல விருதுகளும் பரிசாகத் தந்தார்.

வெற்றியோடு திரும்பிய உமறுப்புலவர் தம் ஆசிரியரை வணங்கி; அன்றைய நிகழ்ச்சிகளை விவரித்தார். பிள்ளையவர்களது ஆனந்தத்திற்கு எல்லையில்லை. அவர் மகிழ்ச்சிப்

பெருக்கில் ஆழ்ந்து, "அப்பா! என் மானம் காத்த மாணவன் நீ. உன் புகழ் இனி வளர்பிறைபோல வளரட்டும்." என்று கூறி ஆசீர்வதித்தார்; தமக்கும் முதுமை வந்து விட்டதால், அரசரிடம் பேசி, உமறுப் புலவரையே தம்முடைய இடத்தில் நியமிக்கும்படி ஏற்பாடு செய்தார். அதுமுதல் உமறுப்புலவரே எட்டப்பனது அவையில் தலைமைப் புலவராய் இருந்து பல்லாண்டுகள் தொண்டாற்றினர்.

அக்காலை கீழ்க்கரை என்ற நகரில் **சீதக்காதி** என்ற பெரு வள்ளல் இருந்தார். கொடையும் நட்பும் தயையும் அவருடைய இயல்பான பண்புகள். அவர் வாய்மையும் தூய்மையும் வண்மையும் திண்மையும் ஒருங்கே பெற்றவர். ஊர் நடுவே உள்ள ஊற்றுப்போல அவரது பரந்த செல்வம் புலவர்க்கும் இரவலர்க்கும் பயன்பட்டது. வாணிகத்தால் வந்த பொருளையெல்லாம் வண்மையால் அள்ளி வீசிய அப்புரவலரைச் சூழ்ந்து புலவர் குழாம் வாழ்ந்தது.

புலவர் பெருமக்கள் கூட்டுறவாலும் இன்றமிழ் இலக்கியங்களைக் கேட்டு மனம் பண்பட்டதாலும், இயற்கையாகவே எழுந்த தமிழ்ப் பற்றாலும் உந்தப்பட்ட சீதக்காதி, புதிய இலக்கியங்களைப் புனையச்செய்து தமிழ்த் தாய்க்குச் சமர்ப்பித்து மகிழவேண்டும் என்ற ஆர்வம் கொண்டார். அன்றிருந்த தமிழிலக்கியங்கள் எல்லாம் பெரிதும் புராணங்களாகவும் ஒரு சமயச் சார்புடையனவாகவுமே இருந்தன. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் அப்புராணங்களின் கவிதைச் சுவையில் மிகுதியாய் ஈடுபாடுகொண்ட பொழுதிலும், கதைப்போக்கை ஒப்புவது இயலாது போயிற்று. முஸ்லிம்களின் சரித்திரங்களும் சமயக் கருத்துக்களும் அரபி மொழியிலேயே இருந்தமையால், அம்மொழி அறியாத தமிழ் முஸ்லிம்கள் தம் சமயத்தைப் பற்றியோ, சமயாச்சாரியாரைப்பற்றியோ நேரடியாய் அறிந்துகொள்ள இடமில்லாமல் தவித்தனர். அதனால் அனுஷ்டானங்களின் நியமம் தவற ஆரம்பித்தது. நுண்ணறிவும் விரிந்த அனுபவமும் உள்ள சீதக்காதி, தமிழில் இசுலாமியச் சட்டங்களும் கருத்துக்களும் இயற்றப்பட்டாலொழிய வேறுவழி இல்லையெனக் கண்டார். அத்துடன் இசுலாமிய எழில் நலங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்து தமிழ்

இலக்கிய வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்ற ஆர்வமும் அவருக்கு இருந்தது. இந்த அன்புப்பணியைச் செய்வதற்குத் துணை புரிபவர், அரபி மொழியின் இலக்கிய இலக்கணம் தெரிந்தவராயும் தமிழிலும் தேர்ந்த வித்துவானாயும் இருக்கவேண்டும். இருமொழிப் புலமையும் இசுலாமியப் பண்பாடும் பெற்ற ஒருவரை அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. தம் சிந்தையில் உதித்த செம்பணி நிறைவேறும் காலமும் வருமோ என அவர் கலங்கினார்.

அவர் நினைத்த காலம் வந்தது. அவர் ஒருமுறை அரச காரியமாக எட்டயபுரம் வந்தார்; அங்கு அரசரது அத்தாணிப் புலவராய் வீற்றிருந்த உமறுப் புலவரைக் கண்டார். தமிழில் தகுதியொடு தலைமைபெற்று திகழும் உமறுப்புலவரைக் கண்டதும், அவரது இதயத்தில் உறங்கிக்கிடந்த எண்ணம் விழித்துக் கொண்டது. ஆனால், அதனுடன் ஓர் ஏக்கமும் தொடர்ந்து எழுந்தது. தமிழ் மேதையாகிய உமறு இசுலாமிய இலக்கிய ஞானம் கொண்டவராக இல்லை. இக்குறையைத் தவிர்ப்பதற்காகச் சீதக்காதி ஒரு வழி கண்டார்; தமது குருவும் அரபி மொழியில் அழுத்தமான பாண்டித்தியம் உடையவரும் கீழ்க் கரையில் வாழ்ந்து வந்தவருமான ஷெய்கு ஸதக்கத்துல்லாஹ் அவர்கள் முஹம்மது நபியின் காரணச் சரிதத்தை இசுலாமியக் கிரந்தங்களிலிருந்து திரட்டித் தருவதென்றும், அதை இன் தமிழ்க் கவிதைகளாக உமறு இயற்றித்தரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்ய நினைத்தார்; எட்டப்ப மன்னன் அனுமதி பெற்று உமறுப்புலவரைக் கீழ்க்கரைக்கு அழைத்துவந்தார். புலவரது உடையையும் தோற்றத்தையும் பார்த்துவிட்டு ஸதக்கத்துல்லாஹ் அவர்கள், "இவர் நபிநாதரின் வரலாற்றைப் பாடவல்ல பண்பு பெற்றவரோ!" என முதலில் ஐயங்கொண்டார்; எனினும் இறுதியில் அவருக்கு உதவிபுரிய இசைந்தார்; சரிதம் திரட்டத் தமக்கு ஓய்வு கிடைக்காமையால் பரங்கிப் பேட்டையில் இருந்த தம் மாணவர் மஃமூது நயினா லெப்பை என்பவரிடம் புலவரை அனுப்பினார். லெப்பை அவர்களும் தமது ஆசானின் ஆணைக்கிணங்கிச் சீறாச் சரித்திரத்தைத் திரட்டித் தந்தார். உமறுப்புலவர் அதைச் செஞ்சொற் கவிதையாகச் சீர்பெற அமைக்கலானார்.

நிலையற்ற இவ்வுலகில் மனித எண்ணங்கள் நிலைபெறுவது ஏது? ஒன்றை நினைத்தால் மற்றொன்று முன்னிற்கும்; நினையாத ஒன்று நிகழினும் நிகழும். சீறாப் புராணத்தைச் செந்தமிழில் இயற்றுவித்துத் தம் ஆத்ம தாபத்தைத் தீர்க்க நினைத்த சீதக்காதியை இறைவன் தன்பால் ஏற்றுக்கொண்டான். சீதக்காதி இறந்துவிட்டார் எனக்கேட்ட உமறு, கொழுகொம்பு அற்ற கொடிபோலத் துவண்டுபோனார்; கையற்றுக் கலங்கிக் கதறினார்; இனிப்புராணத்தை முடித்து அரங்கேற்றுவது அருமையிலும் அருமை என அதைரியம் அடைந்தார்.

எதிர்பாராத உதவி புலவருக்குக் கிடைத்தது. பரங்கிப் பேட்டையில் கனவானாயும் தனவானாயும் திகழ்ந்தவரும், உசேன் நயினார் என்பவரின் புத்திரருமான **அபுல் காசீம் மரக்காயர்** என்பவர் புலவரைப் போற்றிப் பாதுகாக்க முன் வந்தார்; உமறுப் புலவரைத் தம் இல்லத்திற்கே அழைத்துச் சென்றார்; வேண்டிய பொருளுதவி வழங்கினார்; புராண அரங்கேற்றத்திற்கு ஆவன செய்வதாகக் கூறி, ஆறுதல் அளித்தார்; அங்ஙனமே அரங்கேற்றமும் செய்வித்தார்.

அபுல் காசீம் செய்த பேருதவியைப் புலவர் மறந்திலர்; தாம் பாடிய சீறாவில் ஏறத்தாழ நூறு பாடல்களுக்கு ஒரு பாடல் வீதம் வைத்து, அபுல் காசீமின் வண்மையையும் ஒண்மையையும் வாழ்த்தியுள்ளார்; இலக்கியம் உள்ளளவும் இன்றமிழ் உள்ளளவும் அபுல்காசீமின் புகழ் அழியாது நிற்கும்படி அமரத்துவம் தந்தார். செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஈடாகுமா?

# 10. கூட்டுறவு இயக்கம்

*[திரு. K. S. நாகராசன் அவர்கள், M. A.,]*

ஒரு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ பலதிறப்பட்டவர் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை முறைகளும், பழக்க வழக்கங்களும் தேவைகளும் பலதிறப்பட்டன. ஆனால் அவர்கள் அனைவருக்கும் பொதுவான சில பொருளாதாரத் தேவைகள் உள்ளன. அவற்றை நிறைவு செய்துகொள்வதற்காக அவர்கள் தாங்களாகவே ஒன்றுகூடி ஒரு நிலையம் அமைத்துக்கொண்டு, அதன் மூலம் தங்கள் தேவைகளை எளிதாகவும், சிக்கனமாகவும் நிறைவு செய்து கொள்ளல் கூடும். இதற்குச் சான்றாக, ஒரு கிராமத்தில் உள்ள மக்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் அனைவருக்கும் அரிசி, உப்புப்போன்ற உணவுப் பண்டங்கள் இன்றியமையாதனவாம். அப்பண்டங்களை அவர்கள் கிராமத்திலுள்ள சில்லறைக் கடையிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். கிராமத்தார் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு நிலையம் அமைத்துக்கொள்வார்களாயின், அதன் மூலம் மொத்த வியாபாரிகளிடமிருந்தோ அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்தோ பண்டங்களை நேரே பெற்றுத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளலாம். அத்தகைய ஒரு நிலையத்தைக் கூட்டுறவு நிலையம் என்று நாம் அழைக்கிறோம்.

கூட்டுறவு நிலையங்களால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் எண்ணிறந்தன. ஒரு கிராமத்தில் கூட்டுறவுப் பண்டசாலை இருப்பின், அதுவே உற்பத்தியாளரிடமிருந்து நேரே பொருள்களை விலைக்கு வாங்கலாம். இதனால் இடையிலுள்ள மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி ஆகியோருக்கு இடமில்லாமற் போகிறது. அவர்கள் அடையும் இலாபத்தைக் கூட்டுறவு பண்டசாலையே பெறுகிறது. ஆனால், கூட்டுறவுப் பண்டசாலையின் சொந்தக்காரர்கள் அதில் பண்டம் வாங்குகின்ற மக்களே ஆவர். ஆதலின் சாமான் வாங்குவோருக்கே இலாபமும் போய்ச் சேருகிறது. மேலும் கூட்டுறவுப் பண்டசாலைகளில் பண்டங்களைச் சுத்தமாகவும் நாணயமாகவும் விற்கமுடியும். விலைப்பணம் கொடுத்தே சாமான்களை வாங்க வேண்டும் என்ற

விதி அங்குக் கடைப் பிடிக்கப்படுவதால், அத்தகைய பண்ட சாலைகள் தம் உறுப்பினரிடையே ஓரளவு சிக்கனமுறையையும் பரப்புகின்றன.

கூட்டுறவு இயக்கம் முதன் முதலாக இங்கிலாந்தில் தோன்றியது. அப்பொழுது கூட்டுறவுப் பண்டசாலைகள் மாத்திரமே உருவெடுத்தன. குறிப்பாகத் தொழிலாளிகளுக்கும் ஏழைகளுக்கும் குறைந்த விலையில் பண்டங்களை விற்க வேண்டும் என்ற குறிக்கோளுடனே அவை துவக்கப்பட்டன. நாளடைவில் கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை உணர்ந்த மற்ற வகுப்பினரும் அதில் பங்குகொள்ள ஆவலுற்றனர். இவ்வியக்கமும் மற்ற நாடுகளுக்குப் பரவத் தொடங்கியது. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு பண்டசாலைகளை நடத்துவதேயன்றி, மற்றும் பல பொருளாதாரப் பிரசினைகளையும் தீர்த்துக்கொள்ளலாம் என்று மக்கள் உணர்ந்தனர். வெவ்வேறு நாடுகளில் கூட்டுறவு இயக்கம் வெவ்வேறு துறைகளில் முன்னேறியது. பால் பண்ணைகள் மிகுந்த 'டென் மார்க்கு' நாட்டில், பண்ணைப் பொருள்களைக் கூட்டுறவு முறையிலேயே விற்பனை செய்யும் பொருட்டுப் பல நிலையங்கள் தோன்றின. ஜெர்மனி நாட்டில், ஏழைக் குடியானவர்களுக்குக் கடன்கொடுத்து உதவும் நோக்கத்துடன் கூட்டுறவு நிலையங்கள் தோன்றின. இந்தியாவிலும், குடியானவர்களுக்குக் கடன் கொடுத்து உதவும் பொருட்டு கூட்டுறவு நிலையங்கள் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டன.

இந்தியா ஒரு பயிர்த்தொழில் நாடு. அதன் மக்களில் பெரும்பான்மையோர் கிராமங்களின் பயிர்த்தொழிலை நம்பியே வாழ்கின்றனர். மேலும் நம் நாட்டு உழவர் ஏழைகள் ஆதலால் பயிர்த்தொழிலுக்கான செலவுகளுக்கு அவர்கள் ஆண்டு தோறும் கடன் வாங்கும் நிலையில் இருக்கின்றனர். விதை வாங்குதல், எருவிடுதல், கலப்பை, ஏர் போன்ற பயிர்த்தொழிற் கருவிகளை வாங்குதல் ஆகிய செலவுகளுக்குக் கடன் வாங்க ஏழை உழவர் கிராமத்திலிருக்கும் செல்வர்களிடம் செல்ல வேண்டுபவராகின்றனர். அவர்கள் அதிக வட்டி வாங்குவதுடன், கடன் பத்திரம் எழுதுவதிலும் உழவர்களை ஏமாற்றுகிறார்கள். ஆகவே உழவர்களால் கடனை உரிய காலத்தில்

திருப்பித்தர முடிவதில்லை. நாளடைவில் கடனுக்காக, தன் நிலத்தையே விற்றுவிட்டு, உழவன் பல இன்னல்களுக்கு உள்ளாகிறான். இத்தகைய சீர்கேடான நிலைமையை இயன்ற வரையில் தடுத்து ஏழை உழவர்களுக்குக் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுத்து உதவும் பொருட்டுக் கூட்டுறவு நிலையங்கள் கிராமங்களில் துவக்கப்பட்டன. அதில் சேரும் உறுப்பினர்கள் ஒரு சிறு தொகையை முதலீடாகப் போடுகிறார்கள். இந்த முதலீட்டுத் தொகையிலிருந்தும், அரசாங்கத்தினிடமிருந்து கடனாகப் பெறும் தொகையிலிருந்தும் உழவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. அக்கடனைப் பல தவணைகளில் சிறு தொகைகளாகத் திருப்பிக் கொடுக்க வசதி இருப்பதால், உழவர்கள் கடனை எளிதில் தீர்த்துவிடு கிறார்கள்.

கிராமக் கூட்டுறவு நிலையங்கள் கடன் கொடுப்பதுமட்டு மன்றி, பிற துறைகளிலும் உழவர்களுக்கு உதவ முடியும். ஏதேனும் ஒரு தானியம் பயிர் செய்த உழவன், அதை அருகி லுள்ள நகரத்திற்குக் கொண்டு போய் விற்றால், அத்தானியத் திற்கு நியாயமான விலை கிடைக்காமற் போகலாம். ஆனால் கிராமத்திலுள்ள உழவர்கள் தங்கள் தானியங்களைக் கூட்டுறவு நிலையத்தின் மூலம் விற்றால், அவைகளுக்கு நியாயமான விலை கிடைப்பது திண்ணம். ஏனெனில், கூட்டுறவு நிலையம் ஒரு தனி மனிதனைவிடப் பொருளாதார வலிமை மிகுதியாகப் பெற்றிருப்பதால், வாணிகர் பலருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, தன் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையை வாங் கிக் கொடுக்க இயலும்.

கூட்டுறவு இயக்கம் நம் நாட்டில், சிறப்பாகச் சென்னை மாகாணத்தில் மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. சென்னை மாகாணத்தில் மட்டும் 13,000-க்கு மேற்பட்ட கிராமக் கூட்டுறவு நிலையங்கள் வேலை செய்து வருகின்றன. அந்நிலையங் களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து உதவ ஒவ்வொரு மாவட்டத்திலும் அவற்றை உறுப்பினராகக் கொண்ட 'நடு நிலையங்கள்' ஏற்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நிருவகிக் கச் சென்னையில் ஒரு 'மாகாணக் கூட்டுறவு பாங்கு' இருக் கிறது.

கிராமக் கூட்டுறவு நிலையங்கள், உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களைக் கொடுத்து உதவுகின்றன. நிலத்தைச் சீர்திருத்துவது, கிணறு தோண்டுவது, விசை எந்திரங்கள் வாங்குவதுபோன்ற செலவுகளுக்காக, உழவர்களுக்கு நீண்ட காலக் கடன்களும் தேவையாகின்றன. இத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டுக் கூட்டுறவு முறையில் 'நில அடமான பாங்குகள்' ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கெல்லாம் மேலாகச் சென்னையில் ஒரு 'நடு நில அடமான பாங்கு'ம் உள்ளது.

கடன் கொடுப்பதைத் தவிர, வேறு துறைகளிலும் நம் மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் சிறந்த தொண்டாற்றி வருகிறது. பல நகரங்களில் கூட்டுறவுப் பண்டசாலைகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. சென்னையி லுள்ள 'திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு நிலையம்' இந்தி யாவிலேயே மிகப் பெரிய கூட்டுறவு பண்டசாலையாகும். விலைக்கட்டுப்பாடு செய்யப்பட்ட பொருள்களை, மக்களுக்குக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யக் கூட்டுறவுப் பண்ட சாலைகள் பெரிதும் பயன்படுகின்றன.

கைத்தறி நெசவாளர்கள் பல கூட்டுறவு நிலையங்களை அமைத்துக்கொண்டிருக்கின்றனர். தங்களுக்கு வேண்டிய நூலைக் கூட்டுறவு முறையில் வாங்குவதுடன், தாங்கள் நெய் யும் துணி வகைகளையும் அந்நிலையங்கள் மூலம் அவர்கள் விற்பனை செய்கின்றனர். தங்களுடைய நியாயமான விருப்பங் களை நிறைவேற்றிக் கொள்ளவும் கூட்டுறவு நிலையங்கள் அவர் களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

நகரங்களில் நல்ல பால் கிடைப்பது அரிதாயிருப்பதால் பல கூட்டுறவுப் பால் பண்ணைகளும் கூட்டுறவுப் பால் விற்பனை நிலையங்களும் தோன்றியுள்ளன. சிறு பண்ணைகள் வைத்திருப்போர் இந்நிலையங்களில் உறுப்பினராகின்றனர். தங் கள் பண்ணைகளில் கிடைக்கும் பாலைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்வதுடன், தங்கள் மாடுகளுக்கு வேண்டும் வைக் கோல், பிண்ணாக்கு முதலிய பொருள்களையும் அவர்கள் அந் நிலையங்கள் மூலம் வாங்கிக் கொள்கிறார்கள்.

அண்மையில், இராணுவத்திலிருந்து திரும்பிவந்த போர் வீரர்களுக்காகப் பல கூட்டுறவு நிலையங்களும், மதுவிலக்கு மூலம் வேலையிழந்த கள்ளிறக்குவோருக்காகக் கூட்டுறவுக் கைத்தொழில் நிலையங்களும் அரசாங்கத்தாரால் தோற்றுவிக்கப்பட்டன. நகரங்களில் இட நெருக்கடியைத் தவிர்க்கவும் எளிய முறையில் வீடு கட்டிக் கொடுக்கவும் வீடு கட்டும் சங்கங்கள் பல கூட்டுறவு முறையில் செயலாற்ற முன் வந்துள்ளன.

இவ்விதம் கூட்டுறவு இயக்கம் பல துறைகளிலும் நாட்டிற் பரவியுள்ளது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஆகவே, மக்கள் ஒன்றுபட்டுத் தத்தம் தேவைகளுக்கேற்றபடி கூட்டுறவு நிலையங்களை ஏற்படுத்திக்கொண்டு பயன்பெறலாம். 'ஒவ்வொருவரும் யாவருக்காகவும், யாவரும் ஒவ்வொருவருக்காகவும்' என்பதே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைத் தத்துவமாகும். இதை நன்குணர்ந்து, நேர்மையாக நடந்துகொள்வோமானால், நம் நாடு செழிப்புறும்; நம் மக்கள் வாழ்க்கை நிலை உயரும்; எங்கும் இன்பம் பெருகும்.

# 11. ஜப்பானைப் பார்!

*(சுவாமி விவேகானந்தர்)*

யோக்கஹாமா,
**ஜூலை, 10, 1893.**

அன்புள்ள ஐயா,

எனது நீண்ட பிரயாணத்தில் அடிக்கடி உங்கட்குக் கடிதம் எழுதாமல் இருந்ததைப்பற்றி மன்னிக்கும்படி வேண்டுகின்றேன். ஒவ்வொரு நாளும் ஓய்வில்லை; சிறப்பாக மூட்டை முடிச்சுகளைப் பற்றிக் கவலைப்படாத என்னைப் போன்றவர்க்கு இப் பிரயாணத்தில் அவற்றைப் பாதுகாப்பதே பெரிய தொல்லையாக இருக்கிறது. நான் எனது நேரத்தில் பெரும் பகுதியை இதற்கே செலவிடவேண்டி யிருக்கிறது. இஃது உண்மையில் எனக்குத் தொல்லையாகவே இருக்கிறது.

நாங்கள் பம்பாயிலிருந்து புறப்பட்டுக் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தோம். எங்களை ஏற்றிச் சென்ற கப்பல் அத்துறைமுகத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி இருந்தது. நாங்கள் நகரத்தைக் காண விழைந்து கப்பலை விட்டு இறங்கினோம்; நகரத்தின் பல தெருக்கள் வழியே நடந்தோம். நாங்கள் பார்த்தவற்றுள் இப்பொழுது நினைவிற்கு வருவது அழகிய பௌத்த விஹாரம் ஒன்றேதான். அங்குப் புத்தரின் அழகிய உருவச்சிலை அமைக்கப்பட்டிருந்தது. அது மிகவும் அற்புதமான வேலைப்பாடமைந்த சிலையாகும்.

நாங்கள் அடுத்தபடி தங்கிய துறைமுகம் பினாங்கு என்பது. அது மலாய தீபகற்பத்திலிருந்து பிரிந்து கடலில் நீண்டிருக்கும் நிலப்பகுதியாகும். அங்குள்ள மக்கள் மலேயா நாட்டு முகம்மதியர்கள். நாங்கள் பினாங்கிலிருந்து சிங்கப்பூருக்குச் செல்லும் பொழுது 'சுமத்ரா' தீவின் பகுதிகள் சில கண்ணெதிரே பட்டன. கப்பற் கொள்ளைக் கூட்டத்தினர் வாழ்ந்த இடங்கள் சிலவற்றை எங்கள் கப்பல் தலைவர் எங்கட்குக் காட்டினார். சுமத்ராவில் உள்ள மலை முகடுகள் எங்கள் பார்வையைத் தம்பால் இழுத்தன.

சிங்கப்பூர் மலேயா நாட்டுத் தலைநகரம் ஆகும். அங்கும் பலவகை அரிய செடி-கொடி-மரங்களைக் கொண்ட காட்சி

சாலை ஒன்று இருக்கிறது. விசிறிபோன்ற இலைகளைக் கொண்ட செடிகள் அங்கு ஏராளமாகக் காணப்படுகின்றன. 'ரொட்டிப் பழ மரம்' என்ற ஒரு வகைமரம் மிகப் பலவாக இருக்கின்றன. சென்னையில் மாமரங்கள் மிக்கிருத்தல் போல இங்கு ஒரு வகை மாமரம் மிகுந்து காணப்படுகிறது. இங்குள்ள மக்கள் உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பினும் சென்னை மாகாண மக்களைப் போன்று அவ்வளவு கரியநிறம் உடையவர் அல்லர்.

சிங்கப்பூரை விட்டுச் சென்று ஹாங்காங், காண்டன் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு ஜப்பானுக்குப் புறப்பட்டோம். நாங்கள் அந்நாட்டில் முதன்முதல் அடைந்த துறைமுகம் நாகசாகி என்பது. நாங்கள் கப்பலைவிட்டு இறங்கி நகருக்குட் சென்றோம். என்ன அருமையான காட்சி! ஜப்பானியர் மிகவும் தூய்மையாக இருக்கிறார்கள். ஒவ்வொரு இடமும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் காணப்படுகிறது. எல்லாத் தெருக்களும் இயன்றவரை அகலமாகவும் நேராகவும் செப்பனிடப்பட்டும் இருக்கின்றன.

ஜப்பானியர் வீடுகள் கூண்டுகளைப்போல் காணப்படுகின்றன. ஒவ்வொரு நகரத்தின் அல்லது கிராமத்தின் பின் பச்சைக் கம்பளம் போர்த்தாற்போன்ற பசியமரஞ் செடி கொடிகளைக் கொண்ட அழகிய குன்றுகள் நகரத்தையும் கிராமத்தையும் அழகுபடுத்துகின்றன. ஜப்பான் அழகுக்கு இருப்பிடம் என்னலாம். ஜப்பானியர் குள்ள உருவினர்: அழகிய மேனியுடையவர்; வியப்பூட்டும் தோற்றம் கொண்டவர். அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் நம் கவனத்தை ஈர்ப்பன. பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டின் பின்புறமும் அழகிய தோட்டம் இருக்கின்றது. அதனுள் குளம், புல்மேடைகள், பூச்செடிகள், மருந்துச் செடிகள் முதலியன காணப்படுகின்றன.

நாங்கள் நாகசாகி என்னும் நகரத்திலிருந்து கோபே என்னும் துறைமுகத்தை அடைந்தோம். நான் ஜப்பானில் உள்ள உள்நாட்டுக் காட்சியை காண விழைந்து, கப்பல் பிரயாணத்தை இத்துடன் முடித்துக் கொண்டேன்; கோபேயிலிருந்து பல ஊர்களைப் பார்த்துக்கொண்டே யோக்கஹாமா சேரலாம் என்று முடிவு செய்தேன்.

நான் உள்நாட்டுப் பிரயாணத்தில் மூன்று பெரிய நகரங்களைக் கண்டேன். அவை ஓசாகா, கியோடா, டோகியோ என்பன. ஓசாகா என்பது பொருள்களை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை நகரமாகும். கியோடா என்பது ஜப்பானின் பழைய தலை நகரம். டோகியோ என்பது இப்பொழுதுள்ள தலை நகரம் ஆகும். இந் நகரம் கல்கத்தாவைப் போல் இருமடங்கு பெரியது; இருமடங்கு மக்கள் தொகையும் கொண்டதாகும். இங்கு அனுமதிச் சீட்டு இன்றி எந்த வெளிநாட்டானும் உள் நாட்டுப் பிரயாணம் செய்ய முடியாது என்பது குறிப்பிடத் தக்கது.

ஜப்பானியர் இன்றைய அவசியத்தை நன்கு உணர்ந்தவராகக் காண்கின்றனர். அவர்களிடம் துப்பாக்கிகளைத் தாங்கி நன்கு பயிற்சி பெற்ற படை வீரர் இருக்கின்றனர். அத் துப்பாக்கிகளும் அந்நாட்டுப் படைத்தலைவர் ஒருவர் கண்டுபிடித்தனவே யாகும். அவர்கள் தொடர்ச்சியாகத் தங்கள் கப்பற் படையைப் பெருக்கிப் பலப்படுத்தி வருகின்றனர்.

தீப்பெட்டி செய்யும் தொழிற்சாலைகள் பல இங்கே உள்ளன. அவற்றை நாம் கண்ணுறுவது இன்றியமையாதது. ஜப்பானியர் தமக்கு வேண்டும் பொருள்களை யெல்லாம் தம் தாய்நாட்டிலேயே செய்ய விழைகின்றனர். ஜப்பானியக் கப்பல்கள் ஓய்வின்றி ஜப்பானுக்கும் சீனவுக்கும் பிரயாணம் செய்கின்றன. அவை விரைவில் பம்பாய்க்கும் யோகஹாமாவுக்கும் பிரயாணம் செய்ய விழைகின்றன.

நான் பல கோயில்களைச் சென்று பார்வையிட்டேன். ஒவ்வொரு கோயிலிலும் பழைய வங்க மொழி எழுத்துக்களில் வட மொழி மந்திரங்கள் சில எழுதப்பட்டுள்ளன. குருமாருள் சிலரே வடமொழி பயின்றுள்ளனர். ஆயினும், அவர்கள் மிக்க அறிவுடையவர்கள்; இக்காலத்திற்கு வேண்டியவற்றை நன்கு அறிந்துள்ளனர். நான் ஜப்பானியரைப்பற்றி நினைப்பன யாவும் இச்சிறிய கடிதத்தில் எழுதமுடியவில்லை. ஆண்டு தோறும் நம் இந்திய இளைஞர் சிலரேனும் ஜப்பானுக்கு வந்து போகவேண்டும் என்பது எனது அவா. உயர்வுக்கும் நல்லவற்றிற்கும் இந்தியா தாயகமானது என்பது ஜப்பானியர் எண்ணமாக இருக்கிறது.

ஆனால், நீங்களோ-இந்தியராகவுள்ள நீங்களோ—வாழ் நாள் முழுவதும் பயனற்றவற்றைப் பேசும் வீணர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஜப்பானுக்கு வாருங்கள்; இம்மக்களைப் பாருங்கள்; வீடு திரும்பி வெட்கித் தலை குனியுங்கள். நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வளர்க் கப்பட்ட மூட நம்பிக்கைகளை மேன்மேலும் வளர்த்துக்கொண் டும், பயனற்ற பொருள்களைப்பற்றிப் பேசிக்கொண்டும், நாட் களை, வீணே கழிக்கின்றீர்கள். பல நூற்றாண்டுகளாக வளர்க் கப்பட்ட சமூகக் கொடுமையால் மனித இனத்தை உங்கட்கு அப்பாற்பட்டதாகச் செய்துவிட்டீர்கள். என்ன செய்கிறீர் கள்? இப்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்? கையில் புத்தகங்களுடன் கடற்கரையில் உலாவிக்கொண்டு, மேனாட்டு ஆசிரியன்மார் அறிந்தோ அறியாமலோ எழுதியுள்ள சில செய்திகளை மனப்பாடம் செய்துகொண்டு, முப்பது ரூபாய் கூலிதரும் வேலைக்காக, அல்லது வழக்கறிஞர் பதவிக்காக நீங் கள் படும்பாடு சொல்லவொண்ணாது. இதுதானா இந்திய இளை ஞரது வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம்? உங்களுடைய பட் டங்களையும் பட்டுடைகளையும் பட்டத்தாள்களையும் ஆழ் கடிக்கக் கடலில் நீர் இல்லையா? இங்கு வாருங்கள். மனிதராக இருங்கள். விரிந்த மனப்பான்மையோடு வாழுங்கள். நெடுந் தொலைவு சுற்றிப் பாருங்கள். பிறநாடுகள் எவ்வாறு முன் னேறிச் செல்லுகின்றன என்பதைக் கவனியுங்கள். நீங்கள் உங்களைப்போன்ற மற்ற மனிதரை நேசிக்கின்றீர்களா? உங் கள் நாட்டை முழுமனதுடன் நேசிக்கின்றீர்களா? நேசிப் பதாயின் வாருங்கள். நாம் உயரிய நோக்கங்கட்காக உழைப் போம்; பின்னால் திரும்பிப் பார்க்கவேண்டா; உங்கள் உயிர்க்கு இனியவர் அழுதாலும் பின் நோக்கம் வேண்டா; முன் நோக் கமே வேண்டற்பாலது.

அமைதி, ஆரவாரம் இன்மை, சலியாத தொண்டு இவையே நம் நாட்டுக்கு வேண்டற்பாலன. பத்திரிகைகளில் பெயரை விளம்பரப் படுத்தும் ஆடம்பர வேலை வேண்டாம்.

உங்கள் அன்புள்ள,

**விவேகானந்தன்.**

# 12. உழவப் புலவன்

[திரு வ. சு. ப. மாணிக்கம், M. O. L.]

## காட்சி—1

**களம் :** கிள்ளி வளவன் அரச வாயில்

**காலம் :** காலை

**கூற்று :** வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவரும், வாயில் காப்பவனும்.

**நாகனார் :** (விரைவோடு) வேந்தன் இருப்பது இவ்விடந் தானோ? உள்ளே இப்பொழுது இருக்கின்றானா?

**காவலன் :** ஏ! ஐயா! திறந்த வாயை மூடு. மூடிய வாயைத் திறவாதே. (வேறு பக்கந் திரும்பிக்கொண்டு) மறு பிறவி எடுக்கும் அளவுக்கு மூத்தும், உலக வழக்கம் தெரிய வில்லை. இவர் வைத்த ஆள்போல, வேந்தர் பெருமானை அவன் இவன் என்று பேசுகிறார்!

**நாகனார் :** உலகத்திலே, எனக்குப் பின் பிறந்த அவனை...

**காவலன் :** என்ன இது? சொல்லச் சொல்ல மீண்டும் மீண்டும்! ஓய், நிறுத்து ஐயா! உன் வீட்டில் மாடு மேய்த்த வரோ?

**நாகனார் :** (தொடர்ந்து) அதுவும் நான் பார்க்கப் பிறந்த சோழனை, அப்படிப் பேசாமல் வேறு எப்படி அப்பா பேசுவது? உனக்குப் பின் பிறந்தவர்களை நீ அவர் இவர் என்றுதான் அழைப்பாய் போலும்! இனி அங்ஙனம் சொல்லாதே. பார்ப்பவர்க்குக் கேலியாகத் தெரியும்.

**காவலன் :** அரசர் என் கண் பார்க்கப் பிறந்து, கை தூக்க வளர்ந்தவர்தாம். அதனாலே (மெல்லச் சிரித்துக் கொண்டு), நானும் உம்மைப் போலப் பேசலாமா? நீ என்று சொன்ன வாய்க்குச் சோறு கிடைக்குமா? என்னை நீ என்று சொல்லு கின்ற வாயால், அவரை, அவன் என்று சொல்லுகின்றீரே, உமக்கு என்ன ஊற்றம்! நாங்களிருவரும் உம் அறிவிற்கு ஒரு மாதிரியாகத் தெரிகிறதோ? (இரக்கத்தோடு) உமக்கு நல்ல வேளை : என் முன் சொல்லித் தொலைத்தீர். அரசரிடம் சொன்னால், புழுப்போல் நாக்குத் துண்டிக்கப்படுமே!

நாகனார் : நீ என்றால் இழுக்கமா ? உன் தாய் வயிற்றினின்றும் எட்டு மாதத்திலேயே வெடித்துக்கொண்டு வந்தனையோ ? இல்லை. பன்னிரண்டு திங்கள் வரை சிறைப்பட்டுக் கிடந்தனையோ ? பத்து மாதத்திற் பிறந்தவன்தானே நீ ? உன் வேந்தனும் அப்படித்தானே !

காவலன் : (பேதைமையாக) நான் எந்த மாதத்திற் பிறந்தவனென்று எனக்குத் தெரியாது. பெற்ற ஆத்தாளைக் கேட்டால்தான் அது தெரியவரும்.

நாகனார் : (கடகடவென்று சிரித்துக்கொண்டு) எவ்வகையிலும் நீ அரசனைவிடத் தாழ்ந்தவனல்லன் ; ஒரு படி உயர்ந்தவன் என்றுகூடச் சொல்லலாம்.

காவலன் : (விரைந்து) நீர் சொல்வதிலே முக்காற் பங்கு சரியில்லை. சோழ அரசரைவிட நான் உயர்ந்தவன்தான். நீர் சொல்வதுபோல ஒரு படி அளவில்லை. இருவரும் நின்றால் காற்படி அளவுதான் நான் உயரமாக இருப்பேன்.

நாகனார் : தம்பி, உனக்கு நல்ல மூளை.

காவலன் : இல்லாவிட்டால் என்னைக் காவற்காரனாக வைப்பார்களா ?

நாகனார் : (அவன் பெரிய தலையைப் பார்த்துக்கொண்டு) உனக்கு மூளை ஒரு படி இருக்கும்போலும்.

காவலன் : ஆடு மாடுகளுக்கே அரைப் படி மூளை இருக்கும்போது, மனிதனுக்கு ஒரு படி மூளையாவது இருக்க வேண்டாமா ?

நாகனார் : உன் அறிவின் அழகே அழகு ! குடிகளைக் காக்குங் காவலன் அவன். அவ்வளவுதானே ! நீயோ அவனையும் காக்கும் காவலன் அன்றோ ! நீ எவ்வகையிற் சோழனைவிடக் குறைந்தவன் ? அவன் கையிலிருப்பதுபோலவே உன்கையிலும் கோலிருக்கின்றது !

காவலன் : சோழர் கையிலிருக்கும் கோல் (தன் கம்பைக் காட்டி) இவ்வளவு நீளமுடையதுமில்லை; கனமுடையதுமில்லை.

நாகனார் : ஏன் ? அப்பா, இதனாலேகூடத் தெரியவில்லையா? நீ அவனையும் காக்கும் காவலன் என்று ? நல்லது, சோழனைப் பார்க்க............

**காவலன்** : (தன்னைப் புகழ்ந்தாரெனப் பெருமிதம் கொண்டு)ஐயா, பெரியவரே, தெய்வம் ஏறப்பட்டவன்போலத் திரும்பத் திரும்ப அவன் என்று சொல்கிறீரே ! உம் செயல் பிச்சை வாங்கப் புகுந்த புதியவன், "ஐயா, தந்தையே பிச்சை போடுங்கள்" என்று கேட்பது போலன்றோ முறை கெட்ட நிலை யாய் இருக்கின்றது ! இதுவரை நீர் இப் படியில் ஏறிய தில்லையோ ? (இரக்கத்தோடு) பாவம் ! நானாவது சொல்லித் தருகிறேன் ; கேட்டுக்கொள்ளும். அரசருக்கு முன்பு சென்று கை கூப்பி, வேந்து வாழ்க, இறை வாழ்க, நின்குடை வாழ்க, கோல் வாழ்க என்று புகழ்ந்த பிற்பாடுதான், எதனையும் கூறல் வேண்டும். கூறி முடிக்கும்போது மறுபடியும் வாழ்க என்று சொல்லுதல் வேண்டும். தெரிந்துகொண்டீரா ?

**நாகனார்** : நீ சொல்வது போல முதலிலும் முடிவிலும் வாழ்க என்று சொல்கின்றேன். (தமக்குள் சிரித்துக் கொள்ளு கிறார்.)

**காவலன்** : மன்னரைப் பார்க்க இவ் வழியாகத்தான் செல்ல வேண்டும். இவ்வாயில் யாரும் தடையின்றிப் போய் வருங் கடைத் தெரு என்று எளிதாக நினையாதீர். இங்கு நான் ஒருவன் நிற்பதனாலேயே, தடையுடையது என்று தெரிகின்ற தன்றோ ? நீர் வந்த செய்தி வளவரிடம் அறிவிக்கத்தக்க அரு மைப்பாடு உடையதா ? அருமையுடையதேயாயினும், சொல்லு வதற்கு நீர் உள்ளே செல்லத்தக்க பெருமையுடையவரா என் பதைக் காண்பதற்குத்தானே, என்னை இவ்விடத்து நிறுத்தி யிருக்கிறார்கள் ?

**நாகனார்** : அதற்கில்லை யென்றால், உனக்குப் பதில் ஒரு மரம் நிற்கலாமே !

**காவலன்** : இல்லை ஒரு மாடுதான் நிற்கலாமே !

**நாகனார்** : நன்றாகக் கேட்டாய். உன் அறிவே அறிவு. மாடோ நிறுத்தின விடத்து நில்லாது போய்விடும். மனிதன் தான் இப்படி அப்படி அசையாது, பார்ப்பதற்கு மரமாகவே நிற்பான் என்று கருதித்தானே உன்னை நிறுத்தி யிருக்கிறார்கள் ?

**காவலன்** : உள்ளதை உள்ளபடி சொல்கிறீர், நல்லது. நீர் சொல்ல நினைக்கும் செய்தி யாது ?

**நாகனார்** : (இழுத்தாற்போல்) அதுவா? என்னை நீ உள்ளே போகவிடல் வேண்டும் என்பதுதான்.

**காவலன்** : அதுவில்லை. முதியவரே! (செவிடு என நினைத்து உரத்து) உள்ளே போய்ச்சொல்லவேண்டிய அலுவல் என்ன?

**நாகனார்** : (தாமும் உரத்து) அதுவா உள்ளே போய்க் கொண்டன்றோ சொல்லவேண்டும்? அகத்திருந்து பேசவேண்டியதைப் புறத்து நின்று சொல்வது எப்படி? திரைப்பேச்சைத் தெருப் பேச்சாக்கலாமா?

**காவலன்** : அப்படியானால், உள்ளே விடுகிறேன்: போய்க் கொண்டு சொல்லும். (போக விடுகின்றான். நாகனார் உள்ளே போய்க்கொண்டு, நில்லாமல் மேலும் நடக்கத்தொடங்குகிறார்.) ஓய், பெரியவரே! நில்லும். செய்கிறபடி சொல்லமாட்டீரோ? 'உள்ளே வந்து விட்டோம்; இவன் தயவு இனி நமக்கு எதற்கு?' என நினைத்திட்டாற்போல் தெரிகின்றதே! அரசரிடம் சொல்லப் போகின்ற காரியம் என்ன, ஐயா? (முன்வந்து நின்று மறித்துக் கொள்கின்றான்.)

**நாகனார்** : என்ன, தம்பி! அறியாப் பிள்ளைபோல நடிக்கின்றாய்! அதை அரசனிடம் அன்றோ சொல்லவேண்டும்? தன்னுட் பேசுவதும், ஒருவருக்குச் சொல்லுவதும், உலகோருக்கு உரைப்பதும் எனச் சொல் பல திறப்படும். துவாரம் பட்ட மட்கலம்போல எல்லாவற்றையும் எல்லாரிடமும் கொட்டித் தொலைக்கலாமா?

**காவலன்** : இப்பொழுதுதான் என் வழிக்கு வந்துவிட்டீர். சொல்லிற் பிடிகொடுத்து விட்டீர். நீர் மட்டும் வந்த காரியத்தை எல்லாரிடமும் சொல்லக் கூடாதாக்கும். நான் மட்டும் யார் வந்தாலும் எல்லாரையும் உள்ளே விட வேண்டுமாக்கும். நீ என்றால் ஒரு முறை, நான் என்றால் ஒரு முறையா? நீ நானாதலும் நான் நீயாதலும் உண்டுதானே! பேச்சில் வல்லவராக இருக்கிறீர். சிரிக்கச் சிரிக்கச் சொல்லி, நடையைக் கட்டுகிறீர். நான் ஒன்று உம்மைக் கேட்பேன். என் மனத்திற்குச் சரியென்று படும்படி, விடை சொல்லும். உம் வீட்டிற்குள்ளே நீர் போவதுபோல, உள்ளேயும் போகலாம். பெரிய அரசர்க்கெல்

லாம் அரசரைப் பார்க்க, யார் வந்தாலும் தங்கு தடையின்றி உள்ளே விடலாமா? எல்லாருமே பார்ப்பதென்றால், அரசர் ஏன் ஓர் அரண்மனை கட்டி அதற்குள்ளே இருத்தல் வேண்டும்? அம்பலக் கல்லிலேயே இருந்துவிடலாமே? நானும் இவ்வளவு பெரியமனிதன், மொக்கைக்கொம்பு ஒன்றை ஊன்றிக்கொண்டு, இடையன்போலக் கால்கடுக்க நிற்க வேண்டியதில்லையே! வீடு, போ போ, காடு, வா வா, என்றுகூப்பிடக்கூடிய, தள்ளாடும் பருவத்திற்கு வந்த உமக்கு என்னய்யா, அரசரிடப்வேலை? ஒருவன் கேட்கிறானே என்று என்னவாவது சொல்ல வேண்டுமா இல்லையா? நையாண்டி பண்ணுகின்ற உம்மை உள்ளுக்கு விடலாமா? என்னிடத்துப் பேசுகின்ற இப் பழக்கம்தானே அவரிடமும் வரும்? பழக்க வழக்கந் தெரியாதவரைப் போகவிடுத்தால், நாளைப் பின்னை என் தலைமேலே இடிவிழுமா, இல்லையா?

நாகனார்: நீ கேட்டகேள்வியே கேள்வி! கடவுளுக்கும் இறைவன் என்று பெயர். அரசனுக்கும்.........

காவலன்: அவருக்கும் இறைவரென்றுதான் பெயர்! அதனாலென்ன கெட்டுப்போயிற்று!

நாகனார்: அப்படிச் சொல்லாதே, தம்பி! கடவுள் எல்லாருமறிய, அம்பலத்திலே இருப்பது போல அரசனும் இருக்க வேண்டியவன் தானே?

காவலன்: பெயர்ப் பொருத்தம் என்னவோ சரிதான். நடைப் பொருத்தம் வேறு மாதிரியாக வன்றோ இருக்கின்றது! அரசர் அரண்மனைக்குள் அன்றோ இருக்கின்றார்!

நாகனார்: அவன் உள்ளேதான் அமர வேண்டுமென்று நானுஞ் சொல்லுவேன்.

காவலன்: என்ன கிழவரே! பருவ மயக்கம் வெளிப்படுகின்றதே! முன்னுக்குப்பின் முரணாகப் பிதற்றலாமா? சொன்னதைக் கூடவா திரும்பச் சொல்லத் தெரியாது?

நாகனார்: முன்னுக்குப்பின் என்பது முரண்தானே, தம்பி! கடவுள் நாம் நினைப்பதைச் சொல்லாமலே அறிந்துகொள்வார், உன் அரசனுக்கு எதுவும் சொன்னாற்றானே தெரியும்?

காவலன்: ஆம்; ஆம்! நீர் வந்திருப்பதைக்கூட நான் சொன்னாற்றான் அவருக்குத் தெரியும்.

**நாகனார்:** நான் சொல்லுவதைப் பட்டென விளங்கிக் கொள்ளுகின்றனையே! இன்னவன் சொல்லுவது இதுவென மயக்கமின்றி அறிந்து கொள்ளும் அறிவு மனிதனுக்கு இருந்தாற் போதும்; உலகம் வாழும்.

**காவலன்:** எனக்கு அந்த அறிவு உண்டோ? நான் ஒரு மனிதனா?

**நாகனார்:** நீ ஒரு மனிதனல்லாவிட்டால், நான் பேசிக் கொண்டு நிற்பேனா? நீ கேட்ட கேள்வியை மறந்து விட்டாயே, தம்பி! வேந்தன் பலரறிய மன்றத்திலே வீற்றிருந்தால், குடிமக்கள் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள நாணார்களோ? நாடு குறைபட, வினையாளர்கள் செய்யும் சீர்முறைகெட்ட செயல்களைப் பலர் அறியக்கேட்டால், அரசனுடைய வணங்காத் தலையும் தானே வணங்காதோ? உலகத்தில் கவலைக்கிடமான பெரிய காரியங்களும், உரியவரைக்கண்டு, சூழ யாருமில்லாத தனிமையில் பேசினால் செவ்வனே முடிவு பெறும். பலர் குழுமிய சூழல் நடுவில் உரையாடினால், செருக்கும் பொய்மதிப்பும் விரைவும் ஆகிய திரைப்படலங்கள் உண்மைக் காட்சியை மறைக்கும். அதன் மேலும், மற்றையோர் குறுக்குப் பேச்சு தன் நினைவுக் கயிற்றை அறுத்துத் திட்டக்கல்லை மணலாக்கும். ஆதலான், அவரவர் குறையைத் தனியே கேட்டறிந்து, முறை செய்யத்தான் அரசன் தனியிடத்திருக்கிறான். அதனாலேதான் அவன் தனிமையை மக்களும் விரும்புகின்றனர். மயிரிழை போன்ற இச் சிறு அறிவுகூட இல்லாத நீ, அரசனுக்குக் காவலனாக அமர்ந்த பொருத்தத்தை என்னென்பேன்!

**காவலன்:** முதியவரே! எம் மன்னர் அம்பு, பகைவர் நெஞ்சிலே தைப்பது மாதிரி, என் மனம் நறுக்கென்னும்படி குத்திப் பேசுகிறீரே! மயிரிழை என்றால் என்ன சிறு பொருளா அது! இரு கண்ணுக்குந் தெரியாமல், சோற்றிலே கிடந்து வாய் வழியாக வயிற்றிலே புகுந்து, அன்று என்னைப் படுத்திய பாடு விளக்கெண்ணெய் தடவிய என் மனைவிக்கு அன்றோ தெரியும்! சோற்றிலே கல்லுக் கிடக்கிறதென்று பல்லுக் காட்டினால் ஒழியத் தெரியாத மக்களுக்கு, இந்த அறிவு இல்லாதது குற்றமே இல்லை. உம்! நல்லது! நீர் சொல்லுவதைப் பார்த்

தால், வேந்தருக்கும் குடிமக்களுக்கும் இடையே நான் ஏன் விலங்காக இருக்கவேண்டும்? அறிவிலி என்று என் மானத்தைக் கப்பலேற்றுகிறீர்! இதனை மன்னரிடம் சொல்லி வேலையை விட்டு விலகிக்கொள்வேன். நான் என்ன நொண்டியா? உம்மைப்போலக் கிழவனா, தடியனாய் நிற்பதற்கு!

**நாகனார் :** தம்பி! அப்படிச் சொல்லாதே. வேலையை விட்டு விடாதே. நீ இங்கே நிற்கத்தான் வேண்டும். நீ வெளியே நிற்பதனாலன்றோ, வருகின்ற மக்கள், அரசன் உள்ளே இருக்கிறான் என்று தெரிந்து கொள்ளுகிறார்கள்? பார்க்க வரும் மக்களை வடிகட்டி உள்ளே விடுவதற்காக நீ இங்கே நிற்கவில்லை.

**காவலன் :** அதற்கென்றுதானே நினைத்துக்கொண்டிருக்கின்றேன்!

**நாகனார் :** நன்று! மிக நன்று! வடிகட்டிய அறிவுடைய நீயோ அதற்கு ஏற்றவன்? வேந்தன், என்றும், யார்க்கும் மருத்துவர் போல் காட்சிக்கு எளியவன்: குடிமக்கள் கூப்பிட்டால் உறக்கத்திலும் விழிக்க வேண்டியவன்; குறை கூறினால் கனவிலும் முறை செய்யவேண்டியவன். அவ்வாறு தாய்போல் எளியவனை அருமையாக்கும் பேயோ நீ? அதற்கோ நீ தடி கொண்டு நிற்கிறாய்!

**காவலன் :** நான் அரிய பேயுமல்லன்; வருவாரை யெல்லாம் உள்ளே விட்டுக்கொண்டு இருத்தற்கு உரிய பேதையுமல்லன்.

**நாகனார் :** பேயினும் பெரியவனே! பேதையினும் உயர்ந்தவனே! வருவார் ஆண்மையினும் சிறந்தவனே!

**காவலன் :** என் மனங்குளிரச் சொன்னீர். அளிகூர்ந்து என் கடமை யாது என்று தெரிவிப்பீர்.

**நாகனார் :** விருந்தினர் போல் வரும் குடிமக்களை, வீட்டவன் போல் முகமலர்ந்து, வம்மின் என்று இன்சொல் வழங்கி நல்வரவு கூறுவது நின் கடன். வேந்தன் நாள் மகிழ் இருக்கை இது; செல் வழியிது; காணும் செவ்வியிது என்று கைகாட்டி மரம்போல் நின்று அறிவித்தல் நின்கடன்.

**காவலன் :** (இகழ்ச்சியாக) பூ உட! என் வேலை இவ்வளவு தானோ? ஏதேதோ வானக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தேன். இனி என் பாரங் குறைந்தது. நீர் பேசுவதைப் பார்த்தால், என்னைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு படித்தவராகக் காணப்படுகின்றீர். அரசரிடம் சொல்லும் காரியத்தைக்கூட வெளியிடவேண்டா. அது கிடக்கட்டும். நீர் யார் என்று சொன்னாற் போதும்.

**நாகனார் :** நானோ? உன் அரசனுக்குத் தாய் என்று வைத்துக்கொள்ளேன்.

**காவலன் :** (வெடி சிரிப்புற்றுக் கண்ணைத் துடைத்துக் கொண்டு) ஓ! ஓ! நீங்கள் தாயா? குமரியாய்க் கிழவியான வரோ? இந்த இழவை முதலிலேயே சொல்லியிருந்தால், மகனைப் பார்க்க மாடுபோல் தறுக்கே நிற்பேனோ? அவரையே இங்கே அழைத்து வந்திருப்பேனன்றோ? (பின்னும் நகையாக) நீங்கள் அரச குலமா? ஏனோ இவ்வளவு மெலிவு? ஆணுடையில் உள் வரிக் கோலம் கொண்டு பட்டப்பகலில் வரலாமா? நல்லது? உங்களைப் போன்றோரைக் கட்டாயம் வந்த வழியே போகும் படி செய்க என்பது எனக்குப் பெருமான் கட்டளை.

**நாகனார் :** (சினந்து) மடமைக் காவல! நான் தாயென்று சொல்லக் கேட்டதும் நீ பேதுற்றாய். தாய் என்றால் பெண்பிறவி யாகவே இருத்தல் வேண்டும் என்று நீ எங்குக் கற்றனை? பள்ளிப் படியேறியதுண்டா? இக்கோல் பிடித்த கை, ஏடு பிடித்ததுண்டா? வரி யெழுத்தைப் பார்த்த தலையெழுத்து உடையையோ? பெண்ணே யன்றி, ஆணல்லாத பொருள் களாகிய தமிழ் மொழியையும், தமிழகத்தையும், தாய்மொழி என்றும் தாயகம் என்றும் சொல்லற்குத் திறவாது உண்ணற் குத் திறந்த வாயுடையையோ? பிறர் சொல்லியும் கேளாது விரிந்த செவியுடையையோ? தாயின் தன்மை கொண்ட பொரு ளெல்லாம் தாயெனப்படும் என்ற தமிழ் மரபு கூடக் கல்லாத காவலனே! நீயோ யாம் உட்புகுதற்கு அருகதை யுடையேம் என்பதைக் கணிக்க வல்லவன்? முல்லை நறுமணத்தைப் பொடியுண்ணும் மூக்கு அறியுமோ? பாலின் சுவையைப் புகையிலை அடக்கிய வாய் அறியுமோ? ஏடா! அரசனுக்குத் தாய் நான் என்று சொன்னதிற் பிழை எவனோ?

**காவலன் :** (அச்சத்தோடு) பெரியவரே! பாட்டன் முன்பு பேரன்போல விளையாடிப் பார்த்தேன். அது பிழையா? வயது ஆக ஆகச் சினம் பெருகும் என்று படித்ததை மறந்து விட்டேன். கையின் ஆற்றலைக் கம்பு அறியாது என்றபடி உங்கள் வாயாற்றலை யாரே அறிய முடியும்! (பணிந்து) என்னை வெட்டிப் போடுங்கள்; பட்டுக் கொள்கின்றேன். (தலை கொடுக்கிறான்.)

**நாகனார் :** தம்பி! நீ நல்ல பையனாக வந்துவிட்டாய். மறப்பதற்கா படிப்பது? மறதி, கேடு தரும்; கேடு, மறதியைத்தரும் என்று இனியாவது அறிந்து கொள்!

**காவலன் :** தாயென்று சொன்னீர்களே, எனக்கு விளங்கவே மாட்டேன் என்கின்றது.

**நாகனார் :** அப்படிக் கேட்டால் சொல்லுகின்றேன். நீ எனக்குச் சோறு போட்டு என் உடலைப் பேணி வளர்த்தால் நீ எனக்குத் தாய்!

**காவலன் :** நீங்கள் எனக்குச் சோறு ஊட்டி வளர்த்தால்...

**நாகனார் :** நான் உனக்குத் தாய்தான்.

**காவலன் :** அப்படியானால் எனக்குந் தாய், அரசருக்கும் தாயா நீங்கள்!

**நாகனார் :** இது உனக்கு மிக மிகப் புதுமையாகத் தோன்றுகிறது. கணவன் உடலைப் பேணுவதனாலே, மனைவியைக் கூடத் தாய் என்று முறை கூறி யிருக்கிறார்கள் என்றால், வேறு என்ன சொல்லுவது?

**காவலன் :** படித்ததெல்லாம் மறந்துவிட்டே னென்று நினைத்துக்கொள்ளாதீர்கள். தாய்க்குப்பின் தாரம் என்பது ஒரு பழமொழி யன்றோ!

**நாகனார் :** நான் ஓர் உழவன்.

**காவலன் :** மேலே எதுவுஞ் சொல்லவேண்டாம். எல்லாம் தானே விளங்கிப் போயிற்று. அரசர் முதலாக நாட்டிலுள்ள அனைவருக்கும், ஏன் விலங்கு பறவைகளுக்குங்கூட நீங்கள் தாம் தாயார்.

**நாகனார் :** நாங்கள் உழுது, பயிர்வளர்த்து விளைத்துச் சாப்பாட்டிற்கு நெல் தராவிட்டால்......

**காவலன் :** நெல் தரத்தான் வேண்டும். இல்லாவிட்டால் என்பாடு கூப்பாடுதான் ; பின் சாக்காடுதான் ; முடிவில் சுடுகாடுதான் ! எல்லாம் நீங்கள் சொன்ன பிற்பாடுதான் தெரிகின்றது. இந்த மூளைக்குப் பிறர் சொல்லியே எதுவும் தெரிய வேண்டியிருக்கின்றது. (கம்பால் தன் தலையில் இரண்டு போடு போட்டுக் கொள்கிறான்.)

**நாகனார் :** காவலாளி ! வருந்தாதே. உனக்கு மட்டுமன்று; யாருக்கும் எதுவும் நாங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டும்.

**காவலன் :** வந்த காரியத்தை மறந்திட்டாற்போலத் தெரிகின்றது! என்கூடவே நிற்க வந்தீர்களா ? உள்ளே போக வந்தீர்களா ? (உள்ளே போக விடுகின்றான்.)

# சித்ரா வாசகம்

## நான்காம் படிவம்

### சிறப்புப் பகுதி

ஆசிரியர்கள்:

K. S. நாகராசன், M.A.,

விரிவுரையாளர், ஜெயின் கல்லூரி, சென்னை.

&

ஆபிரகாம் அருளப்பன், B.A.,

தமிழ்த்துறைத் தலைவர், அர்ச். சேவியர் கல்லூரி,
பாளையங்கோட்டை.

சித்ரா பதிப்பகம்

ஸ்ரீவைகுண்டம்

பதிப்புரிமை] [விலை அணா 12

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

இப் பாடநூல் நான்காம் படிவம்—சிறப்புப் பகுதிக்கு உரியது. அண்மையில் கல்வித் துறையினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை ஒட்டி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதியில் 200 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதியும், 20 முதல் 30 பக்கங்களைக் கொண்ட உரைநடைப் பகுதியும் வேண்டும் என்று பாடத் திட்டம் விதித்துள்ளது. ஆனால், இங்கு அவ்வளவிற்கு மேலும் பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஆகவே, பயிலும் மாணவர் தம் மன நிலைமைக்கும், ஆசிரியர் தம் விருப்பத்திற்கும் ஏற்றவாறு வேண்டிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள இந்நூல் இடமளிக்கிறது.

ஒவ்வொரு செய்யுட் பாடத்தின் தொடக்கத்திலும் ஆசிரியர், நூல் ஆகியவை பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியின் ஈற்றில் அருஞ்சொற்பொருள் தரப்பட்டுள்ளது. இவை மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

தமிழைச் சிறப்பாகப் பயிலும் மாணவர்க்கு இந்நூல் உரியது. ஆதலின் பேரறிஞர் பலர் எழுதிய இலக்கியக் கட்டுரைகளே பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் படிக்கும் மாணவர் தமிழறிவு பெறுவதுடன், தமிழ் இன்பம் நுகரவும் இயலும். அதற்கு வேண்டிய முயற்சியில் மாணவரை ஊக்குவிக்குமாறு தமிழாசிரியப் பெருமக்களைப் பெரிதும் வேண்டுகிறோம்.

தத்தம் பாடல்களையும் உரைநடைப் பாடங்களையும் இந்நூலில் சேர்த்துக் கொள்ள இசைவு தந்துதவிய பெரியோர் அனைவர்க்கும் எமது நன்றி உரியது.

ஆசிரியர்கள்.

# உள்ளுறை

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | வாழ்த்துப் பகுதி | | |
| | 1. முருகவேள் | ... | 1 |
| | 2. திருமால் | ... | 1 |
| II | அறவுரைப் பகுதி | | |
| | 1. திருக்குறள் | ... | 2 |
| | 2. நாலடியார் | ... | 4 |
| III | கதைப் பகுதி | | |
| | 1. கம்பராமாயணம் | ... | 5 |
| | 2. வில்லிபாரதம் | ... | 7 |
| IV | பல்சுவைப் பகுதி | ... | 10 |
| | குறிப்புரை | ... | 16 |


## உரைநடை


| | | |
|---|---|---|
| 1. ஆறுமுக நாவலர்<br>திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். | ... | 21 |
| 2. போரும் நீரும்<br>திரு. கி. வ. ஜெகந்நாதன். | ... | 29 |
| 3. ஔவையும் அதிகமானும்<br>திரு. K. S. நாகராசன். | ... | 37 |
| 4. இயற்கைப் பாட்டு<br>டாக்டர். மு. வரதராசனார். | ... | 45 |
| 5. பசிக்குப் பகைவன்<br>திரு. மொ. அ. துரை அரங்கசாமி. | ... | 50 |
| 6. வாழ்க்கையும் கலைகளும்<br>திருமதி. ருக்மணி தேவியார். | ... | 55 |

# I. வாழ்த்துப் பகுதி

## 1. முருகவேள்

### திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்

இவ்வாசிரியர் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள திருப்போரூர் என்னும் ஊரில் இருந்தவர்; வேளாள மரபினர்; சைவ சமயத்தினர். கோயம்முத்தூருக்கு அருகிலுள்ள திருப்போரூரில் இருந்த சாந்தலிங்க சுவாமிகள் என்பவருடைய சீடர். இவர் அட்டமா சித்திகளில் வல்லவர்; ஆண்டவனருள் பெற்று மீனாட்சியம்மை கலிவெண்பா, நெஞ்சு விடுதூது, சன்னிதிமுறை ஆகிய நூல்களை இயற்றி அருளியவர். இவர் வாழ்ந்திருந்தது ஏறத்தாழ 220 ஆண்டு கட்கு முன்னர் எனத் தெரிகிறது.

கருத்தே புகுந்து கதிகாட்டும்
கண்ணே வருக, மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக, கருணைபொழி
காரே வருக, ஆனந்தப்
பெருக்கே வருக, யாங்கள் பெறும்
பேறே வருக, மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக, பிறங்கு தெய்வப்
பெம்மான் வருக, குறமடந்தை
தருக்கே வருக, மிடிய கற்றும்
தருவே வருக, மன்பதைக்கோர்
தஞ்சே வருக, எமையளிக்கும்
தாயே வருக பவப்பிணிக்கு
மருந்தே வருக, சமரபுரி
வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே.

# 2. திருமால்

## குலசேகராழ்வார்

குலசேகராழ்வார் சேர அரச பரம்பரையில் தோன்றியவர்; திருமாலின் பத்து அவதாரங்களில் சிறந்ததான இராமாவதாரத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். இவர் இயற்றியுள்ள 'பெருமாள் திருமொழி' நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் முதலாயிரத்தைச் சேர்ந்ததாகும். இவருடைய காலம் 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

*இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி*
*யினத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த,*
*அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்*
*அணிவிளக்கு முயர்வெள்ளை யணையை மேவித்*
*திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னித்*
*திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்*
*கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்*
*கண்ணிணைகளென் றுகொலோ களிக்கும் நாளே.*

# II. அறவுரைப் பகுதி

## 1. திருக்குறள்

### திருவள்ளுவர்

திருக்குறள் என்னும் நூல் 133 அதிகாரங்களைக் கொண்ட ஓரரும் நீதி நூல். ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உள. உலக இலக்கியத்தில் சிறந்த ஓரிடத்தை இந்நூல் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் வள்ளுவக் குடியைச் சேர்ந்தவர். அரசனது ஆணையை முரசறைந்து மக்களுக்குத் தெரிவிப்போர் அக்குடியினர். இவர் மதுரையைச் சேர்ந்தவரென்றும் மயிலையைச் சேர்ந்தவரென்றும் வேறுபட்ட கொள்கைகள் உள்ளன. இப்பெரு நூலுக்குப் பதின்மர் உரை இயற்றியுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சாலச் சிறந்ததாம். திருவள்ளுவர் கடைச் சங்க காலத்திறுதியில் வாழ்ந்தவரென்ப.

#### பகை மாட்சி

அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு. (1)

#### பெரியாரைப் பிழையாமை

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். (2)

#### மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். (3)

#### குடிமை

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம் பற்றி வாழ்துமென் பார். (4)

#### மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. (5)

### பெருமை

*பணியுமா மென்றும் பெருமை சிறுமை*
*யணியுமாந் தன்னை வியந்து.* (6)

### சான்றாண்மை

*இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு.* (7)

### பண்புடைமை

*உறுப்பொத் தன்மக்க ளொப்பன்றால் வெறுத்தக்க*
*பண்பொத்த லொப்பதா மொப்பு.* (8)

### நன்றியில் செல்வம்

*கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய*
*கோடியுண் டாயினு மில்.* (9)

### நாணுடைமை

*ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல*
*நாணுடைமை மாந்தர் சிறப்பு.* (10)

### குடிசெயல் வகை

*குடிசெய்வார்க் கில்லை பருவம் படிசெய்து*
*மானம் கருதக் கெடும்.* (11)

### உழவு

*சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா*
*லுழந்து முழவே தலை.* (12)

### நல்குரவு

*நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்*
*யாதொன்றுங் கண்பா டரிது.* (13)

### இரவச்சம்

*இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து*
*கெடுக வுலகியற்றி யான்.* (14)

### கயமை

*சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்*
*கொல்லப் பயன்படுங் கீழ்.* (15)

# 2. சிலப்பதிகாரம்

## இளங்கோவடிகள்

சிலப்பதிகாரம் என்பது தமிழ்மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. காவிரிப் பூம்பட்டினத்தைச் சேர்ந்த கோவலன் என்னும் வாணிகன் மதுரை சென்று, தன் மனைவியான கண்ணகியின் காற்சிலம்பை விற்க முற்பட்டான். அப்போது ஒரு பொற்கொல்லனால் கள்வன் என வீண்பழி சுமத்தப் பட்டு, பாண்டியனுணை பால் கொல்லப்பட்டான். இச் செய்திகளைக் கொண்டது இக்காப்பியம். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனுடைய தம்பி; துறவறம் பூண்டு அறநெறியிலேயே வாழ்க்கையை நடத்திய பெரியார். இவர் சைன சமயத்தினர். இவருடைய காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு.

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் !
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்கு மின்.
தெய்வந் தெளிமின். தெளிந்தோர்ப் பேணுமின்.
பொய்யுரை யஞ்சுமின். புறஞ்சொற் போற்றுமின்.
ஊனூண் துறமின். உயிர்க்கொலை நீங்குமின்.
தானஞ் செய்மின். தவம்பல தாங்குமின்.
செய்ந்நன்றி கொல்லன்மின். தீநட்பி கழ்மின்.
பொய்க்கரி போகன்மின். பொருண்மொழி நீங்கன்மின்.
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்.
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்.
பிறர்மனை யஞ்சுமின். பிழையுயி ரோம்புமின்.
அறமனை காமின். அல்லவை கடிமின்.
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்.
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்.
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா.
உளநாள் வரையாது. ஒல்லுவதொழியாது.
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்.
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர், ஈங்கு...........

# III. கதைப் பகுதி

## 1. மணிமேகலை

### சீத்தலைச் சாத்தனார்

*மணிமேகலை என்பது தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. சிலப்பதிகாரத் தலைவனான கோவலனுக்கும் அவன் காதற்பரத்தையான மாதவிக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வரலாறு இந்நூலிற் கூறப்படுகிறது. இதில் இயற்கை வருணனைகளும், அறவுரைகளும், புத்த சமயக் கொள்கைகளும் நிரம்பிக் கிடக்கின்றன. இதன் ஆசிரியர் மதுரையைச் சேர்ந்த கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர். இவரும் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் சமகாலத்தவர். இவர் வாழ்ந்த காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்னலாம்.*

### பளிக்கறை புக்க காதை

*"பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்*
*கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற்*
*குழலிசை தும்பி கொளுத்திக்காட்ட*
*மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய*
*வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்*
*மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்;*
*மாசறத்தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்*
*பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்*
*ஒருதனி ஓங்கிய விரை மலர்த்தாமரை*
*அரச வன்னம் ஆங்கினி திருப்பக்*
*கரைநின் றாலும் ஒருமயி றனக்குக்*
*கம்புட் சேவல் கனைகுரல் முழாவாக்*
*கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்:*
*இயங்குதேர் வீதி எழுதுகள் சேர்ந்து*
*வயங்கொளி மழுங்கிய மாதர்நின் முகம்போல்*
*விரை மலர்த் தாமரைக் கரைநின் றோங்கிய*
*கோடுடை தாழைக் கொழுமடல் அவிழ்ந்த*
*வால்வெண் சுண்ணம் ஆடியதிதுகாண்;*
*மாதர், நின்கண் போதெனச் சேர்ந்து*
*தாதுண் வண்டின மீதுகடி செங்கையின்*

அஞ்சிறைவிரிய அலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு
எறிந்தது பெருஅ திரையிழந்து வருந்தி
மறிந்துநீங்கு மணிச்சிரல் காணெனப்"
பொழிலும்பொய்கையும் சுதமதி காட்ட,
மணிமேகலையும் மலர்வனம் காண்புழி,
மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவன்
உதயகுமரன், உருகெழு மூதூர்
நீயான் நடுங்க நடுவுநின் ரோங்கிய
கூம்புமுதன் முறிய வீங்கு பிணி அவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்கு,
இதைசிதைந் தார்ப்பத் திரைபொரு முந்நீர்
இயங்குதிசை யறியா தியாங்கணும் ஓடி
மயங்கு கால் எடுத்த வங்கம் போலக்,
காழோர் கையற மேலோர் இன்றிப்
பாகின் பிளவையிற் பணைமுகந் துடைத்துக்
கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத்தெருவும் பெருங்கலக் குறுத்தாங்கு,

• • • •

கால வேகங் களிமயக்குற்றென ;
விடுபரிக் குதிரையின் விரைந்துசென் றெய்திக்
கடுங்கண் யானையின் கடாத்திறம் அடக்கி.
அணித்தேர்த் தானையொ டரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்பன் அல்லன் என்பது
ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்.

• • •

## 2. திருவிளையாடற் புராணம்

### பரஞ்சோதி முனிவர்

மதுரையில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் தம் அடியார் பொருட்டு ஆற்றிய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் புராணமாதலால் இந்நூல் திருவிளையாடற் புராணம் என்ற பெயர் பெற்றது. இதை இயற்றிய

முனிவர் திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யத்தில் பிறந்தவர்; தென்மொழி, வடமொழி ஆகிய இரண்டிலும் மிக்கதிறம் படைத்தவர். அவருடைய காலம் 17-ம் நூற்றாண்டு ஆகும்.

### இடைக்காடர் நூல் பாடி வருதல்

*கழிந்தபெருங் கேள்வியினு னெனக்கேட்டு*
*முழுதுணர்ந்த கபிலன் தன்பாற்*
*பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையினுன்*
*இடைக்காட்டுப் புலவன் தென்சொல்*
*மொழிந்தரசன் தனைக்காண்டு மெனத்தொடுத்த*
*பனுவலொடு ம்ரித் தீங்தேன்*
*வழிந்தொழுகு தாரானைக் கண்டுதொடுத்*
*துரைப்பனுவல் வாசித் தானல்.* (1)

### அரசன் பொருட்படுத்தாமல் இருக்க, புலவர் வெகுண்டு சிவன்கோயில் செல்லுதல்

*வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்*
*பகிர்ந்தருந்த வல்லோ னுள்ளத்*
*தழுக்காற்ருற் சிரம்துளக்கா னகமகிழ்ச்சி*
*சிறிதுமுகத் தலர்ந்து காட்டான்*
*எழுக்காயுந் திணிதோளா னென்றுமுரை*
*யான்வாளா விருந்தா னுய்ந்த*
*குழுக்காதல் நண்புடையான் தனைமானம்*
*புறந்தள்ளக் கோயில் புக்கான்.* (2)

### சிவபெருமானிடம் முறையிடல்

*சந்நிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும்*
*பெருமானே தன்னைச் சார்ந்தோர்*
*நன்நிதியே திருவால வாயுடைய*
*நாயகனே நகுதார் வேம்பன்*
*பொன்னிதிபோ லளவிறந்த கல்வியுமிக்*
*குளனென்று புகலக் கேட்டுச்*
*சொன்னிறையுங் கவிதொடுத்தேன் அவமதித்தான்*
*சிறிதுமுடி துளக்கா னுகி.* (3)

### ஊர் விட்டு நீங்குதல்

என்னை யிகழ்ந் தனனேசொல் வடிவாம்வின்
இடம்பிரியா விமையப் பாவை
தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமே
யிகழ்ந்தனனென் றனக்கியா தென்று
முன்னைமொழிந் திடைக்காடன் தணியாத
முனிவீர்ப்ப முந்திச் சென்றான்
அன்னவுரை திருச்செவியி னூறுபா
டெனவுறைப்ப அருளின் மூர்த்தி. (4)

### சிவபெருமான் வேறிடம் சேர்தல்

போனஇடைக் காடனுக்குங் கபிலனுக்கும்
அகத்துவகை பொலியு மாற்றான்
ஞானமய மாகியதன் னிலிங்கவுரு
மறைத்துமையாம் நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன்
கோயிலினேர் வடபால் வையை
ஆனந்தித் தென்பாலோ ராலயங்கண்
டங்கணினி தமர்ந்தான் மன்னோ (5)

### சங்கப்புலவர் பின்தொடர்தல்

சங்கவான் தமிழ்த்தெய்வப் புலவோரும்
உடனெழுந்து சைவ வேந்தன்
மங்கைநா யகன்போன வழிபோயங்கு
இருந்தாரவ் வழிநாள் வைகற்
கங்குல்வாய் புலவரும் வைகறையிற்
பள்ளியுணர் காலத் தெய்தி
அங்கணு யகனடியார் சேவிப்பார்
இலிங்கவுரு வங்குக் காணார். (6)

### அரசன் வருந்திச் சிவபெருமானைத் தொழுதல்

வழுதியரி யணையிலிருந் தடியுறவீழ்
பழுமரம்போன் மண்மேல் யாக்கை
பழுதுறவீழ்ந் துயிரொடுங்க அறிவொடுங்கி
மட்பாவை படிந்தாங் கொல்லைப்

பொழுதுகிடந் தறிவுசிறி தியங்கவெழுந்
தஞ்சலிக்கைப் போது கூப்பி
அழுதிருகண் ணீர்வெள்ளத் தாழ்ந்தடியேன்
என்பிழைத்தே னண்ணு லண்ணுல். (7)

கொலையினையோ ரவுணர்புர நொடிவரையிற்
பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ பழையசிவ புரத்தினையோ
அருவிமணி தெறிக்கும் வெள்ளி
மலையினையோ தம்மைமறந் துனைநினைப்பார்
மனத்தினையோ வாழ்த்தும் வேதத்
தலையினையோ எங்குற்ருய் எங்குற்ருய்
என்றென்று தளரு மெல்லை. (8)

இறைவன் உள்ள இடத்தைச் சிலர் கூறுதல்

சிலர்வந்து மன்னுவோ ரதிசயங்கண்
டனம்மையைத் தென்சா ராக
அலர்வந்தோன் படைத்தநாண் முதலொருகா
ல முங்கண்ட தன்று கேள்வித்
தலைவந்த புலவரொடும் ஆலவா
யுடையபிரான் தானே செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண்
டுறைகின்ருன் மாதோ வென்ருர். (9)

அரசன் ஓடிச்சென்று பெருமானைக் காணல்

அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்திர்ப்ப
எழுந்தரசன் அச்சத் தாழ்ந்து
தெவ்வர் முடித் தொகையிடறுங் கழற்காலான்
நடந்தேகிச் செழுநீர் வையை
கௌவைநெடுந் திரைக்கரத்தாற் கடிமலர்தூஉய்ப்
பணியத்தென் கரைமேல் வந்து
மௌவலிள முகைபுரை யாதிநெடும்
இருக்கின்ற மணியைக் கண்டான். (10)

## கண்டு துதித்தல்

கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானே
போற்றிபெருங் கருணை போற்றி
வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே
போற்றியருள் விகிர்தா போற்றி
புள்ளேறு கொடி யுயர்த்த புனிதனயன்
றேறுத புனிதா போற்றி
வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங்
கயற்கண்ணி மணாளா போற்றி. (11)

## சிவபெருமான் கூறுதல்

தென்னவ னின்ன வண்ண மேத்தினன் செம்பொற் கூடல்
மன்னவன் கேட்ட காய வாணியால் வையை நாட
உன்னது சோத்தம் நாங்கேட் டுவந்தன மினிய தாயிற்
றின்னமொன் றுளது கேட்டி யென்றன னருளிச்செய்வான். (12)

ஓங்குதண் பனைசூழ் நீப வனத்தைநீத் தொருபோ தேனும்
நீங்குவ மலேலம் கண்டா யாயினு நீயும் வேறு
தீங்குளை யல்லை காடன் செய்யுளை யிகழ்த லாலே
ஆங்கவ னிடத்தியாம் வைத்த அருளினால் வந்தே மென்று. (13)

## அரசன் வேண்டுதல்

பெண்ணினைப் பாகங் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்ற மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை யன்றோ
எண்ணிய பெரியோர்க் கென்று ஏத்தின னிறைஞ்சி னானே. (14)

## சிவபெருமான் திரும்பி வருதல்

அடிபணிந் தேத்தி னானை யருள்கரந் தசையு மின்னுக்
கொடியணி மனையிற் போக்கிக் கோமள வல்லி யோடும்
உடனுறை புலவரோடு மொல்லை தன் கோயில் புக்கான்
வடதிரு வால வாயில் வந்துவீற் றிருந்த வள்ளல் (15)

## புலவர்களை மன்னன் அழைத்துச் செல்லல்

மின்மதிச் சடையி னன்பி னடந்துபோய் விடைகொண் டேகும்
மன்னவன் தன்னைப் பாடி வந்தவன் தன்னை மாட்சித்
தன்மைசால் சங்க வாணர் தம்மொடும் கொடுபோ யென்றும்
பொன்மகள் காணி கொண்ட புரிசைசூழ் கோயில் புக்கான். (16)

## இடைக்காடர் நூலைக்கேட்டு மன்னன் மகிழ்தல்

*சிங்கமான் சுமந்த பொன்னஞ் சேக்கைமே லிருந்து வெள்ளைக்*
*கொங்கவிழ் தாமந் தூசு குளிர்மணி யாரந் தாங்கி*
*மங்கள முழவ மார்ப்ப மறையவ ராக்கங் கூற*
*நங்கையர் பல்லாண் டேத்த நன்மொழிப் பனுவல் கேட்டு.(17)*

*புண்ணியப் புலவீர் யானிப் போழ்திடைக் காட னார்க்குப்*
*பண்ணிய குற்ற மெல்லாம் பொறுக்கெனப் பரவித் தாழ்ந்தான்*
*நுண்ணிய கேள்வியோரு மன்னநீ நுவன்ற சொல்லாந்*
*தண்ணிய வமுதா லெங்கள் கோபத்தீ தணிந்த தென்னா. (18)*

*இன்னமு மால வாயெம் மிறையவன் கருணை நோக்காற்*
*பன்னரும் புகழ்மை குன்றாப் பாக்கிய முனக்குண் டாக*
*என்னநல் லாக்கங் கூறி யேகினா ராக வந்தத்*
*தென்னவன் குலேசன் செய்த தவமுருத் திரிந்தா லென்ன.(19)*

## அரிமருத்தன பாண்டியன் மகனாகத் தோன்றுதல்

*எரிமருத் தவனிமுன்னா மெண்வகை மூர்த்தி யன்பு*
*புரிமருத் துவனைச் சூழ்ந்த பொருபழி துடைத்தோன் சோதி*
*விரிமருத் துடல்வான் றிங்கண் மிலைந்தவ னருளின் வந்தான்*
*அரிமருத் தனனாந் தென்னன் அடலரிக் குருளை யன்னான். (20)*

# IV. பல்சுவைப் பகுதி

## 1. நாடு

### திருத்தக்க தேவர்

இப்பாடல் சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூல் தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங் களுள் ஒன்றாகும். இதன் ஆசிரியர் ஒரு சைனத் துறவியார். இவரது காலம் 5-ஆம் நூற்றாண்டு என்பர்.

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதம்என்று இசையால் திசைபோய துண்டே.

## 2. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

### குமரகுருபர சுவாமிகள்

குமரகுருபரர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீவைகுண் டம் என்னும் ஊரில் பிறந்தவர்; முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர்; சைவ சமயத்தைச் சேர்ந்தவர்; துறவியாகவே காலங் கழித்தவர். ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்து பின், முருகன் அருளால் பாடும் வன்மை பெற்றவர். இவர் பாடிய பிற நூல்கள் :—சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம், பற்பல பிரபந்தங்கள்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே, நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே, அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே, வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே, எறிதரங்கம்

உடுக்கும்·புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே, மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே, வருகவே ;
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே, வருக வருகவே.

## 3. முருகன் பிள்ளைத்தமிழ்

### பகழிக்கூத்தர்

இவ்வாசிரியர் சேது நாட்டிலுள்ள சன்னுசிக் கிராமத்தில் தோன்றியவர்; வைணவ சமயத்தினர். இவர் வயிற்று வலியால் பெரிதும் வருந்தித் திருச்செந்தில் முருகன் மீது இந்நூல் பாடி அந்நோய் நீங்கப் பெற்றூர். இவரது காலம் புலப்படவில்லை.

பண்டுபோ லின்னமுத மின்னங்
கடைந்திடப் பழையமந் தரமில்லையோ
படர்கடற் குண்டகழி அளறுக
வற்றியிப் பாரினிற் றிடரானதோ
விண்டலத் தமரர்களும் அமரேச
னுஞ்சேர வீடிநீ டந்தகார
மேவியெழு பகிரண்ட கூடம்வெளி
யானதோ விடமொழுகு நெட்டெயிற்று
மண்டுவா சுகிதுண்ட மானதோ
இன்னுமொரு வாலிக்கு வாலில்லையோ
மதியிலா மதியமே யிவனிளைந்
தாலெந்த வகைசெலா தாகையாலினி
அண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி
வேலனுட னம்புலீ யாடவாவே
அருவரைகள் இடுகிடென மயில்கடவு
முருகனுட னம்புலீ யாடவாவே.

# 4. பொழில்

## வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

இதன் ஆசிரியர் மதுரைக்கடுத்த விளச்சேரி என்னும் ஊரினர்; அந்தண மரபினர்; சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து தொண்டாற்றிய வர். பல இலக்கண, இலக்கிய நூல்களின் ஆசிரியர். இவருக்குப் 'பரிதிமாற்கலைஞன்' என்ற பெயரும் உண்டு.

பொழிலே! நறியபைம் பொழிலே! தாமரை
வாவியாம் பாங்கியோ டாவலிற் பயில்வோய்!
முகின்மணி மகுடமா மொய்குன்ற மீது
தளர்ந்த மாக்க ளுளங்களி கூர்ந்துறை
சோலையஞ் செல்வியே! துறுமதன் படைக்கலச்
சாலையே! மஞ்ஞையின் றனிநட வரங்கே!
தமியரா யெதிர்ப்படுந் தலைமக்கள் தம்மை
இமையள வாம்பொழு தினிலினி தாக
அன்பு கொளுத்துறும் அழகுசா லிடனே!
மருட்டுங் குழாத்தினை வெறுத்தியன் மாந்தர்கள்
இம்ப ரெய்திய வின்ப வுலகே!
களிப்புறு போழ்து கழியு மமைதியாய்;
நின்னிழ லுலவி நிகர்மலர்
கொய்த றனிமையோ? குறைவிலா மகிழ்வே.

# குறிப்புரை

## I. வாழ்த்துப் பகுதி

### முருகவேள்

கதி - உய்யும் வழி. காரே - மேகமே. மறை - வேதம். மிடி - துன்பம். தரு - கற்பகத்தரு. மன்பதை - உலகம். தஞ்சே - அடைக்கலமே. பவப்பிணி - பிறப்பு என்னும் நோய்.

### திருமால்

இரிய - கெட. துத்தி - பாம்பின் படப்பொறி. பணம் - பாம்பின் படம். அரவரசன் - ஆதிசேடன். அணை - படுக்கை. பொன்னி - காவிரி. திரை - அலை.

## II அறவுரைப் பகுதி

### திருக்குறள்

1. அமைவிலன் - பொருத்தம் இல்லாதவன். தஞ்சம் எளியவன் - மிகவும் எளியவன்.

2. எரி - நெருப்பு. உய்யார் - பிழையார். பிழைத்து - குற்றம் புரிந்து.

3. அற்றது - சீரணித்தது. போற்றி - குறிகளால் அறிந்து.

4. மாசு - குற்றம். சலம்பற்றி - வஞ்சனை செய்து. சால்பு - தகுதி.

5. பெருக்கத்து - நிறைந்த செல்வம் உண்டான போது. சுருக்கத்து - செல்வம் குறைந்த போது.

6. பெருமை - பெருமையுடையோர். சிறுமை - சிறுமையுடையோர். அணியும் - பாராட்டிக் கொள்வர்.

7. இன்னு - துன்பம். சால்பு - நற்குணம். பயத்தது - பயனை உடையது.

8. உறுப்பு - அவயவங்கள். ஒத்தல் - ஒத்திருத்தல்.

9. துய்ப்பதூஉம் - அனுபவிப்பதும். அடுக்கிய - மிகுந்த.

10. ஊண் உடை - உணவும் உடையும்.

11. மடி - சோம்பல். மானம் - பெருமை. குடி செய்வார் - பிறந்த குடியை உயரச் செய்வார்.

12. சுழன்றும் - பலவாறு உழைத்தும். உழந்தும் - வருத்தமுற்றும். தலை - சிறந்தது.

13. துஞ்சல் - தூங்குதல். நிரப்பு - வறுமை. கண்பாடு - தூங்குவது.

14. இரந்தும் - யாசித்தும். பரந்து - எங்கும் அலைந்து. இயற்றியான் - படைத்தவன்.

15. கீழ் - அற்பர். பயன்படுதல் - உள்ளது கொடுத்தல்.

## சிலப்பதிகாரம்

பரிவு - கவலை. இடுக்கண் - துன்பம். பேணுமின் - போற்றுங்கள். புறஞ்சொல் - கோள் சொல்லுதல். ஊன் ஊண் - மாமிச உணவு. கரி - சாட்சியம். அணுகுமின் - சேருங்கள். பிறர்மனை - பிறர் மனைவியரை. வெள்ளைக் கோட்டி - பயனில்லாத சொல்லும் கூட்டம். விரகினில் - உபாயத்தால். யாக்கை-உடம்பு. ஞாலம் - பூமி.

## III கதைப் பகுதி

### மணிமேகலை

பரிதி - சூரியன். தானை - சேனை. வளைப்பு - முற்றுகை. மருள் - வியப்பு. நுழைபு - நுழைதல். பொதும்பர் - சோலை. மணி - பளிக்குபோன்ற. இலஞ்சி - குளம். விரைமலர் - மணம் மிக்க மலர். அரச அன்னம் - சிறந்த அன்னம். ஆலும் - ஆடுகின்ற. கம்புள் - சம்பங்கோழி. இயங்கு - அடிக்கடி செல்கின்ற. துகள் - புழுதி. கோடு - கிளை. வால் - தூய. சுண்ணம் - மகரந்தப்பொடி. போது - விரியும் பருவத்து அரும்பு. தாது - தேன். மறிந்து நீங்கு - திரும்பிச் செல்கின்ற. சிரல் - சிச்சிலிப்பறவை, மீன் கொத்திப்பறவை. உருகெழு - அச்சம் பொருந்திய நீகான் - மாலுமி. கூம்பு - பாய்மரம். வீங்கு பிணி - இறுகின கட்டு. பரிய - அறுபட. வயிறு - நடுவிடம். முந்நீர் - கடல்; ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றையும் உடையது. கால் - காற்று. வங்கம் - மரக்கலம். பீடிகை கடை வீதி கடம்பன் - கடப்பமாலையையுடைய முருகன். ஆரங்கண்ணி - ஆத்திமாலை.

### திருவிளையாடற் புராணம்

1. கழிந்த - மிகவும். தென் சொல் - தமிழ் நூல். மூரி - மிகவும்.

2. பகிர்ந்து - பங்கிட்டு. அருந்த - அனுபவிக்க. எழுகாயும் - கணையமரத்தை வென்ற. குழு - கூட்டம்.

3. நகுதார் - விளங்கும் மாலையணிந்த. வேம்பன் - வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியன்.

4 இமையப்பாவை - உமாதேவியார். முனிவு ஈர்ப்ப - சினம் இழுக்க.

5. ஊறுபாடு - ஊறுபடுத்தும் வேற்படை.

6. வான் - சிறந்த. சைல வேந்தன் - இமயவான். மங்கை - மகள். அவ்வழிநாள் வைகல் - அந்நாளின் பின்னுள். கங்குல் - இருள். வைகறை - விடியற்காலை. பள்ளியுணர் - திருப்பள்ளியெழுச்சிக்கான.

7. வழுதி - பாண்டியன். பழுமரம் - முதிர்ந்த பழுத்தமரம் ஒல்லைப்பொழுது - சிறிது நேரம்.

8. ஓர் - எண்ணிச் செய்யும். குனித்த - வில்லாக வளைத்த.

9. அலர் வந்தோன் - பிரமன். இறை கொண்டு - தங்கி.

10. கௌவை - ஒலி. மௌவல் - முல்லை. முகை - அரும்பு.

11. கள் ஏறு - தேன் நிறைந்த. கடுக்கை - கொன்றைமாலை. விடையான் - எருதை வாகனமாக உடையோன். விகிர்தன் - வேறுபாடுடையவன். புள் ஏறு - கருடன் புனிதன் - திருமால். வள் ஏறு - கூர்மைமிக்க. சிறுகுழவிமதி - இளம்பிறை நுதல் - வெற்றி.

12. தென்னவன் - பாண்டியன். கூடல் - மதுரை. சோத்தம் - துதி.

13. பணை - வயல். நீபவனம் - கடம்பவனம், மதுரை.

17. மான் - விலங்கு. கொங்கு அவிழ்வெள்ளைத்தாமம் - பூந்தாதுடன் மலர்ந்த வெண்மலர் மாலை. தூசு - வெள்ளிய ஆடை. ஆக்கம் - ஆசி.

19. குலேசன் - குலேச பாண்டியன்.

20. மருத்துவன் - இந்திரன். மருத்து உடல் - அமுதமயமான உடல். மிலைந்தவன் - அணிந்தவன். அரி குருளை - சிங்கக்குட்டி.

## IV பல்சுவைப் பகுதி

### நாடு

நெற்றி - உச்சி. வருக்கை - பலா. இசையால் - கீர்த்தியால். திசைபோயது - எல்லா திக்குகளிலும் புகழப்பட்டது.

### மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்

கடவுட்பழம்பாடல் - வேதம். நறை - தேன். துறைதீந்தமிழ் - அகமும் புறமுமாகிய துறைகளையுடைய இனிய தமிழ். அகந்தை - நானெனும் உணர்ச்சி. தொழும்பர் - அடியவர். சிமயம் - சிகரம். ஒருவன் - ஒப்பற்றவன். (சிவபெருமான்). மதுகரம் - வண்டு. மும் முதல் - பிரமன் முதலிய மும்மூர்த்திகள். குருந்து - குருத்து.

### முருகன் பிள்ளைத் தமிழ்

அளறு - சேறு. பார் - பூமி. அமரேசன் - இந்திரன். வீடி - இறந்து. அந்தகாரம் - இருள். எயிறு - பல். மண்டு - மிகுதியாக.

### பொழில்

வாவி - பொய்கை. முகில் - மேகம். மஞ்ஞை - மயில். சால் - பொருந்திய. மருட்டும் - துன்பந்தரும். குழாத்தினை - கூட்டத்தை. இம்பர் - தேவர்.

# 1. இளங்கோவடிகள்

[சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்]

கடந்த 2500 ஆண்டுகளுக்குள் தமிழ் நாட்டில் பல பெரிய இலக்கியச் செல்வங்கள் தோன்றியிருக்கின்றன. இவைகளின் உதவியால் தமிழ் மக்களின் பண்பாட்டைப்பற்றி நாம் ஒரு விதத்தில் அறியலாம். இந்நூல்களை இயற்றிய பலர் கடவுளின் அருளைப் பெற்ற மகான்களாயிருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. இவர்களில் என் நெஞ்சைப் பிரத்தியேகமாய்க் கவர்ந்தவர் இளங்கோவடிகள். இவர் இயற்றிய சிலப்பதிகாரம் என்னும் காவியத்தைப்பற்றியும், இவருடைய குண மாண்பைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லுகின்றேன்.

நூலாசிரியரைப்பற்றி பல அபிப்பிராய பேதங்கள் இருந்த போதிலும், அவரைப்பற்றிக் கிடைத்திருக்கும் வரலாறுகளி லிருந்து அவருடைய பெருமை இன்னதென்று விளங்கும். அரச குலத்தில் பிறந்து கல்விச்செல்வத்தையும் பொருட்செல்வத்தை யும் பெற்றவரான இளங்கோ தம் தமையன்சேரன் செங்குட்டு வன் மன அமைதி அடைய வேண்டும் என்ற ஒரே கருத்துடன் துறவு பூண்டார் என்பதிலிருந்து அவருடைய பெருங்குணம் வெளியாகின்றது

இளங்கோவடிகள் துறவு பூண்டு அருளும் அறமும் நிறைந்த உள்ளத்தோடு வாழ்ந்து பல வகையாலும் பெருமை வாய்ந்த ஒரு காவியத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொடுத்தருளி னார். சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளும் ஒரு நூலென்றால், அதற்குக்காரணம் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கையின் ஒவ் வொரு அம்சத்தின் பெருமையையும் இந்தக் காவியத்தில் காண லாம். தமிழ் நாட்டின் வாழ்க்கைச் சரித்திரத்திற்குச் சிலப்பதி காரம் ஒரு தலைசிறந்த ஆராய்ச்சிநூல் என்று சொல்லுவது பொருத்தமாகும். சில அம்சங்களை மட்டும் சுருக்கமாய் ஆராய்ந்து பார்ப்போம்.

ஆசிரியர் இளங்கோவடிகள் தமிழ் மொழியில் பெரிதும் புலமை வாய்ந்தவர். பண்டைத் தமிழ் நூல்கள் எல்லாவற்றி லும் சிலப்பதிகாரம் ஒன்றிற்குத்தான் "இயல், இசை, நாடகப்

பொருள் தொடர் நிலைச் செய்யுள்" என்னும் சிறப்புப் பெயர் வழங்கி வருகின்றது. இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் ஒரே காவியத்தில் பொருந்தி யிருப்பது சிலப்பதிகாரம் ஒன்றிலேயே. பண்டைக் காலத்தில் தமிழ் மொழியில் வழங்கி வந்த இசை நூல்களும் நாடக நூல்களும் அழிந்து மறைந்துபோனது தமிழுக்குப் பெரிய நஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் மக்களுடைய அதிருஷ்ட வசத்தால் பல இசைக் குறிப்புக்களும், நாடகக் குறிப்புக்களும் சிலப்பதிகாரத்தில் நிறைந்திருக்கின்றன. இவற்றை யெல்லாம் இன்னும் ஆராய வேண்டியது தமிழ் நாட்டு அறிஞர்களின் கடமையாயிருக்கின்றது.

இளங்கோவடிகள் தமிழ் மொழியை எடுத்தாளும் நயத்திற்குப் பல உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். இவ்விடம் அவற்றுள் ஒன்றை மட்டும் சொல்லுகின்றேன். வழக்குரை காதையில் கண்ணகியின் கோலத்தைக் கண்டு அவள் மொழிகளைக் கேட்ட பாண்டிய மன்னன் உயிரை இழந்தான். இக் காதையின் இறுதியில் ஒரே அழகிய வெண்பாவில் ஆசிரியர் இந்தச் சம்பவம் முழுவதையும் சித்திரிக்கின்றார்.

"மெய்யில் பொடியும்
விரிந்த கருங் குழலும்
கையில் தனிச்சிலம்பும்
கண்ணீரும் வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்
காரிகைதன் சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"

இளங்கோவடிகள் தமிழ் மொழியில் சிறந்த பற்றுடையவர் என்று சொன்னால் மட்டும் போதாது. தமிழ் நாட்டில் ஆறாத காதலுடையவர் என்று சொல்ல வேண்டும். தாய் நாட்டுப் பற்று என்னும் குணத்தில் மூழ்கி யிருந்தவர். தமிழ் நாடானது சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று வேந்தர்களின் ஆட்சியாய்ப் பிரிவுபட்டிருந்தது. இம்மூன்று வேந்தர்களுக்கு இடையே பல சச்சரவுகளும் போர்களும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டே இருந்தன. இதனால் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் பெருமையும் ஒற்றுமையும் குறைவுபட்டுத் தான் இருந்திருக்க வேண்டும்.

தமிழ் நாட்டின் குறைவு பட்ட நிலைமையைக் கண்டு இளங்கோவடிகளின் பண்பட்ட நெஞ்சம் புண்பட்டிருக்க வேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. தமிழ் வேந்தர்களிடையே உள்ள வேற்றுமைகளையும் பகைகளையும் ஒழித்து, தமிழ் நாட்டில் பரவியிருக்கும் பண்பாட்டின் அடிப்படையான ஒற்றுமையையும் பெருமையையும் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று அடிகள் ஆசை கொண்டவராய் இருந்திருக்க வேண்டும். சாத்தனாருடைய வார்த்தைகள் இந்த ஆசையை நிறைவேற்றும் கருவியாய்த் தோன்றின. கண்ணகியின் வரலாற்றை இளங்கோவடிகட்குச் சொல்லும்போது சாத்தனார்—

"முடி கெழு வேந்தர்
மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக"—என்றார்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட அடிகள் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் சரித்திர மூலமாய் தமிழ் நாட்டின் குன்றாச் சிறப்பை விளக்குவேன் என்று முடிவு செய்து, சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஒரு பாட்டுடைச் செய்யுளை நாட்டினார்.

கண்ணகி சோழ நாட்டில் பிறந்து வளர்ந்து, பாண்டிய நாட்டில் புகுந்து கணவனை இழந்து, சேர நாட்டை அடைந்து விண்ணுலகு எய்தினாள். இந் நிகழ்ச்சிகளை நமக்குக் காண்பிப்பதற்கு நம்மைத் தமிழ் நாடு முழுவதிலும் சுற்றுப் பிரயாணமாய் அழைத்துக்கொண்டு போகின்றார் அரசிளந் துறவியான இளங்கோ. மூவேந்தர்களுடைய தலை நகர்களான புகார், மதுரை, வஞ்சி ஆகிய இம்மூன்று நகர்களின் சிறப்பையும் வளத்தையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாயிருப்பவை கைத்தொழிலும் வாணிகமும். இவ்விரண்டு துறைகளிலும் தமிழ்நாடு அடைந்திருந்த உன்னதமான நிலைமையை இளங்கோவடிகள் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார். புகார் நகரத்திலும், மதுரையிலும் பலவிதமான கைத்தொழில்கள் நிறைந்திருந்தன. புகார் நகர வீதிகளில்,

" பட்டினும், மயிரிலும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

காண்கின்றோம். மதுரைமா நகரிலும்,

" நூலினும், மயிரினும், நுழைநூல் பட்டினும்,
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும் "

காண்கின்றோம். இவையல்லாமல் பொன்னாலும், மணியாலும், மரத்தாலும், செம்பாலும், இரும்பாலும் திறப்பாடான வேலை செய்யும் பொன்கொல்லரும், கன்னாரும், தச்சரும் நிறைந்திருக்கின்றனர்.

இளங்கோவடிகள் தம் காலத்தில் தமிழ் நாடானது அயல் நாடுகளோடு செய்து வந்த வாணிபத்தின் சிறப்பை வெகு அழகாக நமக்குக் காண்பிக்கின்றார். புகார் நகரத்தை, "பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்" என்று சிறப்பித்துச் சொல்லுகின்றார். வணிக மக்களின் பெருமையைச் சொல்லும்போது,

" கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக்
குலத்தின் குன்றாக் கொழுங்குடிச் செல்வர் "

என்கின்றார். தமிழ்நாட்டில் குடியேறி வாழ்ந்த யவனர், கிரேக்கர் முதலியோரின் சிறப்பை,

" கலம்தரு திருவில் புலம் பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்கு நீர் வரைப்பும் "

என்று சொல்லிப் போற்றுகின்றார்.

அடிகள் தமிழ் நாட்டின் இயற்கைக் காட்சிகளை வருணிப்பது மனத்தைக் கவரும் விதத்தில் அமைந்திருக்கின்றது. அவர் தமிழ் நாடு முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்து இயற்கையின் அழகை ஆழ்ந்து அனுபவித்திருக்க வேண்டும். கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் இவர் மூவரும் புகார் நகரத்திலிருந்து மதுரை போய்ச் சேரும் வரையில் கண்ட காட்சிகளின் வருணனை இலக்கியத்தில் ஒரு தனிப் பெருமை வாய்ந்தது. சேர நாட்டின் மலை வளத்தைச் சொல்லும்போது அடிகள் திருமாலின் உருவத்தை நினைந்து வருணிப்பது அவரது ஆழ்ந்த பரந்த மனப்பான்மைக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

"உதிர் பூம் பரப்பின் ஒழுகு புனல் ஒளித்து,
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட,
நெடியோன் மார்பில் ஆரம் போன்று
பெருமலை விளங்கிய பேரியாற்று அடைகரை"

என்று படிக்கும் போது நமது உள்ளமும் உயிரும் ஒன்று கலந்து பூரிக்கின்றன.

இளங்கோவடிகள் காலத்தில் தமிழ் நாட்டில் பல சமயங்கள் தழைத்தோங்கி வளர்ந்தன என்று தெரியவருகின்றது. அடிகளுடைய சமயம் சமணம் என்றும் சைவம் என்றும் அபிப்பிராய பேதப்படும் அறிஞர்களும் உண்டு. அவருடைய சமயம் எதுவாயிருந்த போதிலும், எல்லாச் சமயங்களைப் பற்றியும் உயர்வு தாழ்வு இன்றி அவர் எடுத்துப் பேசும்விதம் அடிகளுடைய உயர்ந்த மனோபாவத்தையும் தமிழ் நாட்டாரின் சிறந்த பண்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றது. பிற்காலத்தில் தோன்றிய குறுகிய சமய வேற்றுமைகளுக்கு அக்காலத்தில் இடமில்லை என்று தெளிவாய்த் தெரிகின்றது. சைவம், வைணவம், புத்தம், சமணம் ஆகிய எல்லாப் பெருஞ் சமயங்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.

புகார் நகரத்திலுள்ள ஆலயங்களைப்பற்றிக் குறிப்பிடும் போது அடிகள் :

"பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்,
ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்,
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்,
நீலமேனி நெடியோன் கோயிலும்,
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

என்று எல்லா ஆலயங்களையும் சிறப்புடன் சொல்லுகின்றார். இதே விதமாகத்தான் மதுரை மாநகரத்திலுள்ள ஆலயங்களையும் குறிக்கின்றார். இளங்கோவடிகளின் பெருந்தன்மை ஒன்றே அக்காலத்திய தமிழ் மக்களின் சமயப் பெருமைக்கும் பெருங் குணத்திற்கும் போதிய சான்றாகும் என்று சொல்லலாம்.

அடிகளின் பெருந்தன்மைக்கும் தமிழ் மக்களின் சமய மனப்பான்மைக்கும் இன்னும் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டலாம். கவுந்தி அடிகள் சமண மதத்தைச் சார்ந்தவர். கோவ

லன் கண்ணகியுடன் அவர்பிரயாணம் செய்து கொண்டிருக்கும்பொழுது, சீரங்கத்துக்குப்போய்க்கொண்டிருக்கும் மாடலன் அவ்விடம் தான் தரிசிக்கப்போகும் திருமாலின் கோலத்தைக் கவுந்தியடிகளுக்குச் சொல்லுகின்றான். தான் சமண மதத்தைச் சார்ந்தவராயிருந்த போதிலும், கவுந்தியடிகள் மாடலனுடைய பக்தியை மாற்ற முயல்வதில்லை. அவரது துறவு நெறியையும் அறிவின் நுட்பத்தையும் காட்டுகின்றார். மாடலனை நோக்கி,

"வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள் ?
காமுறு தெய்வம் கண்டடி பணிய
நீ போ ; யாங்களும் நீள்நெறிப் படர்குதும்"

என்கின்றார்.

எந்த ரூபத்தில் ஒரு மனிதன் கடவுளைக் காதலித்து வழிபடுகின்றானோ; அதே ரூபத்தில் இறைவன் அவனுக்கு அருள் புரிவான் என்னும் பெரிய உண்மையை இளங்கோவடிகள் எவ்வளவு அழகாய்க் கவுந்தியடிகளின் வாயிலாக எடுத்து உரைக்கின்றார் !

தமிழ் அரசர் தம் பகைவரிடத்திலும் கருணையும் நீதியும் காட்டினார்கள் என்பதை எடுத்துக் காட்ட அடிகள் ஒரு நயம் பொருந்திய உதாரணத்தை எடுத்துக் காட்டுகின்றார். தமிழகத்தை இகழ்ந்து பேசிய கனகன், விசயன் என்னும் இரண்டு ஆரிய மன்னர்களையும் சேரன் செங்குட்டுவன் சிறைப்படுத்தி, சோழ பாண்டிய மன்னர்கள் கண்டு களிக்கும் பொருட்டு அவ்விரு ஆரிய மன்னர்களையும் அனுப்பினான். பண்பாடு படைத்தத் தமிழ்மன்னர்கள் சிறிது வருத்தம்கொண்டு, தோல்வியடைந்து அடைக்கலம் புகுந்த ஆரிய அரசர்மீது பின்னும் சீற்றம் கொள்வது சேர மன்னனுக்கு வீரமன்று என்று எடுத்துச் சொன்னார்கள். இதைக் கேட்ட செங்குட்டுவன் நாணி ஆரிய மன்னர் இருவரையும் சிறை நீக்கி அவர்களுக்கு வேண்டிய மரியாதையைச் செய்தான். இளங்கோவடிகள் தன் தமையனான செங்குட்டுவனுக்கு என்ன பண்பாட்டுடன் புத்தி கற்பிக்கின்றார்! தமிழ் அரசர் அறப்போரிலிருந்து தவறமாட்டார்கள் என்னும் பண்பாட்டை அடிகள் இந்தச் சிறிய சம்பவத்தினால் எடுத்துக் காட்டுகின்றார்.

சிலப்பதிகாரத்தில் நிரம்பியிருக்கும் எல்லாப் பெருமை களையும் எடுத்துரைப்பது என்றால் சிறிய கால அளவில் அது முடியாது. குறிப்பிட்ட சில அம்சங்களைத்தான் எடுத்துக் காட்ட முடியும். இந்தக் காவியத்தை இளங்கோவடிகள் கை யாளும் விதத்தைப் பார்க்கப் பார்க்க நம் உள்ளம் மகிழ்ச்சி அடையும்.

உரைசால் பத்தினியாகிய கண்ணகி தன் கணவனை இழந்ததும், செங்கோல் தவறிய பாண்டிய மன்னனை அறக் கடவுளே கூற்றமாய்த் தோன்றிக் கொன்றதும்—ஆகிய இவ் விரண்டு கொடிய நிகழ்ச்சிகளும் ஊழ்வினையின் பயனாய் விளைந்தவை என்று படிப்போர் மனத்தில் தேறுதல் தோன்றும் வண்ணம் இளங்கோ காவியத்தை அமைக்கின்றார். ஊழ்வினை யால் செங்கோல் தவறிய பாண்டியனையும் நற்கதி அடையும் படி செய்கின்றார். வஞ்சி நகரில் செங்குட்டுவன் எடுத்த திரு விழாவில் கண்ணகித் தெய்வம் காட்சி கொடுத்தபோது,

> "தென்னவன் தீதிலன்,
> தேவர்கோன் தன் கோயில்
> நல்விருந்தாயினன் ;
> நானவன் தன்மகள்"

என்று அருளிச் செய்து அவனுக்கும் நற்கதி அளித்தாள். காவியத்தின் முடிவின் பெருமைதான் என்னே!

உலக மொழிகளில் தோன்றிய தலை சிறந்த நூல்களில், "சிலப்பதிகாரம்" ஒன்று என்று தமிழ் மக்கள் தடையின்றிப் பெருமை பாராட்டலாம் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் சொன்ன வாக்கு எந்த வகையிலும் மிகைப் பட்டதன்று.

# 2. சங்க இலக்கியங்கள்

[பேராசிரியர். எஸ். வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.]

இப்போது கிடைக்கும் பழைய தமிழ்ச் செய்யுட்களிற் சில கிறிஸ்துவ அப்தத்தின் தொடக்கத்தில் இயற்றப்பட்டவை. ஆதலால், தமிழிலக்கிய சரிதம் சுமார் இரண்டாயிரம் ஆண்டு கட்டு முன்னமேயே தொடங்கியுள்ளது. இப்பெருமை எல்லா மொழிகளுக்கும் உரியதன்று. மலையாள மொழியில் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலும், தெலுங்கு மொழியில் கி. பி. பதினோராம் நூற்றாண்டிலும், கன்னட மொழியில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிலும் ஆகி இலக்கியங்கள் தோன்றின. இப்பொழுது பலதேசங்களிற் பயிலப்பட்டுப் பெருஞ் சிறப்புடன் விளங்கும் ஆங்கில மொழியிற்கூட இலக்கியம் முதன் முதலில் தோன்றியது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில்தான். ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கு, எபிரேயம் முதலிய ஒரு சில மொழிகளிலுள்ள ஆதி இலக்கியங்களே தமிழ் இலக்கியங்களின் அளவு பழமை வாய்ந்தவை.

மிகப் பழமையான காலந் தொட்டே தமிழ்ச் சிறப்புற்று வாழ்ந்துவந்த இடம் பாண்டியநாடு என்று கூறுவர் வில்லிபுத்தூரர் என்ற கவிஞர்.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை"

என்று தமிழைக் குறித்துக் கூறுகின்றார். இப்பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததென்பது கர்ணபரம்பரைச் செய்தி. கிறிஸ்துவ அப்தத்தின் இரண்டாம் நூற்றாண்டு இச் சங்கம் இருந்த காலம் என்பர் ஆராய்ச்சியாளர். தமிழ்ச் செய்யுட்களையும் புலவர்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி மதிப்பிடுதல் இச்சங்கம் செய்துவந்த பணியென்று கூறப்படுகிறது. நாற்பத்தொன்பது புலவர்கள் இச்சங்கத்தில் இருந்தார்கள் என்பர். சங்கத்தைப் பற்றிய வரலாறு **இறையனார் களவியல் உரை** என்ற நூலிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கடைச் சங்கம் என்றும், இதற்கு முன் இரண்டு சங்கங்கள் இருந்தன என்றும் களவியலுரை

கூறும். தலைச்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச் சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச் சங்கம் 1850 ஆண்டுகளும் இருந்தனவாம்.

கடைச்சங்க காலத்து நூல்களே நமக்கு இப்போது கிடைப்பவை. இந்நூல்களையே நாம் 'சங்க இலக்கியங்கள்' என வழங்குகிறோம். 'தொல்காப்பியம்' என்ற பேரிலக்கண நூல் இடைச் சங்கக் காலத்து இறுதியில், அதாவது சுமார் கி. மு 5000-ல் தோன்றியதென்றும், தலை, இடைச் சங்கங்களிற் பிறந்த ஏனை நூல்கள் கடல்கோட்பட்டு அழிந்து விட்டன என்றும் பரம்பரை வரலாறு கூறுகின்றது.

சங்க இலக்கியங்களை இரு பெருங் கூறுகப் பகுக்கலாம்; பத்துப் பாட்டு, எட்டுத்தொகை யென. பத்துப் பாட்டுகளாவன: முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றை,

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். மலைபடுகடாம் என்ற நூலுக்குக் கூத்தராற்றுப்படை என்ற பெயரும் உண்டு.

முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்ற ஐந்து பாட்டுக்களும் ஆற்றுப்படை என்ற நூல் வகையைச் சார்ந்தவை. கொடையாளி ஒருவனிடம் பெருஞ் செல்வத்தைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் கூத்தர் முதலியோர் வழியிலே எதிர்பட்ட இரவலரைக்கண்டு, அக்கொடையாளியின் பெருமையைக் கூறி அவனிடம் சென்று நாம் பெற்றதுபோல் பெருஞ்செல்வம் பெறுமாறு வழிப்படுத்துதலே இந்நூல் வகையின் கருத்து. ஆறு-வழி; படை—படுத்துதல். ஏனைய ஐந்து பாட்டுக்களில் மதுரைக் காஞ்சி, நிலையாமையை ஓர் அரசனுக்கு அறிவுறுத்தி, இவ்வுலகில் வாழும் நாட்களை

உயர்ந்த லட்சியங்களை மேற்கொண்டு இனிதாகக் கழித்தல் வேண்டுமென வற்புறுத்துகிறது. குறிஞ்சிப்பாட்டு ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும்பொருட்டு இயற்றப்பட்டதென்று சரித்திரம் வழங்குகிறது. இப்பாட்டுகளுட் சில அகப்பொருளையும், சில புறப்பொருளையும் பற்றியவை. அகம் என்பது காதல் பற்றிக் கூறும் பகுதி. புறம் என்பது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைக் கூறும் பகுதி.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் பத்துப்பாட்டிற் புகழப்பட்டிருக்கின்றனர்.

எட்டுத் தொகையாவன : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பன. இவற்றை,

" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப் பத்தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத்தொகை"

என்ற செய்யுளால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றியவை ; ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை. ஐங்குறுநூற்றில் ஐந்நூறு செய்யுட்களும், பதிற்றுப்பத்தில் நூறு செய்யுட்களும் பரிபாடலில் எழுபது செய்யுட்களும் உள்ளன. ஏனைய நூல்கள் ஒவ்வொன்றிலும் நானூறு செய்யுட்கள் உள்ளன. கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட்டாலும் இயன்றன. மற்றை ஆறு தொகை நூல்களும் ஆசிரியப்பாவால் இயன்றன. அகம் பற்றியவற்றுள் ஐங்குறுநூறு —திணை ஒவ்வொன்றுக்கும் நூறு வீதம்—குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் என்ற திணைகளுக்குமாக ஐந்நூறு செய்யுட்கள் கொண்டது. புறம்பற்றிய நூல்களுள், ஒவ்வொரு சேரனுக்கும் பத்துச்செய்யுள் வீதம், பத்துச் சேர அரசர்களுக்குரிய

நூறு செய்யுட்கள் கொண்டது, பதிற்றுப்பத்து. எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. அதிலுள்ள பாட்டுக்கள் பண் முறையால் தொகுக்கப் பெற்று உரிய பண்களுடன் பாடப்பெற்று வந்தவை. கலித் தொகையிலுள்ள தாழிசைகள் இசையொடு பாடுவதற்கு ஒத்தனவா யுள்ளன.

தொகைநூல் ஒவ்வொன்றிலுமுள்ள செய்யுட்கள் பல புலவர்களால் பாடப்பெற்றவை. அப்புலவர்கள் ஓரிடத்தவ ரல்லர்; ஓரினத்தவரல்லர்; ஒரு காலத்தவருமல்லர்; ஒரு சமயத்தைச் சார்ந்தவருமல்லர். அவர்களைக் கணக்கிட்டு 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர்' என்று களவியலுரை கூறும்.

சில புலவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. ஒரு வருக்குக் 'கல்பொரு சிறு நுரையார்' என்று பெயர். அவர் இயற்றிய செய்யுளில்,

"கல்பொரு சிறு நுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே"

என்று வந்துள்ளது. இங்கே காணப்படும் உவமானத்தி னின்றும் அவருக்குப் பெயர் எழுந்துள்ளமை வெளிப்படை. ஆசிரியர் காலத்தே அவர்க்கு வழங்கிய இப் புனைப் பெயர் பிற்காலத்தும் வழங்கி, அதுவே பெயராக முடிந்திருக்கலாம். அல்லது அவர் பெயர் மறந்துபோன பிற்பாடு, செய்யுளின் தொடரினின்றும் ஒரு பெயர் பிற்காலத்தாரால் கொடுக்கப் பட்டும் இருக்கலாம். சில பெயர் முற்கூறியபடியும், சில பெயர் பிற்கூறியபடியும் தோன்றியிருத்தலும் கூடும். உண்மை இது வென்று இப்போது தெரியக்கூடவில்லை இங்ஙனம் புனைபெய ருள்ளவர்கள் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள். இவர்களை நீக்கிப்போலும் களவியல் உரைகாரர் கணக்கிட்டது.

பெயர் தெரிந்த புலவர்களுள் சுமார் இருபத்தேழு பெண் பாற் புலவர்கள் காணப்படுகிறார்கள். அதாவது நூற்றுக்கு ஆறு விழுக்காடு கணக்காகின்றது. பொது மக்களிடையே கல்வி பரவாத முற்காலத்து இவ்வளவாகப் பெண்பாற் புலவர் இருந்தமை பாராட்டுதற்கு உரியது. இவருள்ளே ஔவையார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், பாரி மகளிர் முதலியோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

தமிழிலே தொகை நூல்கள் மிகப் புராதன காலத்துத் தானே தொகுக்கப்பட்டமை போல, கிரேக்க மொழியிலும் மிகப் பழைய காலத்தில் 'அந்தாலஜி' என்று கூறப்படும் தொகைநூல் தொகுக்கப்பட்டுள்ளதென அறிகின்றோம். கிரேக்கத் தொகைநூலின் வரலாற்றைக் குறித்து ரிச்சர்ட் கார்நெட் என்ற ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கின்றனர். அந்தாலஜி என்ற சொல்லுக்குப் பூந்துணர் என்று பொருள். சுமார் கி. பி. [illegible]0-ல் மிலீகர் என்பவரால் இத்தொகைநூல் தொகுக்கப் பெற்றதாம். இத் தொகை நூற் செய்யுட்கள், தெய்வங்களையும், புகழ்பெற்று விளங்கிய அரசர் முதலிய பெரியோர்களையும், பெரு நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. சுருங்கச் சொல்லல், பொருளாழ முடைமை, நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல், பொருளின் ஒருமை என்ற குணங்கள் இவற்றிலே நன்கு விளங்கின என்று சொல்லப்படுகிறது இவ்வியல்புகளோடு பொருந்திய கிரேக்கத் தொகை நூல், புறநானூறு என்னும் தமிழ்த் தொகை நூல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. இவைகளெல்லாம் அந்தாலஜி என்ற பெயராலேயே வழங்கின. இறுதியில் தொகுக்கப்பட்டது ஜஸ்டினியன் என்னும் அரசன் (கி. பி. 483–565) காலத்திலாகும். இந்தத் தொகை நூலிலே காதற்செய்யுட்கள் பல துறைகளாகப் பகுக்கப்பட்டுச் சேர்க்கப் பெற்றுள்ளன என்று அறிகிறோம். இதனோடு தமிழ்த் தொகை நூல்களுள் அகப்பொருள் கூறுவனவாய் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஐந்தும் ஒப்பிடத்தக்கன.

பழமையிலும் பொருளமைதியிலும் செய்யுள் நயத்திலும் மாத்திரமேயன்றி வேறு சில அம்சங்களிலும் இவ்விருமொழிகளிலுமுள்ள தொகை நூல்கள் ஒப்பிடற் குரியன. கிரேக்க நாகரிகம் நீடித்திருந்த காலத்தில் அதன் நிலைமை பலபடியாக மாறி வந்திருக்கின்றது. இம் மாறுபாடுகளுக்கிடையேயும் கிரேக்கத் தொகை நூல் கிரேக்கர்களுக்குப் புத்துயிர் கொடுத்துதவிய அமிர்த சஞ்சீவியேபோல் நீடித்து நிலைத்து வந்திருக்கின்றது. இதுவே போன்றுள்ளன தமிழ்த்தொகை நூல்களும். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் பழக்க வொழுக்கங்களும் பிரதிபலித்துக் காண்கின்றன. பிற்காலத்து எழுந்த

இலக்கியங்களின் நெறியை வரம்பு கட்டுதற்கு இத்தொகை நூல்கள் உதவின. இவ்வாருகப் பலபடியாலும் ஒரு தேசத் தொகை நூல்களும் ஒன்ருெடொன்று உவமிக்கக் கூடியனவா யுள்ளன.

தொகைநூற் செய்யுட்களிலே சிறந்து விளங்குகிற சில பொது இயல்புகளை இனிக் கவனிப்போம் பின் வருவது புறநானூற்றுச் செய்யுள்:

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடைச் சேய வாயினும், தொடைபுணர்ந்து,
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றுஞ் சான்ருேர்
சான்ருேர் பால ராப;
சாலார் சாலார் பாலரா குபவே.

இது பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த நட்பினைக்கண்டு கண்ணகனர் என்ற புலவர் பாடியது. 'இனம் இனத்தோடு' என்ற பழமொழியின் கருத்து இச்செய்யுளோடு ஒப்பிடத்தக்கது சான்ருேர் வெவ்வேறு இடங்களில் தோன்றி வாழ்ந்தபோதிலும் ஒருவரோ டொருவர் நெருங்கிய கேண்மை கொள்வர் என்பது செய்யுளின் கருத்து. இதற்கு ஓர் உபமானம் தரப்படுகிறது பொன்னும் பவளமும் முத்தும் இரத்தினமும் ஒன்றிலின் ஒன்று வெகு தூரத்தில் தோன்றிய போதிலும், விலை மிக்க நல்ல அணிகலமொன்று அமைக்குங் காலத்து, அவை ஓரிடம் வந்து கோவை பொருந்திச் சேருகின்றன என்பது உபமானம். இதன் அழகும் நயமும் அறிந்து இன்புறத்தக்கன. 'சாலார் சாலார் பாலரா குபவே' என்பது சொல்லியொழிக்க வேண்டியதாதலாலே, அவ்வடியை இலேசாக உச்சரித்து விட்டு விடுதல் வேண்டும். உபமானம் செல்லும் வரையும் எதுகைமோனை நயங்களால் செய்யுளடிகள் சிறந்து விளங்குவதும், அது முற்றிய பின், கருத்தின் தனியாற்றலே துணையாக மோனை முதலிய நயமின்றியும் அழகுபடக் கடைசி இரண்டடிகள் அமைந்திருப்பதும் புலவரின் கவித்வ சக்தியை அறிவுறுத்துகின்றன. கருத்துக்கேற்ற சொற்கள், சுவைத்துத் தேர்ந்தெடுத்த சொற்கள், கட்டுரைச் சுவை

பட அமைந்த சொற் செறிவு, எளிமையும் ஆற்றலும் படைத்த செய்யுள் நடை, கம்பீரமான ஓசை நயம், பொருள் செல்லும் கதியும் செய்யுளின் கதியும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் அமைதி இவை யனைத்தும் இச் செய்யுளில் விளங்குகின்றன. இவ்வியல்புகள் சங்கச் செய்யுட்களுட் பெரும்பாலானவற்றிற் காணப்படுகின்றன. இத்தகைய செய்யுட் செல்வம் நம்மவரால் என்றும் போற்றுதற் குரியது.

# 3. இலக்கிய விமர்சனம்

[பேராசிரியர் அ. சீனிவாசராகவன், M. A.,]

பழைய கதை. உங்களுக்குத் தெரிந்ததே. "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று தமிழ்ப் புலவன் நக்கீரன் சிவபெருமானுடன் பேசிய ரசமான கதை. இன்றும் நம்முடைய தமிழ் நாட்டில் புலமையின் அஞ்சாத உறுதிக்கு எடுத்துக்காட்டாக நக்கீரன் நிற்கிறான்.

தமிழன் இன்றும் நக்கீரனைப் பாராட்டுவதில் வியப்பொன்றுமில்லை. குற்றத்தைச் சொன்னால் நெற்றிக் கண்ணைத் திறக்கும் சிவபெருமான்கள் இந்தக் காலத்திலும் நம்மிடையே வாழ்கிறார்கள். தாம் கண்ட உண்மைக்கு உண்மையாயிருக்கும் நக்கீரர்களை மட்டும் அதிகமாகக் காணோம். இலக்கிய விமர்சனம் என்பது ஒரு கலை; இலக்கியம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது இலக்கிய விமர்சனம்; இலக்கிய வளர்ச்சிக்கே இந்த விமர்சனம் இன்றியமையாத சாதனம்; உண்மையும் தீரமும் உறுதியும் படைத்த இலக்கிய விமர்சனம் தற்போது தமிழுக்குத் தேவை என்பதுதான் என்னுடைய கட்சி. ஆகவேதான் நக்கீரர்கள் வேண்டும் என்கிறேன்.

இதனால் கதையிலே தோன்றும் நக்கீரன் செய்யும் இலக்கிய விமர்சனம் சரியானது என்பது என் கருத்தன்று. அந்தக் கதை உண்மை நிகழ்ச்சிகளைச் சொல்லுகிறதோ, என்னவோ, கதையைக் கட்டியவன் மனத்தில்—அதாவது தமிழனுடைய மனத்தில்—ஒரு காலத்தில் நக்கீரன் கட்சி நியாயமானது, நக்கீரன் கையாண்ட விமர்சன முறை ஒழுங்கானது என்ற எண்ணம் இருந்திருக்க வேண்டும். இப்போதும் பல தமிழ் அறிஞர்களிடையே இந்த எண்ணம் இருந்துவருகிறது. நக்கீரன் கட்சி நியாயமானதா என்று முதலில் பார்ப்போம்.

கதைதான் உங்களுக்குத் தெரியுமே. தருமி என்ற ஏழைப் பார்ப்பான் ஒருவன் பாட்டொன்றோடு பாண்டியன் சபைக்கு வந்து சேர்ந்தான். பாட்டைப் பாடினான்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ"

என்று தொடங்குகிறது பாடல்.

"பூவின் வாசத்தை ஆராயும் வாழ்க்கை நடத்தும் தும்பி, அழகிய சிறகை உடையவனே, எனக்காக ஒருதலைப் பட்சமாக நான் விரும்பியதைக் கூறாமல் நீ கண்டதைச் சொல்' என்று ஒருவன் கேட்கிறான். அப்படிக் கேட்பது யார்? என்ன நிலையிலே கேட்கிறான்? என்ன கேட்கிறான்? பாட்டைத் தொடர்ந்து பார்ப்போம்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியன்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே"

பாட்டிலே பேசுபவன் ஒரு காதலன். தன் காதலி தன்னோடு பல காலம் பழகியதை எண்ணுகிறான். மயில் போன்ற அவள் சாயலை எண்ணுகிறான்; அவளுடைய நெருங்கிய பல் வரிசையை எண்ணுகிறான்; 'அட, தும்பி, எத்தனையோ பூக்களைப் பார்த்திருக்கிறாயே! என் காதலியின் கூந்தலைவிட வாசனை பொருந்திய பூக்களை நீ கண்டதுண்டோ, சொல்' என்று கேட்கிறான். காதலன் ஒருவனுடைய அன்பின் வேகம் பாட்டில் வடிவாகிறது. அருமையான பாட்டு என்று நீங்களும் நானும் நினைக்கிறோம்.

ஆனால் நக்கீரன் சொன்னது தெரியுமல்லவா? 'கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா?' என்று கேட்டுப் பாட்டைக் குறை கூறினான், நக்கீரன். இதற்கு இறைவனாலும் சமாதானம் கூற முடியவில்லை என்று சொல்லும்போது, நக்கீரன் எழுப்பிய தடை நியாயமானது என்ற கருத்து உதயமாகிறது. உண்மையில் இந்தக் கதையில் வரும் நக்கீரன் இலக்கியத்தின் இயல்பை உணரவில்லை. இலக்கியம் என்பதைப்பற்றி பேசியபோதிலும் உண்மையில் அது பேசுவது மனித அனுபவத்தைப் பற்றியே என்பதை இந்த நக்கீரன் எண்ணவில்லை. உலகத்திலே உள்ள காட்சிப் பொருள்களைப் பற்றியெல்லாம் இலக்கியம் பேசுகிறது உண்மையே. ஆனால் எந்த முறையிலே, எந்த நோக்கோடு பேசு

கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். காட்சிப் பொருளை காட்சிப்பொருளாக அன்று; கருத்தை எழுப்பிய கருவியாகவே இலக்கியம் பேசும் ஆகவே இலக்கியத்தில் காதலியின் கூந்தல் மணமுடையதாகும்; இதுபோலவே தாமரை விளக்கந் தாங்கும்; கொண்டல் முழவம் பரிமாறும்; மயில் பரத நாட்டியம் புரியும்; குவளை கண்விழித்து நோக்கும்; கவிஞன் கற்பனையில் உதித்த மருதம் என்ற அரசி கொலுவிற்றிருப்பாள். இலக்கிய உலகிலே சென்றால் இவைபோன்ற அற்புதங்கள் எத்தனையோ அங்கே கண்ணில் தென்படும். உள்ளதை, அதாவது வெளியிலே உள்ள காட்சிப்பொருள்களை, புறநிகழ்ச்சிகளை அல்ல, அவற்றைக் காணும் உள்ளத்தில் எழும் பல்வேறு விதமான சிந்தனைகளை, உணர்ச்சிகளை, பாவனைகளையல்லவா இலக்கியம் சித்திரிக்கிறது?

இதை நம்முடைய கதையிலே தோன்றும் நக்கீரன் உணரவில்லை. இறையனாரும் உணரவில்லை. ஆனால் பழைய இலக்கண ஆசிரியர்கள் ஒருவாறு உணர்ந்திருந்தார்கள். அவர்களுடைய கொள்கைகளில் மூன்று அருமையான அம்சங்களிருப்பதைக் காணலாம். ஒன்று, இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவது; இரண்டாவது, பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; மூன்றாவது, நாடக வழக்கு; அதாவது, இலக்கிய வழக்கு, புற நிகழ்ச்சிகளைப் பொறுத்த மட்டில் உலகியல் நடைமுறையினின்றும் மாறுபடுவது பொதுவாகத் தவறாகாது. இதற்கு ஆதாரமான பழைய சூத்திரங்களைச் சொல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், பிற்காலத்தில் இலக்கியத்திற்கு உயிராதாரமான இந்தப் பரந்த கொள்கையைப் புறக்கணித்து விட்டோம். இலக்கிய மதிப்புரை என்றால் நக்கீரனைப்போல் குற்றங் காணுவது என்ற எண்ணம் எப்படியோ நம்மிடையே தோன்றி விட்டது. விமர்சகன் தடைகளை எழுப்புவதும் இலக்கிய கர்த்தா அதற்குச் சமாதானம் கூற முயல்வதுமான தடை விடை என்ற முறையானது சாதாரணமாய் வழக்கத்தில் இருந்து வந்தது. தடைகளெல்லாம் பழைய இலக்கண விதிகளை ஒட்டியே எழுந்தன. விடைகளும் அவ்வாறே.

வண்டு மலரைச் சங்காக ஊதும் என்ற புகழேந்தியின் வர்ணனைக்கு எழுந்த தடை ஞாபகம் இருக்குமே? மலர் சங்கானால் வண்டு அதன் காம்பில் அல்லவா ஊதவேண்டும் என்ற தடைக்கு வண்டு கள்ளை உண்டு மயங்கி முன்பின் தெரியாமல் தவித்தது நியாயமே என்ற விடை பிறந்தது சமத்காரமாகத் தான் இருக்கிறது என்றாலும், இந்தத் தடை விடைமுறை இலக்கியத்தின் இயல்பைப்பற்றிய அடிப்படையான ஆராய்ச்சியிலிருந்து தோன்றாமல் இலக்கண விதிகளைத் திருப்பித் திருப்பிப் பேசும் குறுகிய குற்றச் சாட்டு முறையாகிவிட்டது. இலக்கண விதிகளைப் பின்பற்றுவது தவறென்று நான் சொல்லவில்லை. அவையெல்லாம் பழைய இலக்கிய மரபை ஒட்டி எழுந்தவை. அவற்றை ஒரேயடியாகப் புறக்கணிப்பதால் இலக்கிய வளர்ச்சி தடைப்படுவதோடு பாஷையைக் கருவியாகப் பயன்படுத்தக் கூட இயலாமல் பாஷையின் அழுத்தமும் தெளிவும் மறைந்துவிடும். ஆனால் அநேகமாக நம்முடைய பழைய இலக்கண விதிகள் இலக்கியத்தின் கருவியான பாஷையைப் பற்றியவை.

எழுத்து, சொல், அணி இவற்றைப்பற்றி நுட்பமாக நம்முடைய முன்னோர்கள் ஆராய்ந்தார்கள். இலக்கியத்திற்குப் பொருளிலக்கணம் காண வேண்டும் என்று அவர்கள் முற்பட்டார்கள்; கண்டார்கள். ஆனால் இலக்கியப் பொருளின் தன்மையை அடிப்படையான முறையில் மேல் நாட்டில் அரிஸ்டாடில் காலத்திலிருந்து இன்று வரை ஆராய்ந்திருப்பது போல் நாம் ஆராயவில்லை. நூலுக்கு இலக்கணம் வகுத்த போது, நூலின் அழகு, பத்து வகையிலே கிட்டும் என்று நன்னூலார் சொன்னார். அதுபோல குற்றமும் பத்து. உத்தி முப்பத்திரண்டு. இவை எல்லா நூலுக்கும் பொருந்தும். வான சாஸ்திரமோ, ரசாயனமோ நூலாக அமைந்தால், அந்த நூலிலும் சுருங்கச் சொல்லுதல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை முதலியன அழகாகவும், குன்றக் கூறல், மிகைபடக்கூறல் முதலியன குற்றங்களாகவும், தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல் முதலியன உத்திகளாகவும் அமையக் கூடும். இவை இலக்கிய நூல்களுக்கு மட்டும் உரித்தான விதிகள் அல்ல. தேரையர் வைத்தியமும் கம்பராமாயணமும்

நூல்கள்; ஆனால் ஒன்று வைத்தியம், அறிவியல் நூல்; இன்னொன்று கவிதை, இலக்கிய நூல்.

ஒரு நூல் எப்போது இலக்கியமாகிறது என்ற ஆராய்ச்சியை நாம் விரிவாகச் செய்யாமலிருந்து விட்டோம். இலக்கிய வகைகளையும், உலா, பரணி, பெருங்காப்பியம், பிள்ளைத்தமிழ் என்று நூலின் வெளிப்படையான சில அம்சங்களை வைத்துக் கொண்டு வகுத்தோம். ஆனால் இந்த வகைகளில் சேராத புதிய நூலொன்று தோன்றினால் அவைகளை மதிப்பிடுவதற்கு இலக்கியத்திற்கே பொதுவான இலக்கியத்துவம் ஒன்றை நாம் சிருஷ்டி செய்து கொள்ளவில்லை பழைய இலக்கணங்களில், தொல்காப்பியத்தில், இறையனாரகப்பொருளில், நேற்று வந்த நன்னூலில், சில சூத்திரங்களில் இந்த இலக்கிய தத்துவம் பேசப்படுகிறது என்று நீங்கள் சொல்லலாம் சூத்திரங்கள் இருந்தால் அவற்றை இன்று அடிப்படையாகவோ புறப்படும் இடமாகவோ கொண்டு, விரிவாக இலக்கிய தத்துவத்தை விசாரணை செய்ய வேண்டும் என்று நான் சொல்லுகிறேன்.

இலக்கிய விசாரணை செய்யாமலா நம்முடைய சாத்து கவிகள் தோன்றியிருக்கின்றன? நம்முடைய உரையாசிரியர்களைவிட நுட்பமாக நூலை ஆராய்ந்தவர்கள் உண்டா என்று கேட்பீர்கள். சாத்து கவிகள் கேவலம் உபசார வார்த்தைகளாக இல்லாதபோதுகூட, ஒரு நூலின் பெருமையைப் பொதுப் படக் கூறுவனவே அல்லாமல், அவற்றை இலக்கிய விமர்சனமாகக் கொள்ள முடியாது. நம்மாழ்வாருடைய பெருமையில் ஈடுபட்ட ஒருவர்,

> "ஈதோ திருநகரி! ஈதோ பொருநை!
> ஈதோ பரமபதத் தெல்லை—ஈதோதான்
> வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை
> ஓதும் சடகோபன் ஊர்........."

என்று பாடினார். இந்தப் பாட்டு இலக்கிய விமர்சனமா? இதிலிருந்து இதைப் பாடியவர் நம்மாழ்வாருடைய பாட்டில் எவ்வளவு ஈடுபட்டார் என்பது தெளிவாகிறது. ஆனால் திருவாய்மொழியின் இயல்பைப்பற்றியோ அது எவ்வாறு சிறந்த இலக்கியமாகிறது என்பதைப்பற்றியோ இந்தப் பாட்டிலிருந்து ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் துரதிர்ஷ்ட

வசமாக நம்முடைய தமிழ் நாட்டில் இலக்கியம் ஒன்றைப் பற்றிப் பெருமையாகவோ குறைவாகவோ அழுத்தமாகப் பேசி விட்டால் அதுவே விமர்சனம் என்ற எண்ணத்துடன் சிலர் எழுதி வருகிறார்கள். 'ஓகோகோ, இதுவே பாட்டு' என்று பேசுவதும், 'சீசீ, இதுவும் பாட்டா' என்பதும் சாதாரணமாக நாம் கேட்கலாம். இவ்வாறு பேசுகிறவர்கள் தங்கள் அனுப வத்தை உண்மையாகவே வெளியிடலாம். அதை நான் மறுக்க வில்லை. ஆனால், அவர்கள் அனுபவம் மற்றெல்லாராலும் ஒப்புக் கொள்ளக் கூடியது என்பதற்கு, அந்த அனுபவத்தை ஆராய்ந்து, அது எவ்வாறு ஏற்பட்டது என்பதைத் தெளிந்து, ஸஹ்ருதயன் உள்ளத்தில் இந்த அனுபவந்தான் ஏற்படும் என்ப தற்கு அவர்கள் இலக்கிய தத்துவ உணர்வோடு தர்க்க ரீதியாக மற்ற இலக்கியங்களோடு தாங்கள் விமர்சனம் செய்யும் இலக்கி யத்தையும் ஒப்பிட்டுக் காரணம் காட்ட வேண்டும்.

இந்தக் கோஷ்டியார் தத்துவ விசாரத்தோடு பழைய உரையாசிரியர்களையும் ஒப்புக்கொள்வதில்லை. சொல்லின் பொருளையும் யாப்பையும் அணிகளையும் பற்றிப் பேசிக் கொண்டு உரையாசிரியர்கள் பாட்டை மறந்து விடுகிறார்கள், மறைத்தும் விடுகிறார்கள் என்பதே இவர்கள் விடுக்கும் குற்றச் சாட்டு. ஓரளவுக்கு இது உண்மையே. உரையாசிரியர்கள் பலர் இலக்கியத்திற்குக் கருவியாக அமையும பாஷையோடு நின்று விடுகிறார்கள்.

'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ' என்ற அடியிலே 'மோ' என்பது முன்னிலை அசை என்பார்கள்: பேசாத 'தும்பி' பேசக் கூடியதாகக் கருதப்படுவதற்குப் பழைய தொல்காப்பிய விதியான 'சொல்லாமரபி னவற்றொடு கெழீஇச் செய்யா மரபிற்றொழிற் படுத்தடக்கியும்' என்பது இடம் தருகிறது என்பார்கள். தும்பியென்றது முன்னிலை யாக்கல், கண்டதும் மொழிமோ என்றது சொல்வழிப் படுத்தல், கூந்தலின் நறியவும் உளவோ என்றது நன்னய முரைத்தல் என்றெல்லாம் பேசுவார்கள் ; பாட்டின் அருமையை, அது எவ்வாறு கவிதையாகிறது என்பதை மறந்து விடுவார்கள். உரையாசிரியர்கள் செய்த தொண்டு அருமையானது. சொல்லையும் அணியையும் வேறு இலக்கியக்

கருவிகளையும் துல்லியமாக ஆராய்ந்திருக்கிறார்கள். ஆனால் இது போதாது. இதற்குமேல் தத்துவ ரீதியில் இலக்கியத்தைப்பற்றி அவர்கள் பேசவில்லை. இலக்கிய விசாரத்தை வெளிப்படையாக விரிவாக அவர்கள் செய்யவில்லை என்பதே என் நினைவு.

இலக்கியம் என்பது ஒரு கலை அதன் கருவியான மொழியைப்பற்றிய நுட்பமான ஆராய்ச்சி நம்மிடம் உள்ளது. ஆனால் கலையின் பண்பைப்பற்றிய ஆராய்ச்சியை நாம் செய்ய வேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டே இலக்கிய விமர்சனம் தோன்றும். இதைத் தத்துவ ரீதியான இலக்கிய விமர்சனம் என்று சொல்லலாம். ஆனால் இலக்கியம் என்பது வளர்ந்து வரும்போது அதற்கு முன்னிருந்த பழைய இலக்கியத்தோடு தொடர்பில்லாமல் வளருவதில்லை. கம்பன் விருத்தப் பாவைக் கையாண்டான் என்றால், அதற்குச் சீவக சிந்தாமணி ஆசிரியன் வழிகாட்டியாக இருந்தான் என்பதை மறக்கலாகாது. இந்த வகையிலே நம் நாட்டின் இலக்கியத்தைத் தொடர்ந்து வளர்ந்து வந்த ஒரு ஜீவனுகக் கருதி, ஒரு காலத்து இலக்கியத்திற்கும் இன்னொரு காலத்து இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பையும், ஏன் அந்த அந்தக் காலத்தில் புதிய வகைகள், புதிய முறைகள் தோன்றின என்பதைப்பற்றியும் ஆராய்வது இலக்கிய விமர்சனத்தில் ஒரு பகுதி. இதை சரித்திர ரீதியான இலக்கிய விமர்சனம் என்று கருதலாம்.

இலக்கியம் ஆகாயத்தில் முளைப்பதன்று. ஒரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவனுடைய அனுபவமே இலக்கியமாகிறது. ஆகவே அவன் எந்த சமுதாயத்தில் வாழ்ந்தான்? அவனுக்கும் மற்றவர்களுக்கும் இருந்த உறவு என்ன? அவனுடைய வாழ்க்கைச் சரிதம் அவனுடைய இயல்பைப்பற்றி என்ன தெரிவிக்கின்றது என்பதெல்லாம் ஆராய்ந்து அவனுடைய இலக்கியத்தின் தன்மையை உணர இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்வதும் இலக்கிய விமர்சனத்தில் ஒரு முறை. இதை வாழ்க்கைச் சரித ரீதியில் அமைந்த இலக்கிய விமர்சனம் என்று கொள்ளலாம். இவை தவிர, ஒரு புலவனுக்கும் இன்னொருவனுக்கும் இலக்கியப் பண்பைப் பொறுத்த மட்டில் என்ன என்ன ஒற்றுமை, என்ன என்ன வேறுபாடு உள்ளது. இளங்கோவடிகள் குரலுக்கும் கம்பன் குரலுக்கும் உள்ள

வேற்றுமை என்ன என்று தனிப் புலவர்களுடைய பண்பை ஆராய்வதும் இலக்கிய விமர்சனத்தின் வேலை. இதை ஒப்புமை ரீதியான இலக்கிய விமர்சனம் என்று சொல்லலாம். இவ் விமர்சன வகைகள் ஒவ்வொன்றிற்கும் தனி முறைகள் உண்டு. அடிப்படையான விதிகள் உண்டு.

ஆனால் இலக்கிய விமர்சனம் எந்த வகையானதாக இருந்த போதிலும் ஒரே நோக்கத்தைக் கொண்டுதான் வழங்க வேண்டும். இலக்கியத்தின் பெருமையை உணருவதற்கும் அனுபவிப்பதற்கும் விமர்சனம் வழி காட்ட வேண்டும். விமர் சகன் இலக்கணத் தராசைக் கையிலேந்தி இலக்கியத்தை நிறுக்கும் நக்கீரனல்லன்; இலக்கியத்திற்கு ஓயாமல் பொருள் விளக்கமும் இலக்கணக் குறிப்பும் தரும் உரையாசிரியனல்லன். 'ஓகோ...' என்று களித்து 'சீசீ' என்று ஒதுக்கும் குழந்தையு மல்லன். பிரபஞ்சத்தைக் கண்டு தன் மனத்திலெழும் அனுப வத்தைச் சொல்லில் தேக்குவது இலக்கியமானால், இலக்கிய விமர்சனம் அந்த இலக்கியத்தில் உள்ள அனுபவத்தைத் தெளி வாக்கி, அது எவ்வாறு சொல்லில் தேங்குகிறது என்பதைக் காட்டி, இந்த அனுபவம் சொல்லில் தேங்கும்போது, ஏன், எவ்வாறு கலையாகிறது என்பதைத் தத்துவ ரீதியில் ஆராய்ந்து, கலானுபவத்தின் எல்லை நிலமான ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்வதே. இதனால் மொழி வளரும்; இலக்கியம் வளரும்; தத்துவ விசாரம் ஏற்படும்; கலானுபவம் சித்திக்கும்; ஸஹ்ருதயம், அதாவது கலைஞனோடு ஒன்றி நின்று அவன் பெற்ற ஆனந்தத்தைப் பெறும் அபூர்வ சக்தி, தானாகவே நம்மை வந்தடையும்.

# 4. அறநெறி உணர்த்திய அறிஞர்

[ திரு. S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.]

உலக வாழ்வில் மக்கள் உள்ளத்தைப்பற்றி அலைக்கும் தன்னலப் பேயை ஒழித்து, பலவகையான மனநிலையும் பழக்க வழக்கங்களும் உணர்ச்சியும் குணமும் உடையராக வாழ்பவரை நல்வழிப் படுத்தி இன்பந்துய்க்கச் செய்யும் அறிவுடையார் பலர் தோன்றிய வண்ணமாகவேயிருப்பர். அவர்களது பொருள் பொதிந்த பொன்மொழிகள் மாந்தர் உள்ளத்திற் பதிந்து அவர்களை நன்னெறியிற் செலுத்தும்; அக்காலத்தில் வாழும் மக்களுக்கேயன்றிப் பிற்காலத்தவர்க்கும் வழிகாட்டும். அறிவுவளம் பெற்றவர், அறிவுகுன்றியவர் என்னும் இருவகையினரையுடையது உலகம். அறிவுடையார் எல்லாம் உடையவராவர். அறிவு குறைந்தவர் அறிவுடையார் பொருளுரையின் வழி நடந்து வாழ்தலே சீரியது. இறைவன் அருளால் பெற்ற கூர்த்த மதியுடன் கல்வி கேள்விகளால் நிரம்பிய அறிவுடையராக விளங்குவோர் அருமை பாராட்டத் தக்கவர். ஆதலின் 'அறிவுடை யொருவனை அரசும் விரும்பும்'.

> "அறிவுடையார் ஆவ(து) அறிவார்; அறிவிலார்
> அஃ(து) அறி கல்லா தார்"

எனத் திருவள்ளுவனார் அறிவுடையார்க்கும் அறிவிலார்க்கும் உள்ள வேறுபாட்டினைக் கூறியதற் கிணங்க, இன்னது செயலால் இன்னது உண்டாகும் என்பதை முன்னரே அறியும் வல்லமை உடையவரான அறிவாளிகள் முன்னிகழ்ச்சியைக் கொண்டு பின்விளைவினை அறிந்து நடப்பவராவர்.

உலக நலம் பேணுவோர் தன்னலம் நாடுவதை நாம் எங்கும் காண்பதில்லை. ஆதலின், இத்தகைய அறிவுச் செல்வர் தமக்கு நேரிது என்று பட்டதைப் பிறர்க்கு அஞ்சாது அறிவுறுத்தியே வாழ்ந்தனர்; தம்பால் குடி கொண்டிருந்த அருளால் இருளைத் தடிந்தனர்; தாமே வலியச் சென்று இடித்துரைத்தும் இன்சொற் கூறியும் அறிவூட்டி வந்தனர். அவர்களது பூத உடல் அழிந்துவிட்டது. அது மண்ணோடு மண்ணாகி மறைந்தும் போயிற்று; புகழுடம்போ அழிவிலதாய் நின்று

இன்று நமக்கு அறிவுறுத்துகின்றது. அவர்களது அறிவுரைகள் சிலவற்றைக் காண்போம்.

## கணியன் பூங்குன்றனர்

சங்ககாலில் வாழ்ந்திருந்த புலவர் பெருமக்களுள் கணியன் பூங்குன்றனர் என்பாரும் ஒருவர். 'கணியன்' என்பது இவர் சோதிடம் வல்லவர் என்பதை உணர்த்தும் அடைமொழி. பூங்குன்றம் என்னும் ஊரிலே பிறந்து, தம் சோதிடக் கலையறிவாலும் தமிழ்ப் புலமையாலும் பெரும்புகழ் பெற்றதால் பூங்குன்றன் என்ற பெயர் இவர்க்கு அமைவதாயிற்று. அது சிறப்பை உணர்த்தும் 'ஆர்' விகுதி பெற்றது. பூங்குன்றன் என்னும் ஊர் இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளது. பூங்குன்ற நாடு என்ற நாடொன்றின் சிறந்த ஊராக விளங்கியதால், இவ்வூரின் பெயரே அந்நாட்டிற்கும் பொருந்தி வழங்கலாயிற்று.

இப்புலவர் பெருந்தகை தாம் பெற்ற புலமைச் செல்வத்தை மாந்தர்க்கு நல்லறிவு ஊட்டும் பொது நலப்பணியில் பயன்படுத்தி வாழ்ந்தவராவர் அதற்கேற்ற மனநிலையும் அவர்பால் பொருந்தியிருந்தது பரந்த நோக்கமும் விரிந்த உள்ளமும் உடைய இவர், நடுநிலை பிறழாத வாழ்வு வாழ்ந்து, அந்நெறியினை மக்கள் அனைவருமே கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்ற ஆர்வமுடையவராகிப் பெரிய ஞானியாக விளங்கினர். அரசர் முதலாக அனைவரும் கடைப்பிடித்து ஒழுகத்தக்க அருள் நிரம்பிய அறவாழ்வினை எடுத்துரைத்த அருளாளர் இவர். "நமர் எனக் கோல் கோடாது, பிறர் எனக் குணங் கொல்லாது" நடுநிலை கொண்ட நெஞ்சமுடையவராய் வாழ்தற்குரிய நெறியை வகுத்துரைத்த இவர்,

> "கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
> கோடாமை சான்றோர்க் கணி"

என்ற தமிழ் மறை மாந்தர் வாழ்க்கையின் குறிக்கோளாக அமைய வேண்டும் என்றும், அதனல் எங்கும் அமைதியும் அருளறமும் குடிகொள்ள வேண்டும் என்றும் ஆவல் கொண்டிருந்தவர். இந்த ஆவல் நிறைவேறுவதற்கு அடிப்படையாவது மெய்யுணர்வு—அதாவது, உலக வாழ்க்கையின்

உண்மைகளை உள்ளவாறு அறிதல்—என்பதை இவர் உணர்ந்திருந்தார். மக்கள் அறிவால் உயர்ந்தாலன்றி, மெய்யுணர்வு உண்டானாலன்றி, அருளுள்ளம் அமையாது. உள்ளத்தில் அருள் பெருகியிருந்தாலொழிய அமைதியும் இன்பமும் தோன்ற மாட்டா. இவையனைத்தையும் விளக்கி இவர் அருளிய பாடலொன்று புறநானூற்றில் திகழ்கின்றது. பொன்னெனப் போற்றத்தகும் அப்பாடலில் பொதிந்துள்ள ஒவ்வொரு கருத்தும் எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் எச்சமயத்தார்க்கும் பொருந்துவதாக மிளிர்தல் காணலாம்.

மக்களிடையே நல்லறிவும் நல்லறமும் பரவவேண்டுமாயின், ஒவ்வொருவரும் மேற்கொண்டொழுகத்தக்க நன்னெறியொன்று உண்டு. அது "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதுதான். இதுவே மற்ற மெய்யுணர்ச்சிகள் தோன்றுவதற்கு அடிப்படையானது. தமது நன்மையை நாடுவோர் நண்பர் எனவும், தமக்குத் தீமை செய்பவர் பகைவர் எனவும் கருதும் மனப்பான்மையே பெரும்பாலோர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு நிற்பது. இதுதான் உலகில் காணப்படும் வேற்றுமை உணர்ச்சிக்குப் பிறப்பிடமாவது. உண்மையை நாடும் அறிவு நலம் உடையார்களே "யாவரும் கேளிர்" என உணரும் பண்பாட்டினை எய்துவர். யாவரும் கேளிர் என்னும் உணர்வு ஒருவன் உள்ளத்திற் குடிகொண்டு விடுமாயின், அவனுக்கு எவ்வூரில் வாழ்வாரும் கேளிரேயாதலின், தன்னூர் வேற்றூர் என்னும் வேற்றுமையான மனப்பான்மை உண்டாகாது; "யாதும் தன் ஊரே" யாகும். இனி "யாவரும் கேளிர்" என்னும் மெய்யுணர்வு வேரூன்றுவதற்கு ஆதாரமாயுள்ளவை மற்ற அடிகளில் கூறப்பட்ட பேருண்மைகள் என்பது ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகும்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் மெய்யுணர்வு பெற்றவன், அவை தம் ஊழ்வினையால் ஊட்டப் பட்டவை, பிறரால் செய்யப்பட்டவையல்ல என்று உணர்வான். அதனால் தீமையால் வரும் நோதலையும், நன்மையால் விளையும் அந்நோதலின் தணிதலையும், தானே அடைவானாதலின் "நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன" என்னும் பேருண்மையைக் காண்பானாவான். இது அவன் உள்ளத்திற் பதிந்துவிடுமாயின்

தீமையால் வரும் துன்பத்தைத் தாங்கும் ஆற்றல் அவனுக்கு ஏற்படும். இவ்வாற்றல் வளர்ச்சியடைவதனால், "சாதல் புதுவது அன்று" என்னும் உண்மை புலப்படும். சாவைப் பொருட்படுத்தாத நெஞ்சுரம் பெற்ற அவனுக்கு வாழ்வில் இன்பம் என்று கருதி மகிழத்தக்கதும், துன்பம் எனக்கொண்டு துயருறக் கூடியதும் இலதாகும். "வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே, முனிவின் இன்னாது என்றலும் இலமே" என்னும் அடிகள் இதனை வலியுறுத்துகின்றன.

இவற்றால் விளங்கத்தக்கது "மழையால் பெருகி வரும் பெருவெள்ளத்தின் வழியே செல்லும் மிதவைபோல, உயிரானது ஊழ்வினையின் வயமாகி, அதன் வழியிலே இயங்குவதாகும்" என்னும் பேருண்மையாகும். பல்பெருஞ் சமயஞ் சொல்லும் உண்மையும் இதுதான். "எல்லாம் எனையாளும் ஈசன் செயல்" என்ற முடிபையே இப்பாடலும் வலியுறுத்துகின்றது. இந்த மனநிலை கைவரப்பெற்றவர், "பெரியோரை வியத்தலும், சிறியோரை இகழ்தலும்" செய்யார் என்பது திண்ணம். இவ்வுண்மையை எளிய முறையில் தெளிவாக உணர்த்தியவர் பூங்குன்றனார் ஆவார்.

மனிதன் நாடுவதெல்லாம் கவலையற்ற இன்ப வாழ்வேயாகும். துன்பத்தைக் கண்டு துடிப்பதும், இன்பத்தினைத் துய்த்து நன்மையுறுவதும் மாந்தர் இயல்பு. இன்பதுன்பங்களை ஒன்றாகவே மதித்து வாழும் மாண்புடையார் மெய்ந்நெறியை உணர்ந்த சிலர்களாவர். நாட்டில் வேற்றுமையுணர்ச்சி நீங்கி, ஒற்றுமை நிலைபெற்று, அறமும் அருளும் வளர உழைக்கும் தகைமையுடையவர் இவர்களே அன்றோ?

**பிசிராந்தையார்**

அறம் உணர்த்திய ஆன்றோருள் பிசிராந்தையாரும் ஒருவர். இவர் பாண்டிய நாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரினர். ஆதன்தந்தை என்னும் இவரது பெயர் 'ஆந்தை' என மருவி, ஆந்தையார் என வழங்கலாயிற்று. பாண்டியன் அறிவுடை நம்பியின் காலத்தவரான இவர், அம்மன்னனுக்கு அரசியலில் கைக்கொண்டு ஒழுகுதற்குரிய அறநெறியை உணர்த்தியதாக அமைந்த அரிய பாடலொன்று புறநானூற்றின் கண் மிளிர்கின்றது.

"விளைந்து முதிர்ந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கொண்டால், ஒருமா என்ற அளவிற்கும் குறைந்த நிலத்திலிருந்து கொள்ளப்பட்ட நெல்லும், கவளங்கவளமாக உண்பார்க்குப் பல நாளைக்கு ஆகும். நூறு செய்யளவு பரப்புள்ள நிலத்தில் விளைந்த கதிராயினும், யானை தனித்துப் புகுந்து உண்ணுமாயின், அதன் வாயில் புகுந்த நெல்லினும் காலால் மிதியுண்டு சிதறிக் கெட்ட நெல் மிகுதியாகும். அதுபோலவே, அறிவுடைய அரசன், குடிகளிடம் இறைகொள்ளும் நெறியை அறிந்து கொள்வானாயின், அவன் நாடு கோடி பொருளினை அவனுக்கு ஈட்டித் தருவதுடன், தானும் தழைக்கும் அவ்வாறன்றி, அரசன் தன் உரிமையையே பாராட்டி வலிமையைப் பயன்படுத்திக் குடிகளை வருத்தி இறைகொள்வானாயின் அந்த யானை புகுந்த புலம்போலத் தானும் உண்ணப் பெறான்; அவன் நாடும் சீர்கெடும்," என்பது பிசிராந்தையார் கூறிய அறிவுரை. இதனைப் புலவர் பாண்டியன் அறிவுடை நம்பி என்பவனுக்குக் கூறலுற்றார். நாடு செழிக்கவும் குடிவளம் தழைக்கவும் செங்கோன்மை சீருடன் விளங்கவும் காரணமான இந்த அறிவுரையை அறிவுடை நம்பி என்னும் பெயரமைந்தவன், அப்பெயர்க்குப் பொருத்தமாகப் போற்றிக் கொண்டனன்.

நாடெங்கும் நல்வாழ்வு பெருகவேண்டும். அதற்கு அடிப்படையாவது அறநெறி வழுவாத அரசியல். அரசியல் தலைவனை வேந்தன் தன் கடமை உணர்ந்து ஒழுகுதல் வேண்டும். இப்பெருநோக்கங் கொண்டு அரசியலுக்கு ஆதாரமான உண்மைகளைப் பிசிராந்தையார் அறிவுடை நம்பிக்கு உவமை முகத்தான் உணர்த்துவாரானார். அறிவுள்ள அரசன் அதனைப் பாராட்டுவான் என்பதே அவர் துணிபு. அவன்பால் புலவர் நாடியது பரிசன்று; பட்டாடையுமன்று; வரிசைகளும் அல்ல. தன்னலங்கருதி அவர் அவனைப் பாடியவருமல்லர். பொது நலம் போற்றிய அவரது பொன்மொழிகளைச் 'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்" ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை அன்றோ?

இனி, இப்புலவர் பெருந்தகையின் மற்றொரு அறிவுரையினை நோக்குவோம். பிசிராந்தையார் பாண்டிய நாட்டினரேயாயினும், அவரது புகழ் சோழநாட்டிலும் பரவியிருந்தது.

கோப்பெருஞ் சோழன் அவரை நேரிற்கண்டு அளவளாவி மகிழ்ந்தவன் அல்லனாயினும், அவரது பெருமையை அறிந்து, உணர்ச்சியால் அவரோடு ஒற்றுமைகொண்டவனாகி வாழ்ந்து வந்தான். நாளடைவில் இவ்விருவரிடையே நட்பாங்கிழமை நிலை கொள்ளலாயிற்று. சோழன் உலக வாழ்வை வெறுத்து வடக்கிருக்க நேர்ந்தபொழுது, பிசிராந்தையார் அங்குற்றார். அறிஞர் பலர் சூழக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரை நேரிற் கண்டதும் வியப்பும் உவப்பும் எய்தினர். அவருள் ஒரு வர் பிசிராந்தையாரை நோக்கி, "பெருந்தகையீர், யாங்கள் தங் களைப்பற்றி நெடுநாளாகக் கேள்விப்படுகிறோம் அக்கால அள வைக் கணக்கிட்டுப் பார்த்தால், நீர் நரையும் திரையும் உடைய வராக இருத்தல் வேண்டுமே! அங்ஙனம் ஆகாததன் காரணம் யாதோ?" என்று வினவினர். அதற்கு விடையாகப் பிசிராந் தையார் "ஐயன்மீர், எனக்கு யாண்டு பலவாயின என்பது உண்மையே. ஆயினும் நரையில்லை. அதன் காரணத்தைக் கூறு வேன்: என் மனைவி மனைமாட்சியில் சிறந்தவள். என் மக்களும் மாண்புடையவரே. எனக்குக் குற்றேவல் புரியும் இளையரும் நற்குணத்தால் நிரம்பியவர்; யான் எண்ணியவாறே இயற்றும் தன்மையர். எமது வேந்தனை பாண்டியனும் குடியோம்பிக் கோலோச்சும் கொற்றமுடையவன். மற்றும், யான் வாழும் ஊரில் சான்றோர் பலர் உளர். அதனால், கவலையற்று வாழ்ந்த எனக்கு நரையுண்டாகவில்லை" என்று கூறினர்.

" யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியர்என வினவுதிர் ஆயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர் ;
யான்கண் டனையர்என் இளையரும் ; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் ; அதன்தலை
ஆன் றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே " (புறம், 191)

என்ற அவரது மெய்யுரையானது ஒரு வீடு, ஓரூர், ஒரு நாடு ஆகியவற்றின் இன்பவாழ்விற்கான இயல்புகளையெல்லாம் விளக்குவதாகும் இத்தகைய சான்றோரை நண்பராகக் கொண்டிருந்த பேரரசரான கோப்பெருஞ் சோழனும் பாண்டியன் அறிவுடை நம்பியும் தலைமை தாங்கி நடத்திய

அரசியல் நாட்டிற்கு நலம் விளைப்பதாகவே இருந்திருக்கும் என்று நாம் கொள்வதில் தடையில்லை.

## இளம்பெருவழுதி

புலமைச் செல்வம் பெற்றவர் அரசியல் நன்கமைவதற்கு ஆதாரமான கொள்கைகளை அறிவுறுத்தியதினும், அரசியல் தலைமை தாங்கியவர் அவற்றை உணர்ந்து கூறிய உரைகள் சிறப்புடையனவன்றோ? முன்னாளில் வாழ்ந்திருந்த அறிவுடைய அரசர் சிலர் குடிநலம் பேணும் கொள்கைகளைத் தாம் மேற்கொண்டொழுகியதோடு, பிறர்க்கும் அறிவுறுத்துவாராயினர். இவர்களிடம் அரசச் செல்வத்தோடு செவிச் செல்வமும் பொருந்தியிருந்தது. அன்னருள் பாண்டியர் மரபிலுதித்த இளம்பெருவழுதி என்பவர் ஒருவர்.

இளம்பிராய முதலே பேரறிவினராக விளங்கியவர் இவர். 'கடலுள் மாய்ந்த' என்னும் அடைமொழி இறந்த பின் இவரை இன்னார் என்று குறிக்கும் பொருட்டு வழங்கப் பெற்றது. "உலகம் நல் வாழ்வு பெறுவதற்கு இத்தன்மையோர் காரணராவார்" என்பதை இவர் நயம்படக் கூறும் பாடலொன்று புறநானூற்றில் உளது. 'தேவாமிர்தமே கிடைத்த போதிலும், அருமையும் இனிமையும் கருதி, அதனைத் தாமே உண்ணாது, பிறர்க்கும் அளித்தே உண்பர். வாழ்வில் யாரிடமும் வெறுப்புக் கொள்ளார். பிறர்க்கு நேரும் அஞ்சத்தக்க துன்பங்கண்டு தாமும் அஞ்சுவார்; அது தீரும் வரையில் தாம் துயிலவுமாட்டார். புகழ் பெறுவதற்குக் காரணமான நற்செயல் புரியும் வாய்ப்புக் கிடைத்தால், அதன் பொருட்டுத் தம்முயிரையும் கொடுப்பர். உலகமுழுவதும் தமக்கு வயமாவதாயினும் பழிக்குக் காரணமான தீச்செயலைச் செய்யார்; எந்நாளிலும் சோர்வு அடையார்; தன்னலங்கருதி முயலார்; பிறர் நலம் பேணியே முயன்று உழைப்பார். இத்தகைய சான்றோர் சிலரேனும் வாழ்ந்திருப்பதால்தான் உலகம் அழியாதிருக்கின்றது" என்னும் பொருளுரை கொண்டது அப்பாடல். உலகம் அழியாது நிலைபெற்றிருப்பதற்குத் தன்னலமற்ற சான்றோர் பெருமையே காரணம் என்றுரைக்கும் அவரது பரந்த உள்ளம் எத்தகைய உயர்நிலையில் அமைந்திருத்தல் வேண்டும் என்பது உணரத் தக்கது.

" உண்டால் அம்மஇவ் வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர்;
துஞ்சலும் இலர் ; பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே "

இத்தகைய உணர்ச்சி பொருந்திய அரசர் நாட்டின் தலைவராக அமைவராயின், அந்நாட்டு மக்களே பெரும்பேறு பெற்றவராவரன்றோ? நாட்டின் வாழ்வு அங்குள்ள மக்களின் மனநிலையைச் சார்ந்ததாகவே அமையும் என்னுங் கருத்தினை அழகாக உணர்த்திய இளம்பெருவழுதிக்கு உலகம் கடப்பாடுடையது.

நல்வாழ்விற்கு அடிப்படை நல்ல உள்ளம். அது அமைவதற்கு நல்லார் இணக்கம் வேண்டற்பாலது. ஆதலின், ஒருவன் தான் எத்தகையாருடன் உறவாடலாம், எத்தன்மையினரோடு பழகலாகாது என்பவைகளை ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும். சான்றோர் உறவு ஒருவன் மனத்தைப் பண்படுத்தி நல்வழியிலே செலுத்தும் ; இன்சொல் கூறச்செய்யும் ; நற்செயலில் இறங்கத் தூண்டும் ; தன்னலத்தை நசிக்கச் செய்து, பொதுநலத்தில் மனத்தை ஊன்றுவிக்கும். உலகம் நன்மையும் தீமையும் ஒருங்கே உடையது. நல்லோரும் தீயோரும் நம்மிடையே உள்ளனர். இவர்கள் வாழும் வாழ்க்கை வேறுபாடு உடையது. தன்னலமே உருக்கொண்டவர் பொது நலம் கருதார் ; தன்னலங்கருதிப் பிறர்க்குத் தீமையும் புரிவர். தன்னலமற்றவர் பிறர் நலமே தன்னலமென்று கொண்டு உழைப்பர் ; தன் உடல் பொருளாவியாகிய மூன்றையும் உலக நன்மைக்காகவே ஈவர். அவர்களால் தான் இவ்வுலகமும் நிலைபெற்றிருக்கின்றது.

# 5. கலிங்கப் போர்

[திரு. K. S. நாகராசன், M. A.]

**நூலிலக்கணம் :** கலிங்கத்துப் பரணி என்னும் நூல் சோழ வேந்தன் விசயதரன் என்பானின் கலிங்கப் படையெடுப்பையும், வெற்றியையும் எடுத்துக் கூறுவதாகும். இவ்விசயதரன் என்பானுக்கு அநபாய சோழன், முதலாம் குலோத்துங்கன் என்ற வேறு பெயர்களும் உண்டு. 'பரணி' என்னும் நூலின் இலக்கணம் கீழ் வருமாறு கூறப்பட்டுள்ளது :

> ' ஆனை யாயிரம் அமரிடை வென்ற
> மான வனுக்கு வகுப்பது பரணி '

ஆயிரம் களிறுகளை அமரில் வென்ற ஆண்மகனொருவனைச் சிறப்பித்துப் பாடுவது 'பரணி' என்று மேற்குறித்த பாவின் கண் கூறப்பட்டுள்ளது. கலிங்கப் போர்க் களத்தில் பேய்கள் பரணி நாளில் கூழ் சமைத்து தேவியை வழிபட்டமை குறித்து இந்நூலுக்குப் 'பரணி' என்று பெயர் வந்தது என்று கருதுவர் ஒரு சிலர். அன்னார் கருத்தை வலியுறுத்துவதேபோல் 'களம் பாடுதல்' எனும் பகுதியில் பேய்கள் பரணி நாளில் கூழ் சமைத்துத் தேவியை வழிபட்டமை கூறப்பட்டுள்ளது.

**திருவோலக்கச் சிறப்பு ;** இனி சயங்கொண்டார் என்னும் புலவர் பெருந்தகையால் பாடப்பெற்ற இக்கலிங்கத்துப் பரணியில் தீட்டப் பெற்றுள்ள வீரம், படைச் செருக்கு முதலியவை எத்தன்மையன என்பதை நோக்குவோம். போரின் காரணத்தைக் கூற வந்த புலவர் சோழ வேந்தனின் திருவோலக்கச் சிறப்பைச் சித்திரிக்கின்றார். அவ்வேந்தன் ஆண் சிங்கத்தைப் போல அரியணை மீது வீற்றிருந்தமையும் மற்றவன் இமயமலை வரை தன் ஆட்சி செலுத்தியமையும் கூறுகின்றார்.

விசயதரன் இங்ஙனம் வீறுடன் வீற்றிருந்தபோது, பற்பல நாட்டு அரசர்களும் தத்தம் திறைகளைச் செலுத்தி வணங்க லுற்றனர். "எங்கள் நாடு, நகரங்களைக் கருணையோடு தந்து அருளியதற்காக எங்களைச் செலுத்துமாறு ஏவிய திறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்" என்றுகூறிப் பொன்னும், மணியும்,

மதக்கரி பலவும் திறையாகச் செலுத்தி விட்டு எல்லா அரசர் களும் சென்றனர். இப்படித் தத்தம் திறைகளைச் செலுத்திய போது ஒரு சில வேந்தர் தம் பரிசிலைவிட உயர்ந்ததை எவ ரேனும் சோழ வேந்தனுக்குத் தந்தால், தன் அரசுரிமையை விற்றுவது அங்ஙனம் கொடுத்தவர்களுக்குச் சமமாகக் கொடுப்ப தாகச் சூளுரை கூறுகின்றனர்.

**கலிங்கப் போர்க் காரணம் :** இங்ஙனம் வெவ்வேறு நாட்டு வேந்தரும் தத்தம் திறையே பெரிது எனக் கூறிச் செலுத்தி விசயதரனின் கழலடி பணிந்து செல்லும்போது, வட கலிங்க வேந்தன் அனந்த பதுமன் இரு முறையாகத் திறை செலுத்த வில்லை என்பதை அறிகிறான் சோழ மன்னன். சிறிதும் கோபம் கொள்ளாமல் புன்னகை புரிந்த முகத்தோடு தனது படை வீரர்களை நோக்கிக் "கலிங்க வேந்தன் எளியன். என்றாலும் அவனது வலிமை அழியுமாறு மலையரண்களை அழித்து அவ னுடைய யானைப்படைகளைக் கைக்கொண்டு அவனையும் சிறை யெடுத்து இங்குக் கொண்டு வாருங்கள்" என்று உரைத்தான்

**படைத் திறம் :** வேந்தன் கூறிய கடுஞ்சொற்களைக் கேட்ட வண்டைநகர் வேந்தன் கருணாகரத் தொண்டைமான் திரண்டு எழுந்து சேனையோடு கலிங்க நாட்டை நோக்கிச் சென்றான். படையின் திறத்தையும், மிகுதிப் பாட்டையும் புலவர் மிக அழகாகக் கூறிச் செல்கிறார். வெண்கொற்றக் குடையும், பீலிக் குடையும், துகிற் கொடியும், படைஞர் தாங்கிச் சென்றதன் விளைவாகச் சூரியனது ஒளியே தரை மீது படாது போயிற்று என்று ஆசிரியர் கூறுகிறார். அவ்விருள் அகன்ற பான்மையினை யும் சித்திரிக்கின்றார் நம் கவிஞர். அப் போர்வீரர் கண்கள் வீசிய கனலாலும் மற்றவர் அணிந்திருந்த பொன்னணிகள் வீசிய ஒளியாலும், கைப்படைகள் ஒன்றோடொன்று உராய்ந் ததனால் உண்டான பொறியாலும் இருள் மறைந்தது. எங்கும் ஒளி படர்ந்தது என்று வெகு நயத்துடன் வரும் அடிகளைக் காண்க.

"அலகில் கட்டமுற் கனல்வி ரித்தலால்
அரிய பொற்பணிக் கலனெ றித்தலால்
இலகு கைப்படை கனல்வி ரித்தலால்
இருள்க ரக்கவே யொளிப ரக்கவே"

**கலிங்க வேந்தனின் பெருமிதம் :** இத்தகைய் மாபெரும் படை வலியோடு கலிங்க நாட்டை அடைந்தான் கருணாகரத் தொண்டைமான். படைகளும் நாட்டில் புகுந்து மதில்களை அழிக்கத் தொடங்கின. அது கண்டு குடிமக்கள் விரைந்தோடி அரசனை அணுகி, "சோழ வேந்தனுக்குச் செலுத்த வேண்டிய பகுதிப் பொருள்களைச் செலுத்தாமையால் அவன் படைகள் நாட்டை அழிக்க வந்துள்ளன" எனக் கூறினர். அங்ஙனம் கூறிச் சென்ற மக்கள் அடைந்த மனக் கலக்கத்தையும், அவர் தம் நிலையையும் மிக்க திறத்தோடு ஆசிரியர் வருணிக்கிறார்.

குடிமக்களின் மாற்றங்கேட்டு அளவிறந்த சினங்கொண்டான், கலிங்க மன்னன். "நான் விசயதர சோழ மன்னனுக்கு அல்லாமல் அவன் படை வீரர்களுக்குமா எளியன்!" என வெகுண்டு கூறித் தன்னிரு பெருந்தோள்கள் குலுங்கும் வகை நகைத்தான். "எனது காடுகளின் அரணும், மலையரணும், கடலரணும் எத்தன்மையன என்று அறியாமல் அச்சோழ வேந்தனின் படைகள் என்னை எளிதில் வெல்லக் கருதி வந்தன போலும்" எனக் கூறிப் பரிகசித்தான்.

கலிங்க மன்னனின் அமைச்சனான 'எங்கராயன்' என்பான் சோழன் படைவலி மிகப் பெரியது என்றும், பல நாட்டு அரசர்கள் அவனால் அழிக்கப் பெற்றனர் என்றும் எடுத்துக் கூறினான். இதைச் சிறிதும் பொருட்படுத்தாத அவ்வேந்தனை நோக்கி, "நீர் என் சொல்லில் ஐயமுறின் சோழன் படைத் தலைவன் கருணாகரனோடு போர்புரிந்து உமது ஆற்றலை அறிந்து கொள்வீராக" என மொழிந்தான் எங்கராயன். இம்மொழி கேட்ட வேந்தன் வெஞ்சினங் கொண்டான். அதனைக் கண்ட அமைச்சன்

> "இன்று சீறினும் நாளையச் சேனைமுன்
> நின்ற போழ்தினி லென்னை நினைத்தியால்"

என்று கூறினான். கலிங்க வேந்தனின் கெடுமதி அமைச்சன் காட்டிய வழி எங்ஙனம் செல்லும்? தன் தோள்கள் பல நாட்களாய் போர் இன்றி மெலிந்திருப்பதாகவும் தன் தோள் வலியும் வாள் வலியும் அறியாமல் வந்த பகைவர் தன்னை வெல்லுதல் அரிது என்று எண்ணித் தன் நால்வகைப் படைகளையும் கொண்டு போர் தொடங்கினான்.

**போர் நிகழ்ச்சிகள் :** இனி, 'போர் பாடியது' என்னும் பகுதியில் ஆசிரியர் போர் நிகழ்ச்சியை வரைந்து செல்கிறார். நால் வகைச் சேனைகளுக்கும் போரால் நேர்ந்த அழிவை ஆசிரியர் கூறுகின்றார். இரத்த வெள்ளத்தில் வெண்கொற்றக்குடைகள் நுரை போன்று மிதந்து சென்றன என்றும், இறந்து போன யானையின் உடற் கூறுகள் ஆற்றின் கரையைப்போலத் திகழ்ந்தன என்றும் கூறும் தாழிசை காண்க :

> " குருதியி னதிவெளி பரக்கவே
> குடையின நுரையென மிதக்கவே
> கரிதுணி படுமுட லடுக்கியே
> கரையென விருபுடை கிடக்கவே "

யானைப் போரை சித்திரிக்கின்றார் நம் கவிஞர். அவ்வோவியத்தை அறிந்து இன்புறுதல் இன்றியமையாதது. யானைக் கூட்டங்கள் தமது துதிக்கைகளை மாட்டி வலித்தல், வலிய கயிறுகளைத் திரிப்பது போன்று இருப்பதாம். இரத்த வெள்ளத்து வெட்டுண்டு விழுந்த மதக் கரிகளின் கூட்டங்கள் கடலில் நீர் உண்ணச் செல்லும் மேகங்களை ஒத்திருந்தனவாம். இங்ஙனம் அழகாகக் கூறிய பின், குதிரைப் படையின் போர்த் தொழிலையும் படை வீரர்களின் திறத்தையும் கூறுகின்றார்.

சில வீரர்கள் குதிரைகளொடு போர் புரிய மனமில்லாதவர்களாய் யானைப்படையோடு போர் செய்தபோது அவற்றின் கொம்புகள் மார்பில் பதிவதைக்கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள்.

இனி, கையில் ஆயுதமில்லாதிருந்த வீரர் தமது மார்பின் கண் தைத்த அம்பினைப் பறித்துப் பகைவர் மீது செலுத்தினார்களென்று அவர் வீரத்தின் மிகுதியைக் குறிக்கிறார். இங்ஙனம் இரு நாட்டுப் படைகளும் போர் செய்தபோது இரு தொடைகளும் அறுபட்டு வீழ்ந்த வீரன் ஒருவன் தன்னை எதிர்த்து வந்த வெங்களிற்றின் வலியடங்குமாறு தன் தொடைகளில் ஒன்றைச்சுழற்றி எறிந்தானென்றும், வேறொரு வீரன் தன்னைத் தாக்க வந்த யானையின் மீதேறிப் பகை வீரனின் தலையை வெட்டி வீழ்த்த, ஆவி துறக்கும் அவ்வீரன் தன் களிற்றை நோக்கிப் "பகைவனைத் தாக்கிக் கொல்!" எனக் கூறி ஆவி துறந்தான் என்றும் பல வீர நிகழ்ச்சிகளைச் சொல்லுகிறார்.

**போர் முடிவு :** இறுதியில், கலிங்க வேந்தன் தோல்வி அடைந்து போர்க்களத்தினின்றும் ஓடி ஒளிந்தான். அவன் வீரர்கள் எதிரியின் வலிமையைக் கண்டு நிலை குலைந்து போயினர். தத்தம் நிழலையே தன்னைத் தாக்க வந்த தமிழரென நினைத்து ஓடுதற்கு அஞ்சி அபயக்குரல் ஓசையோடு நடுங்கி வணங்கினர். இங்ஙனம் தமிழ் வேந்தனின் ஏற்றமும் கலிங்க மன்னனின் இழிவும் தோன்றப் பெருமிதத்தோடு கவிஞர் கூறுவதும் பிறவும் பயில்வோர் நெஞ்சினை அள்ளும் வண்ணம் அமைந்துள்ளன.

உயிர் தப்பி ஓடிய கலிங்க மன்னனைத் தேடிப் பிடித்து வருமாறு கட்டளை இட்டான் கருணாகரன். பின்னர் போர்க்களத்தினின்றும், அந்நாட்டினின்றும் பல்வகைப் பொருள்களைச் சோழ வேந்தருக்கு எடுத்துச் சென்றான். பலவகைப் பட்ட குதிரைகளையும் தேர்களையும் ஒட்டகங்களையும் பெருஞ் செல்வத்தையும் குலமகளிரையும் கவர்ந்து சென்றான் கருணாகரன். இதன் அளவைக் கணித்துரைப்பது அருமை என்று ஆசிரியரே கூறுகிறார்.

" நடைவ யப்பரி யிரத மொட்டகம்
நவநி திக்குவை மகளி ரென்
றடைய வப்பொழு தவர்கள் கைக்கொளும்
அவைக ணிப்பது மருமையே "

இவ்வாறு சயங்கொண்டார் தமது 'கலிங்கத்துப் பரணி' என்னும் பரந்த நூலில் சோழ வேந்தனது கலிங்கப் போரை அழகாகக் கூறிப் போயுள்ளார். இந்நூலினைக் கற்றோர் 'பரணிக் கோர் சயங்கொண்டார்' என்று துணிந்து கூறுவார்களென்பது நிச்சயம்.

# 6. தமிழிசை

[திரு. ஓமந்தூர். இராமசுவாமி ரெட்டியார்]

## தோற்றுவாய்

அன்பர்களே, இந்த ஆறுவது தமிழிசை விழாவை என்னைத் தொடங்கி வைக்குமாறு பணித்த அன்பர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இசையின் சிறப்பியல்புகள்

இசையில் திளைத்து இன்புறாதார் எவருமில்லை. நஞ்சுடை நாகமும் விலங்குகளும் இசையில் மயங்கி நிற்கும். இசையினை அனுபவிக்கும் திறனற்றவன் எத்தகைய கொடிய செயலையும் செய்ய அஞ்சான் என்று ஷேக்ஸ்பியர் போன்ற பெரும் புலவர்கள் கூறியுள்ளனர். யாழிசையால் மதயானை அடங்கிற்றென்று கலித்தொகை, பெருங்கதை முதலிய தமிழ் நூல்கள் கூறுகின்றன. வீரச்சுவை கொண்ட இசை கேட்ட குதிரை பறக்கும் வேகத்தில் ஓடி உக்கிரத்தோடு போரில் தாக்கிற்றென்று நற்றிணை கூறுகிறது. பசியினால் தினையைத் தின்னவந்த யானை கானக மங்கை பாடிய இசை கேட்டுப் பசி மறந்து நின்ற செய்தியை அகநானூறு சொல்லுகின்றது. ஆனாய நாயனார் வேய்ங்குழலைக் கானகத்தில் வாசித்த காலத்தில் பசுக் கூட்டங்கள் அருந்திய புல்லை அசைவிடாது அவர் அருகணைந்தன ; பாலைப் பருகுகின்ற கன்றுகள் வாயில் நுரையொடு மறந்து நின்றன ; மயிலினங்களும் ஆடாது மயங்கி நின்றன என்று பெரிய புராணம் தெரிவிக்கின்றது. பாணபத்திரர்க்காக இறைவன் மதுரையில் விறகு சுமந்து பாடிய அன்று நாகமும் மயிலும், யானையும் சிங்கமும், மானும் புலியும் தமது பகைமை அகற்றி இணைந்து நின்றன என்று திருவிளையாடற்புராணம் அறிவிக்கின்றது.

## உண்மையான இசை

இன்றைய இசை மூளைக்கு எட்டும் முறையில் மட்டும் வளர்க்கப்பட்டிருக்கிறது. ஐம்புலன்களை ஊடுருவி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் முறையில் வளர்ச்சியடையவில்லை; ஒரு சிலர்க்கே உரிய கலையாகவும் பெரும்பாலான மக்கட்கு

எட்டாத வெகு நுட்பக்கலையாகவும் மாறிவிட்டது. ஆயின் உண்மையான இசை இம்முறையில் இருத்தலாகாது. அது கேட்போரை யெல்லாம் ஒன்றுயப் பிணைக்கவல்லதாய் இருக்க வேண்டும்; மெய்ம்மறந்து தன் வயமிழந்து ஆனந்த நிலைக்கு எடுத்துச் செல்வதாக இருக்க வேண்டும்; உச்சி முதல் உள்ளங் கால்வரை உணர்ச்சி வேக வெள்ளத்தில் திளைக்க வைப்பதாய் இருக்க வேண்டும்; உயிரனைத்தும் மகிழ்ந்தாடும் ஓசையின்பம் கொண்டதாக வேண்டும்; செம்பாகமான உயர்ந்த கருத்துக் களைத் தழுவியதாக இருக்க வேண்டும்.

**தமிழிசையின் தோன்மை**

தமிழிசை நினைப்பிற்கெட்டாத நெடுங்காலத்திலேயே தோன்றி வளர்ந்தது. இசைத்தமிழைத் தமிழின் ஒரு பகுதி யாக முன்னேயோர் அமைத்து முத்தமிழ் எனத் தமிழை வழங்கினர். மொழியின் ஒரு பிரிவாக இசையினை அமைத்த பெருமை தமிழைத் தவிர வேறு எம்மொழிக்கும் இல்லை என்று சொல்லலாம். தமிழிசைக் கலை வளர்ச்சிக்குக் காரண மானவர் ஏறக்குறைய முப்பதாண்டுகட்கு முன்னர்க் கருணு மிருதசாகரம் என்னும் நூலைச்செய்த **ஆபிரகாம் பண்டிதரே ஆவர்.**

**பாணர்**

பண்ணெடு பாட்டிசைக்கும் மக்கள் பழந்தமிழ் நாட்டில் இருந்தனர். அவர் பாணர் என்று அழைக்கப்பட்டனர். பெண்பாலர் பாடினி எனப்பட்டனர். பாணர் பெருமக்கள் மன்னரோடும் மக்களோடும் கலந்து வாழ்ந்தவர் : குடிகளுக் கும் மன்னவர்க்கும் இடையே அன்பையும் அருளையும் வளர்த் தவர். அருந்தமிழ் அன்னையாகிய அவ்வையார் இப்பாணர் வகுப்பைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது. பிற்காலத் திற் சைவரிற் சிறந்த பாணர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் : வைணவரிற் சிறந்து விளங்கியவர் திருப்பாணுழ்வார்.

**தமிழிசை நூல்கள்**

பாணராற் பாடப்பெற்ற பாடல்களேயன்றி இசையிலக் கண நூல்களும் இருந்தன. ஐம்பெருங் காவியங்களுள் ஒன் ருகிய சிலப்பதிகாரத்தின் உரையில் பல இசை நூல்கள் குறிக்கப்படுகின்றன. இசைநுணுக்கம், வரி,சிற்றிசை, பேரிசை, பெருநாரை முதலியவற்றை அடியார்க்குநல்லார் கூறுகிருர்.

**தமிழிசைக்கருவிகள்**

எண்ணிறந்த இசைக்கருவிகள் இந்நாட்டில் இருந்தன. இவற்றுள் யாழ் ஒன்று. யாழ் என்பது வீணையினும்வேறானது. திருவாசகத்தில், 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்' என இரண்டும் பிரித்துப் பேசப்படுகின்றன. "குழலும் வீணையும் யாழுமென் றினையன" என இக்கருவிகளிரண்டையும் கம்பர் பிரித்துக் காட்டுகிறார். யாழில், சீறியாழ், பேரியாழ், மகர யாழ், வில்யாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் எனப் பல பிரிவுகள் உண்டு ஆயிரம் தந்திகளை உடைய யாழ் ஒன்றைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அந்த யாழின் இயல்பைச் சுவாமி விபுலானந்தர் தமது யாழ் நூலில் விளக்கிக் காட்டுகிறார். மற்றொரு இனிய இசைக்கருவி குழல் ஆகும். குழலிலும் கொன்றையந் தீங்குழல், முல்லையந் தீங்குழல், வேய்ங் குழல் எனச் சில பிரிவுகள் இருந்தன. இவற்றைக் கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ,' 'முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ,' 'அவன் வாய் ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ' என இளங்கோவடிகள் எழுதிக் காட்டுகிறார். இவ்விருவகை இசைக்கருவிகளையும் சேர்த்துத் தெய்வப் புலவர் "குழலினது யாழினிது என்ப" எனக் குறிப்பிடுகிறார். இசைக் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என வகைப்படுத்தி வழங்கினர். தோற்கருவியில் கரடிகை, பேரிகை, கணை, முழவு, முரசு முதலிய பல பிரிவுகள் இருந்தன.

**ஆடலும் பாடலும்**

பண்ணுடைய பாடலேயன்றிக் கண்ணைக் கவரும் ஆடலும் தமிழ் நாட்டின் கலைச் செல்வமாகும். 'ஆடலும் பாடலும் ஆறிரண்டாண்டு மாதவி பயின்றாள்' எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இசைவடிவான இறைவன் நடனம் செய்வதையும் நம் மக்கள் கண்டனர்.

**தமிழிசையின் இடைக்கால, பிற்கால வளர்ச்சி**

பழந்தமிழ்க் கலைகளாம் பாடலும் ஆடலும் பற்பல காரணங்களால் இடைக்காலத்து மங்கலாயின ; வேற்றுருப்பெறலாயின. தமிழ்ப் பண்கள் பல வடமொழிப் பெயர்களைத்

தாங்கிக் கர்நாடக சங்கீதத்தின் பகுதியாயின் என்று ஆராய்ச்சி யாளர் கூறுகிறார்கள்.

சிலப்பதிகார வரிப்பாடல்களும் தெய்வ மணக்கும் தேவாரமும் தேனினுமினிய ஆழ்வாராதிகளின் பிரபந்தங் களும் தமிழிசையின் அடிப்படையாம் அதன் மீது அருண கிரியார், தாயுமானவர், முத்துத்தாண்டவர், அருணாசலக்கவி ராயர், அண்ணாமலை ரெட்டியார், கோபால கிருஷ்ண பாரதி, வேதநாயக சாஸ்திரியார், வேதநாயகம்பிள்ளை முதலிய தெய்வ இசைத்தச்சர் அழகுறத் தமிழிசை அரண்மனையை ஆக்கி அளித்தனர். வடலூர் வள்ளலாரும், பைந்தமிழ்க் கவிஞர் பாரதியும், கவிதையாகிற ஓவியத்தை வரைந்து மணி மண்ட பத்தை அழகுபடுத்தினர். இக்காலத்தும் இசைக் செல்வர் இலக்குமணப் பிள்ளை, புத்தேரி கவிமணி, நாமக்கல் கவிஞர், புதுவை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தவஞானச் செல்வர் சுத்தானந்த பாரதி ஆகியோர் அழகுபடுத்தி வருகின்றனர்.

## இசை ஆராய்ச்சிக் கழகம்

தமிழ்ச் சாகித்தியத்தில் கர்நாடக முறையிலோ இந்துஸ் தானி முறையிலோ கீர்த்தனங்கள், வண்ணங்கள் அமைத்துக் கச்சேரிகள் செய்துவிட்டால் மட்டும் தமிழிசையைப் பேணியது ஆகாது. பழைய தமிழ்ப் பண்கள் எவ்வாறிருந்தன, பழைய இசைக் கருவிகள் எங்ஙனமாய் இருந்தன, பழைய ஆடல் மரபுகள் எத்தகைய பாணியிலிருந்தன என்பனவற்றைக் கண்டு, மீண்டும் அவற்றை மலரச் செய்ய வேண்டும். இதற்கு ஆராய்ச்சி வேண்டும். கருணாமிர்தசாகரம் கண்ட ஆபிரகாம் பண்டிதரும், யாழ் நூல் யாத்த விபுலானந்தரும், இசையியல் இயற்றிய பொன்னையா பிள்ளையும் இந்த ஆராய்ச்சிக்கு வழி காட்டிப் போயினர். அவர்கள் காட்டிய நெறியில் சென்று தமிழிசைக் கலை புத்துயிர் பெறுவதற்கு வேண்டிய ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நாம் அமைக்கவேண்டும்.

## ஓசையின்பமும் ஒருமையின்பமும்

கச்சேரி நடக்கையில் அவை தனித்தனி ஓசை இன்பம் தருகின்றனவே அன்றி அனைத்துங்கூடி ஒருமையின்பம் தருவ

தில்லை என்று நம் கச்சேரிகளைக் கேட்ட மேலைநாட்டு இசைக் கலைஞர்கள் கூறுகிறார்கள். பழந்தமிழர் கண்ட இசை விருந்தில் ஓசை இன்பம், பொருளின்பம், ஒருமையின்பம், எல்லாம் முரணின்றி ஒன்றாயிருந்தன. சிலப்பதிகாரத்தில்,

" பாடிய வாரத்து ஈற்றினின் றிசைக்கும்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாம்
குழல்வழி நின்றது யாழே; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமை
பின்வழி நின்றது முழவே; முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை."

எனக் கூறப்பட்டிருக்கிறது.

## இயற்கையோடியைவதே இசை

இசைக் கருவிகளோடன்றியும் இயற்கையோடும் ஒன்றி நின்றது தமிழிசை. மேலை நாட்டில் மேம்பாடுற்று விளங்கிய வாக்னர் என்னும் இசை வல்லார் இயற்கையை இசை மய மாகக் கண்டனர்; மேகத்திடைத் தோன்றிய இடியையும் தன்னிசையில் காட்டினார். ஆனால் வாக்னருக்கு நெடுங் காலம் முன்னரே இயற்கையோடிசைந்த இசைகண்டு இன் புற்றவர் நம்மவர். காலத்துக்கேற்றவாறு பண்களைப் பாட வேண்டும் என்ற இயற்கை நுட்பமும், இசை நுட்பமும் கண்டவர் தமிழ் மக்கள். நள்ளிரவாகிய யாமத்தில் குறிஞ்சி என்னும் சிறந்த பண் இன்பந் தருவதாகும். நண்பகலில் பாலைப் பண்ணும், மாலைப் பொழுதில் சாதாரியும், எற்படு பொழுதில் செவ்வழியும் இன்பம் செய்யும். வைகறைப் பொழுதிலும் விடியலிலும் மருதம் மகிழ்ச்சியைத் தருவதாகும். 'இயற்கையோடியைவதே இசை. ஏனைய எல்லாம் வசை' என்றார் அன்பர் திரு. வி. க. அந்த நுட்பம் உணர்ந்தவர் தமிழர். அதை உள்ளடக்கியது தமிழிசை.

## கலைத்தேன் திரட்டல்

இசைக்கலை வளர்ச்சியைக் குறித்து எனக்குத் தெரிந்த வற்றை இதுகாறும் சொன்னேன். இறுதியாகக் கலை வளர்க்க முன்வருவோர்க்கு ஒன்று கூற விரும்புகிறேன்; கலை கடல்போல் பரந்தது; வேற்றுமை அறியாதது; ஒற்றுமை ஒன்றே அறிவது.

குறுகிய நோக்கமும் இகலிய மனப்பான்மையுமின்றிக் கலை உலகில் வேலை செய்யவேண்டும். இந்துஸ்தானி, கர்னாடகம் ஆகிய இரண்டுக்கும் காலத்தால் முற்பட்டது தமிழிசை. பழங் காலத் தமிழர்கள் தங்கள் நாட்டு இசையுடன், தெலுங்கு நாடு, ஆரிய நாடு, சிங்கள நாடு முதலிய இடங்களிலிருந்தெல்லாம் பல முறைகளைக் கைக்கொண்டு அவற்றைத் தமிழிசைக் கேற்பச் செய்திருக்கிறார்கள். அங்ஙனம் செய்துகொள்ளலும் முறை என்பது சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையில் கூறப்பட்டிருக்கிறது. பல மலர்களிலிருந்து மதுவைச் சேர்க்கும் வண்டுகள் போல இசை வளங்களை எத்திக்கும் சென்று சேர்த்துத் தமிழிசைச் செல்வத்தை வளர்க்கவேண்டும்.

### கலைக் கழகம் காண்டல்

இதற்கு அடிப்படையாக வேண்டுவது தமிழிசை ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியால், மறந்த பண்களும் இசைக் கருவிகளும் பயிலப்பெறுதல் வேண்டும். புதிய பண்களும் புதிய இசைக்கருவிகளும் தோற்றுவிக்கப்படல் வேண்டும். எண்ணற்ற சங்கீத கிரந்தங்கள் பலமொழிகளில் நமது நாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில், அச்சுப்பெறாமல் ஓலைச்சுவடிகளாத் தனி மனிதர்களிடமும் பொது நூல் நிலையங்களிலும் ஒதுங்கிப் பதுங்கிக் கிடக்கின்றன. கோவன்புத்தூரில் (கோயமுத்தூர்) வேணுகான விசாரத வேணுகோபால் நாயுடு என்பவரிடம் முந்நூற்றுக்கு மேலான மிகப் புராதனச் சங்கீதச் சுவடிகள் வெளியிடப்படாமலிருப்பதாகச் சமீபத்தில் பத்திரிகையில் நான் படித்தேன். இம்மாதிரியாகப் பல மொழிகளிலுமிருக்கும் சங்கீத கிரந்தங்களை வெளியிட முன் வருவோர்க்கும், பழைய தமிழிசையைப் பற்றிய ஆராய்ச்சி செய்வோர்க்கும், ஊக்கமளிக்கப் பரிசுகளும் பட்டங்களும் வழங்கல் வேண்டும்.

### ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் தொண்டு

அதில் அரசாங்கத்தோடு பொது மக்களும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். பொது மக்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஆர்வமும் ஆதரவும் காட்டுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கமும் துணைபுரிய முன்வரும். நிதி மிகுந்தவர் பொற்குவை கொடுத்துக் கலையாராய்ச்சிக் கழகத்தைப் போஷிக்க

வேண்டும். 'வாழ்வு சிறிது; வளர்கலை பெரிது' என்பதை நாளும் நினைந்து, இசைவாணர்களைச் செல்வர்கள் சொல்லாலும் பொருளாலும் ஊக்குவிக்க வேண்டும். இந்தத் துறையில் காலஞ்சென்ற ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் செய்த அருந்தொண்டு மலைமேலிட்ட விளக்குப் போல் ஒளி விட்டுக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி மகிழ்கிறேன்.

**வாழ்த்து**

இத்தகைய அரிய கலையைப் போற்ற முன்வந்த அந்தத் தமிழிசைக் கழகத்தார் நன்முயற்சியை எல்லாம் வல்ல இசைவாணி ஆசீர்வதிப்பாளாக! அனைவர்க்கும் அவள் அருள் சுரப்பாளாக! வாழ்க நம் தமிழ்மொழி! வாழ்க நம் தமிழிசை! வாழ்க இசைக்கலை!

# சித்ரா வாசகம்

## ஐந்தாம் படிவம்

### பொதுப் பகுதி


ஆசிரியர்கள் :

K. S. நாகராசன், M.A.,

விரிவுரையாளர், ஜெயின் கல்லூரி, சென்னை.

&

ஆபிரகாம் அருளப்பன், B.A.,

தமிழ்த்துறைத் தலைவர். அர்ச். சேவியர் கல்லூரி,

பாளையங்கோட்டை.



சித்ரா பதிப்பகம்

ஸ்ரீவைகுண்டம்


பதிப்புரிமை]

[விலை ரூ. 1-4-0.

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

இப்பாட நூல் ஐந்தாம் படிவம்—பொதுப்பகுதிக்கு உரியது. அண்மையில் கல்வித் துறையினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை ஒட்டி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பகுதியில் 400 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதியும், 50 பக்கங்களைக் கொண்ட உரைநடைப்பகுதியும் வேண்டும் என்று பாடத்திட்டம் விதித்துள்ளது ஆனால், இங்கு அவ்வளவிற்கு மேலும் பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஆகவே, பயிலும் மாணவர்கள் தம் மன நிலைமைக்கும், ஆசிரியர் தம் விருப்பத்திற்கும் ஏற்றவாறு வேண்டிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள இந்நூல் இடமளிக்கிறது.

ஒவ்வொரு செய்யுட் பாடத்தின் தொடக்கத்திலும் ஆசிரியர், நூல் ஆகியவை பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியின் ஈற்றில் அருஞ் சொற் பொருள் தரப்பட்டுள்ளது. இவை மாணவர்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

உரைநடைப் பகுதியில் பழந்தமிழ் உரைநடைக்கு எடுத்துக் காட்டாக ஒரு பாடமும், வாழும் தமிழுக்கு எடுத்துக் காட்டாகப் பேரறிஞர் பலருடைய எழுத்தோவியங்களும் காணப்படுகின்றன. விஞ்ஞானம், வரலாறு, பிரயாணம், இலக்கியம், சிற்பம், பொருளாதாரம் முதலிய பலதுறைகளைப் பற்றிய இன்தமிழ்க் கட்டுரைகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. இறுதியில் சுவை மிகுந்த நாடகம் ஒன்று தரப்பட்டுள்ளது. 'எக்கருத்தையும் தமிழில் செவ்வனே விளக்க முடியும்' என்ற நம்பிக்கை மாணவர் மனத்தில் தோன்ற இவை துணை புரியும் என்பதில் ஐயமில்லை. இவற்றைப் படிக்கும் மாணவர் தமிழறிவு பெறுவதுடன், தமிழின்பம் நுகரவும் இயலும். அதற்கு வேண்டிய முயற்சியில் மாணவர்களை ஊக்குவிக்குமாறு தமிழாசிரியப் பெருமக்களைப் பெரிதும் வேண்டுகிறோம்.

தத்தம் பாடல்களையும் உரைநடைப் பாடங்களையும் இந்நூலில் சேர்த்துக்கொள்ள இசைவு தந்துதவிய பெரியோர் அனைவர்க்கும் எமது நன்றி உரியது.

ஆசிரியர்கள்.

# உள்ளுறை

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | வாழ்த்துப் பகுதி | | |
| 1. | சிவபெருமான் | ... | 1 |
| 2. | திருமால் | ... | 1 |
| 3. | இயேசுநாதர் | ... | 2 |
| 4. | முகமது நபி | ... | 2 |
| II | அறவுரைப் பகுதி | | |
| 1. | திருக்குறள் | ... | 4 |
| 2. | சோமேசர் முதுமொழி வெண்பா | ... | 7 |
| 3. | திரிகடுகம் | ... | 8 |
| III | கதைப் பகுதி | | |
| 1. | கம்பராமாயணம் | ... | 9 |
| 2. | சிலப்பதிகாரம் | ... | 12 |
| 3. | இரட்சணிய யாத்திரிகம் | ... | 15 |
| 4. | மனோன்மணீயம் | ... | 17 |
| IV | பல்சுவைப் பகுதி | ... | 21 |
| | குறிப்புரை | ... | 29 |


## உரைநடை


| | | | |
|---|---|---|---|
| 1. | உரை கண்ட வரலாறு<br>இறையனார் | ... | 37 |
| 2. | சிறை நீக்கிய செய்யுள்<br>டாக்டர் உ. வே. சாமிநாதையர் | ... | 39 |
| 3. | அடைக்கல மாதா<br>பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை | ... | 44 |
| 4. | தொண்டை நாடு<br>கனம் எம். பக்தவத்ஸலம் | ... | 53 |
| 5. | நாடும் நகரமும்<br>டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் | ... | 60 |
| 6. | பால்<br>திரு. R. K. விசுவநாதன் | ... | 68 |
| 7. | தமிழகத்துக் கோவில்கள்<br>டாக்டர் மா. இராசமாணிக்கனார் | ... | 75 |
| 8. | எனது ஜப்பான் செலவு<br>திரு. சு. இராமசுவாமி நாயுடு | ... | 82 |
| 9. | செத்தும் கொடுத்தான் சீதக்காதி<br>வித்துவான் க. நயினார் முகம்மது | ... | 87 |
| 10. | கிராமப் பொருளாதாரம்<br>திரு. நேமம், கா. நடராசன் | ... | 93 |
| 11. | சிங்கப்பூர்<br>திரு. சோம. லெ. இலக்குமணச்செட்டியார் | ... | 100 |
| 12. | மணிமேகலை<br>கவியரசு. ரா. வேங்கடாசலம் பிள்ளை | ... | 106 |

# I. வாழ்த்துப் பகுதி

## 1. சிவபெருமான்

### திருநாவுக்கரசர்

தேவாரத்துள் 4, 5, 6-ஆம் திருமுறைகளை அருளியவர் திருநாவுக்கரசர். சைவ சமய குரவர் நால்வருள் இவர் ஒருவர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபில் தோன்றினார்; பல கலைகளிலும் வல்லவராகிச் சமண சமயத்தில் சேர்ந்து, தருமசேனர் என்ற பட்டம் பெற்றுச் சிறந்து பின்பு சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்றார். இவருக்கு அப்பர் சுவாமிகள் என்ற பெயரும் உண்டு. இவருடைய காலம் ஏழாம் நூற்றாண்டு என்பர்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (1)

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. (2)

## 2. திருமால்

### ஆண்டாள்

ஆண்டாள், ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்திருந்த பெரியாழ்வாரால் ஒரு திருத்துளவச் செடியின் அடியில் கண்டெடுக்கப் பெற்று வளர்க்கப் பெற்றார். இளமை முதலே திருவரங்கத்து எம்பெருமானிடம் ஆராக்காதல் கொண்டு அவனையே நினைந்து உருகி வந்தார். இவரிடம் கருணை கொண்ட எம்பெருமான் இவரைத் திருவரங்கத்திற்கே வருவித்து ஆட்கொண்டார். இவர் பாடிய நூல்கள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் ஆம். இவர் வாழ்ந்திருந்த காலம் 8-ஆம் நூற்றாண்டு ஆகும்.

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்கு தென்னிலங்கைச் செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்.

## 3. இயேசுநாதர்

### வீரமாமுனிவர்

இப்பாடல் தேம்பாவணி என்னும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது. இதன் ஆசிரியர் 'பெஸ்கி' என்னும் இயற்பெயர் கொண்டவர்; இதாலி நாட்டினர். கிருத்துவ சமயப் பிரசாரத்திற்காகத் தமிழ்நாடு வந்த இவர் தமிழ்மொழியை நன்கு பயின்று சிறந்த புலமை பெற்றார். இவர் தேம்பாவணி என்னும் அரிய காப்பியத்தை எழுதியுள்ளார். அதை அரங்கேற்றிய பொழுது, புலவர்கள் அவருக்கு 'வீரமாமுனிவர்' என்ற பட்டம் வழங்கினர். இவர் இயற்றிய பிறநூல்கள் :- திருக்காவலூர் கலம்பகம், சதுர் அகராதி, வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருகதை. இவர் விளங்கிய காலம் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

கார்த்திரள் மறையாக் கடலினுள் மூழ்காக்
கடையிலா தொளிர்பரஞ் சுடரே!
நீர்த்திரள் சுருட்டி மாறலை யின்றி
நிலைபெறும் செல்வநற் கடலே!
போர்த்திரள் பொருதக் கதுவிடா அரணே!
பூவனந் தாங்கிய பொறையே!
சூர்த்திரள் பயக்கும் நோய்த்திரள் துடைத்துத்
துகள் துடைத் துயிர் தரும் அமுதே!

## 4. முகமது நபி

### உமறுப் புலவர்

இப்பாடல் 'சீறாப் புராணம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. 'சீறா' என்னும் சொல் 'ஸீறத்' என்ற அரபி மொழியின் திரிபு; வாழ்க்கை வரலாறு என்பது இதன் பொருள்.

இது நாயகத்தின் வரலாற்றைக் கூறும் நூல். இதனைப் பாடியவர் உமறுப் புலவர். இவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எட்டயபுரத்தைச் சேர்ந்தவர். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் உயிரின் மனத்தள வுரைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

# II. அறவுரைப் பகுதி

## 1. திருக்குறள்

### திருவள்ளுவர்

*திருக்குறள் என்னும் நூல் 133 அதிகாரங்களைக் கொண்ட அரிய நீதி நூல். ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறட்பாக்கள் உள. உலக இலக்கியத்தில் சிறந்த ஓரிடத்தை இந்நூல் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் வள்ளுவக் குடியைச் சேர்ந்தவர். அரசனது ஆணையை முரசறைந்து மக்களுக்குத் தெரிவிப்போர் அக்குடியினர். இவர் மதுரையைச் சேர்ந்தவரென்றும் மயிலையைச் சேர்ந்தவரென்றும் வேறுபட்ட கொள்கைகள் உள்ளன. இப்பெருநூலுக்குப் பதின்மர் உரை இயற்றியுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சாலச் சிறந்ததாம். திருவள்ளுவர் கடைச் சங்க காலத்தவர்.*

#### வெருவந்த செய்யாமை

*அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்*
*பேஎய்கண் டன்ன துடைத்து.* (1)

#### கண்ணோட்டம்

*மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ*
*டியைந்துகண் ணோடா தவர்.* (2)

#### ஒற்றாடல்

*கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்*
*உகாஅமை வல்லதே யொற்று.* (3)

#### ஊக்கமுடைமை

*உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து*
*வள்ளிய மென்னுஞ் செருக்கு.* (4)

#### ஆள்வினையுடைமை

*பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்*
*தாள்வினை யின்மை பழி.* (5)

#### இடுக்கணழியாமை

*மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற*
*இடுக்க ணிடர்ப்பா டுடைத்து.* (6)

### அமைச்சு

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல். (7)

### சொல்வன்மை

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். (8)

### வினைத்தூய்மை

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. (9)

### வினைத்திட்பம்

கடைக் கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும். (10)

### வினைசெயல்வகை

வினையான் வினையாக்கிக் கோட லனைகவுள்
யானையால் யானையாத் தற்று. (11)

### தூது

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. (12)

### குறிப்பறிதல்

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ? உவப்பினுங்
காயினுந் தான்முந் துறும். (13)

### அவையஞ்சாமை

பகையகத்துச் சாவா ரெளிய ரரியர்
அவையகத் தஞ்சா தவர். (14)

### நாடு

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பு மில்லது நாடு. (15)

### அரண்

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண். (16)

### பொருள்செயல்வகை

*அறனீனு மின்பமு மீனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்.* (17)

### படைமாட்சி

*ஒலித் தக்கா லென்னு முவரி யெலிப்பகை*
*நாக முயிர்ப்பக் கெடும்.* (18)

### படைச்செருக்கு

*கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்*
*மெய்வேல் பறியா நகும்.* (19)

### நட்பு

*நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு.* (20)

### நட்பாராய்தல்

*ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்*
*கேண்மை யொரீஇ விடல்.* (21)

### கூடாநட்பு

*தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்*
*அழுதகண் ணீரு மனைத்து.* (22)

### பேதைமை

*நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
*பேணாமை பேதை தொழில்.* (23)

### புல்லறிவாண்மை

*ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்*
*போஒ மளவுமோர் நோய்.* (24)

### இகல்

*இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை*
*மிகலூக்கி னூக்குமாங் கேடு.* (25)

## 2. சோமேசர் முதுமொழி வெண்பா

### மாதவச் சிவஞான யோகிகள்

இந்நூல் குளத்தூரில் உள்ள சோமேசர் என்னும் இறைவன் மீது பாடப்பெற்றது. இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் ஈற்றில் ஒரு திருக்குறளை அமைத்து, அதற்கு விளக்கமாக ஒரு வரலாற்றை முதலிற் கூறியுள்ளார் ஆசிரியர். இவர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுரத்தில் வேளாளர் குலத்தில் தோன்றியவர். முக்களாலிங்கர் என்பது இவர் இயற்பெயர். இவர் திருவாவடுதுறை மடத்தில் சேர்ந்து துறவியாகி, தமிழிலக்கண, இலக்கியங்களை நன்கு பயின்றார். பின்னர் தமிழ் மொழிக்கும், சைவத்திற்கும் தொண்டு செய்து புகழ்பெற்றார். இவரது காலம் ஏறத்தாழ நூற்றறுபது ஆண்டுகட்கு முன்னர்.

### ஒழுக்கமுடைமை

*தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்பு கண்ணன்*
*தூயதலாச் சொல்லுரையான் சோமேசா!—வாயின்*
*ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய*
*வழுக்கியும் வாயாற் சொலல்* (1)

### பொறையுடைமை

*ஓட்டலன்செய் தீமைக் கொறுதுநம ரென்றுரைத்தார்*
*கட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா!—முட்ட*
*ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றுந் துணையும் புகழ்.* (2)

### வாய்மை

*பிள்ளையுட னுண்ணப் பேசியழைத் தாரன்பு*
*துள்ளு சிறுத்தொண்டர் சோமேசா!—உள்ளுங்கால்*
*பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்த்த*
*நன்மை பயக்கு மெனின்.* (3)

### வெகுளாமை

*பல்லவர் கோன் வந்து பணியக் கருணைசெய்தார்*
*தொல்லை நெறி வாகீசர் சோமேசா!—கொல்ல*
*இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்*
*புணரின் வெகுளாமை நன்று.* (4)

# 3. திரிகடுகம்

## நல்லாதனார்

*திரிகடுகம் என்னும் நீதி நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று பொருள்களுக்கும் திரிகடுகம் என்று பெயர். இம்மூன்றும் சேர்ந்த மருந்து உடல் நோயைத் தீர்ப்பதுபோல, ஒவ்வொன்றும் மும்மூன்று கருத்துக்களை உடைய இப்பாட்டுக்கள் அறியாமை நோயைத் தீர்ப்பனவாம். இதன் ஆசிரியர் வைணவர். இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.*

*தன்னச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்,*
*மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்,*
*என்றும் அழுக்கா றிகழ்ந்தானும் இம்மூவர்*
*நின்ற புகழுடை யார்.* (1)

*மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்*
*பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்—உண்ணுநீர்*
*கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்*
*சாவா உடம்பெய்தி னார்.* (2)

*உண்பொழுது நீராடி உண்டலும், என்பெறினும்*
*பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்*
*சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்*
*தூயம் என்பார் தொழில்.* (3)

*தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்*
*கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய*
*பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்*
*செல்வம் உடைக்கும் படை.* (4)

*நன்றிபயன் தூக்கா நாணிலியும், சான்றோர் முன்*
*மன்றில் கொடும்பா டுரைப்பானும், நன்றின்றி*
*வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்*
*எச்சம் இகழ்ந்துவாழ் வார்.* (5)

# III. கதைப் பகுதி

## 1. கம்பராமாயணம்

### கம்பர்

கம்பரால் இயற்றப்பெற்ற இராம சரித்திரம் கம்பராமாயணம் என்ற பெயருடன் இலங்குகிறது. கம்பர் தஞ்சை ஜில்லாவிலுள்ள தேரழுந்தூர் என்னுமிடத்தில் உவச்சர் மரபில் தோன்றியவர். இவரை குலோத்துங்க சோழனும், திருவெண்ணெய் நல்லூரிலிருந்த சடையப்ப வள்ளலும் ஆதரித்தனர். இவரது சமயம் வைணவம். இவரது காலம் 12-ஆம் நூற்றாண்டு என்னலாம். இவர் இயற்றிய பிற நூல்கள் : சடகோபரந்தாதி, சிலையெழுபது, ஏரெழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதியந்தாதி. கீழ்வரும் பாடல்கள் யுத்தகாண்டத்தில் விபீடணன் அடைக்கலப்படலத்திலிருந்து எடுக்கப்பெற்றன.

### விபீடணன் அடைக்கலம்

மாருதி வினய வார்த்தை செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
பேரறி வாள நன்று நன்றெனப் பிறரை நோக்கிச்
சீரிது மேலிம் மாற்றம் தெளிவுறத் தேர்மி னென்று
ஆரிய னுரைப்ப தானு னனைவரு மதனைக் கேட்டார். (1)

கருத்துற நோக்கிப் போந்த காலமு நன்று காதல்
அருத்திய மரசின் மேற்றே யறிவினுக் கவதியில்லை
பெருத்துயர் தவத்தினானும் பிழைப்பில னென்னும் பெற்றி
திருத்திய தாகு மன்றே நம்வயிற் சேர்ந்த செய்கை. (2)

மற்றினியுரைப்ப தென்னை மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி யன்ன தன்றெனிற் பிறிதொன்றானும்
வெற்றியே பெறுகதோற்க வீகவீ யாதுவாழ்க
பற்றுத லன்றி யுண்டோ அடைக்கலம் பகர்கின்றானை. (3)

இன்றுவந் தானென் றுண்டோ எந்தையை யாயை முன்னம்
கொன்றுவந் தானென் றுண்டோ அடைக்கலங் கூறுகின்றான்
தொன்றுவந் தன்பு செய்யுந் துணைவனுமவனே பின்னைப்
பின்றுமென் றாலு நம்பாற் புகழன்றிப் பிறிதுண்டாமோ. (4)

பிறந்த நாள் தொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்த நாளுண்டோ வென்னைச் சரணென வாழ்கின்றானைத்
துறந்த நாட்கின்று வந்து துன்னினான் சூழ்ச்சி யாலே
இறந்த நாளன்றோவென்று மிருந்தநா ளாவதென்றான். (5)

இடைந்தவர்க் கபயம் யாமென் றிரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி யால முண்டவற் கண்டிலீரோ
உடைந்தவர்க் குதவா னாயி னுள்ளதொன் றியாதாயின்
அடைந்தவர்க் கருளா னாயி னறமென்னா மாண்மை யென்னாம்?

பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்வான் விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிதன்றோ. (7)

போதகமொன்று கன்றி யிடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன் அபயமென் றழைத்த வந்நாள்
வேதமு முடிவுகாணா மெய்ப்பொருள் வெளி வந்தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பிலாதார். (8)

நஞ்சினை மிடற்றுவைத்த நகைமழு வாள னானுந்
தஞ்சென முன்னந்தானே தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினோ னபயமென்ற அந்தணற் காகி யந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மையுண்டோ.

சரணெனக் கியார்கொ லென்று சானகி யழுது சாம்ப
அரணுனக் காவென் வஞ்சி யஞ்சலென் றருளி னெய்தி
முரணுடைக் கொடியோன் கொல்ல மொய்யமர் முடித்துத் தெய்வ
மரண மென்தாதை பெற்ற தென்வயின் வழக்கன்றாமோ. (10)

உய்யநிற் கபய மென்றா னுயிரைத் தன் னுயிரி னோம்பாக்
கையனு மொருவன் செய்த உதவியிற் கருத்திலோனும்
மையறு நெறியி னோக்கி மாமறை நெறியினின்ற
மெய்யினைப் பொய்யென் றானு மீள் கிலா நரகில் வீழ்வார். (11)

சீதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வே னென்று பேணிய விரதப்பெற்றி
வேதிய ரபய மென்றார்க் கன்று நான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற அவ்வுரை கடக்கலாமோ. (12)

காரியமாக வன்றே யாருக கருணையோர்க்குச்•
சீரிய தன்மை நோக்கி னிதனின் மேற் சிறந்ததுண்டோ
பூரிய ரேயுந் தம்மைப் புகல் புகுந் தோர்க்குப் பொன்று
ஆருயிர் கொடுத்துக் காத்தா ரெண்ணிலா அரசரம்மா. (13)

## விபீடணனை அழைத்துவர இராமன் சுக்கிரீவனுக்குக் கட்டளையிடுதல்

ஆதலா னபய மென்ற பொழுதத்தே யபய தானம்
ஈதலே கடப்பாடென்ப தியம்பினீ ரென்பால் வைத்த
காதலா னினிவே றெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனைநீயே யென்வயிற் கொணர்தி யென்றான். (14)

## சுக்கிரீவன் அவ்வாறே செல்லுதல்

ஐயுற வெல்லாந் தீரும் அளவையா யமைந்த தென்றே
தெய்வநா யகனு துள்ளந் தேறிய வடைவே தேறிக்
கைபுகற் கமைவ தானுன் கடிதினிற் கொணர்வ லென்னு
மெய்யினுக் குறையுளான வொருவன் பால் விரைவிற் சென்றான்.

## சுக்கிரீவன் விபீடணனுடன் திரும்பி வருதல்

மொய்தவழ் கிரிகண் மற்றும் பலவுடன் முடுகிச்செல்ல
மைதவழ் கிரியு மேருக் குன்றமு வருவதென்னச்
செய்தவம் பயந்த வீரர் திரண்மர மேழுந்திய
எய்தவ னிருந்த சூழ லிருவரு மெய்தச் சென்றார். (16)

## விபீடணன் இராமபிரானைக் காணுதல்

மார்க்கடஞ் சூழ்ந்த வைப்பி னிளையவன் மருங்கு காப்ப
நாற்கட லுடுத்த பாரி னாயகன் புதல்வ னாமப்
பாற்கடல் சுற்ற விற்கை வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த தெனப்பொலி வானைக் கண்டான். (17)

## விபீடணன் இராமபிரானை வணங்குதல்

கரங்கள்மீச்சுமந்து செல்லுங் கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களு முருக நோக்குங் காதலன் கருணை வள்ளல்
இரங்கிய னேக்குந் தோறும் இருநிலத் திறைஞ்சு கின்றான்
வரங்களின் வாரி யன்ன தாளிணை வந்து வீழ்ந்தான். (18)

### இராமபிரான் வீபீடணனுக்கு இருக்கை ஈதல்.

அழிந்தது பிறவி யென்னும் அகத்தியன் முகத்துக் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின் மார்புற வணங்கி னானைப்
பொழிந்த தோர் கருணை தன்னாற் புல்லின னென்று தோன்ற
எழுந்தினி திருத்தி யென்னு மலர்க்கையா லிருக்கை யீந்தான் (19)

### இனி என்றைக்கும் இலங்கையரசு உன்னதே என்றான் இராமன்.

ஆழியா னவனை நோக்கி யருள் சுரந் துவகை தூண்ட
ஏழினோ டேழாய் நின்ற உலகுமென் பெயரு மெந்நாள்
வாழுநா ளன்று காறும் வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்றான். (20)

## 2. சிலப்பதிகாரம்

### (இளங்கோவடிகள்)

சிலப்பதிகாரம் என்பது தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த கோவலன் என்னும் வாணிகன் தன் மனைவியான கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். வாணிகஞ் செய்து பொருள் தேடும் பொருட்டுத் தன் மனையாளின் காற்சிலம்பை விற்க முற்பட்டான். அப்போது பாண்டியனது அரண்மனையைச் சேர்ந்த பொற்கொல்லன் ஒருவன் கோவலன்மீது திராப்பழி சுமத்தி அவனைக் கள்வனெனக் கூறினான். அவன் பேச்சை நம்பிய பாண்டியன் கோவலனைக் கொன்றான். இச்செய்திகளைக் கூறுவது இக்காப்பியம். இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனுடைய தம்பி; துறவறம் பூண்டு அறநெறியிலேயே வாழ்க்கையை நடத்திய பெரியார். இவர் சைன சமயத்தினர். இவருடைய காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர்.

### கண்ணகி வழக்குரைத்தல்

"வாயிலோயே! வாயிலோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!
'இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள்' என்று

'அறிவிப்பாயே ! அறிவிப்பாயே !" என
வாயிலோன்,
" வாழி. எங்கொற்கை வேந்தே ! வாழி ;
தென்னம் பொருப்பின் தலைவ ! வாழி ;
செழிய ! வாழி ; தென்னவ வாழி ;
பழியொடு படராப் பஞ்சவ வாழி ;

அடர்ந்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள் ,
அறுவர்க்கிளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு. சூருடைக்

கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள் ;
செற்றனள் போலும் ! செயிர்த்தனள் போலும் !
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்.
கணவனை இழந்தாள் கடையகத்தாளே " என,

" வருக மற்றவள் ; தருக ஈங்(கு)" என,
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
" நீர் வார்கண்ணை ! என்முன் வந்தோய் !—

யாரையோ நீ ? மடக்கொடியோய் !" எனத்,
" தேரா மன்ன ! செப்புவதுடையேன் ;
'எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க,

ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்
தான் தன்,
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என்பதியே ; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி,—

வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ் கழல் மன்னா ! நின்னகர்ப் புகுந்திங்கு
என் காற் சிலம்பு பகர்தல் வேண்டி,
நின்பால்
கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பதென் பெயரே " எனப்—

" பெண் அணங்கே !
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று ;
வெள்வேற் கொற்றம்காண்," என, ஒள்ளிழை
" நற்றிறம் படராக் கொற்கை வேந்தே !
என் காற் சிலம்பு மணியுடை அரியே," எனத்
" தேமொழி ! உரைத்தது செவ்வை நன்மொழி ;

யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே ;
தருகெ"னத் தந்துதான் முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு டைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே ;
மணி கண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,

" பொன் செய் கொல்லன் தன் சொற் கேட்ட
யானோ அரசன் ? யானே கள்வன் !
மண்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது ! கெடுகவென் ஆயுள்!" என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே ;......

தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

## வெண்பா

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

## 3. இரட்சணிய யாத்திரிகம்

### எச். ஏ. கிருஷ்ண பிள்ளை

இந்நூல் ஜான் பனியன் என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றி யுள்ள ஒரு நூலின் (Pilgrim's Progress) தழுவல். இரட்சிப்பு அடைய வேண்டிய ஆன்மாவினுடைய மோட்ச யாத்திரையைப் பற்றிக் கூறுவது இந்நூல். இதன் ஆசிரியர் பாளையங் கோட்டைக்கு அருகிலுள்ள ரெட்டியார்பட்டி என்ற ஊரில் 1827-இல் பிறந்தவர்; வேளாள குலத்தைச் சேர்ந்தவர். தம் நாற் பதாம் வயதில் இவர் கிறித்துவ சமயத்தைத் தழுவினார். சிறந்த புலவரான இவர் கிறித்துவ சார்புடைய பல நூல்களை இயற்றி யுள்ளார்.

### இயேசுநாதர் உயிர்பெற்றெழுதல்

மெய்கண்ட விடத்துப் பொய்ம்மை
வெருத்தென வெருத்த திந்து
கய்கண்ட களவி னுக்கங்
கரந்தெனக் கரந்த விண்மீன்
பொய்கண்டு மருண்ட வுள்ளம்
போலொளி யிழந்த தீபம்
மய்கண்ட கங்குல் வாட்டும்
வைகறை கண்டு கண்டே. (1)

இன்னதோ ரமையந் தன்னில்
இருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய
பரகதிப் பயனை யீட்டித்
துன்னிய சடவி யோகத்
துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்தன்
உயிர்த்தெழுந் தருளிப் போந்தார். (2)

வார்த்தையாய் நடுவ ராகி
மன்னுயிர்க் கிரட்சை நல்க
மூர்த்தியாய்ச் சமாதி கூடி
முறைவழா துயிர்த்தெ ழுந்த

தீர்த்தனைத் தரிசித் தேத்திச்
'செய செய' என்று போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி
பெய்தனர் கெழுமி விண்ணோர் (3)

ஆயபே ரன்பு மல்கும் ஆழியி லுதித்து மாந்தர்
மீயுயர் விண்ணோ ராக விளங்குபுண் ணியவே தாந்த
ஆயிரங் கரங்க ளோச்சி அலர்பரஞ் சுடரைக் காண்பான்
சேயொளி பரப்பிக் கீழ்பால் தினகரன் உதயஞ் செய்தான். (4)

நம்பிரான் உயிர்த்தெ ழுந்த நலம்பெறு முகூர்த்தந் தன்னில்
அம்புவி யதிர வஞ்சிக் காவல ரயர்ந்து விழ
உம்பர்நின் றிழிந்த தேவ தூதரோ ரிருவர் ஒல்லை
இம்பரிற் சேம வைப்பை எதிர்த்தனர் பகைவர் எஞ்ச. (5)

இருள்புலர் காலை கண்ட ஏந்திழை மாரோர் மூவர்
தெருளுறீஇ எழுந்தெம் மையன் சேமவைப் பதனை யண்மி
மருளறச் சமாதி வாயில் திறவுண்ட மரபை நோக்கி
வெருளுறீஇக் கலங்கி நின்றார் வெய்துளந் திகைத்து மாதோ! (6)

ஆயிடை யருகர் நின்றும் அவிரொளி மின்னி னூர்ந்த
தூயுடை பரித்த தேவ தூதரோ ரிருவர் தோன்றி
'நீயிரிச் சேம வைப்பில் நேடுவ தெவன்கொல் சீவ
நாயகன் தன்னை முன்னர் நவின்றவா சகத்தை ஓர்மின்' (7)

'ஈண்டுளா ரல்லர் சீவன் இயைந்தெழுந் தருளி னாரக்
காண்டகு நம்பி நும்முன் கலிலெய நாடு சேர்வர்
பூண்ட மெய்யன்ப ருக்குப் புகலுமிப் புதுமை' என்னாச்
சேண்டலத் தெழுந்து போனார் நிகழ்ந்தவை தெரியச் செப்பி (8)

உன்ன தேசன் உயிர்த்தெழுந் தாரெனச்
சொன்ன சொல்லமு தஞ்செவி தோய்தலும்
மன்னு நித்திய வாழ்வுகை வந்தெனப்
பொன்ன னார்க்குச் சிறந்தது புத்துயிர். (9)

உரையி றந்த வுவகைப் பெருங்கடல்
கரைபு ரண்டு கதித்ததுக் காக்கினி
விரைவின் மாய்ந்திட மெல்லிய லாரெழுந்து
'உரைசெய் வாந்திருத் தொண்டர்க்கு' என் றோடினார். (10)

தூதர் சொற்ற சுமங்கல வார்த்தைகொண்
டேத மில்லவர் ஏகுழி எம்முயிர்
நாதன் கண்ணெதிர் தோன்றி 'நலங்கிளர்
மாத ரீர்நன்கு வாழ்'கென வாழ்த்தினர். (11)

அருளின் வாழ்வை அறங்கிளர் ராரணப்
பொருளை யன்பின் புணரியைப் புங்கவர்
தெருளுஞ் சின்மய தேசிக மூர்த்தத்தை
மருளொன் றின்றி மடந்தையர் நோக்கியே, (12)

உழுவ லன்பொ டுளங்கனிந் தொல்லெனக்
கழுதின் வன்றலை யைத்தெறு காற்றுணை
தொழுது வீழ்ந்தனர் பன்முறை தோத்திரித்
தெழுது பாவையன் னரினி தேத்தினர். (13)

'நன்று யாவும் நலிவுறு கேடுருக்
கின்றி யம்பி எனைக்கலி லேயநாட்
டொன்ற விள்ளுமின் உள்ளங் கலங்கன்மின்
என்று ரைத்துக் கரந்தனர் எம்பிரான். (14)

## 4. மனோன்மணீயம்

### பேராசிரியர். சுந்தரம் பிள்ளை

மனோன்மணீயம் என்பது ஓர் இனிய செந்தமிழ் நாடக நூல். நூல் முழுதும் செய்யுள் நடையிலேயே இயற்றப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் 1855-ஆம் ஆண்டில் திருவிதாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் ஊரில் வேளாள மரபில் தோன்றியவர். திருவனந்தபுரம் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் தொண்டாற்றிப் புகழ்பெற்றவர்; 1891-ஆம் ஆண்டில் மனோன்மணீயம் என்னும் இந்நூலை எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய பிற நூல்கள், நூற்றொகை விளக்கமும், திருஞான சம்பந்தர் காலவாராய்ச்சியும் ஆம்.

சேர நாட்டு அரசனான புருடோத்தமன் பாண்டி நாட்டின் மேல் படையெடுத்துப் புறப்பட்டான். அச்செய்தி அறிந்து பாண்டி மன்னனான ஜீவகனும் போருக்கு ஆயத்தமானான். இரு

படைகளும் திருநெல்வேலிக்கு எதிரிலே கைகலந்தன. அத்தருணத்தில் தன் படை வீரரை நோக்கி ஜீவகன் கூறுவதாக அமைந்துள்ளது கீழ்க் காணும் பகுதி

ஜீவ. பொதியமா மலையிற் புறப்பட் டிங்குதன்
படியே யுலாவுமிச் சிறுகால், பணிந்துமற்று
" அடியேம் " எனத்திரி பவர்க்கோ உயிர்ப்பு!
படைகள், ஹே! ஹே!
ஜீவ. கோட்டமி லுயிர்ப்போ கூறீர்; அன்ன

நாட்டபி மானமில் நடைப்பிண மூச்சும்?
படைகள் சிச்சீ! சிச்சீ!
ஜீவ. சேனையோ டிவ்வழி திரிந்துநேற் றிரவினுந்
திருவனை யார்களுஞ் சேய்களுங் கொண்ட
வெருவரு நித்திரைக் குறுகண் விளைத்துநும்

பாசாபி மானமும், தேசாபி மானமும்
பொருளெனக் கருதா தருணிறை நுமது
தாய்முலைப் பாலுடன் வாய்மடுத் துண்டநல்
ஆண்மையும் சுதந்தரக் கேண்மையும் ஒருங்கே
நிந்தைவஞ் சியர்செய வந்தநுங் கோபம்

முற்று மியல்பே. மற்றுதன் குகையுள்
உற்றரி முகமயிர் பற்றிடி னதற்கக்
குறும்பா லெழுஞ்சின மிறும்பூது அன்றே!
உரிமைமே லாண்மைபா ராட்டார் சாந்தம்,
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்;

அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னினும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
யன்றோ வானோர்க் கென்றுமே யுவப்பு!
வந்தவிக் கயவர்நுஞ் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற் கவரே யிந்தன மாகுக!

படைகள். ஆகுக! ஆகுக.
ஜீவ. இன்றுநீர் சிந்து மிரத்தமோர் துளியும்,
நின்றுகம் பலவு நிகழ்த்துமே "இந்தப்

பாண்டிய னுரிமை பாராட்டும் பண்பிலர்;
தீண்டன்மின் திருந்தலிர்! அவர்தஞ் செருக்கு.

சுதந்தர மவர்க்குயிர்; சுவாசமற் றன்று.
நினையுமின் நன்றாய்க் கனவினு மிதனை."—
என முரசறையுமே யெத்திசை யார்க்கும்
இத்தனிப் போரினீ ரேற்றிடுங் காயஞ்
சித்தங் களித்து, சயமா துமக்கு

முத்தமிட் டளித்த முத்திரை யாகி
யெத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்!

படைகள். ஜே! ஜே!

ஜீவ. போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்கது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!

அனந்தந் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினந் தாமனு பவிக்குஞ் சுதந்தரந்
தந்ததம் முன்னோர் பொறுத்தபுண் ணெண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்.
என்று லப்புண் "இறந்து கோட்டது"

அன்றோ? அறைவீர். ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே-எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைத்தார்?
புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்?
கணங்கணந் தோன்றிக் கணங்கணம் மறையும்

பிணம்பல. இவரெலாம் பிறந்தா ரென்பவோ!
உதும்பர தருவி லொருகனி யதனுட்
பிறந்திறு மசக மிவரிலுங் கோடி.
பிறந்தா ரென்போர் புகழுடன் சிறந்தோர்.
அப்பெரும் புகழுடம் பிப்படி யின்றிதோ!

கலபமாய் நுமக்கெதி ரணுகலால், துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம்.
ஒழுக்கமற் றன்றது வெனினும், உம்மேல்
அழுக்கா றுஞ்சிறி தடைந்தோம். நும்மோடு
இத்தினம் அடையு மிணையிலாப் பெரும்புகழ்

எத்தனை யாயிர மாயிரங் கூறிட்
டொத்ததோர் பங்கே யுறுமெனக் கெனவே
யோடுமோர் நினைவிங் கதனால், வீரர்காள்!
நீடுபோர் குறித்திவண் நின்றோர் தம்முள்
யாரே யாயினுஞ் சேராந் தங்கள்

உயிருடம் பாதிகட் குறுமயர் வுன்னிச்
சஞ்சல மெய்துவோ ருண்டெனிற் சாற்றுமின்.
வஞ்சக மில்லை. என்வார்த்தையீ துண்மை.
மானமோ டவரையிம் மாநகரதனுட்
சேமமா யின்றிருத் திடுவர். திண்ணம்.

உத்தம மாதர்க ளுண்டுமற் றுங்கே
யெத்தனை யோபேர். இவர்க்கவர் துணையாம்.

# IV. பல்சுவைப் பகுதி

## 1. மருகல் நாட்டுத் தஞ்சாவூர்

### சேக்கிழார் சுவாமிகள்

*சேக்கிழார் சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர். அருண்மொழித் தேவர் என்பது இவரது இயற்பெயர். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனது முதல் அமைச்சராக இருந்தார். 'உத்தம சோழப் பல்லவர்' என்ற பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. தில்லை நடராசப் பெருமான் 'உலகெலாம்' என்று அடி எடுத்துத்தர, இவர் திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்தார். நல்ல தமிழறிவும் சிறந்த பக்திச் சுவையும் நிரம்பிய இவருடைய நூல் தமிழ்ப் புராணங்களுள் தலை சிறந்ததாக விளங்குகிறது. இவரது காலம் பதினோராம் நூற்றாண்டு. மருகல் நாட்டுத் தஞ்சாவூரைப் பற்றிய பெரிய புராணச் செய்யுள் பின் வருமாறு:*

*உள்ளும் புறம்பும் குலமரபின்*
*ஒழுக்கம் வழுவா ஒருமைநெறி*
*கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர்*
*மலிந்த செல்வக் குலப்பதியாம்*
*தெள்ளுந் திரைகள் மதகுதொறும்*
*சேலுங் கயலுஞ் செழுமணியும்*
*தள்ளும் பொன்னி நீர்நாட்டு*
*மருகல் நாட்டுத் தஞ்சாவூர்.*

## 2. நாடு

### திருத்தக்கதேவர்

*இப்பாடல் 'சீவக சிந்தாமணி' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. அது தன்னிகரில்லாத் தலைவனான சீவகன் என்பானது வரலாற்றைக் கூறும் செந்தமிழ்க் காப்பியமாகும். பின்னர் எழுந்த தமிழ்க் காப்பியங்களுக்கெல்லாம் அது ஒரு சிறந்த வழி காட்டியாகத் திகழ்கிறது இதை இயற்றியவர் திருத்தக்கதேவர் என்னும் சைன முனிவர். இவரது காலம் 10 ஆம் நூற்றாண்டு என்பர். கீழ்வரும் பாடல் ஏமாங்கத நாட்டின் சிறப்பைச் சித்திரிக்கிறது.*

நற்றவம்செய் வார்க்கிடம் ;
தவம்செய் வார்க்கு மஃதிடம் ;
நற்பொருள்செய் வார்க்கிடம் ;
பொருள் செய் வார்க்கு மஃதிடம் ;
வெற்ற இன்பம் விழைவிப்பான்
விண்ணு வந்து வீழ்ந்தெனு
மற்ற நாடு வட்டமாக
வைகும் மற்ற நாடரோ.

## 3. நதி

### கம்பநாடர்

இது 'கம்பராமாயணம்' என்னும் உயரிய காப்பியத்தி லிருந்து எடுக்கப்பட்ட பாடலாகும். நூல், ஆசிரியர் வரலாறுகள் கதைப் பகுதியில் தரப்பட்டுள்ளன.

புவியினுக் கணியா யான்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி
யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.

## 4. தொண்டை நாடு

### சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர்

கீழ்வரும் பாடல்கள் திருவான்மியூர்ப் புராணத்தில் உள் ளவை. இந்நூலைப் பாடியவர் பூவிருந்தவல்லி வகுப்பைச் சேர்ந்த வேளாள குலத்திலே தோன்றியவர். செந்தமிழ்ப் புலமையிற் சிறந்தவர். சைவ சித்தாந்த சாத்திரங்களைச் செவ்வனே கற்றவர்; பலரும் புகழும் வகையில் அவற்றை போதிக்க வல்லவர். இவர் இயற்றிய பிற நூல்கள் : தருக்க சோபானம், சித்தாந்த வசன பூஷணம், செய்யுளிலக்கணம். இவர் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர்.

முருக்கிதழ் நிறுத்துச்சீரின் முதவடிக் கௌரியோடும்
இருக்கினில் இருக்கும் எம்மான் ஈந்ததோர் வேதத் துற்ற
பெருக்கமே யொருங்கு பூத்துப் பிறங்குநன் னீதிநூலில்
திருக்குறள் தந்தஎந்தை செனித்தது தொண்டை நாடு (1)

ஊரெலாஞ் சிவாலயங்கள் உரையெலாம் நால்வர் பாட்டு
நீரெலாந் தெய்வத் தீர்த்தம் நிலையெலாம் ஞானயோகம்
பேரெலாஞ் சிவநாமங்கள் பேறெல்லாம் முத்திவேட்கை
ஏரெலாங் கொண்டதிந்த எழிலுலாந் தொண்டைநாடு. (2)

## 5. சூரியன் தோற்றம்

### புகழேந்தியார்

புகழேந்தியார் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள களத்தூரில் பிறந்தவர்; வேளாள குலத்தினர்; வைணவ சமயத்தினர். இவர் வெண்பாப் பாடுவதில் ஒப்புயர்வற்றவர். இவருடைய காலம் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்னலாம். இவரெழுதிய 'நளவெண்பா' என்னும் நூலிலிருந்து பின்வரும் பாடல் எடுக்கப்பட்டுள்ளது.

தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாங்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம்.

## 6. உழவுக் காட்சி

### கம்ப நாடர்

இது கம்பராமாயணத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள ஒரு பாடலாகும். நூல், ஆசிரியர் வரலாறுகளைக் கதைப் பகுதியில் காண்க.

பண்கள்வாய் மிழற்றும் இன்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வாய் ஒக்கும்
களையலால் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகலா துலவி நிற்பார் ;
பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியர் பெற்றால் ?

## 7. பாடற்கலை

### திருத்தக்க தேவர்

இது 'சீவக சிந்தாமணி' என்னும் காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பாடலாகும். நூல், ஆசிரியர் வரலாறுகள் முன்னரே தரப்பட்டுள்ளன.

கருங்கொடிப் புருவ மேறா ;
கயனெடுங் கண்ணுமாடா ;
அருங்கடி மிடறும் விம்மா
தணிமணி யெயிறுந் தோன்றா ;
'இருங்கடற் பவளச் செவ்வாய்
திறந்திவள் பாடினாளோ,
நரம்பொடு வீணை நாவின்
நவின்றதோ !' என்று நைந்தார்.

## 8. சகலகலாவல்லிமாலை

### குமரகுருபர சுவாமிகள்

இவ்வாசிரியர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரிலே பிறந்தவர் ; முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் ; சைவ சமயத்தைச் சேர்ந்தவர் ; துறவியாகவே காலங்கழித்தவர். இவர் ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்து பின், முருகன் அருளால் பாடும் வன்மை பெற்றவர். இந்துஸ்தானி மொழியைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு சரஸ்வதியை நோக்கி இந்நூலைப் பாடினார் என்று கூறுவர். இவர் பாடிய பிறநூல்கள் :—நீதி நெறிவிளக்கம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், பற்பல பிரபந்தங்கள்.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந் துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கோ
லோ உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே. (1)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே. (2)

## 9. குற்றாலக் குறவஞ்சி

### திரிகூடராசப்பக் கவிராயர்

திருநெல்வேலி ஜில்லாவில் பொதியமலையின் அடிவாரத்தி லுள்ள திருக்குற்றாலம் பலவகைகளிலும் சிறப்புடையதாகும். அங்குள்ள நீரருவிகளும், தண்ணறுஞ் சோலைகளும், மலைச் சாரலி லுள்ள மூலிகைகளும், அடிவாரத்திலுள்ள திருக்குற்றால நாதர் கோயிலும் நினைக்குந்தோறும் இன்பம் பயக்கவல்லன. இத்தலத் தின் பெருமையை விளக்கும் நூல் குற்றாலக் குறவஞ்சியாகும். இதன் ஆசிரியர் குற்றாலத்துக்கு அருகிலுள்ள மேலகரத்தில் பிறந் தவர்; வேளாளர்; 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இயற்றிய பிற நூல்கள்:—குற்றாலச் சிலேடை வெண்பா, குற்றால மாலை, திருக்குற்றாலப் புராணம்.

சூழ மேதி யிறங்கும் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்
சந்த்ர சூடர்தென் னாரிய நாடே.

## 10. எங்கள் நாடு

பாரதியார் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எட்டைய புரத் தில் 1882-ஆம் ஆண்டில் தோன்றியவர். இளமை முதலே கவி பாடும் திறமை உடையவராக விளங்கினார். சென்னையிலும், பின்னர் புதுவையிலும் இருந்து பல்லாண்டுகள் தமிழுக்கும்,

தேசீயத்துக்கும் சிறந்த தொண்டாற்றி வந்தார். 'பாட்டுக்கொரு புலவர் பாரதி' என்பது அறிஞர் வாக்கு தற்காலத்தில் தமிழ்த் தாய்த் தோற்றுவித்த தலைசிறந்த கவிஞர்களிலே பாரதி ஒருவர்.

மன்னுமிமய மலை எங்கள் மலையே
மாநில மீததுபோற்பிறி தில்லையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற கெதிரெது வேறே!
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (1)

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரா னருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (2)

இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலப் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்
கன்னலும் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (3)

## 11. மலர்கள்

### கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை

கவிமணி அவர்கள் நாகர்கோயிலுக்கு அருகிலுள்ள தேரூரில் பிறந்தவர்; புத்தேரியில் வாழ்ந்து வந்தவர்; சிறந்த புலவர்; பாவலர்; ஆராய்ச்சியாளர். தேவியின் கீர்த்தனைகள், கவிமணியின் உரை மணிகள், மலரும் மாலையும், ஆசிய ஜோதி, மருமக்

கள் வழிமான்மியம், உமர்கய்யாம் பாடல்கள் ஆகியவை இந் நாஞ் சில் நாட்டுக் கவிஞர் இயற்றிய நூல்களிற் சிலவாம், அவருடைய அன்பின் பெருக்கும், குழந்தை உள்ளமும், கடவுட் பற்றும் அவரது கவிதைகளில் எங்கும் நிறைந்திருக்கும்.

மண்ணி விருந்து பொருள்வரினும்—அதை
மாற்றி மணம்பெறச் செய்திடுவோம்;
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம்—விண்ணிற்
காணுங் கதிரிடம் பெற்றிடுவோம் (1)

வண்டின் வரவெதிர் பார்த்துநிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசிநிற்போம் ;
உண்டு களிக்க மது அளிப்போம்—சற்றே
உட்காரப்பீடமும் இட்டுவைப்போம் (2)

மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணஞ்செய்து வாழவைப்போம் ;
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம். (3)

ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம் ;
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெல்லாம் காட்டிநிற்போம். (4)

மன்னருங் கண்டெதிர் வந்திடுவர்—கட்டி
மார்போ டணைத்து மகிழ்ந்திடுவர் :
இந்நிலத் தின்பம் பெருகிடவே—நாங்கள்
என்றும் உயிர்வாழ்ந் திருப்போமம்மா. (5)

## 12. சிலேடைப் பாக்கள்

### காளமேகப் புலவர்

காளமேகப் புலவர் தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள நந்தி கிராமத்தில் தோன்றியவர். இவரது இயற் பெயர் வரதன் என்பது. கலைமகள் அருள் வாய்க்கப் பெற்று விரைவாகவும் சாதுர்யமாகவும், சிலேடையாகவும் கவி பாடுவதில் வல்லவராய் விளங்கினர். இவருடைய காலம் 15-ஆம் நூற் றாண்டு என்பர்.

### ஆட்டுக்கும் சிவனுக்கும்

*நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால் ; ஐயா ! நின்*
*ஆட்டுக் கிரண்டுகா லானாலும்,—நாட்டமுள்ள*
*சீர்மேவு தில்லைச் சிவனே ! யிவ் வாட்டைவிட்டுப்*
*போமோசொல் லாயப் புலி* (1)

### வைக்கோலுக்கும் யானைக்கும்

*வாரிக் களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டைபுகும்*
*போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற*
*செங்கோல மேனித் திருமலைரா யன்வரையில்*
*மைக்கோலும் மால்யானை யாம்.* (2)

---

# குறிப்புரை

## I. வாழ்த்துப் பகுதி

### சிவபெருமான்

1. மாசில் - குற்றமில்லாத. மதியம் - சந்திரன். வீங்கு - இன்பம் மிகுந்த.

2. மாமணி - பெருமையும் அழகும் நிறைந்த. சோதியான் - சோதி மயமான ஆண்டவன்.

### திருமால்

செற்ருய் - போரிட்டு வென்ருய். திறல் - வலிமை. பொன்ற - அழிய. கழல் - வீரர் காலில் அணியும் ஆபரணம்.

### இயேசுநாதர்

அரண் - பாதுகாப்பு. கார் - மேகம். பொறை - பொறுமை. சூர் - அச்சம். துகள் - குற்றம்.

### முகமது நபி

இதய + ஆசனம் - மனமாகிய சிறந்த இடம். உறைந்து - வாழ்ந்து. பதி - ஊர். மதி - அறிவு.

## II. அறவுரைப் பகுதி

### திருக்குறள்

1. செவ்வி-காணுதற்குரிய காலம். இன்ஞ-கடுமையான.

2. கண்ணேடாதவர் - இரக்கம் காட்டாதவர். இயைந்த - பொருந்தி நிற்கின்ற.

3. கடாஅஉரு - உருவம். கண் அஞ்சாது - கண்ணெதிரில் அஞ்சாமல். உகாமை வல்லதே - வெளியிடாதிருக்க வல்லவனே.

4. உள்ளம் - ஊக்கம். வள்ளியம் - கொடைக் குணம் உடையோம்.

5. பொறி - விதி. ஆள்வினை - இடைவிடாத முயற்சி.

6. பகடு - காளை. இடுக்கண் - துன்பம். மடுத்த வாய் - தடைப்பட்ட இடம்.

7. செயல் - செய்க.

8. தகை அவாய் - தன்மையை விரும்பி. கேளார்-பகைவர். வேட்ப - விரும்ப.

9. எற்றென்று - எப்படிப்பட்டதென்று. இரங்குவ - வருத்தப்படத் தகுஞ் செயல்கள்.

10. கடைக் கொட்க - முடிவில் தெரியும்படி. எற்ரு-நீங்காத. விழுமம் - துன்பம்.

11. நனை கவுள் - மதத்தால் நனைந்த கபாலம்.

12. தலை - உயர்ந்தவன். எண்ணி - முன்னமே ஆராய்ந்து.

13. முதுக் குறைந்தது - அறிவு மிக்கது. உவப்பினும் - இருப் பினும். காயினும் - வெறுந்தாலும்.

14. பகையகத்து - எதிரிகளைத் தாக்கும் போரில். எளியர் - பலர் கிடைப்பர். அரியர் - சிலரே கிடைப்பர்.

15. குழு - கூட்டம். வேந்து - அரசர். அலைக்கும் - வருத்தும். குறும்பு - சிற்றரசு.

16. காப்பு - காவல். உறு பகை - பெரும் பகை.

17. திறன் - முறை

18. உவரி - கடல். உயிர்ப்ப - மூச்சுவிட.

19. களிறு - ஆண்யானை. மெய் - உடல்.

20. நவில் தொறும் - படிக்கப் படிக்க. பயில் தொறும்-பழகப் பழக. தொடர்பு - நட்பு.

21. பேதையர் - மூடர். கேண்மை - நட்பு. ஓரீஇ - நீங்கி.

22. படை - ஆயுதம். ஒன்னார் - பகைவர். அனைத்து - அத் தன்மையது.

23. நாணுமை - பழிக்கு அஞ்சாமை. நாடாமை-ஆராயாமை. நார் - அன்பு.

24. தேருன் - தக்கது அறிய மாட்டான்.

25. இகல் - பகை. ஆக்கம் - செல்வம். ஊக்கின் - முயன்றால்.

## திரிகடுகம்

1. நச்சி - விரும்பி. எள்ளா - இகழாத. மன்னிய - நிலை பெற்ற. பொச்சாப்பு - மறதி. அழுக்காறு - பொறாமை.

2. நட்டான் - நிலைநிறுத்தியவன். கற்பு - கற்பித்தபடி ஒழுகு வது. கூவல் - கிணறு. தொட்டான் - தோண்டியவன். சாவா உடம்பு - புகழுடம்பு.

3. பால் பற்றி - ஒரு பக்கமாக. சொல்லா - வழக்கில் சாட்சி சொல்லாத. சான்றாண்மை - பெருந்தன்மை. குன்றாமை-குறையா திருத்தல்.

4. தருக்கல் - செருக்கு அடைதல். கொன்னே - வீணே. வெகுளி - கோபம். முன்னிய - நினைத்த. வெஃகும் - விரும்பும்.

5. தூக்கா - அளந்தறியாத. கொடும்பாடு - பொய்ச்சொல். எச்சம் - மக்கள்.

# III. கதைப் பகுதி

## கம்பராமாயணம்

1. மாருதி - அநுமன். வினய - வணக்கமான. மடுத்து - கேட்டு. மாந்தி - உட்கொண்டு. மாற்றம் - பேச்சு. ஆரியன் - மேம்பட்டவன் (இராமன்).

2. காதல் அருத்தி - ஆவல் கொண்ட விருப்பம். மேற்று - மீது உள்ளது. அவதி - எல்லை. பிழைப்பு - தவறு. திருத்தியது - செவ்வனே விளக்குகின்றது.

3. வடித்து – ஆராய்ந்து. பெற்றி – தன்மை. பற்றுதல் – ஒப்புக் கொள்ளுதல்.

4. எந்தை = என் + தந்தை. ஆய் – தாய். தொன்று வந்து – தொன்றுதொட்டுப் பழகி. பின்றும் – மாறுபட்டு நடப்பான். பிறிது – பழி.

5. துலை–தராசு. இருந்த–அழியாது நிற்கின்ற. துன்னினன்– அடைந்தவன்.

6. இடைந்தவர் – துன்புற்றவர். வேலை – பாற்கடல். ஆகி – துணையாகி. ஆலம்–ஆலகாலவிடம். உடைந்தவர்–வலிமை இல்லா தவர். அடைந்தவர்–அடைக்கலம் புகுந்தவர்.

7. பாடுறு–வருத்துகின்ற. விழுமிது–சிறந்தது.

8. போதகம்–யானை. கன்றி–கோபமுற்று. இடங்கர்மா– முதலையாகிய விலங்கு. மெய்ப்பொருள்–திருமால்.

9. நகை–ஒளி. நாளும் தஞ்சு–வாழ்நாளும் குறைவு. அந் தணன்–மார்க்கண்டேயன். கூற்று–யமன். மாற்றும்–ஒதுக்கித் தள்ளிய.

10. வஞ்சி - பெண்ணாகிய சீதை. முரணுடை - அறத்திற்கு மாறான செய்கைகளை உடைய. தெய்வ மரணம் - தமிழ் இலக்கி யத்திலேயே வேறெங்கும் இந்த சொற்றொடரைக் காண முடியாது. தெய்வமும் விரும்பும் சிறப்பு உடையதான மரணம் என்பதே இதன் பொருள். அமரரும் போற்றும் மரணம் என்றால் அதன் பெருமையை எவ்வாறு கூறுவது?

11. கையன் - வஞ்சகன். நெறியின் - முறையாக. மெய்யினை- உண்மைப் பொருளான கடவுளை.

12. பேதை - இராவணன். காதை - செய்தி.

13. புகல் - சரணம்.

14. கடப்பாடு - கடமை. காதல் - அன்பு.

15. ஐயுறவு-சந்தேகம். தேறிய அளவே தேறி - தெளிந்து நிச்சயித்ததுபோலவே தானும் தெளிந்து. கைபுகற்கு - இராமபிரானிடம் வந்து சேருவதற்கு.

16. பயந்த - விளைவித்த. திரள் - பருத்துத் திரண்ட. தீய - தீய்ந்து போக. எய்தவன் - அம்பு விட்டவன் (இராமன்).

17. மார்க்கடம் - குரங்குகள். வைப்பு - இடம். நாயகன் - தசரதன்.

18. மீ-மேல். வாரி—கடல். அகத்தியல்—மனத்தின் தன்மை.

19. புல்லினன்—தழுவினன்.

20. ஆழியான் — கடல் சூழ்ந்த உலகை ஆள்பவனாகிய இராமன். எழிரேடேழாய்—பதினன்கென்று.

## சிலப்பதிகாரம்

அறைபோகிய-கெட்டுப்போன. பொறி-அறம். இறைமுறை-அரச நீதி. அரி-பரல். தென்னம்பொருப்பு—பொதியமலை. செழிய-பாண்டிய. குருதி—இரத்தம். துணி—துண்டம். அறுவர்க்கு இளைய நங்கை—பிடாரி. அணங்கு—பத்திரகாளி. சூர்—அச்சம். உரம்—மார்பு. செயிர்த்தனள்—மனத்தில் கோபம் கொண்டவள். தருக—அழைத்து வருக. கோயில்—அரண்மனை. கண்ணை—கண்களை உடையவளே. எள்—இகழ்ச்சி. புள்—பறவை (புறு) புன்கண்—துன்பம். ஆழி—சக்கரம். ஏசா—நிந்தனை இல்லாத. கொற்றம்—அரச நீதி. ஒள் இழை—கண்ணகி. வாய் முதல்—வாயில். மன்பதை - குடிகள். தென்புலம்—பாண்டியநாடு. இணையடி—(கண்ணகியின்) இருவடிகள். மடமொழி—கோப்பெருந்தேவி. வையைக்கோன்—பாண்டியன்.

## இரட்சணிய யாத்திரிகம்

1. இந்து - சந்திரன். களவின் - களவினால் பெற்ற. ஆக்கம் - செல்வம், கரந்து - மறைந்து, மய்கண்ட - மைபோலுங் கரிய. கங்குல் - இரவு. வாட்டும் - நீங்கும்.

2. அமயம் - சமயம். துன்னிய - மேற்கொண்ட. சட வியோகம்-உடலும் உயிரும் பிரிந்திருக்கும் ஒரு வித்தை. சூழ்ச்சி - முறை.

3. வார்த்தையாய் - முன்னுரைக்கப் பெற்றவராய். நடுவர் - பிதா, குமரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவருள் நடுவில் உள்ளவர். சமாதி - கல்லறை. கெழுமி - ஒருங்கு கூடி.

4. மல்கும் - நிறைந்த. மீஉயர் - மிகவும் உயர்ந்த. ஓச்சி - நீட்டி. காண்பான் - பார்ப்பதற்காக. சேய் ஒளி - சிவந்த ஒளி. கீழ்பால் - கிழக்குத் திசையில்.

5. முகூர்த்தம் - சமயம். உம்பர் - வான். இழிந்த - இறங்கிய. ஒல்லே - வேகமாக. சேமவைப்பை - யேசுவின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்த கல்லறையை. எஞ்ச - நீங்க.

6. ஏந்திழை - பெண். தெருள் உறீஇ - நல்லறிவு பெற்று. அண்மி - நெருங்கி. மருள் - ஐயம்.

7. ஆயிடை - அவ்விடத்தில். நேடுவது - தேடுவது. ஓர்மின் - ஆராய்ந்து பாருங்கள்.

8. நம்பி - ஆண்களில் சிறந்தவன். சேண் தலம் - வானுலகம்.

9. உன்னதேசன் - உன்னதமான ஈசன். செவி தோய்தலும் - கேட்டதும்.

10. உரை இறந்த - சொல்ல முடியாத. கதித்த - பெருகின. துக்க அக்கினி - துன்பமாகிய நெருப்பு. உரை செய்வாம் - சொல்வோம்.

11. சொற்ற - சொல்லிய. சுமங்கலவார்த்தை - நற்செய்தி. கிளர் - மிக்க.

12. ஆரணம் - வேதம். புணரி - கடல். சின்மயம் - ஞான வடிவான. மருள் - ஐயம்.

13. உழுவல் அன்பு - நீங்காது தொடரும் அன்பு. ஒல்லென - வேகமாக. கழுதின் - பேயினுடைய. தெறு - அழிக்கும்.

14. ஒன்ற - வந்தடைய. விள்ளுமின் - கூறுங்கள்.

## மனோன்மணீயம்

2. சிறுகால் - தென்றல். 5. கோட்டம் - குற்றம்.

6. நடைப்பிணம் - நடையை மட்டும் கொண்டு மற்றவற்றில் பிணம் போன்றவர்.

9. திருவனையார்கள் - இலக்குமியை ஒத்த மனைவிமார்.

15. வஞ்சியர் - சேரவீரர்.

17. அரி - சிங்கம்.

21. செந்தழல் - ஓமத்தீ.

25. இந்தனம் - விறகு.

30. திருந்தலீர் - மனம் திருந்தப் பெறாதவர்களே!

34. காயம் - புண் வடு.

41. அனந்தம் - பற்பல.

45. கோட்டக்கது - கொள்ளத்தக்கது.

50. கணம்கணம் - ஒவ்வொரு கணமும்.

52. உதும்பர தரு - அத்தி மரம்.

53. இறும் - இறந்துபோகும். மசகம் - கொசு.

59. அழுக்காறு - பொறாமை.

65. இவண் - இங்கு.

67. உன்னி - நினைந்து.

68. சாற்றுமின் - சொல்லுங்கள்.

70. சேமமாய் - காவலோடு.

## IV. பல்சுவைப் பகுதி

### மருகல்நாட்டுத் தஞ்சாவூர்

மலிந்த - மிகுந்த. குலப்பதி - சிறந்த ஊர்.

சேல் - ஒருவகை மீன். பொன்னி - காவிரி.

### நாடு

நற்றவம்=நல்+தவம் - வீடு பேறு குறித்து செய்யப்படும் தவம்.

தவம் - மறுமை கருதி இல்லறம் நடத்துதல்.

நற்பொருள் - நல்ல (உண்மையான) செல்வமாகிய கல்வி.

பொருள் - செல்வம்.

விழைவிப்பான் - ஆசைப்பட்டு.

உவந்து - மகிழ்ந்து.

### நதி

புவி - பூமி. ஆன்ற - நிறைந்த. இப்பாட்டு கவிக்கும் நதிக்கும் சிலேடையாக அமைந்துள்ளது.

### தொண்டை நாடு

1. முருக்கு - முருக்க மலர். கௌரி - உமைப் பிராட்டியார். இருக்கு - ரிக் வேதம். தயங்கல் - விளங்கல்.

2. நால்வர் - அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர். ஏர் - அழகு.

## சூரியன் தோற்றம்

அலைத்தல் - அடித்தல். காரிருள் - கருமையுடைய இரவு. வாவும் - தாவிச் செல்லும். பரி - குதிரை.

## உழவுக் காட்சி

பண்டுகள் - இனிய ஒலி நிரம்பிய பாட்டுக்கள்.

மிழற்றும் - பாடுகின்ற

கடைசியர் - உழவர் (பெண்பாலார்.)

மள்ளர் - உழவர் (ஆண்பாலார்.)

களைகலாது - களை பறிக்காமல்

உலவி - அங்குமிங்கும் நடந்து.

பிழைப்பரோ - உய்வார்களோ.

## பாடற்கலை

கயல்+நெடும்+கண் - கயல் மீன் போன்ற நீண்ட கண்கள்.

மிடறு - தொண்டை. விம்மாது - பெருத்துப் போகாது. எயிறு - பல்.

நவின்றனோ - பாடிற்றேரு.

நைந்தார் - மனமுருகினர்.

## சகலகலாவல்லி மாலை

1. அளிக்கும் - (உன்னால்) அருளப்பெறும். ஆர்ந்து - உண்டு. குளிக்கும் - மூழ்கும். தெள்ளத் தெளிக்கும் - மிகத் தெளிவாகக் கூறும். பனுவல் - நூல். கலாபம் - தோகை.

2. பொருந்தும் - பெறப்படும். பயனும் - அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பயனையும். நல்காய் - அருளு வாய். தீட்டும் - எழுதும். ஓதிமப் பேடே - அன்னப் பெடை போன்றவளே.

## குற்றாலக் குறவஞ்சி

மேதி - எருமை. வாளை - ஒருவகை மீன். கூழை - குட்டை யான. தென்னாரிய நாடு - குற்றால மலையிலுள்ள ஒரு பகுதி. சந்த்ரசூடர் - சிவபெருமான்.

## எங்கள் நாடு

1. பன்னரும் - சொல்லுதற்கு அருமையான. பார் - பூமி. மிசை - மீது.

3. துஞ்சோம் - உறங்க மாட்டோம்; பொறுத்திருக்க மாட்டோம். கதலி - வாழை. நல்கும் - தரும். ஆரிய நாடே - மேலான நாடே.

## மலர்கள்

1. கதிர் - சூரியன்.

2. மது - தேன்.

4. ஏந்தும் - தலையில் அணிந்துள்ள.

## சிலேடைப் பாக்கள்

1. (இரண்டாம் அடி) ஆட்டுக்கு - ஆடலுக்கு (மூன்றும் அடி) ஆட்டை - ஆடலை. புலி - வியாக்கிரபாத முனிவர்.

2. களம் - நெற்களம்; போர்க்களம். கோட்டை - நெற் கோட்டை; மதில். போர் - வைக்கோல்போர்; சண்டை.

# 1. உரை கண்ட வரலாறு

## இறையனார் அகப்பொருளுரை

பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப், பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னை யுள்ளிவம்மின்," என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்தபின்றை அரசன், "இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க," என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, "பொருளதிகாரம் வல்லாரைத் தலைப்பட்டிலேம்," என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை! எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்," எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடைய தாகலின், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்," என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர் குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப், பூவிட்டுப் பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக் குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப் புடைத் தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பார்ப்பான் சிந்திப்பான்: "அரசன் பொருளதிகாரம் இன்

மையிற் கவல்கின்றா னென்பது பட்டுச் செல்லா நின்ற துணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும்," என்று, தன் அகம் புகாதே கோயிற் றலைக்கடைச் சென்று நின்று, கடைக்காப்பார்க் குணர்த்தக், கடைக்காப்பார் அரசர்க் குணர்த்த, அரசன் புகுதருகவென்று பார்ப்பானைக் கூவச், சென்று புக்குக் காட்டக் கொண்டு நோக்கி, "இது பொருளதி காரப்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்தா னாகற்பாலது," என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டு போய்ப் பொருள் காண்மின்," என, அவர்கள் அதனைக் கொண்டு போந்து கன்மாப்பலகை ஏறியிருந் தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ் சென்றன.

# 2. சிறை நீக்கிய செய்யுள்

[டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள்.]

திருச்சிராப்பள்ளியில் சொக்கநாதநாயக்கர் அரசாட்சி செய்துவந்த காலத்தில், திருநெல்வேலிச் சீமையை வட மலையப் பப்பிள்ளையனென்பவர் (கி. பி. 1620-1676) பிரதிநிதியாக இருந்து ஆண்டுவந்தார். அவருடைய அதிகாரத்தின் பெருமையினுல் தென்பாண்டிநாட்டில் குடிகள் யாவரும் சுகமாக வாழ்ந்துவந்தனர். அவரைப் பிள்ளையன் என்றே பெரும்பாலும் வழங்குவர். அவர் தெய்வ பக்தி மிக உடையவர். அவரால் இயற்றப்பட்ட தருமங்களும், தேவாலயத் திருப்பணிகளும், பிற அருமைச் செயல்களும் பல புலவர்களுடைய செய்யுட்களில் மணியைப்போல அமைக்கப்பட்டு, அவருடைய புகழை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் சிறந்த கல்விமானுக இருந்தார். தமிழில் நிறைந்த புலமையுடையவர். மச்ச புராணம், நீடூர்த்தலபுராணம் முதலிய சில நூல்களை அவர் இயற்றியிருக்கிருர். தமது சிறந்த புலமைக் கேற்பப் புலவர்களுடைய பெருமையையும், அவர்கள் இயற்றும் செய்யுட்களின் அருமையையும் அறிந்து, அவர்களை மதித்துப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையுடையார். புலவர்களிடத்தில் பேரன்புடையவராக அவர் இருந்தமையால் அவரைச் சார்ந்த பலருக்கும் அங்ஙனமே புலவர்களிடத்தில் அன்பு உண்டாயிற்று. அவர்காலத்து உத்தியோகஸ்தர்களிற் பலர் சிறந்த தமிழ்க் கல்விமான்களாக விளங்கினுர்கள்; 'மன்னவ னெப்படி மன்னுயி ரப்படி' என்பது உண்மை யன்ருே?

அக்காலத்தில் தென்திருப்பேரை என்ற விஷ்ணுஸ்தலத்தில் உள்ள தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீ வைஷ்ணவர்களுள் நாராயண தீக்ஷிதரென்னும் ஒரு வித்துவான் இருந்தார். பல வருஷங்களுக்குமுன் சுந்தர பாண்டியரென்னும் அரசர், பல ஊர்களில் வசித்த நூற்றெட்டுத் தலவகார ஸாமவேதிகளாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் குடும்பத்தைத் தென்திருப்பேரையில் அமைத்து, அக்குடும்பத்தினருக்கு வீடுகளும் நிலங்களும் வழங்கினு ரென்பர்; அந் நூற்றெட்டுக் குடும்பத்தின் வழிவந்தவர்கள் இன்னும் அவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

முற்கூறிய நாராயண தீக்ஷிதரென்பவர் அப்பரம்பரையில் வந்தவரே. அவருக்கு நிலம் வீடு முதலிய சொத்துக்கள் இருந்தன. அவர், தம்முடைய குலவொழுக்கத்திற் கேற்ற கடமைகளைச் செய்தும், தமிழ் நூல்களைப் படித்து இன்புற்றும், செய்யுளியற்றியும், தென்திருப்பேரையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகரநெடுங்குழைக்காதர் என்னும் திருநாமமுள்ள திருமாலைத் தரிசித்து மகிழ்ந்தும் வாழ்ந்துவந்தார்.

இங்ஙனம் இருந்த காலத்தில், வரி வசூலிக்கும் பொருட்டு வடமலையப்பப் பிள்ளையனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுள் ஒரு வன்னெஞ்சர், தென்திருப்பேரையிலிருந்த வைஷ்ணவர்களிற் சிலர் வரி செலுத்தவில்லையென்ற காரணத்தால், அவர்களைத் திருநெல்வேலிக்குக் கொணர்ந்து சிறையிலிட்டார். அவர்களுள் நாராயண தீக்ஷிதரும் ஒருவர். அவர்கள் தாம் வரிகொடாமைக்குக் காரணங்களை மிகவும் பணிவாகக் கூறி, இயன்ற காலத்திற் செலுத்திவிடுவதாக நயந்து கேட்டுக் கொண்டும் அவ்வதிகாரியின் மனம் இளகவில்லை. ஒரே பிடிவாதமாகச் சிறையிலிட்டுக் காவல் வைத்துவிட்டார். அச் சிறைக்கூடம் இருந்த தெருவிற்கு இப்போதும் காவற்புரைத்தெரு என்னும் பெயர் வழங்கி வருகிறதாம்.

சிறைப்பட்ட நாராயண தீக்ஷிதர், 'நம்முடைய பிராரப்த வினையின் பயனாக இந்தத் துன்பம் வந்தது' என்று எண்ணி ஏங்கினார். சுதந்திரமான வாழ்க்கையும், நாள்தோறும் அது வரைச் செய்துவந்த குழைக்காதர் தரிசனமும் அவருக்கு அப்பால் இல்லாதனவாயின. 'நாம் எவ்வளவோ நயந்து கல்லும் கரையும்படி கேட்டுக்கொண்டும் இந்தக் கொடியவன் இரங்கவில்லையே! இனி என் செய்வோம்! எல்லாத் துன்பத்தையும் நீக்கிப் பாதுகாக்குங் குழைக்காதரே நமக்குக் கதி. இந்தக் கொடியவனிடம் செய்துகொண்ட விண்ணப்பம் இவன் காதில் சிறிதும் ஏறவில்லை; இனிமேல் குழைக்காதர் காதில் ஏறும் வண்ணம் விண்ணப்பித்துக் கொள்வதுதான் முறை' என்று தெளிந்தார். அதுமுதல் ஒவ்வொருநாளும் குழைக்காதர் விஷயமாக மனமுருகிச் செய்யுட்கள் சிலவற்றை இயற்றித் திருப்பித் திருப்பி வாயாரச் சொல்லிப் பிரார்த்திக்க ஆரம்பித்தார். அவரைப் பார்த்து உடன் இருந்தவர்களும் சில செய்யுட்களை இயற்றத் தொடங்கினார்கள்.

நாராயண தீக்ஷிதர் 'குழைக்காதர் பாமாலை' என்று பெயரிட்டு, தம்முடைய செய்யுட்களை முறையாக அமைத்து வந்தார். 'குழைக்காதரைப் பிரிந்திருக்கும் கொடிய காலமும் வந்ததே!' என்று அவர் எண்ணி எண்ணி நைந்தார்.

" கன்றுக் கிரங்கிய கற்றுவைப் போலக் கருணையுடன்
என்றைக் கிரங்குவ ரோவறி யேனெழு பாருமுய்யக்
குன்றைக் கவிகை யெனத்தரித் தோர்குழைக் காதரையான்
சென்றெப் பொழுது தொழுவதும் பாவங்கள் தீர்வதுமே"

என்பது பாமாலையிலுள்ள முதற் பாட்டு. இதில், 'குழைக் காதரை யான் சென்று தொழுவதும் பாவங்கள் தீர்வதும் எப் பொழுது!' என்று அவர் உள்ளந் துடித்துப் பாடியிருக் கின்றார்.

சிறை வாழ்க்கையை மேற்கொண்டு ஒரு மாதகாலம் ஆயிற்று. ஒருவழியும் தோன்றவில்லை.

தம்முடைய ஊரில் பெருமான் சந்நிதியில் நான்மறை முழக்கமும் திவ்யப் பிரபந்த முழக்கமும் கடல் முழக்கம்போல நிறைந்து விளங்குமென்பதை அவர் எண்ணிக்கொண்டு, 'அந் தத் திவ்ய சப்தங்களைக் கேட்டு ஈடுபடாமல், இங்கே அழுகை யொலியும், சிணுங்குஞ் சப்தமும், அதிகாரத் தொனியும் கேட் டுத் துன்புறுந்தலைவிதி நமக்கு வாய்த்ததே!' என்று புலம்பி னார். 'குழைக்காதர் அருள் செய்வார், அருள் செய்வார்! இன்றைக்குள் ஏதாவது நன்மை ஏற்படும்; நாளைக்குள் அநு கூலம் உண்டாகும்' என்று எண்ணி ஏமாந்தார்.

வடமலையப்பப் பிள்ளையன் நல்ல நீதியுடையவரென்றும், தமிழ் அன்புடையவரென்றும் அறிந்தவராதலின், தாமும் பிற ரும் சிறையில் இருப்பதை அவர் அறிந்தால், அவரால் நன்மை யுண்டாகுமென்ற நினைவு தீக்ஷிதருக்கு உண்டாயிற்று; அப் பொழுது, 'அவருக்குத் தெரிவிப்பவர் ஒருவருமில்லையே!' என்ற எண்ணம் அடுத்தாற்போல் தோற்றியது.

இப்படிச் சிலநாள் கழிந்தன. புதிய செய்யுள் இயற்றி மனங்கரைந்து பாடுவதும், முன்பே இயற்றியுள்ள பாடல்களைப் பாடிப் புலம்புவதும் நாராயண தீக்ஷிதர் வழக்கமாயின. அந் தச் சிறைக்கூடக் காவலதிகாரி தமிழறிவுடையவர். ஒருநாள் நாராயண தீக்ஷிதர், 'வள்ளவார் முரசதிர் கோமான்' என்ற

செய்யுளைமட்டும் சொல்லிக்கொண்டு இருந்தபோது, அவ்வதிகாரியின் காதில் அது பட்டது. 'நம்முடைய எசமான் பெயர் இந்தப் பாட்டில் அமைந்திருக்கிறதே! உள்ளே இருப்பவர் தமிழ் வித்துவான்போலத் தோற்றுகிறது' என்று எண்ணினர். தமிழ்ப்புலவர்களுக்கு மரியாதை செய்வதும், அவர்களுக்குக் குறைவு வாராமற் பாதுகாப்பதும் பிள்ளையனுக்கு உவப்பான காரியங்களாதலின், அதிகாரி உடனே சென்று தமிழ் வித்துவானொருவர் சிறையில் இருப்பதையும், அவர் பிள்ளையன் பெயரைப் பாட்டிற் கூறிப் புலம்புவதையும் எசமானிடம் சொன்னர்.

அவர் சொன்னதுதான் தாமதம்; தண்டமிழ் வாணர் துயரத்தைக் கேட்கப்பொறாத வடமலையப்பப் பிள்ளையன் எல்லாக் காரியங்களையும் விட்டுவிட்டு, உடனே தம் குதிரைமீதேறிக்கொண்டார்; சிறைக்கூடத்தை நோக்கி விரைந்து வரலானர்.

சிறிது நேரத்திற்குள் குதிரை சிறைவாயிலில் வந்து நின்றது. பிள்ளையன் சிறைக்கூடத்தைத் திறக்கச் செய்து உள்ளே சென்றார்; அப்பொழுதும் குழைக்காதர் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு பாட்டுப் பாடியவண்ணமாய்க் கண்ணும் கண்ணீருமாக அங்கேயிருந்த புலவரைக் கண்டார். அவருடைய நிலை, பிள்ளையன் நெஞ்சில் உருக்கத்தையும் கண்ணில் நீரையும் உண்டாக்கின; 'குழைக்காதரை நினைந்து தமிழ்க்கவியால் முறையிடும் இந்தப் புலவர்பெருமானைப்பற்றி இதுகாறும் அறிந்துகொள்ளவில்லையே! நாம் தமிழறிந்ததனால் என்ன பயன்? இவர் எவ்வளவு நாட்களாக இங்ஙனம் துன்புறுகின்றாரோ?' என்று மனம் வருந்தினர்; அவரை நோக்கி அவர் வரலாற்றை வினவினர்; அவரது வாய்மொழியால் எல்லாம் தெளிந்தார்.

பிள்ளையன் உத்தரவினால் பல வண்டிகள் சிறைவாயிலில் வந்து நின்றன. நாராயண தீக்ஷிதரும் அவருடன் இருந்த வேறு தமிழறிஞர்களும் அவற்றில் ஏறிக்கொண்டனர். பிள்ளையன் தீக்ஷிதரையும் பிறரையும் தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்தார்; அவர் கொடுக்கவேண்டிய வரியை நீக்கியதோடு, அவர் நிலங்களை என்றும் வரியில்லாத இறையிலி நிலங்களாகச் செய்துவிட்டார்.

தீக்ஷிதர் பாடிய பாமாலையைப் பிள்ளையன் கேட்டார். அப்புலவருடைய மனம் எவ்வளவு வருந்தி நைந்திருக்க வேண்டுமென்பதை அச்செய்யுட்கள் நன்றாக எடுத்துக்காட்டின. அதுகாறும் அறுபத்தைந்து பாடல்கள் இயற்றப்பட்டிருந்தன. பிள்ளையன் தீக்ஷிதரைப் பார்த்து, 'இந்நூலை முற்றும் பாடி முடிக்கவேண்டும்' என்று விரும்பினார். அப்படியே அப்புலவர் பின்னும் முப்பத்தைந்து செய்யுட்களை இயற்றி நூறு பாடலாகப் பூர்த்தி செய்தனர்.

தாம் சிறைக்கூடத்திலிருந்து முறையிட்ட முறையீடு குழைக்காதர் காதில் விழுந்தமையால் அப்பெருமாள், பிறர் காதுகளிலும் விழும்படி செய்து சிறைத் துன்பத்தை நீக்கி அருளினாரென்று தீக்ஷிதர் உறுதியாக நம்பினார். அதனால் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்பு பாடிய செய்யுட்களில் குழைக்காதர், தம் துன்பத்தைப் போக்கியருளியதாகச் சொல்லியிருக்கிறார். விடுதலைபெற்ற நிலையில் பாடிய முதற் பாட்டிலேயே,

"ஆடகச் சேவடி யாலெம தாவி யளித்தனை கார்க்
கோடகப் பாவிகள் வாராமற் காத்தனை"

என்று குறிப்பித்திருக்கின்றார். இதில், "கார்க்கோடகப் பாவிகள்" என்றது, தம்மைச் சிறையிட்ட அதிகாரியையும் அவரைச் சார்ந்தவர்களையுமே யென்று தோற்றுகின்றது.

இந்தப் பாமாலை தென்திருப்பேரை முதலிய இடங்களில் பலரால் மிக்க பக்தியோடு பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. அங்ஙனம் செய்வதனாற் சில துன்பங்கள் நீங்கி இன்பம் உண்டாவதாகச் சிலர் கூறக் கேட்டிருக்கின்றேன். பள்ளிக்கூடத்திலும் முன்காலத்திலே இது பாடமாக இருந்துவந்தது.

# 3. அடைக்கல மாதா

[பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.,]

## திருக்கோவில்

புலவர் பாடும் புகழுடைய பொன்னி யாற்றின் வடகரையில், நறுமணங் கமழும் பூஞ்சோலையின் நடுவே, திருக்காவலூர்க் கோவில் அமைந்துள்ளது. அங்குள்ள அடைக்கல மாதா, கதிரொளி திகழும் கலை யுடுத்து மின்னார் முடி புனைந்து, அங்கையில் மணிமாலை தாங்கி, கருணை பொழியும் கண்களோடு வடதிசை நோக்கிநின்று காட்சி தருகின்றாள்.

"திருக்காவ லூரகத்துந்
திகழொளிவாய் மணிக்கோயில்
அருட்காவல் இயற்றிநமை
அளிப்பதுநின் தயையாமோ"

என்றும் அம் மாதாவை முனிவர் பாடித் தொழுதார்.

## கருணையின் சின்னம்

அன்பினால் அகம் குழைந்து வழிபடும் அடியார்க்கு இறைவன் இரங்கி அருள்புரியும் கொள்கையை அடைக்கல மாதாவின் திருக்கரத்தில் அமைந்த மணிமாலை தெளிவுறக் காட்டுவதாகும். அதைக் கண்டு இன்புற்ற அடியார்கள், "மண்ணவரை மேலேற்ற விண்ணவர் விடுத்த மணிவடமோ! அல்லல் விளைக்கும் வல்வினையை அறுத்தொழிக்கும் அரும்படையோ! ஆதரித்து அழைக்கும் அடியவரை அருளாற் பிணிக்கும் அருந்தளையோ" என்று வியந்து போற்றுவாராயினர்.

## மாதாவின் அருள்

இவ்வாறு அருட்கோலம் கொண்டு எழுந்தருளிய அடைக்கல மாதா, கண்மணியைக் காக்கும் இமைபோல் திருக்காவலூரைக் காத்துவந்தாள். ஒருநாள் அவ்வூரின் ஒருசாரமைந்த ஓலை வீடுகளில் தீப்பற்றிக் கொண்டது. அப்பொழுது அங்கு வீசிய நெடுங்காற்று அச் சிறு நெருப்பைப் பெருநெருப்பாய்

---

* வீரமா முனிவர் இயற்றிய "திருக்காவலூர்க் கலம்பகம்" என்ற நூலில் அமைந்த கருத்தைத் தழுவி இஃது எழுதப்பட்டுள்ளது. திருக்காவலூர்க் கோவில் என்ற நூலில் இருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது.

வளர்த்தது. காற்றினால் ஊற்றமுற்றெழுந்த கொடுங்கனல் எங்கும் பொறி வீசி ஏழையர் வீடுகளை எரிக்கத் தொடங்கிற்று. காற்றும் கனலும் கலந்து கேடிழைக்கக் கண்ட அவ்வூர்க் கிருஸ்தவர்கள் செய்வதொன்றறியாது. அற்றார்க்கு அபயமளிக்கும் அடைக்கல மாதாவைத் தொழுது பாடினார்கள்.

"நதிவழங்கு காவலூர்ப் பதிவழங்கு காவலே
நன்னையாக முன்னையாள் என்னையாளு மன்னையே"

என்று தொண்டரனைவரும் சேர்ந்து அழுது இசைத்த தொழு குரல் நாற்றிசையும் பரந்தொலித்தது. அந் நிலையில் கண்டோர் வியப்புறக் காற்றின் வேகம் குறைந்தது. கனலின் வெம்மையும் தணிந்தது. அடைக்கல மாதாவை நம்பித் தொழுத அடியவர் குடிசைகள் நெருப்பிற்கு இரையாகாமல் நின்றன. அப் புதுமையைக் கண்ட புறமதத்தினரும் காவலூர் அன்னையின் பெருமை யறிந்து காணிக்கை செலுத்தத் தொடங்கினர்.

## இடுக்கண் தீர்த்த அடைக்கலமாதா

இவ்வாறாகக் கொள்ளிட நதியின் இருகரையிலும் அமைந்த ஊர்களில் அடைக்கலமாதா வழிபாடு பரவி வருங்கால், ஒரு நாள் காவலூர்க் கோவிலைச் சார்ந்த நந்தவனத்தில் ஒரு பசு நுழைந்து ஆங்கமைந்த பூஞ்செடிகளையும் கொடிகளையும் மிதித்துச் சிதைத்து அழித்தது. பூஞ்சோலைக் காவலாளன் பசுவின் செயல் கண்டு ஆற்றாது, பெருங் கழியால் அதனை நையப் புடைத்தான். அடியுண்ட பசு அருகேயிருந்த அடவியில் ஓடி விழுந்து உயிர் துறந்தது. காட்டில் இறந்துகிடந்த பசுவினைக் கண்டு பதைத்தெழுந்த இந்து மதத்தார் பழி வாங்க முனைந்து நின்றார்; 'காவலூர்க் கோவில் வேதியனே பசுக்கொலை புரிந்த பாதகன்' என்று எங்கும் பறை சாற்றினர்; கன்றை இழந்து அலறிய ஒரு பசுவின் துயர்கண்டு தரியாது அருமருந்தனைய அரசிளங்குமரனை முறைசெய்து அறநெறியை ஆதரித்த வளவன் ஆண்ட சோழநாட்டில் இவ் வன்கொடுமை நேர்ந்ததே என்று ஏங்கினர். அப்பொழுது அரியலூர்க் குறுநிலமன்னன் அவ் வழியாகக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். காவலனைக் கண்ட ஊரார் கதித்தெழுந்து, அவன் அடிகளில் வீழ்ந்து, நிகழ்ந்த தீமையை முறையிட்டார். பசுக்கொலை புரியும் பாதகரை நாட்டினின்று ஓட்டிவிடல் வேண்டுமென்று மன்னனை

நயந்து வேண்டினர்; அடியுண்டிறந்த பசுவினை அடவியினின்றும் எடுத்து வந்து அவன் முன்னே இட்டார். பசுவின் நிலை கண்ட காவலன் மனம் பதைத்தான்; ஆயினும், காவலூர்க் கோவில் வேதியனே அதனைக் கொலைபுரிந்தானென்று துணிதற்குரிய சான்று கிடையாமையால், ஊரார் கோபத்தை ஒருவாறு ஆற்றிச் சென்றான். காவலூர் மாந்தர் சீற்றத்தால் என்ன நேருமோ என்று அஞ்சியிருந்த திருச்சபைத் தொண்டர்கள் மலை போன வந்த இடரைப் பனியெனத் துடைத்த அடைக்கலமாதாவின் அருள் நினைந்து மனமாரத் தொழுதார்கள்.

காவலூரிற் கோவில் கொண்டருளிய அடைக்கலமாதாவின் பெருமை நாற்றிசையும் பரவிவருதலை அறிந்த தரங்கம்பாடித் தேனியசபையார் உருவ வழிபாட்டுக் கொள்கையை மறுத்துப் பொதுமக்கள் மனத்தில் பெருங்குழப்பத்தை விளைக்கத் தலைப்பட்டார்கள்; "கிருஸ்தவர்கள் தேவமாதாவின் உருவத்தையும், யேசுநாதர் வடிவத்தையும், சிலுவையாதிய சின்னங்களையும் வணங்குதல் அஞ்ஞானம்" என்றார்கள். இங்ஙனம் தொன்மைசான்ற திருச்சபையின் கொள்கையை மறுத்துரைத்த தேனிய சபையார்க்கு வீரமாமுனிவர் 'வேதவிளக்கம்' என்னும் நூலின் வாயிலாக மாற்றம் உரைத்தார்.

### தரங்கம்பாடித் தேனியசபை

திருக்காவலூரில் வீரமாமுனிவர் எடுத்த அடைக்கலமாதா வழிபாட்டை இகழ்ந்துரைத்த தேனிய சபையார், தஞ்சையில் அரசுபுரிந்த மராட்டிய மன்னரின் ஆதரவுபெறுதற்குப் பெரிதும் முயன்றார்கள். அம் மன்னரது அன்பினைப் பெறுதற்குரிய வாய்ப்பும் காலத்திற் கிடைத்தது. சரபோஜி மன்னன் மேனியில் பெரும் பிளவையொன்று புறப்பட்டது. அப்பிணியின் கொடுமைக் காற்றாது நெடுநாள் மன்னன் நலிவுற்றான். அரண்மனை மருத்துவர் அனைவரும் கைவிட்டார். அந்நிலையில் தென்மார்க்கு தேசத்தில் சிறந்த மருத்துவராய்த் திகழ்ந்த காசிபர் என்பவரை வருவித்துப் பார்த்தால் கடுநோய் தீர்ந்தொழியுமென்று தேனிய சபையார் அம் மன்னனிடம் தெரிவித்தார்கள். அம் மருத்துவரை விரைவில் வரவழைக்கப் பணித்தான் அரசன். அப்பணி தலைமேற்கொண்ட தேனிய சபையார் தென்மார்க்கு மன்

னனுக்குத் திருமுகம் விடுத்தார். அம் மன்னன் காசிபரை உடனே அனுப்புவித்தான். காசிபர் தரங்கம்பாடித் துறையில் வந்தடைந்தாரென்று கேள்வியுற்ற தஞ்சைமன்னன் அவரைத் தக்க சிறப்புடன் அழைத்து வருமாறு தன் பரிவாரங்களை அனுப்பினான். அரச விருதுகளோடு அழகிய பரிசுகளும் கரிகளும் எழுந்துவரக் கண்ட தேனிய சபையார் மனம் தழைத்தார். காவலூர்த் திருச்சபையைச் சேர்ந்தோர் மனம் வாடி வருந்தினர். முன்னரே யேசுசமயத் தொண்டரை முற்றும் வெறுத்த தஞ்சை மன்னன் தேனியசபையின் சார்பாக வந்த மருத்துவருதவியால் பிணிதீர்ந்து எழுந்த பின்பு திருச்சபைக்கு என்ன தீங்குகள் செய்வானோ என்று ஏங்கி மயங்கினார். எனினும் "ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும்" என்னும் முதுமொழிக் கிணங்கக் காசிபர் தரங்கம்பாடியினின்று தஞ்சைக்குப் புறப்படக் குறித்திருந்த நாளில் பிணிவாய்ப்பட்டுப் படுத்தார்; மறுநாள் உயிர் விடுத்தார். தேனிய சபையார் அருமணி இழந்த நாகம் போல் ஆருத் துயருற்றார்; மராட்டிய மன்னனது ஆதரவைப் பெறுவதற்குப் பட்ட பாடெல்லாம் பாழாயிற்றென்று மனம் பதைத்தார். கவலை தீர்ந்த காவலூர்த் திருச்சபையார் 'கண்ணினைக் காக்கின்ற இமைபோற் காக்கும் காவலூர் அன்னையின் கருணையை நினைந்து மனமார வாழ்த்தினார்.

காவலூர் மாதாவின் அருளால் கவலைநீங்கிய அடியார்கள் நாள்தோறும் நறுமலரும் தூபமும் சாந்தமும் கொண்டு அம் மாதாவைப் போற்றினார்கள். அடைக்கலமாதா எழுந்தருளியிருந்த பூஞ்சோலை கருதிய நலமெலாம் கனிந்தளிக்கும் கற்பகச் சோலையாக விளங்கிற்று. நல்லருள் தளிர்ப்ப ஞானநிழல் குளிர்ப்ப, வரம் அரும்ப, சீர்மை கனிய நின்றது அச் செழுஞ் சோலை.

## முனிவர் ஆர்வம்

அப் பூஞ்சோலையில் விரிந்த நறுமலர்களில் அமர்ந்து தேனுண்டு பண்ணார்ந்த பாட்டிசைத்த வண்டுகளைக் கண்டு மகிழ்ந்த முனிவர் தாமும் அடைக்கல மாதாவின் கண்ணியில் வண்டாக வளர்ந்து, அன்னையின் கருணைத் தேன் பருகித் தண்டமிழ்ப் பாட்டிசைக்கும் பேறுபெற விரும்பினார்; புரைதீர்ந்த

காவலூர்ப் பூம்பொழிலிற் புல்லாய்க் கிடந்து, மெய்யடியார் திருவடிப் பரிசம் பெற்றுப் பண்புற ஆசைப்பட்டார். திருக் காவலூர் அன்னை, பாவத்தீயினை ஆற்றுவாள்; மறை நூலி னைத் தேற்றுவாள்; உயிர்ப்பிணியினை மாற்றுவாள் என்று முனிவர் போற்றி உரைத்தார்.

## அடியார் வழிபாடு

இத்தகைய அடைக்கல மாதாவை வழிப்படப் போந்த அடியார்கள் அவ் வன்னையின் கருணையைப் பாட்டாலும் உரையாலும் பரவிப் போற்றுவாராயினர். அன்பர்கள் பாடிய பாடல்களை நாள்தோறும் கேட்டிருந்த சோலைக் கிளிகள் தாமும் அம்மொழிகளை மிழற்றி மகிழ்ந்தன. செவ்வாய்ச் சிறு கிளிகள் பசுந்தழைகளினிடையே மறைந்து நின்று, 'காவலூர்த் தாயே! காத்தருள்வாயே' என்றும், 'கன்னித்தாயே! கருணை செய்வாயே' என்றும் பவழவாய் திறந்து பேசும்பொழுது, அச் சோலையில் வைகும் அடியார்கள் ஐந்து பேரறிவும் செவிகளே கொள்ள ஆனந்த பரவசமடைந்திருப்பர்.

கல்நெஞ்சையும் உருக்கும் காவலூர்த்தாயின் கருணையா லும், மறத்துறை நீங்கிய மாதவர் அருளாலும் காவலூர்ச் சோலையில் வாழ்ந்த உயிர்களெல்லாம் பிணக்கம் நீத்து இணக்கமுற்று வாழ்ந்தன. அச் சோலையில் மகிழ்ந்து நடமாடும் அன்னங்கள் மெல்லியல் அடியார் நடைகண்டு உள்ளழிந்து ஒதுங்கி ஓடுவதில்லை. கீதம் பாடும் குயில்கள் அடியார்கள் பண் ணோடு பாடும் பாட்டொலி கேட்டுப் பறந்தோடுவதில்லை. மரக் கொம்பினின்று உதிர்ந்த கனிகளை வீசி யெறிந்து விளையாடும் அணிற்பிள்ளைகள் வேட்டை நாய்களின் காட்டங்கண்டு வெருண்டு மரங்களில் ஏறி மறைவதில்லை.

## பருந்தும் கிளியும்

இவ்வாறு இன்னுயிர்கள் அச்சமின்றி உயிர் வாழ்ந்த அச் சோலையில், ஒருநாள், வேற்றூர்ப் பருந்தொன்று விரைந்து புகுந்து ஒரு பசுங்கிளியைக் காலினாற் கவர்ந்தெடுத்துப் பறந் தது. அறநெறி துறந்த பருந்தின் வசப்பட்டுப் பதறிய அஞ் சொற் கிள்ளை, நடுங்கிய குரலால், "அன்னை மரியம்மையே! உன்னடைக்கலம்" என்று ஓலமிட்டது. அந் நிலையில் மறத்

துறை மேவிய பருந்து, தன் சிறகின் இயக்கமிழந்து காற்றேய்ந்த நிலையில் தலைகவிழ்ந்து வீழும் காற்றாடி போன்று தரையிடை மயங்கி வீழ்ந்தது. அப்பொழுது அதன் கால்களில் அகப்பட்டிருந்த பசுங்கிளி விடுபட்டு நடுக்கந் தீர்ந்து, பறந்து எழுந்தோடி, மரியம்மையின் திருவடியிலமர்ந்து. 'இன்னுயிர் காத்த அன்னாய்! போற்றி', 'பருந்தை மடக்கிய பாவாய்! போற்றி', 'அபயமளித்த அருந்தாய்! போற்றி' என்று ஞானத்தால் நன்மொழி பகர்ந்தது.

## பேய்க் காணி

நீர்வளம் பொருந்திய காவலூர்ப் பதியில், ஒரு காணி நிலம் நெடுங்காலமாக எருக்கும் குருக்கும் முளைத்துப் பாழ் நிலமாகக் கிடந்தது. அதனைச் சுற்றியிருந்த வயல்கள், பசும்பயிரின் முகங்காட்டி இருபூவும் தவறாது செந்நெல் விளைத்தன. பாழாய்க் கிடந்த நிலத்தை அணுகவும் அஞ்சினர் உழவர். அந்நிலம் கடுஞ்சினமுற்ற ஒரு கூளியின் ஆளுகையில் அமைந்திருந்ததென்றும், அக்காணியில் ஏர் பூட்டியுழுவோர் அப்பேயின் சீற்றத்திற்கு ஆளாவரென்றும் ஊரார் எண்ணியிருந்தனர். ஆயினும், மனத்திண்மை வாய்ந்த உழவன் ஒருவன் அப்பேய்க் காணியிற் பயிர் செய்யத் துணிந்து, அதன்கண் அடர்ந்து வளர்ந்திருந்த செடிகொடிகளைக் களைந்தெறிந்து நாளேர் பூட்டி உழுதான். அவன் துணிவினைக் கண்ட காவலூர்ப் பொதுமக்கள், "ஒருவன் செய்யும் தவறு காரணமாக ஊரார்க்கு என்ன தீமை நேருமோ" என்று ஏங்கி நடுங்கி நின்றார்.

## பயிரிட்டவன் பாடு

நாற்றுமுடி திருந்தித் தழைத்தோங்கி வளரக் கண்டு அவ்வுழவன் மனந்தழைத்தான். அக்கம் பக்கங்களிலிருந்த நெற்பயிர்களினும் பேய்க்காணிப் பயிர் செழிப்புற்றிருக்கக் கண்டு ஊரார் ஐயமுற்றார். 'அஞ்சினவர்க்கே வெஞ்சினப் பேய்' என்றறைந்தான் ஒருவன். 'அஞ்சாதார்க்குச் சஞ்சலமில்லை' என்று பல்லவி பாடினான் மற்றொருவன். 'வினையை விதைத்தவன் வினையை அறுப்பான்' என்று விளம்பினான் ஒரு கிழ

வன். "காவலூரில் ஒன்ற வந்த மாதா ஊர்ப்பேயை ஓட்டிற்ரோ?" என்று வினவினான் ஒருவன். இவ்வாறு பலர் பலவாருக எண்ணியும் பேசியும் வருகையில் அறுவடைக் காலம் வந்தடைந்தது. நல்ல நாளும் பொழுதும் பார்த்து, பேய்க்காணிப் பயிருக்குரியவனுய உழவன் நாட்கதிர் கொண்டான்; அக்கதிரில் உருவி எடுத்த சில நெல்லைத் தன் மனையாளிடம் கொடுத்தான். கணவன் பாடுபட்டுத் தேடிய புதுநெல்லின் அரிசியைத் தன் மனத்தில் நிறைந்திருந்த அன்போடு கலந்து அம் மாது நல்விருந்தாக்கி யிட்டாள். அமுதுண்டு மகிழ்ந்த உழவன் வெளித் திண்ணையிற் சாய்ந்து கண்ணயர்ந்து உறங்கினான். கணவன் மனமார உண்டு சென்ற பின்பு, எஞ்சிய உணவை அருந்திப் பரிகலம் திருத்திப் பாடு பார்த்திருந்த மனையாளும் மாலையில் மயக்கமுற்றுக் குடிசையினுள்ளே படுத்தாள். அன்று அறுத்துவந்த கதிர்களின் தாள்களைப் பழைய வைக்கோலுடன் கலந்து தின்ற காளைகளும் தொழுவத்திற் படுத்தன.

கதிரவன் மறைந்தான். காவலூர் மனைதோறும் மாதர் மணிவிளக்கேற்றிப் பூவும் பொரியும் தூவித் தெய்வம் தொழுதார்கள். நாட்கதிர் கொண்ட உழவன் மனையைக் காரிருள் சூழ்ந்து நின்றது. என்றும் கலகலப்பாய் விளங்கும் அம் மனை அன்று பொழுதடைந்து நெடு நேரமாகியும், ஒளியும் ஒலியுமின்றி அமைதியுற்றிருக்கக் கண்ட அயல் வீட்டார் கைவிளக்குகளை எடுத்து வந்தார்: வெளித்திண்ணையிலும் வீட்டினுள்ளும் அசைவின்றிக் கிடந்த உழவனையும் அவன் மனைவியையும் உற்று நோக்கினார்: இருவர் முகங்களிலும் மரணக் குறிக் கண்டு அலறி அழுதார். உழவனும் அவன் மனைவியும் இறந்தாரென்னும் செய்தி காவலூர் முற்றும் விரைவிற் பரவியது. ஊரார் திரண்டு போந்து வீடு முற்றும் சுற்றிப் பார்க்கையில், உழவனுக்குரிய காளைகளும் கால் பரப்பி இறந்து கிடக்கக் கண்டார்கள். பேய்க்காணியைப் பயிரிட்டதனுலேயே உழவன் குடும்பமடங்கலும் இறந்துபட்டதென்று ஊரார் இரக்கமும் அச்சமும் எய்தினர். அந்நிகழ்ச்சிக்குப் பின்பு பேய்க்காணியைக் குறித்துப் பேசவும் அஞ்சினர் அவ்வூரார். அக்காணியில் விளைந்த நெல் அறுப்பாரின்றி உதிர்ந் தழிந்தது. அன்று முதல் அவ் வயலின் அருகே செல்வார் எவருமில்லை'

**அடைக்கலக் காணி**

இவ்வாறிருக்கையில், காவலூர் அடைக்கலமாதாவின் அடித்தொண்டராய அன்பர் சிலர், குறும்பிழைக்கும் கூளியை ஒறுக்கும் திறம் வாய்ந்த அன்னையின் அருட்டுணை கொண்டு அவள் பெயரால் அப்பேய்க்காணியை உழுது பண்படுத்தத் துணிந்தார்கள். கிருஸ்தவர் அல்லாதவர்கள் மறைவாக தமக்குள்ளே பல பேசி முன் உயிரிழந்த உழவன் கதியே இவர்க்கும் நேருமென்று உறுதிகொண்டிருந்தார்கள். பருவத்தில் பண்படுத்தி, யேசுசமயத்தை நேசித்த பள்ளியர்கள் தொளியில் நாற்று முடியை நட்டுக் கரையேறினார்கள். இளம் பள்ளியர் நேராகத் தத்தம் மனை நோக்கிச் சென்றனர்.

முதியவளாய ஒரு பள்ளி நாள்முழுதும் வேலைசெய்த களைப்பினால் அக்காணியினருகே நின்ற பெரு மரத்தடியில் படுத்துறங்கினாள். அப்பொழுது கறுத்து வற்றிய யாக்கையும் குழன்ற பசுங்கண்ணும், தயிர் மத்துப் போன்ற தலையும், சுரை வித்துப் போன்ற பல்லுமுடைய ஒரு கோர வடிவம் அவள் முன்னே தோன்றித் தன் காணியில் பயிரிடத் துணிந்தவரை ஒறுத்து அழிப்பதாக வஞ்சினம் கூறி அச்சுறுத்தியது. மெய் சோர்ந்த நிலையிலும் மரியம்மாளிடம் வைத்த மனம் சோராத அம் முதியவள், 'அச்சந்தீர்க்கும் அம்மையே காப்பாய்! பேயை ஒழிக்கும் தாயே காப்பாய்' என்று முறையிட்டாள். அடைக்கல மாதாவின் பெயர் கேட்ட அலகை, கரம் பிசைந்து, அலக்கணுற்றது. "நேற்று வந்த இம் மரியம்மாள் ஆற்றலாலன்றோ எனக்குரிய காணியைக் கவரத் துணிந்தீர்? பல்லாண்டு இந்நிலத்தில் வாழ்ந்த எனக்குப் பகையாய் முளைத்த உழவரைக் கொல்லவும் வழியற்று உழல்கின்றேனே! யான் செய்த தீவினையாலே இவ்வடைக்கலத்தாள் காவலூர்க் கரையை வந்தடைந்தாள். இனி யான் என் செய்வேன்?" என்று மார்பில் அறைந்தது.

இவற்றைக் கனவிற்கண்ட கிழவி பதைபதைத்தெழுந்தாள்; நிலத்தினருகே எவரும் இல்லாமை கண்டு இருளும் வேளையில் தன் வீட்டை நோக்கி நடந்தாள்; சேரியில் தத்தம் வேலை முடித்து வேம்படியிற் கூடியிருந்த மாதரிடம் தான்

கண்ட கனவை விரித்துரைத்தாள். அக் கதை கேட்டு வியப்புற்ற பள்ளரும் பள்ளியரும் பேய்த்திற மறுக்கும் மாதாவின் பெருமை அறிந்து மனமாரத் தொழுதார். நெடுநாளாகப் பேய்க்காணி என்று பெயர் பெற்றிருந்த விளை நிலம் அன்று முதல் அடைக்கலக் காணி என்று பெயர் பெற்று, மாதாவின் திருக்காணியாய் மதிப்புற்று விளங்கிற்று.

இன்னும் வறுமையால் வருந்தினோரும், தொழு நோய் முதலிய பிணிகளால் துன்புற்றோரும், மையலுற்று மயங்கினோரும், நஞ்சுண்டு நடுங்கினோரும், கூளியின் வசப்பட்டுக் குறுகினோரும், திருக்காவலூரிற் போந்து அடைக்கல மாதாவின் அடியினைத் தொழுது நலிவு நீங்கி நலமுற்றார்.

# 4. தொண்டை நாடு

[கனம். எம். பக்தவத்ஸலம். B. A., B. L.,]

## நாட்டுப் படலம்

நாட்டுப் படலம், நகரப் படலம் பாடும் வழக்கம் பழைய இதிகாச இலக்கியங்களில் மட்டும்தான் காண்கின்றோம் என்றில்லை. இன்றுங்கூட, இத்தகைய விழாக்களிலும், மற்ற மாநாடுகளிலும் இவற்றை விவரித்துக் கூறுவது சம்பிரதாயமாகி விட்டது. பழையன வெறுக்கும் புதுமைச் "சிற்பி" களும் இதற்கு விலக்கல்லர். தம்மை அறியாமலே இந்தச் சம்பிரதாயத்துக்கு அத்தகையவர்களும் அடிபணியும் போது, பழைய சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொண்ட என்போன்றோர் அதை எப்படி விடமுடியும்?

தொண்டைநாட்டில் காவிரி, தாமிரபரணி போன்ற வற்றாத பெரு நதிகள் இல்லை. மலை நாட்டிலிருப்பது போன்ற இயற்கைப் பெருவளமில்லை. கொங்கு நாட்டின் கைத்தொழில் பெருக்கம் இல்லை ஆனால், வாழ்வில் நம்பிக்கை வற்றாத உழைப்பாளர் இங்கு அதிகமுண்டு. துன்பங்களை யெல்லாம் இன்முகத்தோடு ஏற்று நடத்தும் நெஞ்சுரம் கொண்ட அறிஞர்களுக்கு இங்கே குறைவில்லை. இயற்கை யன்னை இங்குள்ள மக்களுக்கு அநேக வசதிகள் செய்து கொடுத்து அவர்களைச் சுகவாசத்திற் கிரையாக்கி அதன் பயனை சோம்பல் வாழ்வில் ஆழ்த்தாமல், மிக்க கருணையோடு, இப்பகுதி மக்களுக்குச் சலியாத உழைப்புத்திறனையும், தெளிந்த அறிவுத்திறனையும் வாரி வழங்கியுள்ளது. இயற்கை அன்னையின் அன்பை என்னென்று புகழ்வது!

## சிற்பத்தின் தனிப் பெருமை

மாமல்ல புரத்துச் சிற்பம் பொதுவாகத் தமிழ் நாட்டின், சிறப்பாகத் தொண்டை நாட்டின், கலைத்திறனுக்கே ஓர் அணிகலன். அதனை உலகம் முழுவதும் பாராட்டி வருகிறது. அதன் மூலம், இந்திய நாட்டின் சிற்பத்துக்கே தனிப்பெருமை கிடைத்துள்ளது. அதைப்போன்ற, காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயில் சிற்பம், வைகுண்டப் பெருமாள் கோயில் சிற்பம் ஆகி

யவை இந்தியச் சிற்ப வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விளங்கு கின்றன.

தொண்டை நாட்டு மக்கள், தம் கைத்திறமையைக் கல்லில் மட்டும் காட்டவில்லை. மக்களுக்குப் பயன்படும் பண்டங்களை உருவாக்கும் வகையிலும் காட்டி வருகின்றனர். காஞ்சீபுரம் நெசவுத் தொழில் தமிழ் நாடெங்கும் பிரசித்திபெற்றது. காஞ் சீபுரம் சென்றால் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம் என்ற பழமொழியும் பிறந்துள்ளது. இவை தவிர, இப்பிரதேசத்தில் பெரும்பாலும் கிணற்றுப் பாசனம் மூலமே உழவு நடைபெறு கிறது.

## சென்னையின் சிறப்பு

கல்லில் கைத்திறம் காட்டிப் புகழ்பெற்ற கலைஞர்களைப் போன்றே, சொல்லில் அறிவுத்திறம் காட்டி அமரத் தன்மை அடைந்துள்ள கலைவாணர்கள் அநேகர் தொண்டை நாட்டில் தோன்றியுள்ளனர். பாட்டின் திறத்தாலே உலகப் பாராட்டு தல் பெற்றுள்ள திருவள்ளுவனார், சென்னை நகரிலேயே தோன் றியவர். ஒப்பற்ற அறிவுக் களஞ்சியமான திருக்குறள் பல் லாண்டுகளுக்குமுன் உருவானது இங்கேயே என்று அறியும் போது நமக்கு ஒரு தனிச் செருக்கு ஏற்படுகின்றதல்லவா?

இப்பொழுது சென்னை நகரமாகத் திகழ்ந்துவரும் பிர தேசம் பல நூற்றுண்டுகளாகவே சரித்திரப் பிரசித்தி பெற்றுள் ளது. புதை பொருள் ஆராய்ச்சியாளரும், வரலாற்று ஆசிரியர் களும் இதைப்பற்றி பல அரிய செய்திகளைக் கண்டு பிடித்து வெளியிட்டுள்ளனர். அவற்றை யெல்லாம் விரித்துக் கூற இங்கு நேரமில்லை. ஒரு சில குறிப்புக்களை மட்டும் நினைவூட்ட உங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

சென்னையைச் சுற்றியும் உள்ள பிரதேசம், பழம் பாலாற் றங்கரை நாகரிகத்தின் நிலைக்களனாக விளங்கியது. சென்னைக்கு அருகே வடபுறத்தில் பேராறு ஒன்று அந்நாளில் ஓடியுள்ளது. குடத்தலையாறு, கூவம் முதலியவற்றைப் 'பழம் பாலாறு' (விருத்த க்ஷீர நதி) என்று கூறுவோர் இன்றும் உள்ளனர். திருமுல்லைவாயில், பாலாற்றங்கரையில் இருந்ததாகச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியுள்ளார். அந்தப் பழம் பாலாறு சுற்றுப்

புறத்து மலைகளின் நீரையெல்லாம் கொண்டு ஒரு காலத்தில் ஓடியிருக்க வேண்டும். பின்னே அது பல பல காட்டாறுகளாக வும், கல்லாறுகளாகவும், கூவம் அடையாறு முதலிய சிற்றாறு களாகவும் மாறி மறைந்ததாக ஆராய்ச்சியாளர் கருது கின்றனர்.

பழம் பாலாற்றங்கரையில் வாழ்ந்த கற்கால மக்களி டையே, 'கல்விடு பதுக்கை' அமைக்கும் வழக்கமும், (அதா வது, இறந்தோரைக் கல்லிட்டு மூடி, அதன்மேல் கல்லை வளைய மாக வைப்பது - இது சங்க நூல்களில் கூறப்படுகிறது). "முது மக்கள் தாழி செய்து வைக்கும் வழக்கமும்" (அதாவது மண் ணால் செய்த பெரிய சால்களில் இறந்தோரை அடைத்துப் புதைப்பது) இருந்தன கூடுவாஞ்சேரி, பெரும் பெயர், ஆதித்த நல்லூர், சத்தியவேடு, பெரியநத்தம் என்று சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் இவை கிடைத்துள்ளன. சென்னைக் கண் காட்சி நிலையத்தில் இவற்றை இன்றும் காணலாம். இவற்றின் மூலம் இரண்டாயிரத்தைந்நூறு (2500) ஆண்டு களுக்கு முன் இங்கு வாழ்ந்த மக்களது தயவேலைத்திறம் நன்கு விளங்குகிறது.

கற்கால மக்களுக்குப்பின், இரும்பு செம்பு முதலியவற்றை அறிந்து உபயோகிக்கும் காலம் வந்தது. அக்கால மக்கள் வாழ்க்கையை அறிய சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வரும் இடுகாடு பெரிதும் துணைபுரிகிறது. இரும்புக் காலத்திருந்த மக்களே இங்கிருந்தவர்கள் என்பதை ஆராய்ச்சியாளர் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறாக, பழைய சரித்திர காலம் முதற்கொண்டு மக் கள் நாகரிக வளர்ச்சியின் வரலாற்றை அறிவதற்கு சென்னைப் பிரதேசம் உதவியாக இருந்து வருகிறது.

தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளைக் குறிப்பிடும்போது தொல்காப்பியர் காலத்திலேயே பன்னிரண்டு நாடுகள் கூறப் படுகின்றன. அவற்றுள் அருவா, அருவா வடதலை என்பன திருவேங்கடமலை வரையில் இருந்தன. பழைய நாகரிக ஊற்று கச் சென்னையும் (பழம் பாலாற்றங்கரை), புதிய நாகரிக ஊற் றுகப் புதிய பாலாற்றங்கரையும் விளங்கின.

**பல்லவர் சேவை**

இந்த அருவாநாடு அதற்குப்பின் பன்னெடுங்காலம் பெருங்காடாய்க் கிடந்திருக்க வேண்டும். ஆர்க்காடு, ஈக்காடு, பழவேற்காடு, ஆலங்காடு, திண்டிவனம், செங்காடு, ஊற்றுக் காடு, இளங்காடு முதலியன இந்த அருவாநாட்டில் உள்ள ஊர்களின் பெயர்களாகும். இத்தகைய பிரதேசங்களிலிருந்து காடுகளை வெட்டித் திருத்திய பெருமக்கள் "காடுவெட்டிகள்" எனப் புகழப்பட்டனர். காட்டில் வாழ்ந்து அவர்கள் செய்த சேவையைப் பாராட்டி 'காடவர்' என்றும் அவர்களைத் தமிழர் சிறப்பித்தனர். தொண்டையர்கள் என்ற பல்லவர்கள் இந்தச் சிறப்புப் பெயர்களைத் தங்கள் கல்வெட்டுக்களில் செதுக்கி வைத்துப் போயிருக்கின்றனர். இந்தப் பல்லவர்கள் காஞ்சி யைத் தலைநகராகவும், மாமல்லபுரத்தை முக்கிய துறைமுக மாகவும் கொண்டு இப்பிரதேசத்தில் அரசாட்சி புரிந்துள் ளனர். இவர்களுக்கு முன்னால், கரிகால் பெருவளத்தான் என்ற சோழ மன்னன், காடாக இருந்த தொண்டைமண்டலத் தைச் சீர்ப்படுத்தினான் என்பதற்குத் தமிழ்ப் பாட்டுக்களிலும், கல்வெட்டுக்களிலும் அநேக சான்றுகள் உள்ளன.

தொண்டைமண்டலத்திற்கு அருவாநாடென்ற பெயர் வழங்கி வந்ததல்லவா? அப்போது அந்நாட்டார் (அதாவது அருவர்) பேசிய தமிழுக்கு, அந்நாட்டின் வடபகுதியிலுள்ள வடுகர்கள், "அரவம்" எனப் பெயரிட்டனர். அதுவே தமிழுக்கு ஆந்திரர் வைத்த பெயராகி விட்டது.

அருவாநாட்டுத் தமிழ் பற்றி இலக்கண நூல்களிலும் சில குறிப்புக்கள் உள்ளன. உதாரணமாக "கேணி" என்றால், தமிழ் நாட்டுப் பிற பகுதிகளில் கிணறு என்றே பொருள். ஆனால் அருவாநாட்டார் குளத்தினைக் "கேணி" என்று வழங்கி வந் துள்ளனர். இதற்கேற்ப, சென்னை பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் எதிரில் உள்ள குளம் திரு அல்லிக்கேணி (திருவல் லிக்கேணி) என்ற பெயர் பெற்றுள்ளது. இப்போது அதைச் சுற்றியுள்ள பிரதேசமே அப்பெயரால் குறிக்கப்படுகிறது.

**திருவல்லிக்கேணி, மயிலாப்பூர்**

திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், திருவொற்றியூர் முதலி யன மிகப் பழங்காலம் முதற்கொண்டு, தமிழ் நாட்டு வரலாற்

றில் இடம் பெற்று, தமிழ்ப் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. திருமங்கை யாழ்வார் 'விற்பெரு விழவும்' என்ற பாசுரம் மூலம் திருவல்லிக்கேணிப் பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர். "குரவமே கமழும் குளிர் பொழிலூடு, குயிலொடு மயில்கள் நின்று ஆல, இரவியின் கதிர் கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணி கண்டேனே"— என்று அதனது இயற்கை வளனைப் புகழ்கின்றார். அதனை அடுத்துள்ள மயிலாப்பூரை, "தேனமர்சோலை, மாடமாமயிலை" எனக் குறிப்பிடுகிறார்.

அது மட்டுமா? முதலாழ்வார்களுள் ஒருவரான பேயாழ் வார் பிறந்தது மயிலாப்பூரிலேயே. சென்னைக் கடற்கரையின் அழகை, பக்திச் சுவையோடு கவிதை நயம்பட அவர் பாடி யிருக்கிறார். கடலலைகளில் தவழும் முத்தும் பவளமும், பெரு மாளுக்குச் சமுத்திரராஜன் ஏற்றிவைக்கும் அந்திக்கால மங்கல விளக்காக அவருக்குத் தோன்றியது. "வந்துதித்த வெண் திரைகள் செம்பவள வெண்முத்தம் அந்திவிளக்கும் அணி விளக்காம்" என்பது அவர் வாக்கு.

சைவக் குரவருள் ஒருவரான திருஞான சம்பந்தர் எலும் பைத் தம் செந்தமிழ்ப் பாடலால் பெண்ணாக்கியதும் மயிலாப் பூரிலேயே. "ஊர்திரைவேலை உலாவும் உயர்மயிலை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பொருட் செல்வத்தை யெல்லாம் துறந்து, துறவறச் செல்வரான பட்டினத்தடிகள் தம் இறுதிக் காலத்தில் வாழ்ந்த இடமும் சென்னையைச் சார்ந்த திரு வொற்றியூரேயாகும்.

சென்னை நகரின் வாணிகச் சிறப்பைச் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் மிகவும் பாராட்டி யிருக்கிறார்.

"பல் பெருங்குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திரு மயிலாபுரி"

என்று இந்நகரத்து வியாபாரிகள் புகழையும், செல்வ வளனை யும் பாடியுள்ளார்.

சமரச சன்மார்க்க நெறியைப் போதித்த அருட்பெருஞ் சோதி இராமலிங்க வள்ளலார் வாழ்ந்ததும், "தருமமிகு சென்னை" என்று வாழ்த்தியதும் இந்த நகரையேயாகும். அவர்

உள்ளம் கனிந்து பாடிய கந்த கோட்டம் விளங்குவதும் இந்நக ரத்திலேயே. இதைப் போன்று இங்கே வாழ்ந்த பெரியோர் களின் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இதனு லேயே "தொண்டை நாடு சான்றோர் உடைத்து" என்ற புகழ் மொழி பிறந்துள்ளது.

## கடல் கடந்தும் சென்றது

சென்னையின் பெருமை, பழங் காலத்திலேயே கடல் கடந்தும் சென்றுள்ளது. இப்போது மயிலாப்பூர் என வழங்கும் மயிலை, கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலேயே மேனுட்டாருக்குத் தெரிந்திருந்தது. 'டாலமி' என்பவர் அந்த நூற்றுண்டில் வாழ்ந்த யவன பூகோள ஆசிரியர். தாம் எழுதிய உலகப் படத்தில், அவர் மயிலையைக் குறித்து வைத் துள்ளார் என அறிஞர்கள் கருதுகின்றனர். அவர் தம் படத்தில் "மல்லியர்பா" என்ற பெயரை, இப்போது சென்னை இருக்கும் இடத்தில் ஒரு துறைமுகத்தின் பெயராக எழுதி வைத்துள்ளார்.

இந்த மயிலாப்பூரின் புகழ் மற்ருெரு வகையிலும் மேனுட்டை எட்டியுள்ளது. யேசுநாதரது அடியாரான "செந்தோம்" என்ற தோமை அடிகளார் இந்தியாவுக்கு வந்து, தம் அறிவுரைகளை இந்தச் சென்னை மக்களிடையே வழங்கின தாகக் கூறுகின்றனர். செந்தோம் கோயிலும், பரங்கிமலையைச் சார்ந்த சிறுமலையும் பெருமலையும் இதற்குச் சான்றுக இருப் பதை எடுத்துக் காட்டுகின்றனர். இதன்படி பார்த்தால், கிறிஸ்து பெருமான் பிறந்த முதல் நூற்றுண்டிலேயே மேனுட் டோடு சென்னைக்குத் தொடர்புண்டாகி இருந்ததெனக் கொள்ளலாம்.

கலங்கரை விளக்கு சென்னையில் ஒளிர்வது இன்று மட்டு மன்று. சில நூற்றுண்டுகளுக்கு முன்பு, கீழ் கடலில் கப்ப லோட்டி வந்த மேனுட்டார் திசை யறியாது திகைத்ததாகவும், அதிருஷ்ட வசமாக அப்போது ஒரு பேரொளி தோன்றிய தாகவும், அது தோன்றிய இடத்தில் ஒளியம்மைக்கு ஒரு கோயில் எழுப்பியதாகவும், அதையொட்டி அந்த இடத்திற்கு "லஸ் சர்ச்" என்ற பெயர் வைத்ததாகவும் கூறுவர்.

## ஆன்மீகச் சிறப்பு

சென்னைப் பிரதேசம், தமிழ் நாட்டு மக்களது ஆன்மீக வாழ்வுக்கும் அதிக துணை புரிந்துள்ளது. சென்னையை அடுத்த திருமழிசை என்னும் ஊரில் இளமை முதல் பெயர் பெற்ற நாஸ்திகராய் ஒருவர் வாழ்ந்து வந்தார். அத்தகையவரை பரம ஆஸ்தீகராகச் செய்ததோடு, ஆழ்வாராகவும் மாற்றிய பெருமை, சென்னையில் பிறந்த பேயாழ்வாரைச் சாரும். எனவே, நாத்திகரையும் நல்வழிப்படுத்தும் நற்குண சீலர்கள் இங்கே எப்போதும் இருந்தே வருவார்கள்.

அதோடு, மக்கள் துன்பங்களைக் கண்டு கசிந்துருகி அவர்களுக்குத் தொண்டு செய்வதே ஆண்டவனுக்குச் செய்யும் பெரிய கைங்கரியம் என்ற கொள்கையை மக்களிடையே பரப்பி, பெரிய வெற்றியும் கண்ட சீர்திருத்தச் செம்மல் இராமானுசர் பிறந்ததும் சென்னைக்கு அடுத்துள்ள ஸ்ரீபெரும்பூதூர் ஆகும். அதை அடுத்துள்ள குன்றத்தூரிலே, பக்திச் சுவையும் இயற்கை அழகும் மிக சொட்டச் சொட்டக் கவி பாடிய சேக்கிழார் பெருமான் பிறந்தார்.

இவ்வாறு இப்பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞர்களும், அறவோர்களும் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தலைசிறந்த சேவை செய்துள்ளனர். இவர்கள் பிறந்தது தொண்டை நாடென்றாலும், இவர்கள் சேவை மூலம் தமிழ் நாடு மட்டுமன்றி, இந்திய மக்கள் அனைவருமே பயன் பெற்றுள்ளனர்.

இந்தச் செய்திகளையெல்லாம் இது போன்ற சந்தர்ப்பங்களிலாவது நாம் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். நம் பெரியோர்களின் லட்சியங்கள், அவர்கள் நமக்கு வழங்கிச் சென்றுள்ள இலக்கியப் பொக்கிஷங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ள நாம் முயல வேண்டாமா?

# 5. நாடும் நகரமும்

[டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A.,]

பழங்காலத் தமிழகம் என்றவுடனே, ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்பது அறியப்படும். அக் காலத் தமிழ்நாட்டைப் பற்றிய செய்திகள் கடைச் சங்க கால இலக்கியம் எனக் கூறப்படுவனவற்றுள் குறிக்கப் பட்டுள ; சிறப்பாக, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் ஆகியவற்றுட் சிலவற்றைக் காண்போம்.

பழைய தமிழ்நாடு சேரசோழ பாண்டியர்களால் ஆளப் பட்டது என்பது யாவரும் அறிந்ததே. சேரர்களுடைய தலைநகரம் வஞ்சி ; சோழருடையது காவிரிபுகும்பட்டினம் ; பாண்டியருடையது மதுரை.

இந்த நகரங்களில் காவிரிப்புகும்பட்டினத்தைப் பற்றி அறிவனவற்றை முதலிற் காண்போம். அங்கே பல சிறப்பட்ட மக்கள் வாழ்ந்தனர்; தட்ப வெப்ப நிலை நன்றாக அமைந்திருந்தது; கடற் காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது; மண் நல்ல வளம் பொருந்தியதாக இருந்தது. அந்நகர மக்களது சிறந்த தொழில் உழவே. காவிரியாறு கடலொடு கலந்த அவ் விடத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைக்காக வானத்தை நோக்கி வாழ்ந்தவர் அல்லர். நெல்லும் கரும்பும் நிறைய விளை விக்கப்பட்டன. அடுத்த சிறப்புடைய கைத்தொழிலாய் அமைந்திருந்தது நெசவே. அந் நகரத்திற் பஞ்சமும் தொழு நோயும் ஏற்பட்டதில்லை. அந் நகரத்தைச் சோழ அரசன் ஆண்டுவந்தான். இவ்வரசனே நாட்டின் முதற்குடியாக மதித் தார்கள். இது "பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலை வைத்த......குடிகள்" என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அறியப்படும். அவ்வரசன் செங்கோலினனாக ஆண்டுவந்தான். அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்பவர்கள் அவனுக்கு உற்ற துணைவராய் இருந்து உதவிவந்தார் கள். அக்கால மக்கள் அவர்களை "ஐம்பெருங் குழுவினர்" என் றார்கள். இவரை யல்லாமல் "எண்பேர் ஆயத்தார்" என்பாரும் அரசனுக்கு உறுதுணையாய் அமைந்திருந்தனர். அவர்கள் கரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர்,

நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் என்ப பவர்கள்.

அரசன் தக்க ஆட்களை அமைத்து, வரிகளை உரிய முறையில் வாங்கிக் குடிமக்களின் நன்மைக்குப் பயன்படுத்தி வந்தான். உதாரணமாக, கரிகால் வளவன் என்ற சோழன் தன் நகர எல்லையை அடைந்த பண்டங்கட்குச் சுங்கம் வாங்கும்படி பணித்திருந்தான். அவ்வாறு சுங்கம் வசூலிக்கப்பட்டுவிட்ட பொருள்களின்மீது அவனுடைய ஏவலர்கள் அவனது புலி முத்திரையை இடுவது வழக்கம். இங்ஙனம் அவனது நகரத்தில் இறக்குமதி செய்து குவிக்கப்பட்ட பண்டங்கள் பல குன்றுகளைப் போலக் காட்சி அளித்தன. இதனைப் பட்டினப் பாலை என்னும் பழைய நூல்

" உல்குசெயக் குறைபடாது
............................
அளந்தறியாப் பலபண்டம்
............................
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போர் "

எனச் சொல்லி யிருக்கிறது.

அந் நகரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் இன்ன என்ற விவரமும் நாம் அறிகிறோம். அரேபியாவிலிருந்து கப்பல்களிற் குதிரைகளும், மேற்குக்கடற் பக்கத்திலிருந்து படகுகளில் மிளகுப்பொதிகளும், மேருவிலிருந்து மாணிக்கமும், பொதிய மலையிலிருந்து சந்தனமரமும், பாண்டிநாட்டிலிருந்து முத்துக்களும், கீழ்க்கடற்பகுதியிலிருந்து பவளங்களும் வந்திறங்கின என அறிகிறோம். ஈழ நாட்டிலிருந்து பனைவெல்லம் முதலிய சில உணவுப் பொருள்களும், பர்மாவிலிருந்து சில மணப்பொருள்களும், சீன தேசத்திலிருந்து கற்பூரம் குங்குமம் முதலிய பொருள்களும் வந்திறங்கின.

காவிரிபுகும்பட்டினத்தில் வாழ்ந்த மக்களிற் சிலர் பகற்பொழுதில் ஓய்வுநேரத்தை எவ்வாறு கழித்தனர் என உருத்திரங் கண்ணனார் கூறியுள்ளார். நன்றாக உண்டுடுத்து வாழ்ந்த அவர்கள் சில வேளைகளில் ஊர் நடுவே கூடி, ஆட்டுக் கிடாயை

யும் சிவல் என்னும் பறவையையும் மூட்டவிட்டு விளையாட்டுப் பார்ப்பது வழக்கம். இன்னும் சில வேளைகளில், களரியிற் புகுந்து குத்துச்சண்டை, வெட்டுச்சண்டை, கவண்கல் எறிதல் முதலிய வற்றில் ஈடுபடுபவர். பல வேளைகளில், கடலாடியும், புனல்படிந்தும், நண்டுகளைப் பிடித்து ஆட்டியும், அலைகளோடு போட்டியிட்டும் பொழுதுபோக்குவர். இரவில் பட்டாடைகளை நீக்கி மிக மெல்லிய பருத்தியாடைகளை உடுப்பர்; பாடல்கள் கேட்பர்; நாடகம் காண்பர்; வெண்ணிலவின் பயனையும் துய்ப்பர்.

இவ்வாறு இனிமையாகப் பொழுதுபோக்கினர் என்றால், அம் மக்கள் மிக்க செல்வம் படைத்தவராகவும், உழைத்துழைத்து ஊதியம் திரட்டினராகவும் இருந்தனர் என்பது சொல்லாமலே விளங்கும் அன்றோ? அவரெல்லாம் பகலிலே சாயங்காலம் வரையும், பொழுது போனபின்னரும், தொழில் ஆற்றினவர். அவர்களிற் சிலர் பூவும் புகையும் விற்றவர்கள்; சிலர் வண்ணமும் சுண்ணமும் விலை பகர்ந்தவர்கள்; சிலர் பட்டாலும் எலிமயிராலும் பருத்தி நூலாலும் ஆன ஆடைகளை இயற்றி விலைக்கு விற்றவர்கள். இன்னும் சிலர் அவரை, துவரை முதலிய எண்வகைத் தானியங்களை விற்று ஊதியம் தேடினவர்கள்; சிலர் பிட்டும் அப்பமும் விற்றவர்கள்; மீன் விற்றவரும் உப்பு விற்றவரும் உண்டு. வெண்கலக் கன்னரும் செம்புக் கொட்டிகளும், மரவேலை செய்த தச்சரும், உழைத்துழைத்துக் களைத்துப் போன கொல்லரும் நாடகம் நயந்தும் ஆடல்கள் ஓர்ந்தும் வந்தார்கள் என அறிகிறோம். காவிரிபுகும் பட்டினத்திலே, பல உருக்குத் தட்டாரும், பணித்தட்டாரும், சிற்பாசிரியர்களும், சித்திரக்காரர்களும், தையற்காரர்களும் விரும்பித் தொழில்புரிந்தனர் என அறிகிறோம். துணியினாலும் கெட்டியினாலும் பூ, வாடாமாலை, பொய்க் கொண்டை முதலிய பொருட்களை அமைக்கும் கைத்தொழில் வல்லவர்கள் இருந்தார்கள். இவர்களைப் பற்றிச் சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற் செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புகாரின் கடற்கரைப்பக்கம் மருவூர்ப்பாக்கம் என ஒரு பிரிவாகவும், உட்பக்கம் பட்டினப்பாக்கம் என ஒரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் தொழிலாளரும், பட்டினப் பாக்கத்தில் அரசரும் செல்வரும் வாழ்ந்திருந்தனர்.

மதுரை ஆகிய பாண்டியர் நகரத்தைக் குறித்து மாங்குடி மருதனார் "மதுரைக் காஞ்சி"யிற் கூறியுள்ளார். மதுரை ஆறு கிடந்தாற் போன்ற அகன்ற தெருக்களை உடையது. தெரு ஆறு போலவும், இரு பக்கத்து வீடுகள் ஆற்றின் கரை போலவும் அமைந்திருந்தன. இனி, மதுரையின்கண் உள்ள கடைகளில் இரவிலும் பகலிலும் எவ்வாறு வாணிகம் நடந்தது என்பதை அறிவோம் அந்திக் கடையை அல்லங்காடி என்றும், பகற்கடையை நாளங்காடி என்றும் கூறுவது அக்கால மரபு

சிலர் அறுத்த சங்கினை வளையல் முதலியவாகக் கடைந்து தருவர்; சிலர் அழகிய மணிகளுக்குத் துளையிடுவர்; சிலர் பொன்னை உரைத்து மாற்றுக் காண்பர்; சிலர் பொன்வேலை செய்வர்; சிலர் புடவை விற்பர். சிலர் அருமையான ஓவியம் வரைவர். சிலர் சிற்றுடையும் பெரும்புடவைகளும் கொண்டு வந்து தத்தம் சிறுவரோடும் நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் கால்கடுக்க நின்று விற்பர். பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம், பாகற்காய், வழுதுணங்காய், வாழைக்காய், கிழங்குகள், கீரை முதலானவற்றை விற்கும் பல இரவுக் கடைகள் உண்டு.

இவ் விரவுக் கடைகளெல்லாம் முதல் யாமத்திலேயே மூடப்பட்டுவிடும். பிறகு, இரண்டாம் மூன்றும் யாமங்களிலே ஊர்காவலர்கள் உறுதியுடன் நகரில் உலாப் போவர். மழைபெய்து தெருவில் நிறைய நீரோடிக் கொண்டிருக்கிற பொழுதிலும், தம் கடமையில் வழுவாராய், கையில் வில்லும் அம்புமாக இவர்கள் திரிவார்கள் என மதுரைக்காஞ்சி சொல்கிறது.

மதுரை நகரத்தில் அக்காலத்தில் தொழில் புரிந்தார் இவரிவர் எனச் சிலப்பதிகாரம் கூறுவதை நோக்குவோம். சிலர் செம்பாலும் வெண்கலத்தாலும் பற்பல பாத்திரங்கள் செய்வர். சிலர் ஆனைக்கொம்பு முதலியவற்றைக் கடையும் தொழிலில் ஈடுபடுவர், வண்டியும் தேர்வட்டையும் தேர்க்கொடிஞ்சியும் செய்வோர் பற்பலர் உண்டு. கையில் துலாக்கோலொடும் மரக்காலொடும் நின்று பண்டங்களை நின்றவிடத்திலேயே அளந்துகொடுப்போர் பலர். சில கடைகளில் ஆடகப் பசும்

பொன் விற்கப்படும். இங்கே 'சாம்பூனதம் விற்கப்படும்'. 'இங்கே சாதரூபம், கிளிச்சிறை விற்கப்படும்' என்ற குறிப்புப் பட எழுதப்பட்ட கொடிகள் திகழும். அதனால், சாமான் வாங்குவோர் ஒவ்வொரு கடையிலும் புகுந்து திரும்பாமல் வேண்டிய கடையில் புகக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது என அறிகிறோம்.

சேரர் பேரூர் ஊரின் தனிநிலை பெருததாய் நானிலத்தின் பான்மையும் பொருந்தப் பெற்றிருந்தது என்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது. அந் நகரத்தில் மலையும் கடலும் கானும் வயலுமுண்டு என்று சொல்லத் தக்கபடி ஒரு வருணனை காணப்படுகிறது. "குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாட்டினையும், உழவர் பாடிய ஓதைப் பாணியையும், இடையர் பாடிய குழலின் பாணியையும், நுளைச்சியர் பாடிய நெய்தற் பாணியையும்" செங்குட்டுவன் மனைவி கேட்டனளாய்ப் படுக்கையில் இருந்தாள் எனக் கூறப்பட்டிருப்பதால், அந்நகரத்தின் தட்பவெப்ப நிலை கலப்புவாய்ந்தது என்பது பெறப்படும். அங்கு வாழ்ந்த மக்கள் வேட்டுவரும், உழவரும், இடையரும், பரதவரும் ஆகிய பல திறத்தவர் என்பதும் பெறப்படும். அந்த நகரத்தில், சிவனுக்கும் திருமாலுக்கும் சிறந்த கோயில்கள் அமைந்திருந்தன.

அக்காலத்தில், தமிழரசருடைய தலைநகரங்களிற் பிற நாட்டு வேந்தருடைய ஒற்றர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குரிய சான்று சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்திற் காண்கிறோம். சேரன் செங்குட்டுவன் வடநாடு புகுந்து வெற்றி கொள்ள வேண்டும் எனத் தன் அமைச்சனிடம் சொல்லவும், அவன் கண்ணகிக்குக் கோயில் எடுக்க ஒரு கல்லிற்காகத்தானே போகவேண்டும், வடநாட்டு மன்னர்க்கு முடங்கல் அனுப்பினால் வந்துவிடும் என்றான். அப்பொழுது அழும்பில்வேள் என்பான் "முடங்கல் வரையவேண்டா, இந்த ஊரிற் பறை அறைந்தாற்போதும். இவ்வூரின்கண் வடநாட்டு மன்னரது ஒற்றராய் வந்திருப்போர் அறிவித்து விடுவர்" எனச் செங்குட்டுவனுக்குச் சொன்னான் எனப் படிக்கின்றோம். இதனால், சேரருடைய தலைநகரத்திற் பிற வேந்தரது ஒற்றர்கள் வந்து தங்கியிருந்தனர் என்பதும், அவ்வாறே ஏனைய நாடுகளில்

தமிழ்வேந்தர்களது ஒற்றர்கள் போய்த் தங்கியிருந்தனர் என்பதும் அறியப்படும்.

இனி, நாட்டுப்புறங்களில் மக்கள் வாழ்க்கை நடத்திவந்த விதத்தைச்சிறிது பார்ப்போம். சில இடங்களில், உப்புவாணிகர் வண்டி நிறைய உப்பு மூட்டைகளை ஏற்றிப் பக்கத்து ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பர். அப்படிப் போகுங்கால், வண்டியில் பூட்டப்பட்ட எருது சோர்ந்தாற் பூட்டுதற்கு வேண்டும் என வேறு எருதுகளைத் தம்மொடு கொண்டுபோவர். வண்டியில், ஆடவர் ஏறிக்கொள்ளாது மகளிரை ஓட்டச்செய்து, தாம் சாலையில் இருமருங்கும் எருதுகள் திருகாமலும் வண்டி அச்சு முறியாமலும் பாதுகாத்துச் செல்வர். சில வேளைகளில், கையிலே குழந்தையையுடைய மகளிரும் அவ்வாறு எருதுகளைத் துரத்தி வண்டியை ஓட்டிக்கொண்டு போவது உண்டு என்பது பெரும்பாணாற்றுப்படையால் அறியப்படுகிறது. வேறு சில இடங்களில் மிளகுப் பொதிகளைக் கழுதைமீதேற்றிப் பக்கத்தே வாளுங் கையுமாய்ப் போய்க்கொண்டிருந்தவர்களும் உண்டு.

பெரும்பாணாற்றுப்படையில் அடியிற் காணுமாப் போல ஒரு வருணனை அமைந்துளது. ஆண்டு ஒரு குடிசை தோன்றுகிறது. அஃது ஈச்ச இலையால் வேயப்பட்டிருக்கிறது. குடிசையின் முன்பக்கத்தில் ஒரு விளாமரம் நிற்கிறது. அவ் விளாமரத்தடியில் ஒரு பார்வைமான் கட்டின இடம் தேய்ந்து போயிருக்கிறது. அக் குடிசையிற் குழந்தையைப் பெற்றுள்ள பெண்ணொருத்தி குழந்தையோடு மான்றோலில் முடங்கிக் கிடக்கிறாள். அவ்வீட்டின் பிற பெண்டிர் இன்னொரு இடத்திற் காணப்படுகிறார்கள். அங்கே நிலத்தைக் கடப்பாரையினாலே குத்தித் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே எறும்புகள் தேடிவைத்துள்ள புல்லரிசியை வாரி எடுத்துக் கொண்டு வருகிறார்கள். விளாமர நிழலில் நிலவுரலிலே இட்டுக் குத்துகிறார்கள். ஆழ்ந்த கிணற்றிலிருந்து உவரிநீர் சிறிது முகந்து வருகிறார்கள். ஓறுவாய் போன பானையிலே அதைப் பெய்து, முரிந்த அடுப்பில் ஏற்றுகிறார்கள் அப்படி ஆக்குஞ் சோற்றோடு உப்புக் கண்டத்தைச் சேர்த்துக்கொண்டு தாமும் உண்டு பிறர்க்கும் அளிக்கிறார்கள்.

ஒரு நாட்டின்கண் ஓரிடத்தில் காயவைத்திருக்கும் உண வுப் பொருளைத் தின்னவரும் கோழியைப் பொற்குழையினால் ஓட்டுகின்ற அளவு செல்வச் செருக்குடைய மகளிர் வாழ்ந் தார்கள் ; அந்நாட்டில் வேறு ஒரு மூலையிற் பசியால் வாடிய மக்கள் பலர் வாழ்ந்தனர் எனச் சொல்லக்கூடிய வகையில் இவ் வருணனைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புற வாழ்க்கையை நடத்திவந்த இடைக்குல மகள் ஒருத்தியின் செய்தியை இனிக் காண்போம். பொழுது விடிய இன்னும் ஓர் யாமம் இருக்கும்பொழுதே இவள் எழுந்து தயிர் கடைகிறாள். இவள் மத்தினால் கடைவது புலிமுழக்கத்தைப் போல் இருக்கிறது. தயிரைக் கடைந்து வெண்ணெய்யை எடுத்துவிட்டாள். இப்பொழுது, தலையில் மோர்ப்பானை, அதற்குமேல் வெண்ணெய்ச் சட்டி இவற்றோடு புறப்பட்டு ஒரு நகர்ப்புறம் போகிறாள். தலையிலே பூஞ்சுமட்டின்மீது அப் பானை ஏற்றப்பட்டுள்ளது. இவள் காதில் குழை அசைகிறது. குறிய கூந்தலையுடைய இவள் மோர்விற்று நெல்லைப் பெறு கிறாள். அந்த நெல்லெல்லாம் சுற்றத்தாரும் தானும் உண் பதற்கு ஆகின்றன. நெய்யை விற்று அதன் மதிப்பை அப் படியே நகர மக்களிடையே நிறுத்தி நிறுத்தி வைத்துவிட்டு மீள்கிறாள். நாளடைவில், அந்த மதிப்பைப் பொன்கட்டி ஆக்கலாம். ஆனால், இவள் அவ்வண்ணம் செய்ய விரும்ப வில்லை. அந்தத் தொகைக்குப் பதில் பாலெருமைகளும் நல்ல பசுக்களுமே வாங்கிவருகிறாள்.

இவள் வீட்டிலே உள்ள ஆடவன் சீழ்க்கை அடிக்கும் வாயை உடையவன் ; செருப்புத் தழும்பு ஏறின காலை உடைய வன் ; பசுக்களை விரட்டுகின்ற தடி அமைந்த கையினை உடைய வன் ; ஒழிந்த நேரங்களில் மரங்களை வெட்டி வருதற்கு உதவும் கோடரியை உடையவன் ; காவடி சுமந்த தழும்பமைந்த தோளை உடையவன். அவன் பால் கறந்த கையைத் தலையிலே தடவித் தடவி ஒருவித சிறந்த மணம் அவன் தலையிலே வீசு கிறது. கொம்பிலும் கொடியிலும் பூத்த பல பூக்களால் ஆன கதம்பத்தை அவன் தலையிலே சூடிக்கொண்டு வருகிறான். இப் பொழுதுதான் மாடுகளை மேய்த்து வீடு திரும்புகிறான். அவ னொடு சென்றால், அவன் வீட்டிலே பசுந்தினைச் சோறும் பாலும் கிடைக்கும்.

இனி, ஒரு நாட்டுப்புற மறையவர் வீட்டினை நோக்கு வோம். அந்த வீட்டின் வாசலிலே பந்தல் போடப்பட்டிருக் கிறது. அப் பந்தர்க்காலில், ஒரு பசுங்கன்று கட்டப்பட்டுப் பொலிவாக விளங்குகிறது. வீடு மெழுகப்பட்டிருக்கிறது. அந்த வீட்டிலே கோழியோ நாயோ காணப்படவில்லை. ஒரு கிளி மாத்திரம் கூண்டிலே காணப்படுகிறது. அதுவோ வேதம் ஒலிப்பதுபோலத் தோற்றுகிறது. அந்த வீட்டுப்பெண் இப் பொழுதுதான் நல்ல வெண்ணெய்யில் மாதுளங்காயை பொரித்து மிளகுப்பொடியைத் தூவிக் கறிவேப்பிலையிட்டுத் தாளித்துக்கொண்டிருக்கிருள். வாசனை மூக்கில் ஏறுகிறது. அவள் கையில் ஐந்தாறு வளையல்கள் ஒலிக்கின்றன. அங்கே போனுல், நல்ல பருப்புச்சோறும் பொரியலும் மாவடு ஊறு காயும் கிடைக்கும்.

இன்னுஞ் சிறிது தொலை சென்ருல் ஆண்டு ஒரு வீடு தென்படும். அது வேளாளர் வீடுபோலத் தோற்றுகிறது, புதிய வைக்கோலால் அவ்வீடு வேயப்பட்டிருக்கிறது. பல பசுங்கன்றுகளைத் தாமணியாற் சேர்த்துத் தறிகளில் கட்டியிருக் கிருர்கள். அவ் வீட்டில் சில பெரிய நெற்குதிர்கள் காணப் படுகின்றன. அக் குதிர்களைக் 'கூடுகள்' என்கிருர்கள். அவை ஏணிக்கு எட்டாத உயரமுடையன. முகட்டைத் திறந்து பழைய நெல் சொரியப்பட்டுள்ள கூடுகள் நிரம்பி இருக்கின்றன. அவ்வீட்டுச் சிறுவர் சிறுதேர் உருட்டி விளை யாடிச் சோர்ந்துபோய்ச் செவிலித் தாயரிடத்துப் பால் நிறைய அருந்திப் படுக்கையிலே துயில்கிருர்கள். அங்கே சென்ருல் வெண்ணெல்லிலிருந்து எடுத்த அரிசியாலான இனிய சோற் றைப் பெட்டைக்கோழிப் பொரியலோடு பெறலாம். இவை போன்ற பழங்கால நாட்டுப்புறச் செய்திகளும் நகரச் செய்தி களும் சங்க இலக்கியங்களால் அறியப்படுகின்றன.

# 6. பால்

[திரு R. K. விசுவநாதன் அவர்கள் M.A.]

வேதம் ஏற்பட்ட காலத்திலேயே அன்னத்திற்கு அடுத்த படியாகப் பாலின் சிறப்பை நம் முன்னோர்கள் உணர்ந்திருக் கிறார்கள். திருமால் பாற்கடலில் படுத்துக்கொண்டிருப்பதாக நம் புராணங்கள் கூறுகின்றன. பாலையும் பாலிலிருந்து கிடைக்கும் பொருள்களையும் பற்றி உயர்த்திப் பேசுவதற்காகத் திருமாலுக்குப் திருட்டுப் பட்டங்கூடக் கட்டிவிட்டார்கள். வெண்ணெய் திருடக் கண்ணன் பல துன்பங்கள் அனுபவித் தான் என்றால் வெண்ணெய்க்கு வேறு நற்சான்று வேண்டிய தில்லை. யாகங்கள் போன்ற வைதீகச் சடங்குகளுக்கெல்லாம் வெண்ணெய்யைக் காய்ச்சி அந்நெய்யையே பயன்படுத்து கிறார்கள். எனவே, பாலைக் கொடுக்கும் பசுவைக் காமதேனு என்று நாம் கொண்டாடுவதிலும் வருடந்தோறும் மாட்டுப் பொங்கல் அன்று அதற்குப் பூசை செய்து வருவதிலும் வியப்பு ஒன்றுமில்லை.

தண்ணீர் கலக்காமலே பசுவின் பாலில் நூற்றுக்குச் சுமார் எண்பத்தேழு மடங்கு தண்ணீரே இருக்கிறது. பால் விற்பவர் களுக்கு இது தெரியாது போலும்! அதனுடன் முக்கியமாக நூற்றுக்கு நான்கு மடங்கு கொழுப்புச் சத்தும் (Fat) மூன் றரை மடங்கு புரதச் சத்தும் (Protein), ஐந்து மடங்கு சர்க் கரையும் இருக்கின்றன. இந்நான்கு பொருள்களும் பசுவின் பால், ஆட்டின் பால், தாய்ப்பால் முதலிய எல்லாவகைப் பால் களிலும் இருக்கின்றன. ஆனால் அவற்றின் விகிதம் வேறு படும். உதாரணமாகத் தாய்ப்பாலில் மாட்டின் பாலில் உள்ளதை விடச் சர்க்கரை அதிகமுண்டு. தாய்ப்பாலில் நூற் றுக்கு ஆறரை மடங்கு சர்க்கரை இருக்கிறது. இதில் புரதச் சத்து குறைவு : நூற்றுக்கு ஒன்றரை மடங்குதான் இருக்கிறது. எல்லாப் பசுக்களின் பாலிலும் இப்பொருள்கள் எல்லாம் ஒரே அளவிற்கு இருப்பதில்லை; பசுக்களின் உடல் நலத்தையும், அவை உட்கொள்ளும் உணவையும் பொறுத்து வேறுபடு கின்றன.

பாலிலுள்ள பொருள்கள் அதில் உள்ள தண்ணீரில் கரைந்தும் கரையாமலும் இருக்கின்றன. ஒரு பொருள் தண்ணீரில் நன்ருகக் கரைந்து விட்டால் அக்கரைவு நீர் தண்ணீரைப் போல கண்ணுக்குத் தெளிவாகவே தோன்றும். கரையாவிடில் பொருள் சிறிதும் பெரிதுமாக மிதந்துகொண்டிருக்கும்; வண்டலுள்ள தண்ணீரைப் போலத் தோன்றும். பாலில் உள்ள உப்புக்களும், சர்க்கரையும் அதில் நன்ருகக் கரைந்து விடுகின்றன. ஆனல் புரதச் சத்து, ஆல்புமன் (Albumon) இவை கரைந்தும் கரையாமலும் சிறிய துகள்களாக மிதக்கின்றன. கொழுப்புச் சத்து முற்றிலும் கரையாமல் பெரிய துகள்களாக மிதக்கின்றது. எனவே பால் முழுவதும் ஒரே சீராக இல்லை. அதில் மிதக்கும் பொருள் பெரும்பகுதி கொழுப்புச் சத்து. இதன் எடை (Density) தண்ணீரின் எடையில் பத்தில் ஒன்பது பங்கு உள்ளது. பாலில் உள்ள திரவப்பகுதி ஏறக்குறையத் தண்ணீரின் எடையைக் கொண்டிருக்கிறது. தவிடும் உமியும் சேர்ந்திருக்கும்போது அதைச் சல்லிடையினல் சலித்துத் தவிடு வேருகவும் உமி வேருகவும் பிரிக்கிரும். தவிடும் நொய்யும் கலந்திருக்கும்போது முறத்தினல் புடைத்து அவற்றை வேருக்குகிரும். தவிடு, உமி, நொய் இவற்றின் எடை வேற்றுமையினல் இவ்வாறு பிரிக்க முடிகிறது. இதைப் போலவே பாலைக் கடைந்து அதில் உள்ள கொழுப்புச் சத்தையும் திரவப் பகுதியையும் அவற்றின் எடை வேற்றுமையைக் கொண்டு பிரிக்க முடிகிறது.

மேல் நாடுகளில் பெரிய பசுப் பண்ணைகள் இருக்கின்றன. நாம் இங்கே கிராமங்களில் எலும்புந் தோலுமாய்க் காணும் பசுக்களைப் போல அங்கே பசுக்களைக் காண முடியாது. அங்குள்ள பசுக்கள் ஒவ்வொன்றின் எடையும் ஆயிரம் பவுண்டுக்கு மேல் இருக்கும். நாள் ஒன்றுக்கு ஐம்பது பவுண்டு பால் கறக்கும் காமதேனுக்கள் இந்தியாவில் இல்லை; ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமே இருக்கின்றன. இந்தியாவில் குசேலர்கள் மனிதர்களிடையே மட்டும் இருக்கிருர்கள் என்று நினைக்க வேண்டாம்; பசுக்களிடையேயும் அதிகமாக உண்டு. மேல் நாடுகளில் உள்ள பசுக்களின் பால் முழுவதையும் கையினலேயே கறப்பதற்கு நீண்ட நேரம் ஆகும். எனவே, மேனுட்

டார் இயந்திர சர்தனத்தினுல் பாலைக் கறந்து வருகின்றனர். இதற்கு மாட்டின் மடியிலுள்ள நான்கு காம்புகளிலும் நான்கு உலோகக் குமிழ்களைச் சொருகிவிடுவர். இக்குமிழ்களின் மேற்புறம் மடியுடன் நன்ருகப் பதிந்திருக்குமாறு செய்யப்பட்டிருக்கும். மின்சாரத்தின் உதவியினுல் நான்கு குமிழ்களில் உள்ள காற்றையும் வெளியேற்றுவர். காற்று உறிஞ்சப்படும்போது காம்பின் நுனியும் உறிஞ்சப்படும். காம்புகள் விட்டு விட்டு உறிஞ்சப்படுமாறு செய்யப்படும்; சிறிது நேரத்தில் மடியிலுள்ள பால் முழுவதும் கறக்கப்பட்டுவிடும். சில கருவிகளினுல் காம்பின் நுனி உறிஞ்சப்படும்போது காம்பு அமுக்கவும் படும். இதனுல் பின்னும் எளிதாகப் பால் கறக்கப்படும்.

பால் சீக்கிரத்தில் புளிப்படைந்து கெட்டுவிடுகிறது. இதற்குக் காரணம் இதில் உற்பத்தியாகும் பாக்டீரியா (Bacteria) என்னும் சிறிய ஜீவ அணுக்களாகும். லூயி பாஸ்ட்சர் (Louis Pasteur) என்ற விஞ்ஞானி பால் புளிக்காமல் இருப்பதற்கு வழியைக் கண்டுபிடித்தார். சாராயம் நெடுநாள் வரை கெடாமலிருப்பதற்கு இவர் செய்த சோதனைகள் இதற்குப் பெரிதும் பயன்பட்டன. இவர் இரண்டு வழிகளில் பாலில் பாக்டீரியா ஏற்படாமல் தடுக்கலாம் என்பதை விளக்கினுர்; பாலை அரைமணி நேரம் 62·8 டிகிரி செண்டிகிரேடு சூட்டில் காய்ச்சினுல் பாக்டீரியா கிருமிகள் எல்லாம் இறந்துவிடுவதைக் கண்டார். இவ்வாறன்றி பாலைச் சிறிது நேரத்துக்கு 82·2 டிகிரி செண்டிகிரேடு சூட்டில் காய்ச்சி திடீரென்று குளிரவைத்துவிட்டால் அப்பொழுதும் கிருமிகள் இறந்துவிடுவதைக் கண்டார். மேனுட்டார் இவ்வழிகளில் ஒன்றை மேற்கொண்டு பால் கெடாமல் இருக்குமாறு செய்து வருகின்றனர்.

இவ்வாறு தயாரித்த பாலைப் புட்டிகளில் அடைத்துப் பல இடங்களுக்கு அனுப்புகின்றனர். பாலில் உள்ள தண்ணீரைச் சுண்டவைத்து, கிருமிகளைப் போக்கிப் புட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர்; புட்டியில் அடைக்கும் முன்னர்ப் பாலில் உள்ள கொழுப்புச் சத்து கண்ணுக்குத் தெரியாதபடி பாலுடன் சீராகக் கலந்து விடுமாறு செய்வதுண்டு. இதற்குப் பால் மிகச் சிறிய துவாரத்தின் மூலமாகச் செலுத்தப்

படும். ஆயிரக்கணக்கான பவுண்டு சக்தியுடன் உதைத்துத் தள்ளப்படும் ஒரு பீச்சாங்கக் கொண்டு பால் இத்துவாரங் களின் மூலம் செலுத்தப்படும். பால் துவாரங்களைத் தாண்டி வெளிவரும்போது அதில் உள்ள கொழுப்புச் சத்துத் துகள்கள் உருத் தெரியாமல் சிதறிப் பாலுடன் சீராகக் கலந்துவிடு கின்றன.

மேல் நாடுகளில் பாலில் உள்ள முக்கியமான பொருள் களைத் தனித்தனியே பிரிக்கப் பல தொழிற்சாலைகள் இருக்கின் றன. பாலிலிருந்து முதன் முதலில் எடுக்கப்பட்ட பொருள் கொழுப்புச் சத்தே. நார்வே நாடு கொழுப்பிலிருந்து வெண் ணெய் எடுத்து அதை முதன் முதலில் வெளிநாடுகளில் வாணி கம் செய்யத் தொடங்கியது. இவ்வாணிகம் பதின்மூன்றும் நூற்றுண்டிலேயே தொடங்கியதாகக் கூறப்படுகிறது. இதைப் பின்பற்றி ஹாலந்து நாடு இவ்வாணிகத்தில் இறங்கிற்று. மேனுட்டினர் சமீபகாலம் வரை வெண்ணெய் எடுப்பதற்கு எளிய முறைகளையே கையாண்டுவந்தனர். வாய் அகன்ற பாத் திரங்களில் பாலை வைத்துச் சிறிது நேரம் கழித்து, மிதந்து வரும் கொழுப்பை எடுத்துக் கடைந்து வெண்ணெய் எடுத்த னர்; கொழுப்பில் சிறிது மோரை விட்டுப் புளிக்க வைத்தும் வெண்ணெய் எடுத்துவந்தனர்; நாம் இன்றும் வீடுகளில் உப யோகிக்கும் மத்துக்களைப் போலவே இவர்கள் உபயோகித்த கருவிகளும் இருந்துவந்தன. இப்பொழுது மையவிலக்கச் சக்தியை மேற்கொண்ட (Centrifugal force) இயந்திர சாத னத்தினுல் பாலைக் கடைந்து, லூயி பாஸ்ட்சர் முறையினுல் கிருமிகளைப் போக்கி, வெண்ணெய்யைத் தயாரித்துப் புட்டி களில் அடைத்து, வாணிகத்திற்கு அனுப்புகின்றனர். இத் தகைய தொழிற்சாலைகள் அமெரிக்காவில் பல இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் வெண்ணெய் முழுவ தும் கொழுப்புச் சத்து என்று கூறுவதற்கில்லை. இதில் கொழுப்புச்சத்து நூற்றுக்கு எண்பது மடங்கே இருக்கிறது; நூற்றுக்குப் பதினுறு பங்குவரை தண்ணீர் தங்கி விடுகிறது; நூற்றுக்கு ஒரு பங்கு தயிரும் தங்கிவிடுகிறது.

மேனுட்டார் கொழுப்புச் சத்தைப் பிரித்தெடுத்தபின் பாலிலிருந்து கேசின் (Casein) என்னும் புரதச் சத்தையும்

தொழிற்சாலைகளில் பிரிக்கின்றனர். இது காகிதம் செய்யும் தொழிலுக்கு இன்றியமையாது தேவைப்படுகிறது. காகிதத்திற்கு மெருகு கொடுப்பதற்கும் வர்ணம் கொடுப்பதற்கும் கேசின் சிறந்த பசையாகப் பயன்பட்டுவருகிறது. மிருகக் கொழுப்புப் பசை, மாவுப் பசை இவற்றைக் காட்டிலும் இப் பசை காகிதத் தொழிலுக்குச் சிறந்ததாக இருப்பதால் இது பெரிதும் வேண்டப்படுகிறது. மேனாட்டார் இப்புரதச் சத்து மிகுந்த பாலடைக்கட்டி (Cheese) என்ற உணவுப் பொருளையும் தயாரித்து வருகின்றனர். இப்பொருளில் நூற்றுக்கு நாற்பத்தைந்து மடங்கு புரதச் சத்து இருக்கும். இதில் கொழுப்புச் சத்தும் கலந்திருக்கும். இது நூற்றுக்குச் சுமார் பதினைந்து மடங்குவரை கலந்திருக்கும். மேல்நாட்டவர் வெண்ணெய்யைக் காட்டிலும் இப்பொருளையே உணவுக்காக விரும்புகிறார்கள். இதில் பல வகையுண்டு. வெண்ணெய், புரதச்சத்து இரண்டும் நீக்கப்பட்ட பின்னர் உள்ள பாலை மோராகச் செய்து, சுகாதார முறையில் புட்டிகளில் அடைத்து, அதையும் மேனாட்டினர் விற்கின்றனர்.

எல்லாவற்றையும்விடப் பாலிலிருந்து பால் பொடி செய்யும் தொழிற்சாலைகளுக்கே வேலை மிகுதியாகும். மேல் நாட்டாருக்கு நெடுநாட்களுக்கு முன்பே பாலிலிருந்து பொடி செய்யும் வழி தெரியும் என்று நினைக்க இடமிருக்கிறது. மார்க்கோ போலோ என்ற பிரசித்தி பெற்ற யாத்திரிகர் பதின்மூன்றும் நூற்றாண்டில் நடந்த ஒரு போரில் போர் வீரர்கள் ஒவ்வொருவரும் பத்துப் பவுண்டு பால் பொடி வைத்திருந்ததாகவும், பசித்தபோது அதைத் தண்ணீரில் கரைத்துச் சாப்பிட்டுவந்ததாகவும் எழுதி வைத்திருக்கிறார். இப்பொழுது தொழிற்சாலைகளில் பால்பொடி இரண்டு வழிகளில் செய்யப்படுகிறது. எப்பொழுதும் சுழன்றுகொண்டிருக்கும் பெரிய எஃகுப் பிப்பாய்களின் மூலம் நீராவியைச் செலுத்திப் பிப்பாய்களின் வெளிப்புறத்தைச்சூடுசெய்கிறார்கள். பிப்பாய்களைச் சூழ்ந்துள்ள இடம் வெற்றிடமாக வைத்துக் கொள்ளும் கருவிகளும் உண்டு. பிப்பாய்களின் வெளிப்புறத்தின்மீது சிறிது சிறிதாகப் பால் ஊற்றப்படும். அப்போது சூட்டின் விளைவாகப் பால் வற்றிப்போய் அதன்மீது படிந்துவிடு

கிறது. இவ்வாறு எல்லாப் பாலையும் மாற்றியவுடன் கத்திகளினால் அதைச் சுரண்டி யெடுத்துப் பொடியாக்கிவிடுகிறார்கள். மற்றொரு வழியில் எஃகினால் செய்யப்பட்ட ஒரு சல்லடை அமைப்புப் பெரிய இருப்புக் குழலினுள்ளே சுற்றிக்கொண்டிருக்கும். மேனாட்டார் குழலினுள்ளே சூடான காற்றையும் பாலையும் செலுத்துவர். சூடான காற்றினால் பாலில் உள்ள நீரெல்லாம் நீக்கப்பட்டுச் சல்லடை அமைப்பின்மீது பால் ஏடாகப் படிந்துவிடுகிறது. இதை எடுத்துப் பொடியாக்கி விடுகின்றனர்.

இவ்வாறு பொடிப்பால் தயாரிப்பதற்குச் சாதாரணமாகக் கொழுப்பை நீக்கிய பாலையே பயன்படுத்துவது வழக்கம். குழந்தைகளுக்குச் சிறந்த உணவு என்று கௌ அண்டு கேட், ஆலென்பரி, கிளாக்சோ, ஹார்லிக்ஸ் (Cow and Gate, Allenbury, Glaxo, Horlicks) போன்ற பால் பொடிகள் விற்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். இவை பாலிலிருந்து தயாரிக்கப்பெற்ற பொடிகளே. இவற்றுடன் வேறு பொருள்களும் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஹார்லிக்ஸில் பால் கொழுப்புடன், கோதுமை பார்லி மாவுகளும், ஸோடியம் பைகார்பனேட், (Sodium Bicarbonate), பொட்டாசியம் பைகார்பனேட் (Potassium Bicarbonate) என்ற இரசாயனப் பொருள்களும் உப்பும் சேர்க்கப்படுகின்றன. விரைவில் செரிக்குமாறு இப்பொடிகள் எல்லாம் சுகாதார முறைகளில் தயாரிக்கப்படுகின்றன. இம்முறை மிகவும் பாராட்டத் தக்கது அன்றோ?

சமீபத்தில் சென்னை அரசாங்கத்தார் பொடிப்பால் செய்வதற்குச் சென்னையில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கின்றனர். இங்குப் பாலிலிருந்து பால் பொடி தயாரிக்கவில்லை; பால் பொடியிலிருந்து பால் செய்யப்படுகிறது. இத்தொழிற்சாலையினர் வெளி நாடுகளிலிருந்து கொழுப்புச் சத்து நீக்கப்பட்ட பால் பொடிகளை வாங்கி அவற்றை இங்குச் சத்துள்ள இயற்கைப் பாலாக மாற்றுகின்றனர்; இதற்குப் பொடியைச் சூடாக்கின தண்ணீரில் கரைத்து, 'கரோடின்' சத்து, தேங்காய் எண்ணெய் இவற்றைப் போதுமான அளவுக்குச் சேர்த்துக் கலக்குகின்றனர். 'கரோடின்' சத்து

முள்ளங்கியிலிருந்து பெறப்படுகிறது. மின்சார சக்தியின் உதவியினுல் நன்ருகக் கலக்கிய பின்னர், இயந்திரத்தின் உதவியினுல் கலந்த பொருள்கள் கண்ணுக்குத் தெரியாதபடி பாலுடன் சேருமாறு செய்கின்றனர்: இதனைப் புட்டிகளில் அடைத்து விற்றுவருகின்றனர்.

நம் நாட்டில் மாடுகள் மேய்வதற்கு இடங்கள் நிரம்ப இருக்கின்றன. ஆங்காங்கே மாட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தி அவற்றைப் பாதுகாத்துச் சுகாதார முறையில் இயந்திர சாதனத்தைக் கொண்டு பாலைக் கறந்து, புட்டிகளில் அடைத்து எல்லோருக்கும் வழங்க இடமிருக்கிறது. மேல் நாடுகளில் செய்வது போல வெண்ணெய், கேஸின் போன்ற பொருள் களையும் தயாரிக்கலாம். அரசாங்கத்தார் இதில் பற்றுக் கொண்டு இதற்கு வேண்டிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுவது இன்றியமையாத கடமையாகும்.

# 7. தமிழகத்துக் கோவில்கள்

[டாக்டர். மா. இராசமாணிக்கனர், M.A, L.T, M.O.L.]

'தமிழகத்தில் இன்றுள்ள கோவில்கள் எப்போது தோன்றின? அவற்றிற்கு மூலம் என்ன? கோவிற் கலை உணர்வு தமிழர்க்கே உரியதா? பண்டைக் காலத்தில் கோவில்கள் எவற்றிற்குப் பயன்பட்டன? நமது கடமை என்ன?' என்பன போன்ற கேள்விகட்கு விடை காணலே இவ் வாராய்ச்சிக் கட்டுரையின் நோக்கமாகும்.

## கோவிலும் கல்வெட்டும்

''செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் (மகேந்திர பல்லவன் - அப்பர் காலத்தவன்) அமைத்த கோவில் இது'' என்னும் கல் வெட்டு, மண்டபப்பட்டு என்னும் இடத்துக் கோவிலிற் காணப் படுகிறது. இதன் காலம் கி. பி. 615-630 ஆகும். இக்கல்வெட் டால் அறியத்தக்க செய்திகளாவன :

(1) மகேந்திரன் காலத்திற்குமுன் தமிழகத்தில் கற் கோவில்கள் இல்லை இருந்த கோவில்கள் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்றால் ஆனவை.

(2) மகேந்திரன் காலத்திற்குமுன்னரே தமிழர் கோவில் கட்டத் தெரிந்திருந்தனர் ஆயின் அவை மண், மரம் முதலிய வற்றாலாகி அழியத்தக்கன.

(3) இங்ஙனம் அழியத்தக்க பொருள்களால் அமைத்த கோவில்களையே மகேந்திரன் கற்களிற் செதுக்கி அமைத்தனன்.

தரையும் சுவர்களும் செங்கற்களால் ஆனவை. மேற்கூரை மரத்தால் ஆயது. அங்கங்கு இணைப்புக்காக ஆணிகள் முதலியன பயன்பட்டன. இங்ஙனம் இயன்ற கோவில்களை இன்று மலையாள நாட்டிற் காணலாம். இங்ஙனம் கோவில்களை அமைப்பதில் தமிழர் பண்பட்டிராவிடில், திடீரெனக் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து பல கோவில்கள் தமிழ் நாட்டில் தோன்றி விட்டன எனல் பொருளற்றதாய் விடும்.

விமானங்கள்," 'தூயது, கலப்பு, பெருங்கலப்பு' என மூவகைப்படும். கல், செங்கல், மரம் முதலியவற்றில் ஒன்றைக் கொண்டே அமைக்கும் விமானம் 'தூய விமானம்' எனப்படும். பல பொருள்களால் அமைவது 'பெருங்கலப்பு விமானம்' ஆகும். இது கட்டடக் கலைநூற் கூற்றாகும். இதனாலும், பண்டைக் காலத்திற் கோவில்கள் இருந்தமையும் விமானங்கள் உண்மையும் அறியலாம்.

இனித் தமிழகத்தில் மகேந்திரனுக்கு முன்பே கோவில்கள் இருந்தமைக்குக் கல்வெட்டுக்களே சான்றாதல் காண்க.

திருக்கழுக்குன்றத்துக் கோவிற் பெருமானுக்குக் கந்த சிஷ்ய பல்லவன் (கி. பி. 436-460) நிலம் விட்டதாகவும், அதனை நரசிம்மவர்மன் தொடர்ந்து நடத்தியதாகவும் ஆதித்தசோழன் கல்வெட்டுக் கூறுகிறது.

'தென்னவனாய் உலகாண்ட' கோச்செங்கணான் (கி. பி. 450-500) திருவக்கரையில் பெருமானுக்கு ஒரு கோவில் கட்டியிருந்தான். அதிராசேந்திரன் அதனைக் கல்லாற் புதுப்பித்தான்; செம்பியன் மாதேவியார் திருவக்கரைக் கோவிலைக் கல்லாற் புதுப்பித்தார்; திருக்கோடிகாவில் இருந்த செங்கல் விமானத்தையும் கருங்கல் விமானமாக அமைத்தார்.

### சங்க காலத்துக் கோவில்கள்

பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திலே வீரர் வணக்கத்துக்குரிய கோவில்கள் இருந்தன. முருகன், திருமால், காடுகிழான் முதலிய தெய்வங்கட்குக் கோவில்கள் இருந்தன. தொகை நூல்களில் சிவபெருமான், முருகன், திருமால், பலராமன் இவர்கள் சிறப்புடைக் கடவுளராகக் கூறப்படுவதை நோக்குக. ஆலமர் செல்வற்கு நீல நாகம் நல்கிய கலிங்கத்தை, ஆய்வேள் அளித்தனன் என்று புறநானூறு புகலல் காண்க. இதனால் அக்காலத்தில் கோவிலும் கடவுள் உருவச்சிலையும் இருந்தமை நன்கறியலாம். கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற சிலப்பதிகாரத்தும் மணிமேகலையிலும் காணப்படும் கோவில்கள் பல. மணிமேகலையில்,

"காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்

ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"

என வரும் அடிகள் - வீரர், அருந்தவர், அரசர், பத்தினிமார் இவர்க்குக் கோவில்கள் இருந்தமையை வலியுறுத்துகின்றன. சுடுமண் 'செங்கல்' கோவில்கள் குன்றுகள் போல உயர்ந்திருந்தன என்பது அறியத் தக்கது.

## அற்புத வேலைப்பாடு

இக்கோவில்களும் அரசர் மாளிகைகளும் மண்டபங்களும் சிற்பநூல் வல்லுநரால் நாள் குறித்து, நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டுத் திசைகளையும், அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி வகுக்கப்பட்டன என்பது,

"ஒருதிறம் சாரார் அரைநாள் அமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

என வரும் 'நெடுநல்வாடை' அடிகளாலும்,

"அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடு சென்று
மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"

எனவரும் சிலப்பதிகார அடிகளாலும் நன்குணரக் கிடைத்தல் காண்க.

'அரசர் கோவில்களும் தெய்வங்களின் கோவில்களும் சுற்று மதில் உடையன; உயர்ந்த வாயில்களைப் பெற்றன; அவ்வாயில்கள் மீது உயர்ந்த மண்ணீடுகள் (கோபுரங்கள்) உடையன; அம்மண்ணீடுகளில் வண்ணம் தீட்டப்பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன' என்பது மணிமேகலை, மதுரைக் காஞ்சி முதலிய நூல்கள் நுவலும் செய்தியாகும்.

இக்கோவில்கள் அனைத்தும் செங்கற்களால் அமைந்தவை மேலே 'உலோகத்தகடுகள் வேயப்பட்டிருந்தன. சாந்து பூசப்

பட்டிருந்தது. இங்ஙனமே உயர்ந்த மாடமாளிகைகளும் இருந்தன.

"விண்பொர நிவந்த வேயா மாடம்"
"சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு"
"நிறைநிலை மாடத்து அரமியந் தோறும்"

இவ்வாறு அமைந்த பெரிய கட்டடங்களைச் சுற்றியிருந்த சுவர்கட்கு உயர்ந்த கோபுரங்களையுடைய வாயில்களும், அவ் வாயில்கட்குத் துருப்பிடியாதபடி செந்நிறம் பூசப்பட்ட இரும்புக்கதவங்களும் பொருத்தப்பட்டிருந்தன என்பது நெடு நல்வாடை அடிகள் (76,88) அறிவிக்கும் அரிய செய்தியாகும். சிதம்பரத்தில் பதஞ்சலி முனிவர்க்கு இறைவன் நடன கோலத் தைக்காட்டி அருளினன் என்பது புராணச்செய்தி. பதஞ்சலி முனிவர் காலம் கி. மு. 150 என்று ஆராய்ச்சியாளர் அறைவர். எனவே, கோவில் எனச் சிறப்புப்பெயர் பெற்ற சிதம்பரத்தில் உள்ள திருக்கோவில் கி. மு. 150-க்கு முற்பட்டதாதல் அறிக. அங்குள்ள நடராசர் மண்டபம் மரத்தால் கட்டப்பட்டிருத் தலும் அதன் பழமைக்குச் சான்றாகும்.

கி. பி. 200 முதல் 250-க்குள் தமிழகத்தை யாண்ட கோச் செங்கட் சோழன் 70 கோவில்கள் கட்டியதாகத் திருமங்கை யாழ்வார் கூறியுள்ளார். அவருக்கு முன்னரே அப்பரும் சம்பந் தரும் இதனைத் தம் பதிகங்களிற் குறித்துள்ளார்.

### தேவார காலத்துக் கோவில்கள்

தேவார காலத்தில் தமிழகத்தில் ஏறத்தாழ 200 கோவில் கள் இருந்தன. அவை அனைத்தும் மரம், செங்கல், மண் உலோகம் இவற்றால் ஆனவை. அவை (1) பெருங்கோவில் (2) இளங்கோவில் (3) மணிக்கோவில் (4) கரக்கோவில் (5) தூங்கானை மாடம் முதலிய பலவகைப்படும். இவற்றுள் தம் காலத்தில் பெருங்கோவில்கள் 78 இருந்தன என்று அப்பரே அறைந்துள்ளார். பெரிய கோவில்களைப் பழுது பார்க்குங்கால் மூர்த்தங்களை எழுந்தருளச் செய்து வந்துள்ள (பெரிய கோவில் திருச்சுற்றில் உள்ள) சிறிய கோவிலே இளங் கோவில் எனப்படும். பெரிய கோவிலுக்கு அண்மையில் உள்ள சிறிய கோவிலும் இளங்கோவில் எனப்பெயர் பெறும்.

எனவே, தேவார காலத்திற்கு முன்பே பல கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன என்பது தெளிவாகிறதன்றோ? தேவார காலத்தில் விமானம் கொண்ட கோவில்கள் இருந்தன என்பது பெண்ணுகடம், தூங்கானை மாடம் கோவில் அமைப்பைக் கொண்டு நன்கறியலாம். விமானம் 'தூங்கும் யானை' வடிவில் அமைந்ததாகும். திரு இன்னம்பர், திருத்தணிகைக் கோவில் விமானங்கள் இம் முறையில் அமைந்தவை. திரு அதிகைக்கோவில், திருக் கடம்பூர் இவற்றின் உள்ளறைகள் (மூலஸ்தானம்) தேர் போன்ற அமைப்பு உடையவை; உருளைகளும் குதிரைகளும் பூட்டப் பெற்றவை. திருச்சாய்க்காட்டுக் கோவிலை ஒட்டித் தேர் போன்ற விமானம் ஒன்று உருளைகளுடன் உள்ளது.

## பழைய கோவில்கள்

இந்த விமான அமைப்புடைய தேர் போன்ற கோவில்களே பழையவை. இன்று காணப்படும் கோவில்களை அடுத்துள்ள தேர்கள் மிகப் பழைய காலத்தில் மரக்கோவில்களாக இருந்தவை. மனிதன் மரக்கோவில்களைப் போலச் செங்கற்களைக் கொண்டு பிற்காலத்தில் கோவில்கள் அமைத்தான். சான்ருக நகரியில் உள்ள சில கோவில்களைக் காணலாம். அவை கி. மு. 250-இல் ஆக்கப்பட்டவை. அவற்றைச் சுற்றிக் கற்சுவர்கள் உள்ளன. ஆயின், கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டனவேயாகும்.

"மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் கோவில்கள் எல்லாம் பல்லவர் காலத்தில் இருந்த தமிழ்நாட்டுக் கோவில்களைப் போன்றனவே என்பதைப் பார்த்தவுடன் கூறிவிடலாம்" என அறிஞர் லாங்ஹர்ஸ்ட் குறித்தல் காண்க.

## திராவிடக் கலை

கோவில்கள் கட்டுதல் திராவிடரது பழக்கம் ஆகலாம். அதனைப்பிற்காலத்தில் ஆரியர் கைக்கொண்டனர். தூபி, சைத்தியம் என்பன திராவிடருடையன. இவற்றை ஆரியர் கடன் பெற்றனர். இவை பிற்காலத்தில் இந்து சமயக்கோவில்களிற் காணப்பட்டன. இவற்றையே பௌத்தர் மேற்கொண்டனர். விமான வகைகள் பல தென் இந்தியாவில் உண்டு.

அவை யாவும் கல்லறைகளிலிருந்து தோன்றின என்றால் தவறாகாது. தென் கன்னடக் கோட்டத்தில் உள்ள 'மூது பித்ரி' என்னும் இடத்திற் காணப்படும் குருமார் கல்லறைகளில், மூன்று முதல் ஏழு அடுக்குகள் கொண்ட 'விமானம்' காணலாம். சதுரத்தின்மேல் சதுரம் வைத்துக் கட்டப்பட்ட ஏழு அடுக்குகள் கொண்ட சதுரக் கல்லறைகள் பல இந்நாட்டில் உண்டு. இவ்வமைப்புக்கள் நாளடைவில் பெரிய விமானங்களாக மாறிவிட்டன என்பதில் ஐயமில்லை.

தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்துக்கே உரியது. இன்றுள்ள வானளாவிய கோபுரங்கள் விமானங்கள் இவற்றிற் காணப்படும் வேலைப்பாடுகள் அனைத்தும் இந்நாட்டுப் பழைய வேலைப்பாடுகளிலிருந்து வளர்ச்சியுற்றனவே ஆகும். இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை. மனிதக் குரங்கின் மண்டை ஓட்டிலிருந்து இன்றைய மனிதனது மண்டை ஓடு வளர்ச்சியுற்றாற் போலவே, தமிழகக் கட்டடக் கலையும் வளர்ச்சி பெற்று வந்ததாகும். இதன் உண்மையை மாமல்லபுரத்துத் தேர்களைக் கொண்டும், திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சிவனார் கோவில் வேலைப்பாட்டைக் கொண்டும் செவ்வனே அறியலாம்.

## கோவில்கள் பயன்பட்ட வகை

(1) சங்ககாலத்துக் கோவில்கள் அழியக் கூடிய பொருள்களால் ஆனவை. ஆதலால் நமக்குக் 'கல்வெட்டுக்கள்' கிடைக்கவில்லை. பின் வந்த பல்லவர் கற்கோவில்கள் அமைத்தனர். ஆதலின் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவர்க்குப்பின் வந்த சோழர் பழைய கோவில்களைக் கற்கோவில்களாக மாற்றினர்.

ஆதலின் அழியா நிலையுடைய கல்வெட்டுக்கள் தோன்றின. அவை கோவில் அறப்பணிகளைக் குறிக்க எழுந்தன. ஆயினும் அரசர் மரபு, போர்கள், அரிய செயல்கள் இன்ன பிறவும் முதலிற் பொறிக்கப் பெற்றிருந்தன. அக்குறிப்புக்களே இன்று தமிழக வரலாற்றிற்கு அடிப்படையாக இருந்து உதவுகின்றன.

(2) கோவிலை அடுத்துச் சமய வளர்ச்சிக்குரிய மடங்கள் இருந்தன. அவை சமயக் கல்வியைப் புகட்டின. விழாக்களைக் காண வந்த அடியார்கட்கு உண்டியும் உறையுளும் உத

வின. அம்மடங்கட்குப் பலர் தானம் அளித்துப் பாதுகாத்து வந்தனர்.

(3) கோவிலை அடுத்து மருத்துவச் சாலை இருந்தது. இதனைத் தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கல்வெட்டால் அறியலாம்.

(4) நடனம், இசை, நாடகம் முதலிய நாகரிகக் கலைகள் கோவிலில் வளர்க்கப் பெற்றன. இவற்றிற் பண்பட்ட பெண்மணிகள் இருந்தனர். அவர்கள் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திர கணிகையர் எனப்பட்டனர். தஞ்சைப் பெரிய கோவிலில் மட்டும் 400 பேர் இருந்தனர். காஞ்சி முத்தீசுவரர் கோவிலில் 42 அடிகள்மார் இருந்தனர். பெருங் கோவில்களில் எல்லாம் நடன அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்குகள் இருந்தன.

(5) கோவிலில் 'தருக்க மண்டபம்', 'பிரசங்க மண்டபம்' என்பனவும் இருந்தன என்பது திருவொற்றியூர்க் கோவிற் கல்வெட்டுக்களைக்கொண்டு அறியலாம். பாரதம், ஆகமம் போன்ற நூல்களைப் பொது மக்கட்குப் படித்துக் காட்டக் கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# 8. எனது ஜப்பான் செலவு

[திரு. சு. இராமசுவாமி நாயுடு அவர்கள்]

**நாடு காணும் அவா :** உலகின் கீழ்த்திசையில் உயர்தனிச் சிறப்புடைய நாடாக ஜப்பான் மிளிர்கின்றது என அன்பர் சிலர் கூறக் கேட்டு, அந்நாட்டினைக் காணுதல் வேண்டும் என்னும் பேரவா என் உள்ளத்தே தோன்றிற்று. அந்த அவா நாளுக்கு நாள் மிகுந்து ஜப்பானைக் காணச் செல்ல வேண்டுமென உந்திய மையால், நான் அக் கீழ்க்கோடி நாட்டிற்குப் போக முற்பட்டேன்.

**செல்ல முயற்சி :** ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதென்பது, எண்ணியவுடன் நிறைவேறத்தகும் செயலன்று. புறப்பாட்டுக்கு முன்னர்ச் செய்ய வேண்டும் இன்றியமையாச் செயல்கள் பல உள. நாம் வேறொரு நாட்டிற்குப் போக விரும்பினால், அந்நாட்டிற்குப் போதற்குரிய காரணம், அங்குத் தங்கியிருக்க விரும்பும் கால அளவு, அங்குப் போதற்குரிய நம் தகுதி முதலியவற்றை நம் நாட்டுக் குடியாட்சி அதிகாரிகளிடம் முறைப்படி தெரிவித்து, உரிய அனுமதிச் சீட்டைப் பெறுதல் வேண்டும். மேலும் அங்ஙனம் பெறும் அனுமதிச் சீட்டில், நம் நாட்டிலிருக்கும் அவ் வெளிநாட்டுத் தலைவரிடம் இசைவுக் கையொப்பம் பெறுதல் வேண்டும்.

எனவே, நான் மேற்கூறிய முறைப்படி அனுமதிச் சீட்டைப் பெற்று, டாட்டா கம்பெனியாரின் "ஏர் இந்தியா" என்னும் வானஊர்தியில் சென்னையிலிருந்து பயணத்தைத் தொடங்கி இலங்கைக்குப் போனேன்; அங்கிருந்து "பிரிட்டிஷ் ஓவர்சீஸ் ஏர்வேய்ஸ் கார்ப்பொரேஷனின்" (B. O. A. C.) வானவூர்தியில் சிங்கப்பூர் நோக்கிச் சென்றேன்.

**வான்வழிச் செலவு :** நான் ஏறிய வானவூர்தி கொழும்பு நகரை விட்டுப் புறப்பட்டவுடன், வானவெளியில் விரைந்து பாய்ந்தோடியது. வானத்தில் மிதந்து பறக்கும் வானவூர்தியில் பயணம் செய்தல் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும். கப்பலில் சென்றால், பல நாட்கள் கடலில் மிதந்து கடக்க வேண்டும் தொலைவை வானத்திற் பறக்கும் வானவூர்தி மிக

விரைந்து கடந்து செல்லுகிறது. மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் பறந்து செல்லும் வானவூர்தி அசைவதாகவும் தோன்றவில்லை. அசையாமல் ஆகாய வெளியில் ஓரே இடத்தில் மிதப்பதுபோன்ற உணர்ச்சியே தோன்றுகிறது. புகைவண்டி முதலிய பிற ஊர்திகளில் பயணம் செய்கையில் எதனையும் எழுதமுடியாது; முயன்று எழுதினாலும் கையெழுத்துக் கிறுக்கெழுத்தாக மாறிவிடும். ஆனால் வானவூர்தியில் பயணம் செய்கையில் தெளிவாக எழுதலாம்.

**வெளிக் காட்சி**: வானவூர்தியில் உள்ள கண்ணாடிச் சாளரங்களின் வழியாக வெளியே நோக்கினால், முகிற் கூட்டங்கள் ஆங்காங்கே ஆகாயத்தில் மிதப்பதைக் காணலாம். சில சமயங்களில் வானவூர்தி அம் முகிற் கூட்டங்களிடையே ஊடுருவிச் செல்லும்போது, நாம் எங்கிருக்கிறோம் என்பதை அறிய முடியாதவாறு மூடுபனியில் அல்லது புகைத்திரளில் அகப்பட்டவர்கள் நிலையை அடைய நேரும். கடல்மீது வானவூர்தி செல்லுகையில், கடல் அமைதி மிக்கதொரு கருநிறப் பெருங்குளம் போன்ற காட்சி அளிக்கும். கடலிற் செல்லும் கப்பல்கள் ஒன்றிரண்டைக் காண நேர்ந்தால், அவை சிறுவர்கள் குட்டை நீரில் விட்டு விளையாடும் பதுமைக் கப்பல்கள் போலத் தோன்றும். வானவூர்தி பறந்து செல்லும்போது, கீழே இருக்கும் பெரிய மலைகள் சிறு மணற் குன்றுகள் போலத் தோன்றும்; நெடிய மரங்கள் தெள்ளிதிற் புலனாகா. ஆறுகள் வளைந்து வளைந்து ஓடும் காட்சி காண்பதற்கினிமை நல்கும்.

**வானவூர்தியின் அமைப்பு**: புகைவண்டியிலிருப்பதுபோன்ற வகுப்பு வேறுபாடுகள் வானவூர்தியில் இல்லை. அமர்ந்து கொள்ளவும், வேண்டுமானால் அப்படியே சாய்ந்துகொள்ளவும் கூடியவாறு இருக்கைகள் வானவூர்தியில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய இருக்கைகள் வேறு எந்த ஊர்தியிலும் இல்லை. குறித்த அளவு சுமையே வானவூர்தி தாங்கிச் செல்லுமாதலின் ஒரு வானவூர்தியில் இத்துணையர் போகலாம் எனவும், இவ்வளவு பொருள்கள் ஏற்றலாம் எனவும் அதிகாரிகள் வரையறுத்து விடுகின்றனர்; இதிற் போகவேண்டியவர் பெயர்களையும் குறிப்பிட்டுவிடுகின்றனர். நான் சென்ற வானவூர்தியில், வெளி ஓசை பிரயாணிகளின் செவியிற் படா

வண்ணம் செய்யப்பட்டிருந்தது. வெளியில் வெப்பம் இருப்பின் உள்ளே குளிர்ச்சியும், வெளியில் குளிர்ச்சி இருப்பின் உள்ளே வெப்பமும் உண்டாகுமாறு வானவூர்தி முழுவதும் அமைக்கப்பட்டிருந்தது.

**தாதி :** வானவூர்தியில் செல்லுகையில் மற்றெவ்வூர்தியிலும் இல்லாத உபசரிப்பு நடைபெறுகிறது. பிரயாணிகள் சோர்வும் வெறுப்பும் கொள்ளாதிருக்கும் பொருட்டு, ஓரழகிய தாதி (Air-Hostess or Stewardess) அடிக்கடி தேநீர், காப்பி, ரொட்டி, பிஸ்கட், மிட்டாய் ஆகியவற்றைக் கொண்டுவந்து கொடுக்கிறார். வேண்டுவோர் அவற்றை வாங்கிக்கொள்ளலாம். படித்துக்கொண்டிருக்க விரும்புகிறவர்களுக்குக் கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியன தருகிறார். அவர் புன்முறுவல் பூத்த முகத்துடன் இன்னுரையாடிப் பிரயாணிகளை உற்சாகப்படுத்துகிறார். இவ்வாறாக நான் பயணஞ் செய்த வானவூர்தி சிங்கப்பூரை அடைந்தது.

**சிங்கப்பூர் :** சிங்கப்பூர், மலேயா நாட்டின் தென்கோடியில் அமைந்துள்ள ஒரு சிறு தீவாகும். இதனை ஆங்கிலேயர் தமக்குரிமை செய்துகொண்டு, கீழை உலக 'ஜிப்ரால்டர்' ஆக்கியிருக்கின்றனர் ; சிங்கப்பூர் அமைந்துள்ள இடம் கீழ்த்திசை நாடுகளுக்கு நடுநாயகமாக மிளிர்கின்றமையால், அதனைச் சிறப்பு மிக்கதோர் இடமாக அமைத்திருக்கின்றனர். போர்க் காலத்தில் சிங்கப்பூர் கீழ்த்திசை நாடுகளின் தலைமைப் பாடிவீடாக விளங்குகிறது.

சிங்கப்பூரில், உலக நாகரிகங்கள் அனைத்தும் கலந்து உறைவதைக் கண்டேன். உலகிலுள்ள பல்வேறு இனத்தவரும் அங்கு வாழ்கின்றனர். கடின உழைப்புக்குரிய தொழில்களில் நம் தமிழகத்து மக்களும் சீன நாட்டவரும் ஈடுபட்டு வருந்தி உழைக்கின்றனர். சிங்கப்பூர் போன்ற நாகரிகத்திற் சிறந்ததும், செயற்கை எழில் செழித்ததுமாகிய நகரம் கீழ்த்திசையில் வேறு இல்லை எனக் கூறலாம்.

நான் சிங்கப்பூரை விட்டுப் புறப்பட்ட பிறகு இந்தோனேஷியா, சீயம், இந்தோ-சீனம் முதலிய நாடுகளுக்குச் சென்று, ஆங்குள்ள சிறப்பிடங்களைக் கண்டேன்.

**மகிழ்ச்சிக்குரிய விவரங்கள்:** மலேயா நாடும், இந்தோனேஷியா, தாய்லந்து, இந்தோ - சீனம் முதலியவைகளும் முன்னொரு காலத்தில் தமிழ் நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன என்பதையும், இராஜேந்திர சோழன் கப்பற் படையுடன் வந்து இப்பகுதிகளிற் சில இடங்களைக் கைப் பற்றித் தன் ஆட்சியை நிறுவிச் சென்றான் என்பதையும் எண்ணியபோது, என் உள்ளம் பெருமித உணர்ச்சி கொண்டது.

இந்நாடுகளில் தமிழர் நாகரிகத்திற்கான சான்றுகள் பல ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன. தமிழரது பண்பாடுகள், பண்டைய இறை வழிபாட்டு முறைகள் முதலியவை இப் பகுதி மக்களிடையே விரவிக் கிடக்கக் கண்டேன். உணர்ச்சிப் பெருக்கால் என் உள்ளம் துள்ளித் துடிப்புப் பெற்றது. கம் போடியா, அங்கோர்வாட் போன்ற இடங்களில் சிவலிங்க வழிபாடு நிகழ்ந்தது என்பதனை விளக்க வல்ல சான்றுகள் இன்னும் பல காணப்படுகின்றன.

**ஜப்பான் நாடு:** நான் பின்பு சிங்கப்பூருக்கு மீண்டு வந்து வான்வழியே ஹாங்காங் தலைநகரத்தைப் பார்த்துக்கொண்டு ஜப்பான் நாட்டை அடைந்தேன். வானவூர்தியில் போய்க் கொண்டிருக்கும் போதே, ஜப்பான் நாட்டு மலை வளம் புலனாயிற்று. ஜப்பானின் சிறப்பை உலகறியச் செய்துகொண்டிருக்கும் பூஜியாமா மலைச் சிகரத்தை வானவூர்தியில் இருந்தவாறே நன்கு காண முடிந்தது. எங்கள் விமானம் டோக்கியோ நகரத்திலுள்ள 'ஹனிதா' விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் எழில் மிக்க பல காட்சிகளைக் காண வாய்ப்புக் கிடைத்தது.

நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப் படையில் குறித்த 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்னும் சொற்றொடரை ஜப்பான் நாட்டு இயற்கை வனப்புக்கு உரித்தாக்கலாம். 'எழு ஞாயிற்றுக்குரிய நாடு' என்னும் பொருளைத் தன்னகத்தே தாங்கியுள்ள ஜப்பான் எல்லா வகையாலும் சிறப்பித்துப் பாராட்டுதற்குரிய நலங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளது எனல் பொருந்தும்.

காலை வானின் நீல நிற வனப்பும், அந்தி வானின் செந் நிறக் காட்சியும், வெள்ளிப் பனி மலைகளின் பொலிவும் கண்ணைக் கவர்வன. மழை நீர் அருவியாக ஓடும் அழகும், அவ் வருவியில் ஆறுகப் பெருகிப் பசுமை வளம் பெருக்கும் பொற்பும், நாடெங்கும் பச்சைப் பசேல் எனப் பெருங் காட்சி நல்கும் இயற்கை - செயற்கைப் பொழில்களும் கண்டு இன்புறத்தக்கன. வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும் அவற்றினைக் கொழுகொம்பாகக் கொண்டு பின்னிப் பிணைந்து கிடக்கும் கொடிகளும், இப்பசுமையினூடே காணப்படும் பல நிற மலர்களும் அந்நாட்டினைக் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. ஜப்பானில் சில நாட்கள் தங்கியிருப்பவரும் இவற்றினை நேரிற் கண்டு மகிழலாம்.

# 9. செத்தும் கொடுத்தான் சீதக்காதி

[வித்துவான் க. நயினார் முகம்மது]

'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும், சவுந்தர பாண்டியனெனும் தமிழ் நாடனும், சங்கப் புலவரும் தழைத்தினிதிருக்கும், மங்கலப் பாண்டி வளநாடு' வழிவழியாக அறனும் மறனும் ஆற்றலுங் குன்றாத பாண்டிய மன்னர்களை அரசராகப் பெற்ற பெருஞ் சிறப்புடையது. பாண்டிய நாட்டில் கல்வி அறிவு கேள்விகளிற் சிறந்த புலவர் பெருமக்களும் பெருங்கொடை வள்ளல்களும் களி சிறந்து வாழ்ந்தார்கள். பாண்டிய மன்னர்களும், அவர்க்கீழ்ச் சிற்றரசர்களாயும் போர் வீரர்களாயும் விளங்கிய சேதுபதிகளும் தமிழ்ப்பணி புரிவதில் தலைசிறந்து நின்று பொன்னையும் மணியையும் வாரி வழங்கிப் புலவர் பாடும் புகழுடையோராய் விளங்கினர்.

**பாண்டிய நாட்டின் சிறப்பு:** சேது வேந்தர்கள் அனைவரும் பொன்னையும் மணியையும் பொழிந்ததன்றி, விளைபுலவூர்களையும் முற்றூட்டாக வழங்கின செய்தியை வரலாற்று நூல்கள் வழுத்தும். அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்பவர் ரகுநாத சேதுபதிமீது **தளசிங்கமாலை** யென்னும் நூலைப்பாடி மீநிலைப் பட்டி என்னும் விளைபுலவூரை முற்றூட்டாகப் பெற்றனர். இவர் வழியினர் இன்னும் அவ்வூரை அநுபவித்து வருகின்ற செய்தி இந்நாடெல்லாம் அறிந்த தொன்று.

**பாண்டியநாட்டில் தமிழ்வளர்த்த முஸ்லீம்களும் புலவர்களும் வள்ளல்களும்:** இவர்களேயன்றி அந்நாட்டில் சிறக்க வாழ்ந்திருந்த முஸ்லிம்களும் தமிழ்மொழி வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடுடையரா யிருந்தனர். முஸ்லிம்களிற் பல்லோர் தமிழன்னைக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளனர். சொன்னோக்கும் பொருணோக்கும், தொடைநோக்கும், நடைநோக்கும் ஒருங்கே அமையக் கவிபாடும் புலவர் பெருமானாகிய **உமறுப் புலவர்**, முகம்மது நபியின் வரலாற்றைச் 'சீறாப் புராணம்' என்னும் நூலாகப் பாடியுள்ளார். இந்நூல் முஸ்லிம் மதத்தினரல்லாத பிற சமயத்தார்களும் விழைந்து கற்குமாறு ஒன்பான் சுவையும் ஒருங்கு நிரம்பப்பெற்றது. இவர் வழியினராகிய மீசல

**வண்ணக் களஞ்சியப் புலவர்,** பல வண்ணங்கள்பாடித் தமிழன்னைக்கு அணிசெய்தனர். இன்னும் **சவ்வாதுப் புலவர்,** சேதுபதி வைசூரியால் வருந்திய காலை ராஜ ராஜேசுவரி பஞ்சரத்தினம் என்னும் நூலைப் பாடி அவரை நல்லுடல் பெறச் செய்தார். இந்நூலுக்குப் பரிசிலாக 'சுவாத்தன்' என்னும் விளைபுலவூரைப் பெற்றார். இவர் 'முகையதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்' என்னும் பாமாலையைத் தமிழ் அன்னைக்குச் சூட்டி மகிழ்ந்தார். புலவர் இங்ஙனமாக, முஸ்லிம் வள்ளல்களும் சாதி குலம் முதலியவற்றைக் கருதாது தமிழ் பாடி வந்த அனைவர்க்கும் அள்ளி யள்ளிப் பொருளைக் கொடுத்துத் தமிழ் மொழியை வளர்த்தனர். அவர்களிலொருவரே ஈண்டு ஆராய எடுத்துக்கொண்ட **சீதக்காதி** என்னும் வள்ளலாவார்.

**சீதக்காதி என்னும் பெயர்க்காரணம்:** புலவர்களும் புரவலர்களும் சிறந்து விளங்கிய பாண்டியநாட்டில் இற்றைக்குச் சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்குமுன் பாண்டிய நாட்டின் சிறந்த துறைமுகமாகிய கீழக்கரையில், சீதக்காதி என்பவர் அவதரித்தார். இவரது இயற்பெயர் **ஷெய்கு அப்துல் காதர் மரைக்காயர்.** ஷெய்கு அப்துல் காதர் என்னும் அரபி வாக்கியம் தமிழர்களால் உச்சரிக்க இயலாமையானும், புலவர்கள் தாங்கள் பாடும் செய்யுட்களில் இப்பெயரை அமைப்பது தமிழொலிக்கு ஒன்றுபடாமையானும், அத்தொடர் மொழியைச் சீதக்காதி என்று மரூஉ மொழியாக்கினர். மரைக்காயர் என்பது தமிழ்ச் சொற்றொடர். இது கடல் வாணிகம் செய்யும் முஸ்லிம்களுக்கு அக்கால மக்கள் இட்ட சிறப்புப்பெயர். இன்னும் கடற்றுறையூர்களில் வசிக்கும் முஸ்லிம்கள் மட்டும் இச்சிறப்புப் பெயரைத் தங்கள் பெயருக்கு முன் வைத்துக் கொள்வதை அனைவரும் அறிவர். பாண்டிய நாட்டுக் கடற்றுறைகளாகிய காயல், கீழக்கரை, ஏர்வாடி முதலிய ஊர்களிலும் சோழநாட்டுக் கடற்கரைகளாகிய நாகூர், நாகப்பட்டினம் காரைக்கால் முதலிய நகரங்களிலும் வசிக்கும் முஸ்லிம்களிற் பெரும்பாலோர் இன்றைக்கும் இப்பெயர் பூண்டுளர். மரைக்காயர் என்பது மரக்கலராயர் என்னும் மொழியின் மரூஉ. மரக்கலராயர் என்பதற்குக் கப்பற் காவலர் என்பது பொருள். கப்பல், வாணிகத்துக்குக் கருவியாயிருப்

பது. எனவே, மரக்கலராயர் என்பதன் திரண்ட பொருள் வணிக மன்னர் என்பதாகும். ஒரு சாரார் மரைக்காயர் என்பது மர்க்காப் (Markaf-தோணி) என்னும் அரபுப் பதத்தின் திரிபு என்பர். இது ஒரு சிறிதும் பொருந்துவதன் றென்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் அரபி, பார்ஸி, உருது ஆகிய மும்மொழிக்கும் தலைவராயும் தமிழ் வல்லுநராயும் இப்பொழுது இருக்கின்ற உயர்திரு. டாக்டர் S. முகம்மது உசேன் நயினார் M.A. Ph. D. அவர்கள் வெளியிட்ட சீதக்காதி நொண்டி நாடகத்தின் முன்னுரையில் நன்கு விளக்கியுள்ளார்கள்.

**சீதக்காதியின் நற்பண்புகள் :** சீதக்காதி 'இளமையிற் கல் என்னும் முதுமொழிக்கேற்ப அரபி, தமிழ் முதலிய மொழிகளை நன்கு கற்றுணர்ந்து மெய்ம்மை, பொறையுடைமை, மேன்மை, தவம், அடக்கம், செம்மை முதலிய நற்குணங்களிற் சிறந்து விளங்கினர். இவர் இளமையிலே நற்குணமும், நல்லொழுக்கமும் உடையவராய் வாழ்ந்தார். ஆகையால் ஞானிகளும் இவரை விரும்பி நட்புக் கொண்டனர்.

**சீதக்காதியின் உத்தியோகச் சிறப்பு :** அக்காலத்தே கீழக்கரையில் தத்துவஞானியென்றும், உண்மைத்துறவியென்றும், அரபியில் தலைசிறந்த புலவரென்றும் இந்தியா முழுவதும் போற்றிய பெருமானாகிய ஷெய்கு சதக்கத்துல்லா அவர்கள் சீதக்காதியை விரும்பி நண்பராகப் பெற்றார் என்பது ஒன்றே இவரது உயர்ந்த குணங்கட்குச் சிறந்த சான்றாகும். அஞ்ஞான்று வடநாட்டை ஆட்சிபுரிந்த ஔரங்கசீப் என்பார் சதக்கத்துல்லா அவர்களை வங்காளத்துக்கு அரசப் பிரதிநிதியாய் இருத்தல் வேண்டுமென ஓலைபோக்கி அழைத்தபோது, துறவியாகிய சதக்கத்துல்லா அவர்கள் அரச பதவியேற்க விரும்பாது, வினைவலியும், தன்வலியும், மாற்றான்வலியும், துணைவலியும் அறிந்து காரியம் செய்யவல்ல சீதக்காதியாம் செல்வரைத் தகுதி யுடையவரென ஔரங்கசீப் அரசரிடம் அனுப்பினர். சதக்கத்துல்லா அவர்களது கட்டளையைச் சிரமேற்கொண்ட சீதக்காதி வங்காளத்தின் அரசராய், சின்னாள் ஆட்சிபுரிந்து அந்நாட்டின் வெப்பதட்ப நிலை இவருக்கு ஊறு செய்தமையால் அவ்வுத்தியோகத்தை உதறியெறிந்து மீண்டும் கீழக்கரை வந்து வர்ணிகம் செய்து பொருளீட்டினர்.

சீதக்காதியின் அன்பையும், ஆள்வினையுடைமையையும், வாணிகத்தின் வன்மையையும், வண்மையின் திண்மையையும், கேள்வியுற்ற கிழவன் சேதுபதி யென்னும் விசய ரகுநாத சேதுபதியரசர், சீதக்காதியை யழைத்து நண்பராகப் பெற்றார். இச்சேதுபதி மன்னர் கி. பி. 1674 முதல் 1719 வரை சேதுநாட்டை யாண்ட பெரியார். சீதக்காதியாம் சீரியர் கிழவன் சேதுபதிக்கு அமைச்சராயும், உற்றுழியுதவும் உத்தம நண்பராயும் விளங்கினர். இராமநாதபுரம் கோட்டையைக் கட்டி முடிக்கப் பல்லாற்றானும் இவர் உதவிபுரிந்தார். இவருடைய தொண்டைப் பாராட்டிய அரசர் இவரைத் தமக்குத் தம்பி முறையிட்டு அழைத்து '**விசய ரகுநாத**' என்னும் பட்டத்தையும் அளித்துச் சிறப்புச் செய்தார். அன்றுமுதல் அவரை ஷெய்கு அப்துல்காதர் விசய ரகுநாத பெரிய தம்பி மரக்காயர் என மக்கள் அழைக்கலாயினர்.

**சீதக்காதியின் வள்ளன்மை :** 'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே' என்னும் ஆன்றோர் வாக்கை நன்குணர்ந்த பெரியாராகிய சீதக்காதி, இல்லையென வந்தோர்க்கு இல்லையென்னாது வழங்கும் வள்ளலாய் விளங்கினர். முன்பு ஒருகால் பாண்டிநாடு பன்னீராண்டு, வற்கடம் சென்றதுபோல், சீதக்காதியின் காலத்தும் பஞ்சத்தாற் பீடிக்கப்பட்டது. மழையின்றிப் புல்நுனியும் நிலத்தில் தோன்றாமல் மக்கள் பசியாலும், பிணியாலும் பீடிக்கப்பட்டு வயிறொட்டிக் கண்குழிந்து வாய்புலர்ந்து வாடினபொழுது வாடிய பயிரில் மழை பொழிவதேபோல் ஏழைகட்கிரங்கி அன்னதானம் செய்ய மடித்தற்று முன் வந்தார். இச்சீரிய செயலைப் படிக்காசுத் தம்பிரான்,

"ஓர்தட் டிலேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லும்தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே"

எனப் பாராட்டிக் கூறியமை அறிந்து இன்புறத்தக்கது.

சீதக்காதி பொன்னை யீட்டினர்: புகழை நாட்டினர்; தமிழ்ப் பயிர் தழைக்க வண்மையாம் நீரைத் தளராது பெய்தார். தமிழ்ப் புலவர்கள் நெஞ்சம் பாக்களை ஆய்ந்து

சிவந்தது. சீதக்காதியின் கரங்கள் அன்னூர்க்குப் பொன்னை யீந்து சிவந்தன. தமிழ்ப் புலவர் குழாம் பசியை யறியாது வாழ்ந்தது; கவலையையும் மனச் சோர்வையும் காணுது களிப் புற்றது: இதனல் தமிழ் மகள் நடனம் புரிந்தாள்; தமிழ்நாடு பிறநாடுகளால் மதிக்கப்பெற்றது.

**சீதக்காதி மேலுலகு அடைந்தமை:** தமிழன்னைக்குத்தொண்டு செய்த தண்ணளியோன்-புலவர்களைப் புரந்த புண்ணியன்-வரையாது வழங்கிய வள்ளல் சீதக்காதிக்கும் இறுதிநாள் அணுகிற்று. கண்ணியாம் காலனின் கண்பார்வை விழுந்தது. இதைத் தன் மெய்யுணர்வால் உணர்ந்த சீதக்காதி தமது சுற்றத்தார்களை நோக்கி "யான் இறந்தவுடன் எனது விரலி லுள்ள மோதிரத்தைக் கழற்ற வேண்டாம். அத்துடன் என்னை அடக்கம் செய்யுங்கள்" என வேண்டிக் கொண்டார். உயிர் உடலினின்றும் பிரிந்தது. சீதக்காதியின் ஆன்மா இறை வனடி நிழலிற் கலந்து இன்புற்றது. புரவலர் புலம்பினர்; இரவலர் இரங்கினர். புலவர் குழாம் அலைகடல் நடுவண் மாலுமியில்லா மரக்கலம் போன்று தடுமாறிற்று. சீதக்காதி யின் பருவுடல் முஸ்லிம் மதச் சடங்குகளுடன் தொடு குழியில் இடப்பட்டது.

சின்னாள் சென்றபின் சீதக்காதியிடம் பேரன்பு பூண்ட படிக்காசுத் தம்பிரான் கீழக்கரைக்கு வந்தார். தனது அன்ப ராம் வள்ளலைக் காணுது பலவாறு புலம்பினர். சீதக்காதியின் பருவுடல் கிடக்கும் சவக்குழியின் முன்னின்று, "பெருமானே! நீ புகழ்க் கம்பம் நாட்டி வைத்தாய்; தமிழ்ப் பாவலரை ஓட்டாண்டியாக்கி அவர்களது வாயில் ஒரு பிடி மண் போட்டாய்; சவக்குழியுள் நுழைந்தாய். என்செய்வேம்? வள்ளலே! பூமாதும், புவிமாதும், நாமாதும், நாமும் இருந் தென்? கொடை மிகுந்த சீமானுகிய நீ இறந்த பொழுது புலமையும் செத்துவிட்டதன்றே? வண்மை மிக்க நீ திரும்பி வந்து மீண்டும் பிறந்தாலொழியப் புலவர்கட்குப் பிழைக்க வழியில்லை. என்செய்வோம்?" எனப் பலவாறு புலம்பிக் கீழ்க்காணும் செய்யுட்களை அருளிச் செய்தார்.

"தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ்ப் பாவலரை

ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒரு பிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சாமாதிக் குழிபுகுந்தே."

"பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னுவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்டபோதே புலமையும் செத்ததுவே."

அதுபொழுது எல்லாம் வல்ல இறைவனருளால் சவக்குழி பிளந்து மோதிரமிட்ட கை வெளியே வந்தது. மோதிரக் கை கண்ட புலவர் பின்வருமாறு அதன் குறிப்பைப் புனைந்து உரைக்கின்றார் : 'சீதக்காதி சவக்குழியிலிருந்து நமது பாட்டொலியைக் கேட்டு, 'வா' என்று அழைத்த மோதிரக் கையின் குறிப்பு யாதெனில், "புலவர்களே! வண்மையான தமிழ்ப்பா வொன்றும் அறியாத அற்பர்களிடம் சென்று 'தா' என இனி யாசித்தல் வேண்டாம்" என்று தடையிட்டது போல் தோன்றிற்று. கீழ்க்காணும் செய்யுள் இவ்வுண்மையைக் கூறுகின்றது.

"காவென்று கைத்தலத்து அண்ணல்
செல்லூரன் கனிந்துநம்மை
வாவென்று அழைத்திட்ட மோதிரமே
வண்மை யானதமிழ்ப்
பாவொன்றும் சற்றும் அறியாத
புலவர்தம் பக்கலிற்போய்த்
தாவென்று யாதொன்றும் கேட்காம
லிட்ட தடையிதுவே."

இச்சீரிய செயலைக் கண்ட தமிழ்நாடு சீதக்காதியைச் 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' எனப் புகழ்ந்து கூறிற்று. இப் பொன்மொழி தமிழ்மொழி உள்ளளவும் சீதக்காதியின் புகழைச் செப்பும் தகையது.

# 10. கிராமப் பொருளாதாரம்

[திரு. கேமம் கா. நடராசன் அவர்கள், M. A., M. Litt.]

**முன்னுரை :** நமது இந்திய நாட்டில் கிராமங்களே மிகுதி; கிராம மக்களே நாட்டின் மக்கள் தொகுதியில் முக்கால் பகுதியினர் ஆவர். ஆதலால் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே, எல்லாச் சீர்திருத்தங்களும் செய்யப்படல் வேண்டும். நம் நாட்டிலே செல்வம் ஈட்டும் துறைகளில் முதல் துறை பயிர்த்தொழிலே ஆகும். விவசாயத்தையும் கிராமத்தையும் அடிப்படையாகக் கொண்டு புதிய சமுதாயம் ஏற்படுத்தல் வேண்டும். கிராமங்களின் செல்வநிலை உயர்ந்தால் மட்டும் நாடு முன்னேற்றம் அடைய முடியும் என்பதை நாம் நன்கு உணரவேண்டும்.

**பயிர்த்தொழில் சீர்திருத்தத்தின் தேவை :** பிற நாடுகளைவிட நம் நாட்டில் பயிர்த்தொழில் சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது. நம் நாடு பயிர்த் தொழிலாளர் மிக்குள்ள நாடு. பெரும்பான்மையோர் உழவை ஒட்டியே வாழ்க்கை நடத்துகின்றனர். மேலும் நம் நாட்டில் உழவு ஒரு தொழில் மட்டும் அன்று. அது தொன்றுதொட்டு வரும் வாழ்க்கை முறையாகும். நீண்ட காலமாகவே நம் நாட்டில் பிற தொழில்களைவிட உழவுக்கு அதிக மதிப்பு உண்டு. நம் நாட்டின் கலை, பண்பாடு ஆகியவையும் பயிர்த்தொழிலாகிய உழவை ஒட்டியே வளர்ந்திருக்கின்றன.

பயிர்த் தொழில்தான் சிறப்புத் தொழில். அத்தொழிலாளரே சிறப்பானவர்கள் என்பது நம்முடைய பழங்காலக் கருத்துக்களில் ஒன்றாகும்.

> " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

என்ற வள்ளுவர் வாக்கே இதற்குச் சரியான சான்று ஆகும். ஆனால் இன்று உழவுத்துறையில் மிகுந்த கவனமும் இரக்கமும் போதிய அளவு காட்டப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆதலால், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவினை எப்படி வளரச்செய்யலாம் என்று நாம்

யோசிக்க வேண்டும். இக்காலத்தில் பயிர்த்தொழில் மிகப் பழைய கால முறைகளை ஒட்டியே நடந்து வருகிறது. துண்டு நிலப்பகுதிகள், கிராமக் கடன்சுமை, குடியானவரின் அறியாமை, இயற்கையில் நிகழும் மாறுதல்கள் முதலிய பல துன்பங்கள் இத் தொழிலில் இருக்கின்றன. மேனாட்டார் உழவுத் தொழிலில் கையாளும் புதிய முறைகளை நன்கு அறிந்து, அவற்றை நம் நாட்டிற்கு ஏற்ற முறையில் நாம் பயன்படுத்தினால், மேற்சொன்ன குறைகள் நீங்கலாம் ; உழவுத் தொழிலும் உயர் நிலையை அடைதல்கூடும்.

**துண்டு நிலச் சாகுபடி :** நிலங்கள் மிகச் சிறிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டுத் தனித்தனியாக உழப்பட்டு வருகின்றன. இதுவே நம் பயிர்த்தொழிலின் இலாபமின்மைக்கு ஒரு சிறப்புக் காரணமாகும். மிகப் பெரிய பண்ணைகள் அமைக்க இயலாவிடினும், பண்ணைகள் ஓர் அளவுக்குக் குறைவாக இருக்கலாகாது. அந்து ஓர் அளவுக்குக் குறுகினால், அதிலிருந்து குறைந்த இலாபமும் அடைய முடியாது. பண்ணைகள் இவ்வாறு துண்டுகளாகப் பிரிக்கப்படுவதற்கு இந்து முஸ்லிம் வாரிசுச் சட்டங்களே சிறப்புக் காரணம் என்னலாம் பெரிய பண்ணைகள் இரண்டு மூன்று தலைமுறைகளில் சிறிய பண்ணைகளாகப் பிரிக்கப்படுகின்றன. நிலத்தின்மேலுள்ள மக்கள் நெருக்கம், துணைத் தொழில்கள் இல்லாமை, வாரிசுச் சட்டங்கள், நிலமிருப்பதால் சமூகத்தில் இருக்கும் மதிப்பு என்பன அனைத்தும் சேர்ந்து இந்த நிலைமையை உண்டாக்கியுள்ளன நமது மாகாணத்தில் மொத்தக் குடும்பங்களில் நூற்றுக்கு ஐம்பதுபேர் ஏறத்தாழ இரண்டு ஏக்கர் நிலம் பெற்றுள்ளனர். பத்து ஏக்கர் நிலத்திற்குமேல் உள்ளவர்கள் நூற்றுக்குப் பத்துப் பேருக்குமேல் இல்லை. இவ்வாறு இலாபமற்ற பல துண்டு நிலப்பகுதிகள் இருக்கின்றன. கூட்டுறவு முறையால் பஞ்சாபிலும் மத்திய மாகாணத்திலும் பல துண்டு நிலப்பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, பெரிய பண்ணைகளாகச் செய்யப்பட்டுள்ளன. தக்க வழிகளால் துண்டு நிலப்பகுதிகளை ஒன்றுசேர்த்து இலாபம் தரக்கூடும் பண்ணைகளாகச் செய்யவேண்டுவது ஒரு சிறப்புச் சீர்த்திருத்தமாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வயல்களைப் பிரிப்பதைத் தடை

செய்யச் சட்டம் இயற்றவேண்டும். அத்துடன் ஒருவன் எவ்வளவு நிலம் மிகுதியாக வைத்துக்கொள்ளலாம் என்பதையும் வரையறுக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலுள்ள நிலங்களைத் தனிப்பட்டவரிடமிருந்து அரசாங்கத்தார் வாங்கி, மற்றவர்களுக்குக் கொடுக்கலாம்.

**கிராமக் கடன் சுமை :** இந்தியாவிலுள்ள கிராமக் கடனின் முழுத் தொகை 1500 கோடி ரூபாய்க்கு மேலுள்ளது. நம் சென்னை மாகாணத்தில் உள்ள கிராமக் கடனின் முழு அளவு இருநூற்றுப் பதினெட்டுக்கோடி ரூபாய்க்குக் குறைவில்லை. உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதால் கடன் சுமை இப்பொழுது சரியாகத் தெரியவில்லை. ஆனால் பொருளாதார மந்தம் ஏற்பட்டுப் பொருள்களின் விலைகள் விழுந்தால் கிராமக் கடன்சுமை மிகுதியாகும். இக் கடன் சுமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் குடியானவர்களின் ஏழைமை நிலையே இதற்குச் சிறப்புக் காரணமாகும். கணக்கு வைத்துக்கொள்ளும் பழக்கமும் சேமித்துவைக்கும் வழக்கமும் அவர்களிடம் இல்லை. அவர்கள் சாதாரண காலங்களில் எளிய வாழ்வைக் கைப்பற்றி வந்தபோதிலும், திருமணம் முதலிய சிறப்புக் காலங்களில் கணக்கின்றிக் கடன் வாங்கிச் செலவு செய்கின்றனர். மேலும் கடன் பல தலைமுறைகளாக இருந்துவருகிறது. நம் நாட்டு உழவர்கள் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலே இறக்கின்றனர். கடன் எளிதில் கிடைப்பதும் நமது சட்டமுறைகளும் இச்சுமையை அதிகரிக்கின்றன. கொடுக்கல் வாங்கல் செய்பவருடைய முறைகளும் மிகுந்த வட்டியும் கடன்களின் தொகைகளை மிகுதிப்படுத்துகின்றன. சென்னை அரசாங்கத்தார் அண்மையில் 'உழவர் கடன் நிவாரணச்சட்டத்'தைத் திருத்தியிருக்கின்றனர். கிராமக் கடன் நிவாரணமும் கூட்டுறவு முறைகளும் வேண்டும் அளவு முற்போக்கு அடையவில்லை. நில அடமான பாங்குகள், கூட்டுறவு இலாக்கா ஆகியவற்றின் உதவியைக்கொண்டு கடன் ஒழிப்புக்கான பல வழிகள் ஆராயப்பட வேண்டும்; உழவர்க்குப் போதுமான பண வசதி செய்யப்பட வேண்டும்.

**துணைத் தொழில்கள் :** நம் நாட்டில் குடியானவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலையில்லை. நிலத்திலிருந்து கிடைக்கும்

வருமானம் குறைவானது. அதனால் கிராமங்களில் வறுமை தாண்டவமாடுகிறது. இதனைப் போக்க, கரும்புச்சாறு பிழிந்து வெல்லம் செய்தல், எண்ணெய் ஆட்டுதல், பருத்தியிலிருந்து கொட்டையை நீக்குதல், பாய்கள், கூடைகள், மேஜை, நாற்காலி, தோல் சாமான்கள் முதலியன செய்தல் போன்ற பல கைத்தொழில்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வமைப்புக்கு வேண்டும் பணவுதவியைக் கூட்டுறவுச் சங்கங்களும் அரசாங்கமும் அளித்தல் வேண்டும்.

**கால்நடையின் வளர்ச்சி** : உழவிற்குக் கால்நடைகள் தேவை. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் கால்நடைகளின் வளர்ச்சி மிகுதியாகக் கவனிக்கப்படுகிறது. நம் நாட்டில் கால் நடைகள் தக்க முறைகளில் வளர்க்கப்படுவதில்லை. நாம் அவற் றிற்குரிய மேய்ச்சல் தீனி வசதிகளை மிகுதிப்படுத்துதல் வேண்டும். உயர்தரமான உடல் வளமுள்ள கால்நடைகளை வளர்க்க வேண்டுவது நமது கடமையாகும். தொத்துநோய்களை அடியோடு அகற்றுவதற்கு உரிய விலங்கு மருத்துவக் கூடங் களை ஏற்படுத்துதல் வேண்டும்.

**நீர்ப்பாசனம்** : வயல்கட்குத் தண்ணீர் உதவுவதில் நீண்ட காலமாகவே நமது நாட்டில் பல திட்டங்கள் இருந்திருக் கின்றன. அவற்றுள் ஏரிகள், கிணறுகள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் என்பன சிறப்பானவை. இவை நன்கு பாதுகாக் கப்படல் வேண்டும். இவற்றுடன் வருங்கால நலனுக்குரிய புதிய நீர்த்தேக்க திட்டங்கள் தேவையாகும். இந்திய அரசாங் கத்தார் இத்துறையில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர். நமது சென்னை அரசாங்கம் புதிய நீர்த்தேக்க திட்டங்களைத் தொடங்கும் முயற்சியில் மிகுந்த கவலை காட்டி வருதல் பாராட்டத் தக்கது. பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாத இத்துறை இப்பொழுது திடீரென்று எல்லோராலும் ஆராயப் பட்டு வருகிறது. நீர்ப்பாய்ச்சலுக்குரிய நிலங்களை மிகுதிப் படுத்தினால் பஞ்சங்களின் அச்சம் அகலும். அமெரிக்காவில் நிறுவப்பட்டிருக்கும் 'டென்னிஸி பள்ளத்தாக்குத் திட்டம்' போன்ற பல திட்டங்கள் இந்தியாவில் நிறைவேற்றப்படல் வேண்டும். பவானிசாகர், மணிமுத்தாறு, மலம்புழா, அமராவதி நீர்த்தேக்க திட்டங்கள் நிறைவேற்றப்படின்

இம்மாகாணத்தின் பயிர்த்தொழில் மிகுதிப்படும். அதன் வாயிலாகப் பொருளாதார நிலை மிகவும் உயரும் என்பதில் ஐயமில்லை. உணவுப் பொருள்கள் வளர்ச்சிக்கு இத்திட்டங்கள் தேவையாகும். நம் நாட்டிலுள்ள இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்தி அளவுக்கு மேற்பட்ட உணவுப் பொருள்களை உண்டாக்குதல் வேண்டும். இவை நிறைவேறின், இப்பொழுது போல் அயல் நாடுகளுக்குச் சென்று உணவுப் பொருள்களுக்காக மடிப்பிச்சை கேட்க வேண்டும் தேவை ஏற்படாது.

**நிலவரிச் சீர்திருத்தம்:** நிலவரி மிகவும் பிற்போக்கான முறையில் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நடைமுறையில் இருக்கும் நிலவரியின் சுமை மிகுதியாகும். இதை மாற்ற வேண்டுவதன் தேவையைப்பற்றி நாம் சொல்ல வேண்டுவதில்லை. இதற்குப் பதிலாக நிலத்தின் பரப்பு, வளமை முதலியவற்றைக் கவனித்து ஒரு சிறு வரி விதிக்கப்படல் வேண்டும். மேலும் பயிர்த் தொழில் வருமானத்தின் மீது படிப்படியாய் உயரும் வருமான வரி விதிக்கப்படல் வேண்டும்.

**குத்தகை-வார முறைகள்:** நம் சென்னை மாகாணத்தில் ரயத்வாரி முறையிலுள்ள நிலங்கள் விரிவாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஜில்லாவுக்கு ஜில்லா வாரம், குத்தகை முறைகள் வேறுபடுகின்றன. பொதுவாக நம் மாகாணத்தில் ஏறக்குறைய நாலாயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்களில் ஆராய்ச்சி விசாரணை நடத்தியதிலிருந்து, வார விதிகளும் குத்தகை முறைகளும் கூடுமளவு நியாயமாகவும் நிலையாகவும் உள்ளன என்பது தெரிகிறது. பெரும்பாலான நிலங்களை அவற்றின் உரிமையாளரே பயிர் செய்து வருகின்றனர். வெள்ளத்தாலும் பருவ மழையின்மையாலும் அடிக்கடி நஷ்டம் ஏற்படுகிறது. இது நில உரிமைக்காரர்கள், குத்தகை வாரக்காரர்கள் ஆகிய எல்லோருக்கும் துன்பத்தை உண்டுபண்ணுகிறது. இச்சமயங்களில் நம் அரசாங்கத்தார் செய்யும் சிறிதளவு வரிக் குறைவு போதாது. வரிநீக்கம் செய்வதில் அரசாங்கத்தார் தாராளமான கொள்கையைப் பின்பற்றல் வேண்டும்; அமெரிக்காவில் இருப்பதுபோல் விரிவான 'பயிர்த் தொழில் பாதுகாப்புத் திட்டம்' ஒன்றை நிறுவுதல் வேண்டும்.

**உழவுத் தொழிலாளர் :** நிலமில்லாத உழவுத் தொழிலாளர் நமது மாகாணத்தில் உள்ள எல்லாக் கிராம மக்களிலும் பதினைந்து சதவிகிதத்திற்குமேல் இல்லை. இவர்கட்குப் போதிய கூலி தரப்படாமையின், இவர்தம் கிளர்ச்சி நமது மாகாணத்தில் மிகுதிப்பட்டு வருகிறது. அதனை ஒடுக்க வேண்டுமாயின், இவர்களுக்கு நியாயமான கூலி விகிதங்கள் வரையறுக்கப்படல் வேண்டும். கூலி விகிதங்களை வரையறுக்கும்போது, நாம் பயிர்த் தொழிற் செலவுகளை மறத்தல் கூடாது. நம் நாட்டில் பயிர்த்தொழில் பருவகால மழையில் ஒரு சூதாட்டம். உழவரின் வருமானம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது. மேலும் நல்ல விளைச்சல் இருந்து பொருள்களும் நல்ல விலைக்கு விற்கப்பட்டாலன்றி நிலக்கிழவர்களால் மிகுதியான கூலி விகிதங்கள் கொடுத்தல் முடியாது. கூலி விகிதங்களை வரையறுக்கும் பொழுது இச்செய்திகளை நாம் மறத்தல் கூடாது. ஆனால் தொழிலாளர்க்குத் தேவைப்படும் குறைந்த அளவு வாழ்க்கை வசதிகளை வழங்க வேண்டுவது சமூகத்தின் கடமையாகும். எவ்வகை வேறுபாட்டையும் மறந்து, பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள எல்லோரும் விளைச்சலைப் பெருக்க முயற்சித்தல் வேண்டும். இஃது அனைவரையும் வாழ வைக்கும் முயற்சியாகும்; நாட்டுக்குரிய பெரிய திருப்பணியாகும்.

**மற்ற முறைகள் :** விதைகள், நல்ல உரம் முதலியன தக்க முறையில் உழவர்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும். உழவர்களுக்குப் பொருளுதவி செய்யவும், அவர்தம் சரக்குகளுக்குத் தக்க விலைகள் கிடைக்கவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். இங்ஙனம் ஏற்பட்ட சங்கங்கள் ஏறத்தாழ இருநூறு நமது மாகாணத்தில் இருக்கின்றன. விளைபொருள்களை இலாபகரமாக விற்பதற்கு எல்லா வழிகளிலும் அரசாங்கத்தார் உதவுதல் வேண்டும்.

பள்ளிகளில் பயிர்த் தொழில், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். அதனோடு சமூக கலாசார வளர்ச்சிக்கான விவரங்களும் கற்பிக்கப்படலாம். வருங்காலத்தில் பள்ளிகளில் தொழிற் கல்வி மிகுதியாகப் போதிக்கப்படல் வேண்டும். மாணவர்களை அந்தந்த மாகாணப் பயிர்த் தொழில் சார்பான

துணைத்தொழில் துறைகளில் பழக்குவிக்க வேண்டுவது இன்றி யமையாதது. நாம் நமது பயிர்த் தொழிற் கல்வி முறையை முழுவதும் சீர்திருத்தி அமைத்தல் வேண்டும். புதிய முறைகளைப் பின்பற்றுவதற்குத் தக்கவாறு உழவர்க்கும் போதிய கல்வி கற்பித்தல் வேண்டும். மனித சக்தியைக் கவனிக்காத பயிர்த்தொழில் தொடர்பான எந்தச் சீர்திருத்தமும் வெற்றி பெறுதல் முடியாது

முடிவுரை: நாம் பலவகைச் சீர்திருத்தங்களைப்பற்றி மேலே கூறியுள்ளோம். துண்டு நிலங்களை ஒன்றுபடுத்தல், நில வரிச் சீர்திருத்தம், நில நீதிமன்றங்களை அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல், கிராமக் கல்வியைப் பரப்புதல், விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஊக்கமளித்தல் போன்ற துறைகளில் அரசாங்கத்தார் சட்டங்களை இயற்றி, ஊக்கமாகப் பங்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கிராமச் சீர்திருத்தத்தில் சுயநலமின்றிப் பொதுநலச் சேவையில் ஆர்வம் கொண்ட ஆண்களும் பெண்களும் செய்யும் தொண்டு சிறப்பானதாகும்.

# 11. சிங்கப்பூர்

[திரு. சோம. லெ. இலக்குமணச் செட்டியார் B. A.]

### சிங்கப்பூர்த் துறைமுகம்

நான் ஆஸ்திரேலியப் பிரயாணத்தின் முடிவில், பிரமாண்டில் துறைமுகத்திலிருந்து 'எஸ். எஸ். சாரன்' என்ற கப்பலில் சிங்கப்பூருக்கு வந்தேன். 6 மாதங்களுக்குப்பின் மீண்டும் ஆசியாவுக்கு (அதன் முச்சந்தியான சிங்கப்பூருக்கு) வருகிறேன்' என்ற எண்ணமே என் மனத்தில் குடி கொண்டிருந்தது. வெள்ளை நாகரிகம் நிறைந்த மூன்று கண்டங்களில் பல மாதங்களைக் கழித்த எனக்கு, மலேயா அயல்நாடாகத் தோன்றவில்லை. 1949-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12-ஆம் நாள், அதாவது தைப் பொங்கலுக்கு இரு நாட்கள் முன்னதாக நான் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தேன். நான் வந்த கப்பல் துறைமுகத்தை அடைந்தபோது காலை 6 மணி இருக்கும். உரிய அதிகாரிகள் கப்பலுக்கு வந்து எனது பாஸ்போர்ட்டில் "சாப்பு" குத்தினர். "சாப்பு" என்னும் மலேயா மொழிக்கு முத்திரை அல்லது 'ரப்பர் ஸ்டாம்பு' என்பது பொருள். நான் ஓர் ஐரோப்பிய இனத்தவரின் நாட்டிலிருந்து வந்ததால் என்னுடைய உடல் நிலையைப் பற்றிய உறுதிமொழிகளை ஒருவரும் சரி பார்க்கவில்லை. இந்தியாவில் மட்டுமே எல்லா நோய்களும் இருப்பதாக மலேயா அரசியலார் கருதுவதே இந்த விதிவிலக்கிற்குக் காரணம் ஆகும்.

'சிங்கப்பூர் பெரிய கப்பல் தளம்' என்பது உலகத்தார் அனைவர்க்கும் தெரிந்ததே. அதைக் கட்டி முடிக்கப் பதினைந்து ஆண்டுகள் ஆயினவாம். அதற்குப் பிரிட்டிஷார் 20 மிலியன் பவுன், அதாவது 27 கோடி ரூபாய் செலவிட்டனராம். எனவே ஆசியாவில் சிங்கப்பூரே பெரிய துறைமுகமாக இருப்பது முறையே. பல தீவுகளுக்கு இடையே அமைந்திருப்பதும் அதன் சிறப்பாகும். நாள்தோறும் ஒரு கோடி ரூபாய் பெறுமான பொருள் ஏற்றுமதியும் அதே அளவு இறக்குமதியும் சிங்கப்பூர் துறைமுக வாயிலாக நடைபெறுகின்றன.

பிரிட்டனின் தென்கிழக்கு மூலையிலுள்ள சதாம்ப்டன் துறைமுகத்தில் பிரயாணிகள் கப்பலில் ஏறுவதற்குச் செய்யப்பட்டுள்ளது போன்ற வசதிகளை நான் சிங்கப்பூர் துறைமுகத்

தில் காணவில்லை. கப்பலை விட்டு இறங்கியதும் நியூயார்க் துறைமுகத்திலுள்ளதைப் போன்ற சுங்கச் சோதனை அமைப்புக்களோ, தந்தி-டெலிபோன் நிலையங்களின் பிரதிநிதிகளோ கண்ணெதிரில் இல்லை. பிரயாணிகள் கொண்டுவந்த பொருள்களைக் கப்பலிலிருந்து தாமே இறக்கிவிடும் கருவிகளும் சிங்கப்பூரில் இல்லை. எனக்குச் சிறப்பாகத் தெரிந்தது, சிங்கப்பூர் பொதுத் துறைமுகமாக (ப்ரீ போர்ட்டாக) இருந்ததால், சுங்கச் சடங்கு குறைவாயிருந்தது ஒன்று மட்டுமே. பொதுத் துறைமுகங்கள் என்பன உலகில் சில இடங்களில் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை ஹாங்காங்கும் ஹாம்பர்கும் ஆகும். சிங்கப்பூர் துறைமுகம் இந்தோனேசியா, மலேயா, போர்னியோ முதலிய வளம் பொருந்திய பல நாடுகளுக்கு இன்றியமையாத துறைமுகமாக இருந்துவருகிறது. இந்த நாடுகளுக்கிடையே நடைபெறும் வியாபாரம் சிங்கப்பூர் வாயிலாகவே நிகழ்கிறது. அதுமட்டுமன்று. இந்த நாடுகளுக்கு மற்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களும், இந்த நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குச் செல்லும் பொருள்களும் சிங்கப்பூர் வாயிலாகவே செல்ல வேண்டும். இந்த நாடுகளில் சுங்கவரி விதிக்கப்படுவதால் சிங்கப்பூரிலும் சுங்கவரி விதிப்பது சரியன்று. எனவே சிகரெட், தங்கம், மதுபோன்ற ஒரு சில பொருள்களுக்கு மட்டுமே சிங்கப்பூரில் சுங்கவரி விதிக்கப்படுகிறது. இதன் பயனாகச் சிங்கப்பூரில் பொருள்களெல்லாம் மலிவாகக் கிடைக்கின்றன. வெளிநாட்டு வாணிகமும் அந்நாட்டில் பெரிய அளவில் நடைபெறுகிறது.

## ஓட்டலுக்குப் புறப்பாடு

இனிச் சிங்கப்பூருக்குள் செல்வோம்; கப்பல் துறைமுகத்தையடைந்து 10 நிமிடங்களில் நான் எனது விடுதிக்குப் புறப்பட்டேன். "ஸீவியூ ஓட்டலில்" தங்குவதற்கு நான் ஏற்பாடுகள் செய்திருந்தேன். இந்த விடுதி மேயர் ரோடில் கடலுக்கு எதிரே அமைந்திருக்கிறது. துறைமுகத்திற்கும் இதற்கும் உள்ள தொலைவு நான்கு மைல்கள். நான் விடுதிக்குச் செல்லும் வழியில் சிங்கப்பூரின் முக்கிய சாலைகளைக் கடந்தேன். போருக்கு முன் சிங்கப்பூரே ஆசியாவிலேயே துப்புரவான நகரமாக இருந்தது; ஆனால் இன்று அங்கு வழங்கும் பத்துக்காசு, இருபது காசு நோட்டுக்களில் கூட அவற்றை நாம் கையால்

தொடமுடியாத நிலையில் அழுக்கு நிறைந்திருக்கிறது. இத்தகைய துப்புரவின்மையும், வெப்பமும், விதவிதமான ஆடைகளும் வழி நெடுகக் காணப்பட்டன. ஆதலால் சிங்கப்பூருக்கும் சில இந்திய நகரங்களுக்கும் எனக்கு வேறுபாடு தெரியவில்லை. மக்கள் உரத்த குரலில் பேசுவதையும், கொள்வோரும் கொடுப்போரும் விலைகளில் "பேரம்" செய்வதையும் சில நாட்களில் நான் அறிந்தேன். இவை முதல்நாள் நான் எண்ணிய கருத்துக்களை உறுதி செய்தன.

**என் அலுவல்கள்**

விடுதியில் இறங்கியதும், மலேயாவில் என்னுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினேன், மலேயாவின் பல பகுதிகளைப் பார்க்கவும் அந்த நாட்டில் வேறுபட்ட வழக்கங்களைப் புரிந்துகொள்ளவும் நான் முயன்றேன். அங்கு எனக்கு சிங்கப்பூர் செட்டியார் வணிக மன்றச் செயலாளர் திருவாளர் சே. சுப்பைய செட்டியாரவர்கள் பேருதவியாய் இருந்தார்கள். மலேயாவில் என்னை அன்புடன் உபசரித்த அன்பர்கள் மிகப் பலர். நாட்டுக்கோட்டை நகரத்தாரின் விருந்தோம்பலை அறிந்தவர்களுக்கு இதை விரித்துக் கூறவேண்டியதில்லை. அவர்கள் எனது வெளிநாட்டுப் பட்டறிவுகளை அறிவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்ததால், அவர்கள் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டங்களிலும் மற்ற வாய்ப்புக்களின் வாயிலாகவுமே நான் மலேயா நாட்டைப்பற்றி அறிய முடிந்தது. சிங்கப்பூரிலும் மலேயாவின் மற்ற நகரங்களிலும் பல சமூகத்தினரைச் சந்திக்க முடிந்தது. அப்போது இந்திய அரசியலின் பிரதிநிதியாயிருந்த திரு. திவி. அவர்களையும் அவர் இல்லத்தில் கண்டு மலேயா பற்றிய செய்திகளை அவருடன் விரிவாக விவாதித்தேன்.

**சிங்கப்பூரும், மலேயாவும்—அரசியல் நிலை**

சிங்கப்பூர், மலேயா என்ற பெயர்கள் எதைக் குறிக்கின்றன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே, இவற்றை விளக்கிக் கூறுவேன் :

ஜப்பான் போர் தொடுக்குமுன் மலேயாவில் 1. ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்ட்ஸ், 2. பெடரேட்டட் ஸ்டேட்ஸ், 3. அன்பெடரேட்டட் ஸ்டேட்ஸ் என்று மூன்று தனித்தனி

அரசாங்கங்கள் இருந்தன. சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா என்ற மூன்று தீவுகளும் ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்டில் அடங்கியன. மூன்றாவது பிரிவில் பல சிற்றரசுகள் இருந்தன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அரசாங்கம் இருந்து வந்தது.

போரில் வென்ற பின்னர், பிரிட்டிஷார் நிறுவிய அரசியல் சட்டப்படி மலேயாவில் இரண்டு அரசாங்கங்கள் மட்டுமே உள்ளன. சிங்கப்பூர் தீவுக்கு மட்டும் ஓர் அரசாங்கமும் மலேயாவின் மற்றெல்லாப் பகுதிகளுக்கும் மற்றொரு அரசாங்கமும் இருந்து வருகின்றன. அரசியல் மொழியில் முன்னதற்குக் காலனி என்றும், பின்னதற்குப் பெடரேஷன் என்றும் பெயர். முன்னதற்கு ஒரு கவர்னர் இருக்கின்றனர். பின்னதற்கு ஒரு மலேயா சுல்தானும் ஒரு பிரிட்டிஷ் ஹைகமிஷனரும் நிர்வாகத் தலைவர்களாக இருக்கின்றனர். ஈரிடங்களிலும் அரசாங்கத்தார் நியமித்த ஆலோசனைக் குழுக்கள் மட்டுமே உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபைகள் இல்லை. இந்தப் பகுதிக்கும் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள பிரிட்டிஷாரின் மற்ற நாடுகளுக்கும் எல்லா அதிகாரங்களும் படைத்தவர் கமிஷனர் ஜெனரல் மால்கம் மாக்டனால்டு என்பவர்.

**சிங்கப்பூரின் வரலாறு**

சிங்கப்பூர் என்பது ஒரு வடசொல். சிங்கநகரம் என்பது இதன் பொருள். 1819-இல் இது மீன் பிடிக்கும் சிற்றூராக இருந்தது. ஜோஹூர் சுல்தானிடம் இருந்து ராபில்ஸ் என்ற வெள்ளையர் ஆண்டுக்கு 3000 வெள்ளி (5000 ரூபாய்) வாடகை கொடுப்பதென்ற உடன்பாட்டின் மூலம் சிங்கப்பூரைப் பிரிட்டிஷாரின் உடைமையாக்கினர். இவர்தாம் சிங்கப்பூரை உண்டாக்கிய வீரர். அதன் முதல் கவர்னராக இருந்தவரும் இவரே. கடலிற் பிறந்து, கடற்படையில் பணியாற்றிய ராபில்ஸ், உலகின் சிறந்த கடற்படைத் தளத்தை அமைத்தது இவரது வீரத்தை வெளிப்படுத்துகிறது. ராபில்ஸின் நினைவாகச் சிங்கப்பூரில் பல சின்னங்கள் இருக்கின்றன. அவற்றுள் சில வருமாறு: ராபில்ஸ் பிளேஸ், ராபில்ஸ் மியூஸியம், ராபில்ஸ் பஜார், ராபில்ஸ் போஸ்டாபீஸ், ராபில்ஸ் ஓட்டல் முதலியன. ராபில்ஸின் சிலையும் அங்கே நிறுத்தப்

பட்டிருக்கிறது. இது செம்பால் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இச்சிலையைத் தமிழ் மக்கள் "செம்புத்துவான்" என்று சொல்லுகிறார்கள். துவான் என்றால் மலாய் மொழியில் துரை என்பது பொருள்.

**நகரச் சிறப்பு**

சிங்கப்பூரின் நீளம் 26 மைல்; அகலம் 14 மைல். தெற்குக் கோடியில் ஒரு மைல் நீளமுள்ள பாலம் ஒன்று இத்தீவை மலேய நாட்டுடன் இணைக்கிறது. மணிலா, பாங்காக், ஹாங்காங், ஷாங்ஹை ஆகிய ஆசிய நகரங்கள் முறையே கீழ் நாட்டின் முத்து, ஆசியாவின் வெனிஸ், தென் கிழக்கு ஆசியாவின் ரிவரியா, தூரக்கிழக்கின் நடுநாயகமான இடம் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்புப் பெயர்கள் அனைத்துமே தென்கிழக்கு ஆசியாவின் தலைவாயிலான சிங்கப்பூருக்குப் பொருந்தும். அதன் கட்டடங்களும் கடைத்தெருக்களும் கண்டோரை மயக்கும் தன்மையுடையவை. பீச்ரோடிலுள்ள பேங்குகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் இவற்றின் கட்டடங்கள் மிகப் பெரியவை. இத்தகைய சிங்கப்பூர் ஓர் அழகான நகரந்தான். அதனாலேயே இதற்கு ஜப்பானியர் 'சோனன்டோ' என்று பெயரிட்டனர். இப்பெயருக்கு ஜப்பான் மொழியில் அழகிய தெற்குத் தீவு என்பது பொருள். ஆனால் பாரிஸ், ஸ்டாக்ஹோம், ஜினிவா ஆகிய நகரங்களை நான் முன்னரே பார்த்திருந்ததால் சிங்கப்பூரின் அழகு எனக்கு மிகுதியாகத் தெரியவில்லை. பல மாடிகளுள்ள கட்டடங்கள் சிங்கப்பூரிலிருந்தபோதிலும், பம்பாயின் மெரைன் டிரைவைப்போல ஒரு வானவீதி அங்கே இல்லை. அங்கே என்னைக் கவர்ந்த கட்டடங்கள் சுப்ரீம் கோர்ட் கட்டடமும் கத்தே பில்டிங்குமே ஆகும்.

சுப்ரீம் கோர்ட் உள்ள மாளிகை அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலுள்ள காபிடல் பில்டிங்கைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. நகராண்மைக் கழகக் கட்டடம் இதற்கடுத்தாற் போலிருக்கிறது. இவற்றுக்கு எதிரில்தான் இந்திய தேசிய இராணுவத்தினருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்ததாம். கத்தே பில்டிங் 14 மாடிகள் உடையது. இதுவே ஆசியாவில் மிக உயர்ந்த கட்டடம். இதில் சிங்கப்பூர் அரசியலாரின் அலுவலகங்களும், ரேடியோ நிலையமும், மலே

யாவின் ஸ்டுடியோக்களும், ஒரு தியேட்டரும், அழகிய அறை களுடன் கூடிய ஒரு நல்ல ஓட்டலும் இருக்கின்றன. இக் கட்டடத்தின் ஒரு பகுதியில் மலையிருப்பதால், உச்சிவரையி லும் வாகனங்களை ஓட்டிச் செல்ல இயலுமென்று கேள்விப் பட்டேன். டில்லிக்குச் செங்கோட்டைபோல், சிங்கப்பூருக்குக் கத்தே பில்டிங் இருந்துவருகிறது. நேத்தாஜியின் சுதந்திர இந்தியத் தற்காலிக அரசாங்கம் கத்தே பில்டிங்கில்தான் நிறுவப்பட்டது. மவுண்ட்பாட்டன் பிரபுவின் தலைமை இடமும் இக்கட்டடத்தில்தான் இருந்தது. அவரே ஜப்பானியரிடம் சரணாகதியைச் சிங்கப்பூரில் ஏற்றுக் கொண்டவரென்பதும், அமைதி குலைந்த நிலையில் ஜப்பானியர் விட்டுச் சென்ற மலேயாவை மீண்டும் அமைதிநிலைக்குக் கொண்டு வந்தவர் என்பதும் இங்கே குறிப்பிடுவது பொருந்தும். சிங்கப்பூரில் ஒரு சாலைக்கு அவருடைய பெயர் இடப்பட்டிருக்கிறது. கத்தே பில் டிங் லோகி வான்தோ என்ற சீனக் கோடீசுவரரைச் சேர்ந்தது.

மலேயாவில் மற்றொரு பெரிய செல்வர் அவிபூன்ஹா என் பவர். இவரும் ஒரு சீனரே. இவர் 'டைகர் பாம்' என்ற தலை வலி மருந்தைச் செய்து விற்றுப் பெரும் பொருள் ஈட்டியவர் இதனால் இவருக்கு "டைகர் பாம் மன்னர்" என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர் ஹாங்காங்கிலும் மலேயாவிலும் பல பத்திரிகைகள் நடத்துகிறார். இவருடைய பத்திரிகைகள் பிரிட் டிஷ் அரசியலாரின் மலேயாக் கொள்கையை ஆதரிக்காததால் நாடு இல்லாத இந்த மன்னர் நாடு கடத்தப்பட்டிருக்கிறார்.

**மூன்று உலகங்கள்**

'சிங்கப்பூர்' என்றதும் என் நினைவுக்கு வருவனவற்றுள் அங்குள்ள மூன்று உலகங்களைக் குறிப்பிடுவேன். ஜாலன் பஜாரிலுள்ள நியூ வேர்ல்ட், கிம்செங் ரோடிலுள்ள கிரேட் வேர்ல்ட், கேலாங் ரோடிலுள்ள ஹாப்பி வேர்ல்ட் ஆகிய வைகளே இம் மூன்றும். இவை ஒவ்வொன்றும் ஏராளமான மின்சாரவிளக்குகள் போடப்பட்ட திறந்த வெளிகளில் அமைக் கப்பட்டிருக்கின்றன. இங்கே குழு நடனங்களும், திரைப் படங்களும், துப்பாக்கியால் சுட்டுப்பரிசு பெறும் போட்டிகளும், தத்தம் வலிமையைச் சோதிக்கும் பற்பல ஆட்டங்களும், கடைகளும், சிற்றுண்டிச்சாலைகளும், சீனரின் சினிமாத் தியேட் டர்களும் உண்டு.

# 12. மணிமேகலை

## பாத்திரம் பெற்றது

[கரந்தைக் கவியரசு ரா. வெங்கடாசலம் பிள்ளை]

### காட்சி 1

இடம் : மணிபல்லவத் தீவு

காலம் : பகல்

உரியோர் : மணிமேகலை, தீவதிலகை.

**மணிமேகலை :** ஓ! என்ன அழகிய காட்சி. வெண்மணற் குன்றம், விரிப்பூஞ் சோலை, தண்மலர்ப் பொய்கை இவை மூன்றும் ஓரிடத்திருப்பக் காண்பதினும் சிறந்த காட்சி யாது உளது! ஓ! அதோ வருவார் யாவரோ? அம்மையே வணக்கம்! வருக! வருக!

**தீவதிலகை :** அம்மா! இத் தீவகத்தே, மரக்கலம் கவிழ்ந்திட, அதனின்றும் தப்பி உய்ந்து வந்த மகளிரைப்போல் இங்கே நிற்கின்றாய்; நங்கையே! நீ யாரோ?

**மணிமேகலை :** அம்மா! எனக்கு இப்பிறப்பின் நிகழ்ச்சியே அன்றிச் சென்ற பிறப்பின் நிகழ்ச்சியும் தெரியும். ஆகலின் இரண்டும் கூறுவன். சென்ற பிறவியில் யான் இராகுலன் என்னும் மன்னன் தேவி. இலக்குமி என்பது பெயர். இப்பிறப்பில் நாடகக் கணிகையாய மாதவி பெற்ற மணிமேகலை ஆவேன். மணிமேகலா தெய்வம் என்பது என்னை இங்கே சேர்த்தருளியது. தெய்வப் பெருமை வாய்ந்த இப்பெரும் பீடிகையால், எனது முற்பிறப்பினை முழுதும் அறிந்தேன்! நான் இங்கு வந்த வரலாறும் இங்கு எய்திய பயனும் இவையே யாகும். தேவி! நீவிர் யாவிரோ?

**தீவதிலகை :** அம்மா! மணிமேகலை! இத்தீவின் அயலிடத்தே இரத்தினத் தீவம் என்பது ஒன்று உண்டு. அதன்கண் சமந்தம் என்னும் உயர்ந்த மலையொன்றுளது. அதன் உச்சியில் புத்தபெருமானின் இணையடிக்காட்சி எழில் பெற்றுள்ளது. அது, பிறவிப் பெருங்கடற்கு அறவி யாகிய மரக்கலம் ஆகும். அதனை வலங்கொண்டு பணிந்து

இங்கே வந்தேன். சிறந்த காட்சியினையுடைய இத்தெய்வப் பீடிகையைக் கண்டு வணங்கி மகிழ்ந்தேன். அப்போது இந்திரன் தோன்றி, இதனை என்றும் காவல் பூண்டிருக்கும் பெரும் பேற்றினை எனக்கு அளித்தனன். என் பெயர் தீவதிலகை என்பதாகும்.

அம்மா! மணிமேகலை! நமது பெருமான் புத்ததேவன் கூறிய நல்லறத்தினைப் பற்றியொழுகும் நோன்பினரே இப்பீடிகையைக் கண்டு வணங்குதற்கு உரியவராவர். அங்ஙனம் கண்டு வணங்குவார்க்கு, இவர் முற்பிறப்பின் உணர்ச்சி இனிதின் எய்தும். அங்ஙனம் கண்டு வணங்கி முற்பிறப்புணர்ந்தோர், உலகத்திற் சிறந்தோர் ஆவர். அன்னவர்களே பின்னர் அறமொழி கேட்டற்குரியராவர். அத்தகு சிறப்பினையுடைய மாதே! யான் கூறுவதனைக் கேட்பாயாக.

இதோ, எதிரே, குவளை நெய்தல் மலர்களை அணிந்து விளங்கும் இப்பொய்கை, கோமுகி யென்பதாகும். இதன் கண், ஒவ்வோராண்டிலும் வைகாசித் திங்கள் முழுமதி நாளில், அமுத சுரபி யென்னும் பெருமையுடையதோர் பாத்திரம் தோன்றும். அஃது ஆபுத்திரன் என்பானது. இன்று அது தோன்றும் காலமுமாகும். அதுபோது தக்கர் எவரேனும் இங்கு உளராயின், அஃது அவர் கையில் வந்துறும்; இன்றேல் மீண்டும் இப்பொய்கையில் மறைந்திடும். மணிமேகலை! நீ உரிய சிறப்புக்களெல்லாம் எய்தியிருத்தலின், நின் கையில் அப்பாத்திரம் வந்திடுமென எண்ணுகின்றேன். நாம் அங்குச் செல்வோம்.

**மணிமேகலை :** தேவி! நன்று! இதோ பீடிகையை வணங்கி வருவேன். (வணங்கல். இருவரும் சென்று கோமுகியை வலம் வந்து நிற்றல்.)

**தீவதிலகை :** மணிமேகலை! நின் சிறப்பினை என்னென்பது! இதோ தோன்றிய அமுத சுரபி நின்னை நோக்கி வருகின்றது! இதோ நின் கையில் அமர்ந்துள்ளது!

**மணிமேகலை :** புத்ததேவனே!

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி

பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குவன் வாழ்த்துவன் மலரடி வாழியர்

**தீவதிலகை :** மணிமேகலை! பசியின் கொடுமையினை என்னென்பது!

குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;
நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;
பூண் அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்;
பசிப்பிணி யென்னும் பாவி!

அப்பசியைத் தீர்த்தோரது புகழோ அளந்துரைத்தற்கரியது. மணிமேகலை! செல்வமுடையார்க்கு அளிப்போர் அறவிலை கூறுவோராவர். அம்மா! உயிர்கட்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே யாவர். ஆதலின், நீ அத்தகைய சிறந்த அறத்தினை மேற்கொள்ளும் அறிவினையுடையை ஆகி, அந்நல்லறம் கண்டு சிறப்புறுவாயாக.

**மணிமேகலை :** அம்மா தீவதிலகை! சென்ற பிறப்பில் என் கணவன் திட்டிவிடம் எனும் பாம்பு தீண்டியதால் உயிர் நீங்கினவிடத்து, உடன் தீக்குளித்த யான், அப்பிறப்பில் சாதுசக்கரன் என்னும் பெரியாரை உச்சிப்பொழுதில் உண்பித்த செயலாகிய கனாக் காண்பேனாயினேன். அதன் பயன் போலும் இப்பாத்திரம் என்கையிற் புகுந்தது. இவ்வுலகத்தில், நல்லறம் செய்து செல்வத்தை யுற்றோர் வாழும் இடங்கள் பல. அத்தகைய நல்லறம் செய்யாது வறிஞராய்ப் பிறந்து, உடுக்கத்தக்க உடையுமின்றிப் பெரும்பசி அலைத்தலால் மிக வருந்தி, வெயில் மழையெனப் பாராது அச்செல்வர் மனைகளின்முன் அலைந்து திரிந்து அயர்வோர் பலர். அத்தகைய வறியர்முன் தோன்

றிக் குழவிமுகம் கண்டு இரங்கும் தாய்போன்று, இப்பாத்திரத்தின் வழியாக அவர் தம் ஆருயிர் மருந்தாகிய உணவினையளிக்கும் தொண்டினை அடைய மிக்க விருப்பம் உடையேன்.

**தீவதிலகை :** அம்மா! மணிமேகலை! அப்பாத்திரத்தின் மற்றொரு சிறப்பினைக் கூற யான் மறந்தேன். நீ எடுத்துக் கூறினை. அறமே சான்றாக, நிறைந்த அருளால் உலகத் துயிர்களை உண்பிக்க விரும்பும் சிறந்தோர்க்கல்லது, அப் பாத்திரம் போலியறம் செய்வார் பிறர்க்கு நன்கு சுரவாது. நீ அறத்தோடும் அருளோடும் நின்று உயிர்கட்குப் பசிப் பிணி போக்கும் பேரவா உடையை யாகலின், அது நன்கு சுரந்து உதவும். மணிமேகலை! நின் பதிக்கு எழுவாயாக.

(மணிமேகலை திவதிலகையையும், புத்த பீடிகையையும் வலங் கொண்டு வணங்கிப் பாத்திரத்தைக் கையில் ஏந்தி வான் வழியாகத் தன் பதிக்கு ஏகல்.)

## காட்சி 2

**இடம் :** புகார்.

**காலம் :** பகல்.

**உரியோர் :** மாதவி, சுதமதி, மணிமேகலை.

**மாதவி :** சுதமதி! நீயும் என் மகளும் சென்ற காலம் இன்றுடன் ஏழு நாள் ஆகி விட்டதுவே. அந்தோ! மணிமேகலை வரக் காணேமே! ஏதேனும் தீங்கு நிகழ்ந்திருக்குமோ என்று என் உள்ளம் அஞ்சுகின்றது.

**சுதமதி :** மாதவி இதோ பார்! மணிமேகலையை!

**மணிமேகலை :** தாயே வணக்கம், சுதமதி வணக்கம்.

**மாதவி :** மணிமேகலை! நின்னைப் பிரிந்த யாங்கள் எய்திய துயரினை என்னென்போம்! நீ சென்றவிடத்து என் உற்றனையோ?

**மணிமேகலை :** அம்மா! முதலில் நிகழ்ந்தன சுதமதி கூற அறிந்திருப்பாய்! சுதமதியினின்றும் என்னைப் பிரித்தெடுத்த தெய்வம் சுதமதிக்குக் கூறியனவும் அறிந்திருப்பாய். இப்பால் நடந்தனவற்றுள் சிறந்தது, நம் பழம் பிறப்பினை

யான் அறிந்து வந்திருப்பது. அதனைச் சுருங்கக் கூறுவேன். நீயும் சுதமதியும் யானும் இரவிவன்மன் என்பான் மக்கள். நின் பெயரோ தாரை. சுதமதி, நின் தங்கை யாகிய வீரை. நீ துச்சய மன்னனது தேவியாயினை. (இரு வரையும் நோக்கி) தாயரே! நுங்கட்கு இப்பொழுது இம் மானிட யாக்கையின் தீவினைகளை யறுக்கும் செய்தவம் உண்டாவதாக! உங்கள் பிறப்பின் ஏனை வரலாறுகளை அறவண அடிகள்பால் அறிந்து கொள்ளுங்கள். இதோ என் கையிலுள்ள மாபெரும் பாத்திரம் அமுத சுரபி யென்னும் பெயரினது. இது ஆபுத்திரன் கையது. இது கொண்டு வறிஞர் உலகத்தின் பசிப் பிணிகளை நீக்கும் பேரறத்தினை யான் மேற்கொண்டுள்ளேன். இதனை நீவிரும் வணங்குவீர்களாக. இனி நாம் அறவண அடிகள் திருவடிகளை வணங்குவதற்குச் செல்வோமாக. எழுக!

(யாவரும் செல்லுதல்)

# சித்ரா வாசகம்

## ஐந்தாம் படிவம்

### சிறப்புப் பகுதி

ஆசிரியர்கள்:
K. S. நாகராசன், M.A.,
விரிவுரையாளர், ஜெயின் கல்லூரி, சென்னை.
&
ஆபிரகாம் அருளப்பன், B.A.,
தமிழ்த்துறைத் தலைவர், அர்ச். சேவியர் கல்லூரி,
பாளையங்கோட்டை.

சித்ரா பதிப்பகம்
• ஸ்ரீவைகுண்டம்

பதிப்புரிமை] [விலை அணா 12

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

இப் பாடநூல் ஐந்தாம் படிவம்—சிறப்புப் பகுதிக்கு உரியது. அண்மையில் கல்வித் துறையினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை ஒட்டி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதியில் 200 வரிகளைக் கொண்ட செய்யுட் பகுதியும், 20 முதல் 30 பக்கங்களைக் கொண்ட உரைநடைப் பகுதியும் வேண்டும் என்று பாடத் திட்டம் விதித்துள்ளது. ஆனால், இங்கு அவ்வளவிற்கு மேலும் பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஆகவே, பயிலும் மாணவர் தம் மன நிலைமைக்கும், ஆசிரியர் தம் விருப்பத்திற்கும் ஏற்றவாறு வேண்டிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள இந்நூல் இடமளிக்கிறது.

ஒவ்வொரு செய்யுட் பாடத்தின் தொடக்கத்திலும் ஆசிரியர், நூல் ஆகியவை பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியின் ஈற்றில் அருஞ்சொற்பொருள் தரப்பட்டுள்ளது. இவை மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

தமிழைச் சிறப்பாகப் பயிலும் மாணவர்க்கு இந்நூல் உரியது. ஆதலின் பேரறிஞர் பலர் எழுதிய இலக்கியக் கட்டுரைகளே பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் படிக்கும் மாணவர் தமிழறிவு பெறுவதுடன், தமிழ் இன்பம் நுகரவும் இயலும். அதற்கு வேண்டிய முயற்சியில் மாணவரை ஊக்குவிக்குமாறு தமிழாசிரியப் பெருமக்களைப் பெரிதும் வேண்டுகிறோம்.

தத்தம் பாடல்களையும் உரைநடைப் பாடங்களையும் இந்நூலில் சேர்த்துக் கொள்ள இசைவு தந்துதவிய பெரியோர் அனைவர்க்கும் எமது நன்றி உரியது.

ஆசிரியர்கள்.

# உள்ளுறை

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | வாழ்த்துப் பகுதி | | |
| *1.* | முருகவேள் | ... | *1* |
| *2.* | திருமால் | ... | *2* |
| II. | அறவுரைப் பகுதி | | |
| *1.* | திருக்குறள் | ... | *3* |
| *2.* | சிலப்பதிகாரம் | ... | *5* |
| III. | கதைப் பகுதி | | |
| *1.* | மணிமேகலை | ... | *6* |
| *2.* | திருவிளையாடற் புராணம் | ... | *7* |
| IV. | பல்சுவைப் பகுதி | ... | *13* |
| | குறிப்புரை | ... | *16* |


## உரைநடை


| | | | |
|---|---|---|---|
| *1.* | இளங்கோவடிகள்<br>சர். ஆர். கே. சண்முகம் செட்டியார். | ... | *19* |
| *2.* | சங்க இலக்கியங்கள்<br>பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை. | ... | *26* |
| *3.* | இலக்கிய விமர்சனம்<br>பேராசிரியர். அ. சீனிவாசராகவன். | ... | *33* |
| *4.* | அறநெறி உணர்த்திய அறிஞர்<br>திரு. S. V. வரதராஜ ஐயங்கார். | ... | *41* |
| *5.* | கலிங்கப்போர்<br>திரு. K. S. நாகராசன். | ... | *49* |
| *6.* | தமிழிசை<br>திரு. ஓமந்தூர் இராமசுவாமி ரெட்டியார். | ... | *54* |

# I. வாழ்த்துப் பகுதி

## 1. முருகவேள்

### அருணகிரியார்

அருணகிரி நாதர் திருவண்ணாமலையிலே வாழ்ந்தவர்; சைவ மதத்தினர். இவர் சந்தம் அமைத்துப் பாடுவதில் மிக்க திறம் பெற்றவர். 'வாக்கிற்கு அருணகிரி' என்பதனால் அவருடைய வாக்கு வன்மையை அறியலாம். இவர் திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தர் அலங்காரம் ஆகிய நூல்களை அருளிச் செய்துள்ளார் இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டென்பர்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## 2. திருமால்

### குலசேகராழ்வார்

குலசேகராழ்வார் சேர அரச பரம்பரையில் தோன்றியவர்; திருமாலினது பத்து அவதாரங்களில் சிறந்ததான இராமாவதாரத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். இவர் இயற்றியுள்ள 'பெருமாள் திருமொழி' நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரத்தைச் சேர்ந்ததாகும். இவருடைய காலம் 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்; மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே.

# II. அறவுரைப் பகுதி

## 1. திருக்குறள்

### திருவள்ளுவர்

திருக்குறள் என்னும் நூல் 133 அதிகாரங்களைக் கொண்ட சிறந்ததோர் நீதி நூல். ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக்குறட் பாக்கள் உள. உலக இலக்கியத்தில் சிறந்த ஓரிடத்தை இந்நூல் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் வள்ளுவக் குடியைச் சேர்ந்தவர். அரசனது ஆணையை முரசறைந்து மக்களுக்குத் தெரிவிப்போர் அக்குடியினர். இவர் மதுரையைச் சேர்ந்தவரென்றும் மயிலையைச் சேர்ந்தவரென்றும் வேறுபட்ட கொள்கைகள் உள்ளன. இப் பெரு நூலுக்குப் பதின்மர் உரை இயற்றியுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சாலச் சிறந்ததாம். திருவள்ளுவர் கடைச் சங்க காலத்தில் வாழ்ந்தவர் என்பர்.

#### கல்வி

*உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்*
*கடையரே கல்லா தவர்.* (1)

#### கல்லாமை

*உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்*
*களரனையார் கல்லா தவர்.* (2)

#### கேள்வி

*நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய*
*வாயின ராத லரிது.* (3)

#### அறிவுடைமை

*எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை*
*யதிர வருவதோர் நோய்.* (4)

#### குற்றங்கடிதல்

*செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்*
*பெருக்கம் பெருமித நீர்த்து.* (5)

### பெரியாரைத் துணைக்கோடல் :

*தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்*
*வன்மையு ளெல்லாந் தலை.* (6)

### சிற்றினஞ் சேராமை

*மனநல மன்னுயிர்க் காக்க மினநல*
*மெல்லாப் புகழுந் தரும்.* (7)

### தெரிந்து செயல்வகை

*ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று*
*போற்றினும் பொத்துப் படும்.* (8)

### வலியறிதல்

*ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகா றகலாக் கடை.* (9)

### காலமறிதல்

*ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்*
*தாக்கற்குப் பேருந் தகைத்து.* (10)

### இடனறிதல்

*எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து*
*துன்னியார் துன்னிச் செயின்.* (11)

### தெரிந்து தெளிதல்

*குடிப் பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியும்*
*நாணுடையான் கட்டே தெளிவு.* (12)

### தெரிந்து வினையாடல்

*அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்*
*சிறந்தானென் றேவற்பாற் றன்று.* (18)

### செங்கோன்மை

*குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்.* (14)

### கொடுங் கோன்மை

*வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்*
*கோலொடு நின்றா னிரவு.* (15)

## 2. நாலடியார்

### சைனமுனிவர்

நாலடியார் என்பது நான்கு அடிகளைக் கொண்ட நானூறு வெண்பாக்களாலான ஒரு நீதி நூல். இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. சைனமுனிவர் பலர் செய்த பாடல் களின் தொகுப்பு நூலே இது. இது தோன்றிய காலம் ஆறு அல் லது ஏழாம் நூற்றாண்டு ஆகலாம்.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான். (1)

உறுபுலி யூனிரை யின்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியும் தின்னும்—அறிவினால்
காற்றொழில் என்று கருதற்க : கையினால்
மேற்றொழிலு மாங்கே மிகும். (2)

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும். (3)

ஆற்றுந் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார்—ஊக்கம்
உறுப்பினால் ஆராயும் ஒண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. (4)

தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்றம் இழந்தா அங்—கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னாம் ? பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. (5)

# III. கதைப் பகுதி

## 1. கம்ப ராமாயணம்

கம்பரால் இயற்றப்பெற்ற இராம சரித்திரம் கம்பராமாயணம் என்ற பெயருடன் இலங்குகிறது. கம்பர் தஞ்சை ஜில்லாவிலுள்ள தேரழுந்தூர் என்னுமிடத்தில் உவச்சர் மரபில் தோன்றியவர். இவரை குலோத்துங்க சோழனும், திருவெண்ணெய் நல்லூரிலிருந்த சடையப்ப வள்ளலும் ஆதரித்தனர். இவரது சமயம் வைணவம். இவரது காலம் 12-ஆம் நூற்றாண்டு என்னலாம். இவர் இயற்றிய பிற நூல்கள் : சடகோபரந்தாதி, சிலையெழுபது, ஏரெழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதியந்தாதி. கீழ்வரும் பாடல்கள் யுத்தகாண்டத்தில் கும்பகருணன் வதைப்படலத்திலிருந்து தொகுக்கப்பெற்றுள்ளன.

### கும்பகருணன் அறவுரை

### கும்பகருணன் கூற்று

"ஆனதோ வெஞ்சமர் ! அலகில் கற்புடைச்
சானகி துயரினம் தவிர்ந்த தில்லையோ ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ ? புகுந்ததோ பொன்றுங் காலமே ? (1)

"கிட்டிய தோசெருக் கிளர்பொற் சீதையைச்
சுட்டிய தோமுனஞ் சொன்ன சொற்களால் ?
திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோ?இது விதியின் வண்ணமே ! (2)

"கல்லலாம் உலகினை, வரம்பு கட்டவுஞ்
சொல்லலாம், பெருவலி இராமன் தோள்களை
வெல்லலாம் என்பதும் சீதை மேனியைப்
புல்லலாம் என்பது போலுமாலைய! (3)

"தையலை விட்டவன் சரணந் தாழ்ந்துநின்
மையறு தம்பியோ டளவ ளாவுதல்
உய்திறம் ; அன்றெனில், உளது வேறுமோர்
செய்திறம் உண்டது தெளிந்து கோடியால்" (4)

## : இராவணன் சினத்தல்

"உறுவது தெரியவன் றுன்னைக் கூயது;
சிறுதொழில் மனிதரைக் கோறி சென்றெனக்(கு)
அறிவுடை அமைச்சனீ அல்லை : அஞ்சினை ;
வெறுவிதுன் வீரம்,"என் றிவைவி ளம்பினன்; (5)

"மானுடர் இருவரை வணங்கி. மற்றுமக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்(டு) உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்கு மேகடன் ;
யானது முடிக்கிலேன் ; எழுதி. போதியால்." (6)

## (இராவணன் தானே போருக்குப் புறப்பட்டான்)

அன்னது கண்டவன் தம்பி யானவன்
பொன்னடி வணங்கி"நீ பொறுத்தி யால்"என
வன்னெடுஞ் சூலத்தை வலத்து வாங்கினன் ;
"இன்னுமொன் றுரையுளது" என்னக் கூறினன். (7)

"வென்றிவன் வருவனென்(று) உரைக்கி லேன்விதி
நின்றது ; பிடர்பிடித் துந்த நின்றது ;
பொன்றுவன் ; பொன்றினுற் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக! விடுதி நன்றரோ. (8)

"இந்திரன் பகைஞனும் இராமன் தம்பிகை
மந்திர வலியினுல் மடிதல் வாய்மையால்;
தந்திரங் காற்றுறு சாம்பர்; பின்னரும்
மந்திர முணர்ந்துனக் குறுவ தாற்றுவாய். (9)

"என்னைவென் றுளரெனின், இலங்கை காவல !
உன்னைவென் றுயருதல் உண்மை ; ஆதலால்,
பின்னைநின் றெண்ணுதல பிழைஅப் பெய்வளை
தன்னைநன் களிப்பது தவத்தின் பாலதே. (10)

"இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளவெனிற் பொறுத்தி ; கொற்றவ !
அற்றதால் முகத்தினில் விழித்தல் ; ஆரிய !
பெற்றெனன் விடை,"எனப் பெயர்ந்து போயினன். (11)

அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடுங் குருதி தேக்கின ;
எவ்வழி யோர்களும் இரங்கி ஏங்கினர் ;
இவ்வழி அவனும்போய் வாயில் எய்தினன். - (12)

## 2. வில்லி பாரதம் :

### வில்லிபுத்தூராழ்வார்

வில்லிபுத்தூரரால் இயற்றப்பெற்ற பாரதம் 'வில்லி பாரதம்' என்று பெயர் பெற்றது. இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் தோன்றியவர்; வைணவ சமயத்தினர். இவர் வரபதியாட்கொண்டான் என்ற சிற்றரசனிடம் அரசவைப் புலவராக இருந்தார். அவர் வேண்டுகோளின்படி தமிழில் பாரதத்தின் முதல் பத்துப் பருவங்களைப் பாடினார். இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டு ஆகும்.

### கன்ன பருவம்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போ
யாதவன் சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைர் "செருநீ
யொழி"கெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய னாகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான். (1)

" தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
மேருவி னிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
இளையந்ததொல் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றால்" (2)

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப,
இருசெவிக் கமுதெனக் கேட்டு,
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையான்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் "தரத்தகு பொருணீ
நவில்"கென நான்மறை யவனும்
"ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவு"கென் றலுமுள மகிழ்ந்தான். (3)

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவியா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றாற்
புண்ணியம் இதனினும் பெரிதோ!" (4)

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
விறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினால் நோக்கிக்
"கைப்புன லுடன்றரு" கென்ன,
அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன். (5)

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து"நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதும்"என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான் :
"அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ யளித்தருள்" என்றான். (6)

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
"எத்தனை பிறவி யெடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவில்"என் றுரைத்தான்
மூவரும் ஒருவனும் மூர்த்தி. (7)

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினுன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன். (8)

அமரரா னவரும் அமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார்
"சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் வீடவுஞ் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன்"
என்றுதன் னகமிக மகிழ்ந்தான். (9)

'தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுகணண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர்கோவுக்(கு)
உரைபெறுநற் கவசமுங்குண் டலமும் ஈந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே,
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே." (10)

# IV. பல்சுவைப் பகுதி

## 1. முருகன் பிள்ளைத் தமிழ்

### பகழிக் கூத்தர்

இவ்வாசிரியர் சேது நாட்டிலுள்ள சன்னுசிக் கிராமத்தில் தோன்றியவர் ; வைணவ சமயத்தினர். இவர் வயிற்று வலியால் பெரிதும் வருந்தித் திருச்செந்தில் முருகன் மீது இந்நூலைப் பாடி அந்நோய் நீங்கப் பெற்றார். இவரது காலம் புலப்படவில்லை.

பொய்யா வளமைதரும் பெருமைப்
 பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டுங் கலங்கள் வகைவகையே
 பூட்டி யெடுத்துப் பாலூட்டி
மெய்யா லணைத்து மறுகுதனில்
 விட்டா ரவரை வெருமலுனே
வெறுக்க வேறு கடனுண்டோ ?
 விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்
கையா லிழைத்த சிற்றிலைநின்
 காலா லழிக்கை கடனலகாண் ;
காப்பா னழிக்கத் தொடங்கிலெங்கள்
 கவலையெவரோ டினியுரைப் போம்?
ஐயா, உனது வழியடிமை
 யடியேஞ் சிற்றி லழியேலே ;
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
 அரசே ! சிற்றில் அழியேலே.

## 2. சகலகலாவல்லி மாலை

### குமரகுருபர சுவாமிகள்

குமரகுருபரர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரிலே பிறந்தவர் ; முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் ; சைவ சமயத்தைச் சேர்ந்தவர் ; துறவியாகவே காலங்

கழித்தவர். இவர் ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்து பின், முருகன் அருளால் பாடும் வன்மை பெற்றவர் ; இவருடைய பாடல்களைக் கேட்டுப் பரவசமடைந்த திருமலை நாயக்கன் இவருக்குப் பரிசுகள் பல வழங்கினான். இவர் காசியிலே ஒரு மடம் கட்டுவித்தார். இந்துஸ்தானி மொழியைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு சரஸ்வதியை நோக்கி இந்நூலைப் பாடினார் என்று கூறுவர். இவர் இயற்றிய பிற நூல்கள் :—நீதிநெறி விளக்கம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், பற்பல பிரபந்தங்கள் முதலியன.

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்க என்
வெள்ளையுள்ளத்
தண்டாமறைக்குத் தகாது கொலோ ?
சகமேழு மளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான், பித்தாக
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே !
சகல கலா வல்லியே ! (1)

நாடும் பொருட்சுவை சொற் சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்,
பங்க யாசனத்தில்
கூடும் பசும் பொற் கொடியே !
கனகக் குழையும் ஐம்பால்
காடும் சுமக்குங் கரும்பே !
சகல கலா வல்லியே ! (2)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய்,
படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ ?
சகல கலா வல்லியே ! (3)

## 3. கலிங்கத்துப் பரணி

### சயங்கொண்டார்

பரணி என்பது ஒருவகைப் பிரபந்தம். கலிங்கநாட்டில் நடந்த போர்ச் செய்தியைக் கூறும் பரணி 'கலிங்கத்துப்பரணி' என்று பெயர்பெற்றது. இந்நூல், கருணாகரத் தொண்டைமான் என்பவன் விசயதர சோழனிடம் விடைபெற்றுக் கலிங்க நாட்டுக்குச்சென்று கலிங்க நாட்டு மன்னனாகிய அனந்தபதுமனை வென்ற வரலாற்றைக் கூறுகிறது. இதைப் பாடிய புலவர் தீபங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்; சைவ சமயத்தினர்; விசயதர சோழனென்னும் முதலாம் குலோத்துங்கன் சமகாலத்தவர். இந்நூலைக் கேட்ட அவ்வரசன் இப்புலவர்க்கு 'கவிச்சக்கரவர்த்தி' என்ற பட்டத்தை அளித்தான். இவர் காலம் 1070—1120.

### போர் பாடியது

எடுமெடு மெடுமென வெடுத்ததோர்
இகலொலி கடலொலி யிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடு மெனுமொலி மிகைக்கவே. (1)

வெருவர வரிசிலை தெறித்த நாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை யவரவர் தெழித்ததோர்
தெழியுல குகள்செவி டெடுக்கவே. (2)

எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே. (3)

கனவரை யொடுவரை முனைத்தபோற்
கடகரி யொடுகரி முனைக்கவே
இனமுகின் முகிலொடு மெதிர்த்தபோல்
இரதமொ டிரதமு மெதிர்க்கவே. (4)

## 4. பூம்பொழில் வஞ்சி

பின் வரும் பாடல் முத்தொள்ளாயிரம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இது, சேரர், சோழர், பாண்டியர் என்னும் முடியுடைத் தமிழரசர் மூவரையும் அறம், பொருள், இன்பம் பற்றிப் புகழ்ந்துள்ள 2700 வெண்பாக்களால் ஆகிய ஓரரிய பெரிய பண்டைத் தண்டமிழ் நூல். இப்பாடல் சேர நாட்டுத் தலைநகரான வஞ்சி நகரத்தின் சிறப்பினைக் கூறுவதாகும். இந்நூலின் ஆசிரியரைப்பற்றிய செய்திகள் துணிவாகத் தெரியவில்லை.

களிகள் களிகட்கு நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்திட்ட வெங்கள்—துளிகலந்
தோங்கெழில் யானை மிதிப்பச்சே றாகுமே
பூம்பொழில் வஞ்சி யகம்.

## 5. அநுமன்

### கம்பநாடர்

இதைப் பாடியவர் கம்பர். இவர் தஞ்சை ஜில்லாவிலுள்ள தேரழுந்தூர் என்னுமிடத்தில் உவச்சர் மரபில் தோன்றியவர். இவரை குலோத்துங்க சோழனும், திருவெண்ணெய் நல்லூரிலிருந்த சடையப்ப வள்ளலும் ஆதரித்தனர். இவரது சமயம் வைணவம். இவரது காலம் 12-ஆம் நூற்றாண்டு என்னலாம். இவர் இயற்றிய பிற நூல்கள் : கம்பராமாயணம், சடகோபரந்தாதி, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதியந்தாதி என்பன.

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்[பான்.

## 6. போர்த்திறம்

இப்பாடல் புறநானூறு என்னும் தொகை நூலில் உள்ளது. இப்பாடலை இயற்றியவர் கோவூர் கிழார். இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்த கோவூர் என்னும் பதியைச் சேர்ந்தவர்: வேளாண் மரபினர். இவர் சோழ மன்னர்களால் ஆதரிக்கப்

பெற்றவர். கணுநூல், சோதிட நூல், இசை நூல் என்பவற்றில் வல்லுநர். இவர் கடைச்சங்க காலத்தினர்.

பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண !
சீறூர் மன்னன் சிறியிலை எஃகம்
வேந்தூர் யானை ஏந்துமுகத் ததுவே ;
வேந்துடன் றெறிந்த வேலே என்னை
சாந்தா ரகலம் உளங்கழிந் தன்றே ;
உளங்கழி சுடர்ப்படை ஏந்திநம் பெருவிறல்
ஓச்சினன் துரந்த காலை, மற்றவன்
புன்தலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே.

## 7. திருமந்திரம்

### திருமூலர்

திருமந்திரம் என்பது மூவாயிரம் பாடல்களால் ஆகிய ஓரரிய ஆன்மீக நூல். இதை அருளியவர் திருமூல நாயனர். இவர் சோழ நாட்டுச் சாத்தனூரைச் சேர்ந்தவர் ; இடையர் மரபினர் என்பர். இவர் திருவாவடுதுறையிலுள்ள திருக்கோயிலில் ஓர் அரசமரத்தடியில் அமர்ந்து, மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்தாராம். ஆண்டுக்கு ஒரு மந்திரமாகத் திருமந்திரம் மூவாயிரம் இவரால் அருளிச் செய்யப்பட்டனவாம். இவருடைய காலம் இன்னதெனத் தெரியவில்லை.

பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினல்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே.

## 8. மகாத்மா காந்தி

### சி. சுப்பிரமணிய பாரதியார்

பாரதியார் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எட்டையபுரத்தில் 1882-ஆம் ஆண்டில் தோன்றியவர். இளமை முதலே கவி பாடும் திறமை உடையவராக விளங்கினர். சென்னையிலும், பின்

னர் புதுவையிலும் இருந்து பல்லாண்டுகள் தமிழுக்கும், நாட்டுக்கும் சிறந்த தொண்டாற்றி வந்தார். 'பாட்டுக்கொரு புலவர் பாரதி' என்பது அறிஞர் வாக்கு.

வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க. (1)

அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்,
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்! (2)

# குறிப்புரை

## I. வாழ்த்துப் பகுதி

### முருகவேள்

அருவாய் - உருவம் இல்லாதவனாய்

மருவாய் - வாசனையாய்

குகனே - குருவே (முருகனே)

### திருமால்

பைங்கூழ் - பசுமையான பயிர்.

மைத்து – கருநிறம் பொருந்தி.

மெய்த்துயர் - உடலைப்பற்றி வருத்துகின்ற துன்பம்.

## II. அறவுரைப் பகுதி

### திருக்குறள்

1. உடையார் - செல்வர். ஏக்கற்றும் -தாழ்ந்து நின்றும்.

2. பயவா -பயன் படாத (விளைவு தராத). களர் - உவர் நிலம்.

3. நுணங்கிய - நுட்பமான. வணங்கிய - தாழ்மையான. வாயினர் - சொல் உடையோர்.

4. அதிர - நடுங்கும்படி. நோய் - துன்பம்.

5. சிறுமை - குற்றம். பெருக்கம் - செல்வம். பெருமிதம் - சிறப்பு. நீர்த்து - தன்மையினை உடையது.

6. ஊதியம் - இலாபம். மதலை - தாங்குமது. சார்பு - துணை.

7. ஆக்கம் (தரும்) - செல்வம் (தரும்). இன நலம் - சேர்க்கையின் சிறப்பு.

8. ஆறு - வழி. போற்றினும்-காப்பாற்றினாலும். பொத்துப் படும் - குற்றப்படும்.

9. ஆகாறு - வருவாய். இட்டிது - குறைந்தது. போகாறு - செலவு.

10. ஒடுக்கம் - அடங்கி இருத்தல். பொருதகர் - சண்டை செய்கின்ற ஆடு.

11. ஆற்றார் - வலிமை யில்லாதவர். அடுப - கொன்று வெற்றிபெறுவர்.

12. வடுப்பரியும் - குற்றத்துக்கு அஞ்சும். நாண் - பழி பாவங்கட்கு மனம் ஒடுங்குதல்.

13. ஆற்றி - செய்து. ஏவற்பாற்று - ஏவப்படும் தன்மை யுடையது.

14. ஓம்பி - காப்பாற்றி. கடிதல் - தண்டித்தல். வடு - பழி.

15. கோல் - தண்டம். இரவு - யாசித்தல்.

### நாலடியார்

1. கீழிடுவான் - தாழ்வுபடுத்துவான். தலையாக - முக்கிய மானவனாக.

2. உறுபுலி - வலிமை மிக்க புலி. ஊன் - மாமிசம். தேரை - பூச்சி. காற்றொழில் - காலால் செய்தற்குரிய தொழில்.

3. முத்தரையர் - i பெருஞ்செல்வர், ii முத்துச்செல்வமுடைய பாண்டியர். iii மூவேந்தர் (மூன்று தரையர்). கருனை - பொரித்த கறி. தாளாண்மை - விடா முயற்சி.

5. உளை அலரி - பிடரி மயிரைப்போன்ற மலர். பொறித் தல் - எழுதுதல்.

## III. கதைப் பகுதி

### கம்பராமாயணம்

1. வெஞ்சமர் - கொடியபோர். அலகு இல் - அளவு இல் லாத. பொன்றும் - அழியும்.

2. கிட்டியது - நெருங்கியது. திட்டியின் விடம் - திட்டி விடம் என்னும் பாம்பு.

3. கல்லலாம் - தோண்டலாம். மாலைய - தன்மையுடையன.

4. தையல் - பெண் (சீதை). சரணம் - கால். உய்திறம் - பிழைக்கும் வழி. கோடி - கொள்வாயாக.

5. உறுவது - வருவது. கூயது - அழைத்தது. கோறி - கொல்லுவாய். வெறுவிது - வீண்.

6. கூன் - முதுகுவளைந்த. ஊன் - (ஊனம்) குற்றம். உம்பி- உன் தம்பி. எழுதி - எழுந்திருப்பாய். போதி - போவாயாக.

8. பிடர் - பிடரி. உந்த - தள்ள பொலன் - அழகு.

9. இந்திரன் பகைஞன் - இந்திரஜித்து. தந்திரம் - (அரக்கர்) படை.

12. நாட்டம் - கண். குருதி - இரத்தம்.

## வில்லி பாரதம்

1. அத்தவெற்பு - அஸ்தமனகிரி. விற்கிடை - வில் கிடக்குந் தூரம். முத்தர் - முக்தி அடைந்தோர். வெயிலவன் - சூரியன்.

2. தாண்டிய - மோதுகிற. ஈண்டிய - மிகுந்த. இயைந்தது- (கொடுக்கத்) தக்கது. தூண்டிய - செலுத்தப்படுகிற. கவனம் - வேகம். துரகதம் - குதிரை. சுடர் - சூரியன்.

3. விசயம் - வெற்றி. வெம்கணை - கொடிய அம்பு. விழுவோன் - விழும் நிலையில் உள்ள கன்னன். ஒன்றியபடி - உள்ள படி.

4. யாக்கை - உடம்பு. ஓவு - ஒழிதல். அயன் - பிரமன்.

5. இறைஞ்ச - வணங்க. எழிலி ஏறு - மேகத்தில் தோன்றுகிற இடி. புனல் - நீர். அம்பு - இரத்தம். அங்கை - உள்ளங்கை.

6. மல்லல் - வளப்பம். தொடையல் - மாலை. சூரன் மதலை - சூரியனுடைய மகனாகிய கன்னன். உற்பவம் - பிறப்பு.

7. மைத்துனன் - அத்தை மகனாகிய கன்னன்.

8. புணரி - கடல்நீர். மாற்றிய - நீக்கிய. பஞ்சாயுதம் - சங்கு, சக்கரம், கதை, வாள், வில். உறழ் - ஒத்த. கரா - முதலை. குஞ்சரம் - யானை.

9. அமரயோனிகள் - தேவசாதியினர். நாள் மலர் - அன்று அலர்ந்த கற்பகமலர். சமரம் - போர். அமலன் - குற்றமற்றவன்.

10. தறுகணாண்மை - அஞ்சா வீரம். செரு - போர். செம்சோறு - செவ்வையாக போட்ட சோறு. மருதிடை - இரட்டை மருத மரங்களிடையிலே.

# IV. பல்சுவைப் பகுதி:

## முருகன் பிள்ளைத் தமிழ்

*பொய்யா - பொய்க்காத, தவறாத. பொருநை - தாமிர பர்ணி. கலங்கள் - அணிகலன்கள், ஆபரணங்கள். மெய் - உடம்பு. வெறாமல் - வெறுக்காமல். பரல் - சிறு கற்கள். கடனல - முறையன்று. சிற்றில் - (சிறுமை + இல்) = சிறிய வீடு.*

## சகல கலா வல்லி மாலை

1. *தகாது கொலோ - தகுதி ஆகாதோ? சகம் ஏழும் - கீழும் மேலுமாகிய இருவகைப்பட்ட ஏழு உலகங்களையும். உண்டான் - தன்னுள்ளடக்கிய திருமால். ஒழித்தான் - பரமசிவன். உண்டாக்கும் - படைக்கும். வண்ணம் - வழி. கண்டான் - தெரிந்து கொண்டவன் (பிரமன்)*

2. *நாடும் - புலவர் விரும்புகின்ற. தோய்தர - பொருந்த. பங்கயாசனம் - பங்கயம் + ஆசனம் = வெண்தாமரை மலராகிய இருக்கையில்*

3. *மண்கண்ட - உலகமுழுவதும் நிழற்றிய. பண் - இசை நிறைந்த பாட்டு. விளம்பில் - ஆராய்ந்து சொல்லுமிடத்து.*

## கலிங்கத்துப்பரணி

1. *எடும் - படையெடுத்துச் செல்லுங்கள். இகல் ஒலி - மாறுபட்ட ஒலி. இகக்க - மேம்பட்டு ஒலிக்க. விடு விடு விடு - மிக வேகமாகச் செல்லுகின்ற. குழாம் - கூட்டம். பரி - குதிரை. கரி - யானை.*

2. *வெருவர - அஞ்சும்படி. தெறித்த நாண் - விரலினால் எறியப்பட்ட நாண் ஒலி. தெழி - அதட்டுவதால் எழும் ஒலி.*

3. *கிடைத்த - எதிர்ப்பட்டது. எதிர் கிடக்க - எதிராக நிற்க. மறி - மடங்குகின்ற.*

4. *கனம் வரை - பருத்த மலை. முனைத்த - மாறுபட்டுச் சண்டையிட்டது. கடம் - மதம். இனமுகில் - திரளான மேகங்கள்.*

## பூம்பொழில் வஞ்சி

*களிகள் - களிப்பை ஊட்டும் கள். களிகட்கு - கள்ளை உண்டு களிக்கும் விருப்பம் உடையோர்க்கு. விதிர்த்து - சிந்தி. எழில் - அழகு. பூம்பொழில் - அழகான சோலை.*

## அநுமன்

அஞ்சு – ஐந்து. இச்சொல் மண், விண், தீ, வெளி, நீர் என்னும் ஐம்பூதங்களைக் குறிக்கும். ஆரியன் - மேலானவன். அணங்கு- பெண்.

## போர்த்திறம்

புரி - முறுக்கு. மின் நேர் பச்சை - மின்னலைப்போலும் தோலினையும். மிளிற்றுக்குரல் - வண்டிசைபோலும் இசையினை உடைய. சிறுார் - குறுநிலம். எஃகம் - வேல். சாந்தார் - சாந்து அணிந்த. உளம் - மார்பு. கழிந்தன்று - உருவிச் சென்றது. பெருவிறல் - மிக்க வலி படைத்த தலைவன் பிடி - பெண்யானை. புறக்கொடுத்தன - பின்னிட்டு அஞ்சி ஓடின.

## திருமந்திரம்

பார்ப்பான் அகம் - பிரமனால் படைக்கப்பட்ட சரீரம். பாற்பசு ஐந்து - ஐம்பொறிகள். பால் - ஆனந்தம்.

## மகாத்மா காந்தி

1. வையம் - பூமி. எம்மான் - பெருமை மிக்கவன்.
2. படி - பூமி. சூழ்ச்சி - ஆலோசனை மிக்க வழி.

# 1. ஆறுமுக நாவலர்

[திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M.A., B.L., M.O.L.]

நாம் பேசுகிறோம். நம்முடைய பேச்சு ஒருவகை இலக்கிய மென்பதை நினைக்கவும் நமக்கு நேரமில்லை. பாட்டு மட்டுமா இலக்கியம்! உரைநடையும்தான் இலக்கியம். இந்த உரை நடையிலேயே நாம் எல்லோரும் — கற்றவரும் கல்லாதாரும், கிழவரும் சிறுவரும், ஆண்களும் பெண்களும் — பேசக் கற்றுக் கொண்டது முதல் மூச்சடங்கிச் சாகும் வரையில் பேசி வரு கிறோம். கேட்டாலும் இது ஒரு புதுமையாகத் தோன்றலாம். மோலியர் என்ற பிரெஞ்சு நாடகாசிரியர் தாம் படைத்த வணிகரை, "ஆ! நான் உரைநடையிலா பேசுகிறேன்" என்று வியந்து கூறுமாறு செய்கிறுர்.

இலக்கியமென்ருல் கம்பன் பாட்டும் வள்ளுவன் பாட்டும் போன்றனவே நினைவிற்கு வருகின்றன. நம் பேச்சு நினைவிற்கு வருவதே இல்லை. ஆனுல் காலம் மாறி வருகிறது. உரைநடை பழைய இலக்கியம். மனிதனுடைய பேச்சோடு பிறந்ததன்ருே அது! விரைந்தெழுதும் கருவிகளில்லாதபோது, பேச்சினை யார் எழுதி வைக்க முடியும்? சுருக்கெழுத்தோ இல்லை. அச்சும் இல்லை, வானெலியும் இல்லை. எழுதி வைத்தாலும் எழுதிய தனைக் கற்கத் தெரிந்தவர்கள் பலர் இல்லை. இன்று ஆயிரக் கணக்கில் நூல்களைப் பதிப்பிப்பதால் நூல்கள் எளிய விலையில் யாரும் வாங்கலாம். அன்றியும் ஒவ்வொருவரும் தத்தம் நூலைத் தாமே எழுதிக் கொள்ள வேண்டும். ஆகவே இன்றி யமையாத நூல்களை மட்டுமே எழுதி வைத்தார்கள். இன்று தந்திச் செய்தி எழுதுவோர் சொற் சுருக்கம் தேடுவதுபோல் அன்று புலவர்கள் சொற் சுருக்கம் தேடினர். நூல் நிலையங்கள் எங்கும் இல்லாத அந்தக் காலத்தில் கற்றதையெல்லாம் தம் மூளையிலேயே வைத்துக்கொண்டு நடக்கும் நூல் நிலையங்க ளாகவே விளங்கினர் ஒவ்வொரு அறிஞரும். வேதங்களை எழுதாக்கிளவியாகப் பல ஆயிரம் ஆண்டுகளாய்க் காத்து வருவது பாரத நாடு. வேதம் உலகறிந்தது. ஆனுல் எல்லாக்

கலையையும் எம்மொழியிலும் இவ்வாறே காத்து வந்திருக்கிறது நம் நாடு.

எழுதுவதைப் பாட்டாகச் சூத்திரமாக எழுதினால் அளவு சுருங்கும்; பொருளும் தெளிவுபடும். ஆகையால் நூலென்றால் பாட்டென்ற நினைவே வருகின்ற வழக்கம் வேரூன்றிப் போய் விட்டது. தொல்காப்பியத்திலும் உரைநடையைப்பற்றிய குறிப்புக்கள் உண்டு. கதை முதலியனவும் உரைநடையில் வழங்கின. பாட்டி கதை சொல்லாமலா அன்று வாழ்ந் திருப்பாள்? சிலப்பதிகாரம், தகடூர் யாத்திரை, பெருந்தேவனார் பாரதம் முதலிய பழைய நூல்களில் இடையிடையே உரை நடை வரக்காணலாம். ஆனால் பேச்சுப்போல் நெகிழ்ந்தோடா மல் ஒரே மூச்சாக விறைத்துக்கொண்டு அவை நம்மை உருட்டி வெருட்டக் காண்கிறோம். இறையனார் அகப்பொருளுரை ஒரு சிறந்த உரைநடை நூல். சூத்திரத்திற்குப் பொருள் கூறுவ தோடு சோலை முதலியவற்றைப்பற்றிய புனைந்துரையும் அன்பு முதலியவற்றைப்பற்றிய தத்துவ விளக்கமும் அங்கு உண்டு. ஆனால் அங்கு பாட்டு நடை காதில் கேட்காமல் இல்லை. எதுகை மோனைகள் அளவுக்கு மீறி இன்பமூட்டுகின்றன. நூல் களின் உரைகளை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சேனாவரையர், பேராசிரியர் முதலானோர் சுருக்கமாக எழுதி வந்தாலும் இடையிடையே எதுகையும் மோனையும் வந்து விழும். வைணவர்களும் சைனர்களும் வட மொழியும் தமிழும் பாதிப்பாதி கலந்து மணிப்பிரவாள நடை எழுதினர். உரைகளும் தத்துவ நூல்களும் எழுதினர். இவற் றில் ஓர் அழகு உண்டு. ஆனால் இங்கும் சூத்திர நடையையே காண்கிறோம். சிவஞான யோகிகள், சிதம்பர சுவாமிகள், இராமலிங்கசுவாமிகள் என்ற பெரியோர்களது உரைநடைகள் ஓட்டமுடையவை; விளக்கம் கொண்டவை. ஆனால் இங்கும் பேச்சின் எளிமை இல்லை. என்றும் என்றும் என்றே, என்பது வும் என்பதுவும் என்றே அடுக்கிக் கொண்டே பக்கம் பக்க மாக ஒரு சொற்றொடர் நீண்டுகொண்டே போகக்காண்கிறோம். பத்திரங்கள் கல்வெட்டுக்கள் முதலியனவும் இவ்வாறே விளங் கின. ஆனந்தரங்கம் பிள்ளை தினசரிக் குறிப்பு எழுதும்போதும் இவ்வாறே எழுதுகிறார்.

அச்சு யந்திரம் ஒரு புரட்சி வித்து. பலரும் படிக்கக்கூடிய நிலை அதனால் ஏற்படுமன்றோ! பிறநாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவ அறிஞர்கள் தமிழினை எழுதிப் படித்து அறிவினை வளர்த்துக் கொண்டார்கள். இவர்கள் கற்கும்போது எழுதியவையெல்லாம் உரைநடை நூலாகும். இவர்கள் வரும்போது மேல்நாட்டில் உரைநடை இலக்கியம் வேரூன்றி விட்டது. இளைஞர்களுக்கு வேண்டிய நூல்களை எழுத வேண்டும் என்ற எண்ணம் கிறிஸ்தவர்களுக்கு எப்பொழுதும் இருந்து வந்தது. எழுதப் படிக்கத் தெரியாத மக்களிடையே சிறப்பாக கிறிஸ்தவ மதத்தினைப் பரப்ப முற்பட்டபோது அவ்வெளியவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய பேச்சுத் தமிழிலன்றோ நூல் எழுதி எழுதப் படிக்க கற்பிக்க முடியும்! இவற்றுக்கெல்லாம் மேலாக பைபிளன்றோ அவர்களது வேதம்! அதனை அவரவர்கள் மொழியில் கற்பிக்க முற்பட்டனர். பைபிள் மிகச் சிறந்த உரை நடை இலக்கியம். அதன் மொழிபெயர்ப்பு பல மொழியிலும் சிறந்த உரைநடை இலக்கியமாக விளங்குகிறது. பலபல தீர்க்க தரிசிகளின் சொற்பொழிவுகள் நிரம்பிய அந்த நூல் பேச்சிலக்கியமாகவும் திகழ்கிறது. சிறுசிறு சொற்றொடர்கள் மணிக் கோவையாக அங்கே வரக் காண்கிறோம். எனவே இவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதென்றாலே உரைநடை இலக்கியத்தைப் பரப்புவதென்றன்றோ பொருள்!

பெஸ்கியின் அவிவேக பூரண குரு கதை ஓர் உரைநடை இலக்கியம். கடவுள் வாழ்த்து நூல்கள் முதலியனவும் வெளி வந்தன. பைபிள் மொழிபெயர்ப்புகளும் பல தமிழில் வெளி வரத் தலைப்பட்டன. பைபிள் மொழிபெயர்ப்பு வரலாறு கொண்டே கடந்த இரண்டு நூற்றாண்டுகளின் தமிழ் உரை நடை வளர்ச்சியை அறியலாம். இந்த உரைநடையை கிறிஸ் தவத் தமிழென்று இகழாமல் தமிழ் முறையென்று பாராட் டக்கூடிய வழியில் வளர்த்த பெருமை ஆறுமுக நாவலரையே சாரும்.

இவர் பிறந்தது யாழ்ப்பாணம். பழந்தமிழர் இலங்கையில் குடியேறிய இடம் அது. இலங்கை வாழ தமிழ் சென்ற காலம் முன்னாள். இந்நாளில் தமிழ் வாழ இலங்கை உதவிய புலவரே நாவலர் பெருமான். நாவலரென்றால் ஆறுமுக நாவலரின்

னேவே வரும். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சைவத் தமிழ் சொற்பொழிவாற்றிய பெருமை கண்டு வியந்து, உலகம் நாவலரென்று அவரைப் போற்றியது. பேச்சுத் தமிழின் வீறெலாம் அறிந்த அவர் உரைநடையின் நுட்பத்தை உணர்ந்து இந்த நூற்றுண்டின் உரைநடைத் தந்தையாக விளங்குவதில் என்ன வியப்பு!

மேல்நாட்டு நாகரிகம் மிகமிக வேரூன்றிய இடம் இலங்கை. இன்றும் அந்த நாகரிகத்தின் பயனை இந்திய மக்களினும் இலங்கை மக்களிடை நன்கு காணலாம். தமிழ்ப் பெண்க ளெல்லாம் அறிவு பெற்று நாகரிக வாழ்வு வாழ அங்குக் காணலாம். இந்தத் துறையில் கிறிஸ்தவப் பாதிரிகள் பெருந் தொண்டாற்றினர். தெருவுக்கு ஒரு பள்ளிக்கூடம் உள்ள இடம் யாழ்ப்பாணமாகும். இன்று அங்கு எல்லோரும் ஆங்கிலம் அறிவர். ஆதலின் அனைத்துக் கலையினையும் ஆங்கி லத்தில் கற்பதே அவர்களுக்கு இன்று எளிது. ஆனால் சென்ற நூற்றுண்டில் அறிவு புகட்ட வந்த கிறிஸ்தவக் கல்லூரிகள் தமிழிலன்றோ முதலில் அறிவூட்டியிருக்கமுடியும்? அதற்கென பல நூல்களையும் தமிழில் மொழிபெயர்க்க முற்பட்டன. வட்டக்கோட்டைக் கல்லூரி இந்த வகையில் செய்த முயற்சி மிகப் பெரிது. அகராதியை தொகுக்கின்ற முயற்சியிலும் பெர்சிவல் (Percival), வின்ஸ்லோ (Winslow) முதலியோர் முற்பட்டிருந்தனர். பைபிளைத் தமிழில் நன்கு மொழிபெயர்க் கும் முயற்சியும் இந்த நூற்றுண்டில் வெற்றியுடன் முடிவு பெற்றது. இவற்றுக்கெல்லாம் தமிழறிஞர் துணை வேண்டு மன்றோ! எனவே மேனுட்டு நல்லறிஞரோடு ஒத்துழைத்த தமிழறிஞர் வழியே தமிழ் உரைநடை வாழ்ந்தது.

கிறிஸ்தவர்கள் கற்றவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக் கும் பயன்பட முந்தினர்கள். இளைஞரது மனத்தைக் கவர்வதே அவர்கள் நோக்கம். ஆகையால் இங்கு வளர்ந்த தமிழ் நடை எளிமையும் தெளிவும் நிறைந்து பேச்சு நடை யோடு ஒத்துப்போக வேண்டுவதாயிற்று. பைபிளை மொழி பெயர்க்கும் தொண்டில் முதலில் ஒத்துழைத்தவர் ஆறுமுக நாவலர். இதனால் இங்கு நாம் மேற்கூறிய பண்புகளெல்லாம் இவர் உரை நடையில் வளருவதாயின. இவர் சிறந்த மெய்த்

தொண்டர். கிறிஸ்தவம்போல் சைவமும் மக்களிடையே பரவ வேண்டும் என்று கனவு கண்டவர். இளையரும் இவர் மனத்தைக் கவர்ந்தனர். அவர்கள் மனத்தை இவர் கவர விரும்பினார். இவர் இயற்றிய சைவ வினாவிடைகள் இளைஞர் வயதுக்கேற்ப சிறிது சிறிதாக வளரவேண்டிய சைவக் கொள்கையை விளக்குகின்றன. பால பாடங்கள் அதற்குமுன் இருந்திருக்கலாம். வகுப்புக்கேற்ப மொழிக்கலை வளரும் முறையில், நல்ல தமிழில், மொழிச் சிக்கல்களை அறிந்து தமிழ்ப் பண்பாட்டிற்கும் நாட்டுக்கும் உகந்த வகையில் முதல் முதல் எழுந்த பால பாடங்கள் இவர் எழுதிய பால பாடங்களேயாகும். கருத்துக்கள், படங்கள், பளபளப்பான பகட்டுகள் என்ற வகையில் இந்நாளைய நூல்கள் இவர் நூல்களை வெல்லலாம். ஆனால் வயதுக்கேற்ப வளரும் மொழிச் சிக்கலோடு வளரும் அழகு இவர் நூலில் மட்டுமே இன்றும் விளங்குகிறது.

சொற்பொழிவாளரென இவரைக் கூறினோம். துறவு பூண்ட மெய்த்தொண்டர் என்றோம். மதம் வளர்க்கும் திருநோக்குடையார் என்று கண்டோம். இவையெல்லாம் பொது மக்கள் ஏற்று நல்வழிப்படவன்றோ அவரைத் தூண்டும்.

திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்த புராணம் முதலிய நூல்கள் அந்நாளில் மக்கள் மனத்தினைக் கவர்ந்தவை. இவற்றின் கதைகளை உரை நடையில் எழுதியவர்கள் பலர். ஆனால் நாவலர் எழுதிய திருவிளையாடற் புராணக் கதைகளும் பெரிய புராணக் கதைகளும் இன்றும் தலைசிறந்து விளங்குகின்றன. பெரிய புராணத்தில் ஒரு பகுதிக்கு சைவமத ஆராய்ச்சியாக இவர் எழுதிய சூசனங்கள் அறிவுக் கண்ணாடியாக இன்றும் நிலைத்து விளங்குகின்றன. இவர் பதிப்பித்த நூல்களும் இவர் உரை நடையை வளர்க்க உதவின. இவர் சிறந்த பதிப்பாசிரியர். நாவலர் பதிப்பு என்றாலே நல்ல பதிப்பு என்று தமிழ் நாடு முழுவதும் நம்பியது. முதலில் இவர் பதிப்பித்தது சிதம்பர சுவாமிகளது உரையேயாகும். பண்டை உரை ஆசிரியர் உரைபோலன்றி ஏறக்குறைய இந்நாளைய நடையில் தெளிவாய் கட்டுரைச் சுவைபடச் சொல்வதே இந்த உரையின் இயல்பாகும்.

இந்த இயல்புகள் ஆறுமுக நாவலர் உரைகளில் வரிக்கு வரி நிழலிடக் காண்போம். சேனாவரையர் உரையும், திருக் கோவையார் உரையும் இவர் வெளியிட்டன. இங்கே கருத்தின் கடுமையேயன்றி உரை நடையின் கடுமை இல்லை. பொருளாழ மும், விளக்கமும், அறிவும் ததும்பும் உரைகள் இவை. இவை யும் நாவலர் பெருமானுக்கு மேல்வரிச் சட்டமாக அமைந்தன. இப் பொருளாழத்தில் ஈடுபட்டு நன்னூல் விருத்தி, பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி முதலிய நூல்களை இவர் பதிப்பித்தார். இளையோர் கற்கும் நன்னூற் காண்டிகையும் உரைநடை இலக்கணமும் இதன்பயனாக இவர் இளைஞருக்குத் தந்த பரிசில்கள். நன்னூற் காண்டிகை என்றும் இளைஞர் உலகில் நிலைத்து வாழும். பெரிய புராணம், கந்தபுராணம், திரு வாதவூரடிகள் புராணம் என்பவற்றினைப் பிழையற ஆராய்ந்து இவர் பதிப்பித்தார். இந்தச் செய்யுட்கள்—சிறப்பாக பெரிய புராணச் செய்யுட்கள்—சைவமும் தமிழும் சுவை சொட்டச் சொட்ட தெள்ளத்தெளிய ஆற்றொழுக்காக ஓடுவன. இவற் றின் எளிமையும் இனிமையும், ஆற்றொழுக்கும் இவர் உரை நடையில் கலந்து இனிப்பனவாயின. இவர் எடுத்த வேலை யெல்லாம் இவ்வாறு பேச்சுத் தமிழாக விளங்கும் உரை நடையை இளைஞர் மனத்தில் பசுமரத்தாணி அறைந்தாற் போல வேரூன்றவைத்து வளர்க்கும் வகையாக அமைந்தது ஒரு வியப்பு.

இதற்கேற்ப காலமும் துணை செய்தது. அச்சுயந்திரங்கள், நூல்கள் கற்பதில் மக்களிடத்தே ஆர்வம், இளைஞர் பள்ளிகள் தோற்றம், நம் நாட்டில் ஒரு புத்துணர்ச்சி இவை இவரைத் தமிழுலகு அறியச் செய்தன. முதலில் கிறிஸ்தவர் தொடர்பு, பின்பு சைவ மக்கள் தொடர்பு, தமிழாசிரியர் தொடர்பு— இவை இவருக்குப் பெரிய வெற்றியைத் தந்தன. இடம், பொருள், ஏவல் எல்லாம் இவரது உரைநடையை வளர்க்கவே எழுந்தன போன்று தோன்றின. இலக்கணப் புலமையில் தலைசிறந்து இலக்கணத்தின் நுட்பத்தினை அறிந்த நாவலர் பெருமான் இலக்கண வரம்பினைக் கடப்பரோ! பேச்சுத் தமி ழென்றால் கொச்சைத் தமிழென்று பலர் நினைப்பதுபோல

இவர் நினையாதபடி தடுத்தது இந்த இலக்கண உணர்வே யாகும். சிறுசிறு வாக்கியங்களின் திட்பம், அவை கோவை யாக பத்திபத்தியாக ஒற்றுமை நயம்பட்டு விளங்கும் நுட்பம், கட்டுரை முழுதும் ஒரு பொருளாய் அமையும் இனிமை, கருத்தின் தெளிவு, சொற்களின் எளிமை, அழகு, ஆரவார மில்லாது பிறர் அறியாமல் உள்ளுக்குள்ளேயே அமைந்து விளங்கும் இலக்கண நயம் இவையெல்லாம் இவர் உரை நடை யில் காணலாம்.

உயர்ந்த செந்தமிழென்று ஒரு புறமும், கொச்சைத் தமிழென்று மற்றொரு புறமுமாக மேடும் பள்ளமுமாக இருந்த தமிழ்ச் சுவரை நாவலர் சமப்படுத்தினார்; வெண் சுதை பூசினார்; ஒரே வெள்ளை ஒளியில் திகழச் செய்தார். ஆம்! அங்கே மேடுபள்ளங்களோடு அழகிய ஓவியங்களும் மறைந்துபோயின. இவரது உரைநடையில் உரை நடை ஓவியங்களைக் காணமுடியாது. சிவஞான யோகிகளது சினம் தோன்றினாலும் அதுவும் அடங்கி ஒடுங்கியே மெல்ல ஊர்ந்து வருகின்றது. இவருடைய நடையில் உணர்ச்சி யென்ப தற்கே ஒரு சிறிதும் இடமில்லாமல் இவரது உரைநடை ஓடு கிறது. முதலிலிருந்து முற்ற முடியும் வரை ஒரே நடையே. ஒரு வேற்றுமையும் இல்லை. உலகம் அவ்வாறு உணர்ச்சியே யின்றி ஒரே நடையிலா நடக்கிறது? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம் என்பதன்றோ பழமொழி! ஆதலால் ஒரே நடையில் முற்ற முடியச்செல்லும் இவர் நூல்கள்—உரை நடை நூல்கள்—அவ்வகையில் நம்மை களைத்து வீழச்செய்கின் றன. ஆனால் உணர்ச்சி ததும்ப எழுதப்பெறுவன என்று இன்று பாராட்டப்பெறும் நூல்கள் வெறும் சொல்லாரவார மும் வெறியாட்டுமாக அமைவதனைக் காணும் பொழுது இவர் நடையின் அழகு புலனாகிறது. செய்யுட்களைப் பதிப்பித்த தோடு செய்யுட்களைப் பாடும் பாவாணராகவும் இவர் விளங்கி யிருந்தால் உணர்ச்சியையும் பெரிய புராணம் போல் அடக்கி யாண்டு அழகு பொழியச் செய்திருக்கலாம்.

உரை நடை என்றால் உணர்ச்சிக்கு இடமில்லை என்று பலர் கருதினர். . ஷேக்ஸ்பியர் என்ற உலகம் போற்றும் நாட காசிரியர் தம்முடைய பின்னாளைய நாடகங்களில் உணர்வு

ததும்பப் பேசும் : இடங்களிலெல்லாம் உரைநடையாகவே பேசுவதனைக் காணும்பொழுது உரைநடை இலக்கியத்தின் நுட்பத்தினை உணர்ந்து மகிழ்கிறோம். இந்த மகிழ்ச்சி ஆறுமுக நாவலர் அடையவில்லை என்பது உண்மையே! ஆனால் கரடு முரடாக கரம்பாய்க்கிடந்த பழைய நிலத்தினை உழுது பரம் படித்து, விதைவிதைத்து, களைபிடுங்குகின்ற தொழிலை இவர் செய்யவேண்டியதாயிற்று. பின்னன்றோ கண்ணுக் கினிய பச்சைப்பயிர்க் காட்சியும், வாய்க்கினிய உணவும், விருந்தும் வருதல் கூடும்! பரம்படித்துக் களைபிடுங்கும் பொழுது உணவு உணவு என்று கூவினால் பயனென்ன? ஆதலின் உரைநடையின் தந்தையாய் இந்நாளைய உரை நடைக்கு அடிகோலினர் நாவலர். அவர் வாழ்க! அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி உரை நடையை ஷேக்ஸ்பியர் கண்ட கொடுமுடியிலும் வைத்துக் கண்டு இன்புறுவோமாக! வாழ்க தமிழ் உரைநடை!

# 2. போரும் நீரும்

[திரு. கி. வ. ஜகந்நாதன் M. A.]

இளமைக் காலத்திலே பட்டத்தைப் பெற்றவன் பாண்டியன் நெடுஞ்செழியன். சூழ இருந்த சிற்றரசர்களும் பேரரசர்களும் பாண்டிய நாட்டின்மேல் எப்போதும் ஒரு கண் வைத்திருந்தார்கள். ஐந்து வகையான நிலங்களும் விரவியுள்ள நாடு அது. தமிழுக்குச் சிறந்த பிரதேசம். செந்தமிழ் நாடு என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதன்றோ பாண்டி நாடு?

நெடுஞ்செழியனை இளம்பிள்ளையென்று எண்ணிய பகைவர்கள் அவனோடு பொருது வென்று விடலாம் என்று எண்ணினார்கள். முக்கியமாக யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேர அரசனுக்கே இந்த எண்ணம் அதிகமாக இருந்தது. "இப்போதுதான் இவன் பட்டத்துக்கு வந்திருக்கிறான். சின்னஞ் சிறுவன்; இவனுக்கு அடங்கி நடக்கும் அமைச்சரோ படைத் தலைவரோ அதிகமாக இருக்க மாட்டார்கள். நாம் சில மன்னர்களையும் துணையாகக் கொண்டு போருக்கு எழுந்தால் மிக எளிதில் வெற்றி பெறலாம்" என்றெல்லாம் அவன் மனக் கோட்டை கட்டினான். தன் கருத்தை மெல்லப் பரவவிட்டான். "இவ்வளவு பெரிய அரசன் போருக்குப் புறப்பட்டால் வெற்றி கிடைப்பதற்கு என்ன தடை? நாம் இவனுடன் சேர்வதால் இவனுக்குத் துணைவலி மிகுதி யாகும் என்பதைக் காட்டிலும், கிடைக்கும் வெற்றியில் நமக்கும் பங்கு கிடைக்கும் என்பதுதான் உண்மை தக்க சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது" என்று எண்ணிய வேற்று அரசர் சிலர் அவனுடைய கருத்தைப் பாராட்டினார்கள்; தாங்களும் அவனுடன் போருக்கு எழுவதாக உறுதிமொழியும் கூறினார்கள். படைகள் சேர்த்தார்கள். போருக்கும் எழுந்தனர். நெடுஞ்செழியன் இளையவனே. ஆனாலும் வீரத்திற் சிறந்த பேரரசர் பரம்பரையில் தோன்றியவன். குட்டியானாலும் பாம்பு பாம்பு தானே?

பகையரசர் கூடிப் பொர வருவதைக் கேள்வியுற்று அவன் சீறினான். "ஓஹோ! இவர்கள் என்னை இளம் பிராயத்தவனென்று எண்ணி விட்டார்களோ? இவர்களை அடியோடு

ஒழித்து விடாமல்; வேறு காரியம் பார்ப்பதில்லை" என்று உறுதி பூண்டான்.

ஒற்றன் ஒருவன் வந்தான்; "அரசே, சேர நாட்டிலும் மற்ற இடங்களிலும் இந்த நாட்டுப் பெருமை தெரியாமல் பலர் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள். 'இந்த அரசனுடைய நாட்டின் பெருமையைப் பெரிதாக உயர்த்திக்கூறுபவர்களைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. அதைக் கண்டு நாம் ஏமாந்து போக மாட்டோம். சின்னஞ் சிறு பிள்ளையாகிய அரசனுக்கு என்ன தெரியப் போகிறது?' என்று பேசிக்கொள்கிறார்கள்" என்றான்.

அரசன் சற்று மனம் உளைந்தான். "அவர்களுடைய படைகள் எத்தகையவை?" என்று ஒற்றனைக் கேட்டான்.

"யானை, தேர், குதிரை, வீரர் என்னும் நால்வகைப் படைகளையும் தொகுத்துக் கொண்டிருக்கிறார்கள். சேர நாட்டு யானைகளை நானே பார்த்தேன்" என்றான் ஒற்றன்.

"இருக்கட்டும்; அதனால் என்ன? மணி ஒலிக்கும் பெரிய யானைகளும் தேரும் குதிரையும் படைகளுமுடைய மற்றவர்களும் இருக்கிறார்களென்று அவர்களுக்குச் செருக்கு உண்டாகியிருக்கிறது. பகையுணர்ச்சி மூண்ட உள்ளத்தில் நிதானம் இராது. என்னுடைய படைப் பலத்தை அவர்கள் கருதவில்லை. அதனை நினைந்து அஞ்சாமல் சினம் மிகுந்து சின்னத் தனமான வார்த்தைகளைச் சொல்லித் திரிகிறார்கள். கிடக்கட்டும். அதற்குப் பதில் சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை."

அரசன் யோசனையில் ஆழ்ந்தான். படைத் தலைவரையும் மந்திரிமாரையும் வருவித்தான். ஆலோசனை செய்தான். "போர் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய நாட்டின் எல்லைக்குள்ளே அவர்கள் வருவதற்குமுன் நாம் எதிர்சென்று போராட வேண்டும்" என்று நெடுஞ்செழியன் வீரம் ததும்பக் கூறினன். படைத்தலைவர் உடம்பட்டார். மந்திரிமார் பின்னும் யோசனை செய்தனர்.

"இனி யோசனைக்கு நேரம் இல்லை. சிறுசொல் சொல்லிய வேந்தரைச் சிதையும்படி அருஞ்சமத்தில் தாக்கி அவர்களை அவர்களுடைய முரசத்தோடு ஒருங்கே சிறைப்படுத்துவதாக

உறுதி கொண்டு விட்டேன். இதோ ஆணை யிடுகிறேன்: கேளுங்கள் : அவர்களைச் சிறை செய்யாவிட்டால், என்னுடைய குடை நிழலில் வாழ்பவர் யாவரும் புகலிடம் காணுமல் வருந்தி எம் அரசன் கொடுங்கோலன் என்று கண்ணீருடன் நின்று பழிதூற்றும் பாவி ஆகக்கடவேன்!"

அரசன் முகம் சிவந்தது. அவனுடைய இளமை அழகிலே இப்போது வீரமுறுக்குத் தெளிவாகத் தோன்றியது. மந்திரி மார் வியப்புடன் அவனை உற்று நோக்கினர். 'பரம்பரைக்கு ஏற்ற வீரம்!' என்ற நினைவுதான் அவர்கள் உள்ளத்தில் தோன்றியது.

"இந்தப் பாண்டிநாடு தமிழ் வளர்ந்த இடம். பாண்டிய அரசர் புலவரைப் போற்றித் தமிழை வளர்த்தார்கள். மிகச் சிறப்புற்ற புலவர்கள் இந்த நாட்டையும் எங்கள் மரபினரை யும் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். நான் போர் செய்ய அஞ் சினேனானால் அந்தப் புகழ் என்னுவது? பகைவரை வெல்லா மற் போவேனானால் ஓங்கிய சிறப்பும் உயர்ந்த கேள்வியும் உடைய மாங்குடி மருதனார் முதலிய புகழ்பெற்ற புலவர் என் நாட்டைப் பாடாமல் ஒதுக்கும் நிலை வருவதாகுக! என் னுடைய குடிகளும், சுற்றத்தாரும் துன்புற்று வாட, என் னிடம் வந்து இரப்பவர்களுக்குக் கொடுக்க முடியாத வறுமை என்னை வந்து அடையட்டும்! இந்த வஞ்சினத்தைப் பாண்டிய அரசர் வழி வந்தவன் என்ற உணர்ச்சியோடு நான் சொல்லு கிறேன்."

அரசன் வஞ்சினங் கூறும்போது சிங்கம் முழங்குவது போல் இருந்தது. உடன்இருந்தோர் அஞ்சி நடுங்கினர். அரசன் தோள் துடித்தது; கண்கள் சிவந்தன; வார்த்தை ஒவ் வொன்றும் அழுத்தமாக வந்தது. "இனி இந்த உலகமே எதிர் நின்றாலும் போரை நிறுத்த முடியாது" என்று மந்திரிமார் உணர்ந்து கொண்டனர்.

போருக்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்யலாயினர்.

## 2

போர் மூண்டுவிட்டது. அரசனை நேரில் சென்று போரி டத் தொடங்கினான். "இத்தனை சிறுபிள்ளை போர்க்களத்

துக்குப் போயிருக்கிறானே!" என்று அச்சமும் வியப்பும் கொண்டனர் மக்கள்.

"நேற்று வரையில் கிண்கிணி கட்டியிருந்த இளங்கால் அது; இன்று போர் வந்த தென்று வீரக்கழலைக் கட்டிக்கொண்டான். முதல் முறையாகக் குடுமி களைந்த விழா சில நாட்களுக்கு முன்தானே நடந்தது. அந்தத் தலையில் குலத்துக்குரிய அடையாளமாகிய வேம்பையும், போர்ப் பூவாகிய உழிஞையையும் அணிந்துகொண்டான். சிறு வளைகளை அணிந்திருந்த கை, இப்போது வில்லைப் பற்றிக்கொண்டது. சிங்கக் குட்டி தாவுவது போலத் தேரில் ஏறி நிற்கிறானே; இப்படியும் வீரத் திருக்குழந்தை உலகத்தில் உண்டா? அவன் மாலை வாழட்டும்! அவன் பெருமை வாழட்டும்!" என்று புலவர்கள் வாழ்த்தினார்கள்.

போரில் பகைவராக வந்தவர் ஒருவர் இருவர் அல்லர். சேரனும் சோழனும் அவர்களுடன் ஐந்து சிற்றரசர்களும் சேர்ந்துகொண்டனர். தலையாலங்கானம் என்ற இடத்தில் போர் மிகக் கடுமையாக நடந்தது. இரண்டு பக்கத்திலும் படைப்பலம் மிகுதியாகவே இருந்தது.

இடைக்குன்றூர் கிழார் என்ற புலவர் இதைக் கேள்வியுற்றார். தலையாலங்கானத்துக்கும் சென்று பார்த்துவந்தார். பாண்டிய மன்னனுடைய வீரத்தை எண்ணி அவர் பிரமித்துப் போனார். "இந்த உலகத்தில் எத்தனையோ போர்கள் நடந்திருக்கின்றன. அவற்றைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். ஒரு மன்னனை மற்றொரு மன்னன் எதிர்த்துப் போர் செய்தலும் அதில் ஒருவன் தோல்வியுறுதலும் உலகத்து இயற்கை. ஆனால் இந்த மாதிரி நாம் கேட்டதே இல்லை. நெடுஞ்செழியனுடைய பெருமையையும் பலத்தையும் அறியாத ஏழுபேர் கூடிக்கொண்டு அவனை எதிர்க்கிறார்கள். அவனோ சலியாமல் முரசு முழங்க மேற்சென்று அடுகின்றான். இதைக் கதையிலும் கேட்டதில்லையே!" என்று வியந்து பாடினார்.

போர் நாளுக்கு நாள் மிகுதியாயிற்று. சிற்றரசர்களுக்குப் போரில் எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லை. சிலர் போரில் இறந்தனர். சிலர் பின்வாங்கினர். கடைசியில் யாரும்

கைவிடவே, சேர மன்னன் பலமிழந்து சிறைப்பட்டான். நெடுஞ்செழியன் செய்த கன்னிப்போரில் இத்தகைய வெற்றி கிடைத்ததைக் குறித்துப் பாண்டிய நாடே குதூகலித்தது.

இளமையில் போரில் ஈடுபட்டு விட்டமையால் அரசனுக்கு மேலும் மேலும் போரைப்பற்றிய சிந்தனை மிகுதியாயிற்று. படைகளைத் திரட்டிக் கொண்டே இருந்தான்.

## 3

அரசன் தன் பருவத்துக்கு மிஞ்சிய வெற்றி மிடுக்கினால் பூரித்திருந்தான். பெரும்போர் நிகழ்ந்ததால் நாட்டின் விளை பொருளுக்கு அதிகச் செலவு ஏற்பட்டது. போர் நின்றவுடன் நாட்டு வளம் பெருகும் துறையில் அரசன் கவனம் செலுத்த வில்லை. அரியணை ஏறியவுடன் வில்லைப் பிடிக்கவேண்டி நேர்ந் தமையால் நாட்டைப்பற்றி அப்போது சிந்திக்க இயலவில்லை. போருக்குப்பின் அதில் கிடைத்த வெற்றியிலே மயங்கியிருந் தமையால் பின்பும் அதைப்பற்றிய நினைவு எழவில்லை.

ஏரிகளும், குளங்களும் மேடிட்டிருந்தன; கரைகள் உடைந்து பயனில்லாமல் கிடந்தன சில. நீர் வளம் இல்லா மையால் நிலவளம் குறைந்தது. விளைவு குறைந்தது. பஞ்சம் வந்துவிடுமே என்ற அச்சம் பாண்டி நாட்டு மக்களுள்ளத்து எழுந்தது.

அரசன் படை சேர்ப்பதை விட்டு, வீர விளையாட்டை நிறுத்தி, நாட்டின் நிலையை உணர்ந்து வளம்படுத்த வேண்டும் என்று சொல்வார் யாரும் இல்லை. மந்திரிமார் சொல்ல அஞ் சினர். இளம் பருவம் உடையவனானாலும் கோபத்திலும் வீரத்திலும் மிகமிக ஓங்கி நிற்பவன் என்பதை அவர்கள் தம் கண்முன்னே பார்த்தவர்கள்.

இந்த நிலை நீடித்தால் பாண்டிநாட்டில் நிச்சயமாகப் பஞ்சம் வந்துவிடும் என்பதை அறிந்தனர் மந்திரிமார். அரச னுக்கு யோசனை கூறவோ அஞ்சினர். என்ன செய்வது என்று ஏங்கி நின்ற தறுவாயில் சமயசஞ்சீவிபோல ஒரு புலவர் வந்தார். குடபுலவியனார் என்பது அவர் பெயர். தமிழ்ப் புல வர்கள் பொதுவாகவே யாருக்கும் அஞ்சாதவர்கள்; நியாயத்

தையே எடுத்துரைப்பவர்கள். அவருள்ளும் குடபுலவியனார் நயமாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர். அவரிடம் அமைச்சர்கள் தம் கருத்தைக் கூறி, "எப்படியேனும் நீங்கள் மனம் வைத்து அரசரை வழிக்குக் கொண்டுவரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். "என்னால் இயன்றதைச் செய்வேன்" என்று அவர் உடம்பட்டார்.

## 4

"தலையாலங்கானத்துச் செருவைப் பற்றி இன்று உலகத்தில் பாராட்டாத புலவர்களே இல்லை" என்றார் குடபுலவியனார்.

"ஆம் பெரிய போர்தான். நான் பட்டத்துக்கு வந்தவுடன் முதல் வேலை இந்தப் போரில் வெற்றி பெறுவதாகி விட்டது" என்றான் நெடுஞ்செழியன்.

"எல்லாம் உங்கள் குலத்தின் பெருமை. நாவலந்தீவு முழுவதும் ஒரு குடைக்கீழ் ஆண்ட உரவோர் பாண்டிய மன்னர். அவர்களுடைய மரபில் வந்த அரசர்பிரான் கோடி கோடி ஆண்டுகள் வாழவேண்டும்."

"அவர்கள் பெருமையே பெருமை! பாண்டி நாட்டின் பெருமை வேறு எந்த நாட்டுக்கு இருக்கிறது? மதுரை மாநகரின் சிறப்பை வேறு எங்கே பார்க்க முடியும்? பகையரசர் என்னதான் முயன்றாலும் இந்த நகருக்குள்ளே புகமுடியுமா?"

"ஆழமான அகழியையும், உயரமான மதில்களையும் பெரியோர்கள் அமைத்திருக்கிறார்கள். இத்தகைய வளம் பெற்ற பழைய நகரம் வேறு எங்கும் இல்லை என்பது உண்மை. இந்த நகரில் வாழ்ந்த அரசர்களெல்லாம் இம்மை மறுமைப் பயன்களைக் குறைவின்றிப் பெற்றவர்கள். வீரத்தில் சிறந்தவர்கள். அதனால் புகழைப் பெற்றவர்கள்."

"அவர்கள் சென்ற நெறியிலே நானும் செல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்."

"அப்படியே ஆகட்டும். புண்ணியமும் வெற்றியும் புகழும் ஒருங்கே கிடைப்பதற்கு மூல காரணம் ஒன்று உண்டு

அதனை உடையவர்கள் மறுமையுலகத்துச் செல்வமும், அர சரை வென்று நிற்கும் திறனும் நல்லிசையும் பெறுவார்கள்."

"படைப்பலத்தையா சொல்கிறீர்கள்?"

"அல்ல, அல்ல. யானை முதலிய படைகள் அல்ல; வேறொரு படை. உழுபடை. படைகளுக்கெல்லாம் உண வளிக்காவிட்டால் அவை போரிட முடியுமா? உடம்பிலே உயிர் தங்கியிருக்கும்படி செய்தாலல்லவா போரிட முடியும்?"

"நான் படைவீரர்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத் தேன். அவர்களுக்கு இனியும் குறைவின்றிக் கொடுக்கக் கட் டளை பிறப்பித்திருக்கிறேன்."

"நல்ல காரியந்தான். உண்டி கொடுத்தவரே உயிர் கொடுத்தவராகிறார்கள். உணவு இல்லாவிட்டால் உடலும் இல்லை. ஆனால் அந்த உணவு எப்படி வருகிறது? அது தானே கிடைத்துவிடாது. நிலமும் நீரும் சேர்ந்தால் உணவு கிடைக் கும்; உணவுப் பொருள் விளையும். அந்த இரண்டையும் சேர்ப்பவர்களே உடம்பையும் படைத்தவர்களாகிறார்கள்."

"நம்முடைய நாட்டில் விளை நிலத்துக்குக் குறை வில்லையே?"

"உண்மைதான். ஆனாலும் நிலம் மாத்திரம் இருந்தால் போதுமா? எவ்வளவுதான் பரந்த நிலங்கள் இருந்தாலும், விதைத்துவிட்டு வானத்தைப் பார்க்கும்படியாக இருந்தால் அந்த நிலங்களால் உடையவனுக்கு என்ன பயன்? அரசே, சற்றுக் கவனிக்கவேண்டும். படை இருக்கலாம்; ஆனால் அதற்கு என்றும் கொடுத்து வர உணவு வேண்டும். நிலம் இருக்கலாம். ஆனால் அதை விளையும்படிச் செய்ய நீர் வேண் டும். வானத்திலே நீர் இருக்கிறதென்று நம்பியிருந்தால் நமக்கு வேண்டியபொழுது அது வழங்காது. அது வழங்கும் போது நாம் சேமித்து வைக்கவேண்டும். நிலம் பள்ளமாகக் குழிந்திருக்கும் இடங்களில் வேண்டிய கரை கட்டியும், ஏரி குளங்களைக் கரை திருத்தியும் பாதுகாக்க வேண்டும். அப் படி நீரைத் தடுத்தால் நாடு வளம் பெறும். நீரைத் தேக்கின வர் யாரோ அவரே புகழையும் தேக்குவார்."

அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான். ஏரி குளங்களைச் சீர் திருத்த வேண்டும் என்று எப்பொழுதோ யாரோ சொல்லிக் காதில் விழுந்ததாக நினைவு வந்தது. அமைச்சர் சொன்னதைத் தான் பாராமுகமாகக் கேட்டிருந்தான். இப்போது அதையே அழுத்தந் திருத்தமாகப் புலவர் சொன்னார். படிப்படியாகச் சொன்னார். அவன் மனத்தில் அது உறைத்தது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர். நீரையும் நிலத்தையும் சேர்த்தவர்களாலேயே உடம்பையும் உயிரையும் சேர்த்துவைக்க முடியும். வானம் நம்முடைய விருப்பப்படி பெய்யாது. நீரைத் தேக்கினவர்களே புகழைத் தேக்குவார்." இந்தப் பொன்னான வாக்கியங்கள் ஒவ்வொன்றாக அவன் உள்ளத்தில் கணீர் கணீர் என்று மணியடிப்பது போல் மீட்டும் ஒலித்தன.

"புலவர் பெருமானே, நானும் நீரைத் தேக்கிப் புகழைத் தேக்க முயல்வேன்" என்ற வார்த்தைகள் அரசன் வாயிலிருந்து வந்தபோது அங்கிருந்த அமைச்சர் முகங்கள் என்றும் இல்லாத மலர்ச்சியைப் பெற்றன.

# 3. ஔவையும் அதிகமானும்

[திரு. K. S. நாகராஜன், M. A.]

ஔவை மூதாட்டியாரை அறியாதவர் எவரும் இலர். இளையர் முதல் முதியர் வரை இவ்வம்மையாரை அறிந்தவர்களே ஆவர். இங்ஙனம் அனைவரும் அறியும் அளவுக்குத் தம் புலமை தோன்றப் பல பாடல்களை ஔவையார் பாடியுள்ளார். ஏதேனும் இனிய தொடர்களை வழங்கினாலும், அவை ஔவையாரால் செய்யப்பட்டவை என்று கூறுவது இன்னமும் தமிழ் நாட்டில் மறைந்தபாடில்லை. ஆனால் இவ்வம்மையாரைப் பற்றிப் பல மாறுபட்ட வரலாற்றுக் குறிப்புக்கள் உள. ஔவையார் ஒருவரா அல்லது இருவரா அல்லது மூவரா என்ற கொள்கை இன்னும் பலர் உள்ளத்தில் படிந்த கருத்தேயாகும். இவ்வம்மையார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் இருந்தவர் என்று ஒருசாராரும், இன்னும் பிற்பட்ட காலத்தில் இருந்தவர் என்று ஒருசாராரும், சங்க காலத்தில் திகழ்ந்து அரசர்களின் அவைகளை அலங்கரித்து வந்தவர் என்று ஒரு சாராரும் கருதுவர்.

சுந்தரர் கயிலைக்கு வெள்ளையானை மீது ஏறிச் சென்ற போது, அவரது உயிரனைய நண்பர் சேரமான் பெருமாள் நாயனாரும் தமது குதிரைமீது ஏறி, நம்பியாரூரருடன் புறப்பட்டார். தாம் பாடிய திருக்கயிலாய ஞான உலா என்னும் நூலை அரங்கேற்றச் சேரமான் செல்வதை ஔவை மூதாட்டியார் அறிந்தார். தாமும் அவ்விழாவில் கலந்து கொள்ள விருப்பங்கொண்டு புறப்பட விநாயகப் பெருமானை விரைவாகப் பூசித்தார். அவருடைய உள்ளக்கருத்தை உணர்ந்த பிள்ளையார் "ஔவையே, நீ இவ்வளவு விரைவாகப் பூசைசெய்ய வேண்டா, அமைதியாகச் செய்க. அவ்விருவர் கயிலையை அடையுமுன் உன்னை அவ்விடம் சேர்க்கிறேன்" என்று அருளிப் போந்தார். அங்ஙனமே ஔவையாரும் அமைதியாக இருந்து பூசையைச் செய்து முடித்தார். அதன் பின்னர் பிள்ளையார் தம் தும்பிக் கையால் ஔவையாரைத் தூக்கித் திருக்கயிலையில் வைத்து விட்டனர். தமக்கு முன் ஔவையார் வந்திருப்பதைக் கண்ட சுந்தரரும் * சேரரும் வியந்து பாராட்டினர். அவ்வமயம்

மூதாட்டியார் தாம் பிள்ளையாரைப் பூசித்துப் பயனடைந்த வரலாற்றை அவர்கட்கு எடுத்துரைத்தார் என்பது விநாயகர் அகவல் என்னும் நூலால் அறியக் கிடைக்கிறது.

ஒட்டக்கூத்தர் வரலாற்றிலும் ஔவையார் காணப்படுகின்றனர். அதாவது ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும் குமார குலோத்துங்கனும் ஒன்றுகூடி வந்து கொண்டிருக்கையில், வழிநடைக் களைப்பால் ஒரு திண்ணையில் அமர்ந்திருந்த ஔவையார் அம்மூவரையும் கண்டார். அப்போது அவர் தம் இரு கால்களையும் நீட்டிக் கொண்டிருந்தனர். முதலில் அரசன் மட்டும் அவரது கண்ணுக்குத் தென்பட்டான். அவனைக் கண்டதும் ஔவையார் தம் வலக்காலை மடக்கிக் கொண்டார். அதன்பின் புகழேந்தியாரைக் கண்டவுடன் தம் இடக்காலை மடக்கிக் கொண்டார். இறுதியில் ஒட்டக்கூத்தரைக் கண்டபோது மடக்கிய இரு கால்களையும் நீட்டிக் கொண்டார். அதுகண்ட ஒட்டக்கூத்தர் "அம்மையே! இங்ஙனம் என்னை நீர் இழிவு செய்யலாமோ? நானும் ஒரு புலவன் அல்லனோ?" என்று கேட்டார். "ஒட்டக்கூத்தரே! மூன்றுமுறை பிறைச்சந்திரனைக் குறிக்கும் சொல் வருமாறு இப்போதே நீரும் புகழேந்தியாரும் பாடவேண்டும். அப்படிப் பாடினால் உம் இருவர் சிறப்பும் சமமானவை என்பது புலப்படும்" என்று ஔவையார் கூறினர். உடனே, புகழேந்தியார் ஒரு பாடலைத் தொடங்கி மும்முறை பிறை என்னும் சொல் வருமாறு பாடி முடித்தார். ஒட்டக்கூத்தர் பாடத் தொடங்கினார். எவ்வளவு முயன்றும் அப்பாட்டில் இருபிறைகளே அமையப் பெற்றன. அப்போது ஔவையார், "ஒட்டா! ஒரு மதிகெட்டாய்" என்று கூறியதாக ஒரு கதை வழங்கப்படுதலின், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் காலத்து இருந்ததாக ஓர் ஔவை இலக்கிய உலகிலே உலாவுகின்றாள்.

ஒரே ஔவையாராயினும் ஆகுக; அன்றிப் பல ஔவையாராயினும் ஆகுக. உண்மை எதுவாயினும், ஈண்டுப் பேசப்புகும் ஔவையார் சங்க காலத்திருந்த ஔவையாரே ஆவர். இவ்வம்மையாருடைய பிறப்பு, வளர்ப்பு முதலியவற்றைப் பற்றிப் பற்பல கருத்துக்களும் கதைகளும் வழங்குகின்றன. அவற்றை நாம் ஆராய வேண்டியதில்லை. அவரது புலமைப் பெருக்கைக் காண்பதே நமது குறிக்கோளாகும்.

ஔவையாரது பாடல்கள் புறநானூறு, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி முதலிய நூல்களில் ஔவையாரது சொற்கள் மேற்கோள்களாக அமைந்துள்ளன. இவையே அன்றிப் பல தனிப்பாடல்களும் அவரால் பாடப்பட்டுள்ளன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை முதலிய சிறு நூல்களும் அவர் பெயரால் உலவி வருவதை எவரும் மறுக்க இயலாது. இப்பிற்கால நூல்களைப்பற்றியும், தனிப்பாடல்களையும் ஆராயாது, பழம் பாடல்களாக புறநானூற்றிற் காணப்படும் சிலவற்றை ஆராய்வதுடன் அமைவோமாக.

புறநானூற்றில், அதிகமான் நெடுமான் அஞ்சியைப்பற்றி இவர் பாடியனவாகப் பல பாடல்கள் உள்ளன. ஆகவே, அவனுக்கும் இவ்வம்மையாருக்கும் இருந்த நட்புரிமை நன்கு புலனாகிறது. அதிகமான் என்பவன் கடைஎழுவள்ளல்களில் ஒருவன்; போரில் பேர் பெற்ற வீரன்; மழவர் என்னும் வீரர் கூட்டத்தின் தலைவன்; சேர மன்னனுக்கு உறவுமுறை உடையவன்; பனை மாலை சூடும் பெருமை பெற்றவன்; வெட்சிப்பூவும் வேங்கைப்பூவும் அணிந்தவன்; மேலும் அவன் பல அரசர்களை வென்று அவர்களுடைய நாடுகளைத் தனதாக்கிக் கொண்டவன்; தகடூருக்குத் தலைவன்; குதிரை மலைக்கு உரியவன். இவனுடைய முன்னோர் விண்ணுலகிலிருந்து கரும்பை இவ்வுலகத்திற்குக் கொணர்ந்தவர்களாவர். இவனது மகனை பொகுட்டெழினி என்பவன் சிறந்த வீரன்.

அதிகமானின் வலிமையைப் பலபடப் புகழ்ந்து பாடியுள்ளார் ஔவையார். ஒருமுறை அதிகனோடு போர் புரிய முனைந்து நின்றான் திருமுடிக்காரி. அப்போது அவனையும் அவனுடைய வீரர்களையும் நோக்கி, "வீரர்களே! நீங்கள் அதிகமானோடு போர் தொடுத்தற்கு முன் சிறிது சிந்தித்துப் பாருங்கள். எங்கள் அதிகமான் மிக்க திண்மையும் வேகமும் உடையவன். அவனோடு போர் புரிய உமது படைகள் போதுமென எண்ணுதீர். அவன் உங்களைக் காணுமுன்னரே, அமர்க்களம் விட்டு அகலுங்கள். இன்றேல் நீங்கள் அழிவுறுவீர்கள்" என்று ஔவையார் அறிவுறுத்தினார். ஆயினும் அவ்வீரர்கள்

போர் புரியத் துணிந்தனர். அங்ஙனம் துணிந்து நின்ற வீரர் களிடத்து இரக்கம் கொண்ட அம்மையார், "எங்கள் அஞ்சி யின் வாட்கள் பகைவர் தசையில் நன்கு பாய்ந்து உருச்சிதைந்து காணப்படுகின்றன. அவனது வேல்கள் அரண்களை வென்று கூர்மை மழுங்கி நிலைகெட்டுள்ளன. அவனது யானைகள் பகை வரின் கணைய மரத்தால் தடுக்கப்பட்ட கதவுகளைத் தாக்கி அரணை அழித்துள்ளன. குதிரைகள் பகைவர் மார்பில் பாய்ந்து குருதி படிந்த குளம்பினை உடையன. இங்ஙனம் முப் படைகளின் வீரம் அமையுமாயின் அப்படைகளின் தலைவனை அஞ்சியின் வீரத்தினை நீங்கள் அறியீரோ? ஆகவே, அவனோடு போரிடுதல் அரிது. உம்நாடு உம்மிடத்தே இருக்கவேண்டுமா யின், அவனுக்குத் திறையினை அளந்துவிடுங்கள். அங்ஙனம் செய்யாது போர் புரிவீராயின் நீங்கள் மடிதல் திண்ணம். நம் உரிமை மகளிரைப் பிரிதல் உறுதி. நன்கு சிந்தித்து முடிவுசெய் வீராக" என்று கூறினர்.

ஒருமுறை சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையும் மலையமானும் அதிகனை எதிர்த்தனர். அவனுடைய அரணை முற்றுகை இட்டனர். தன் அரண் எளிதில் பகைவரால் கைப் பற்ற இயலாத தன்மையது என்று உணர்ந்த அதிகன், தன் பகைவர்களை எதிர்க்காது வாளாவிருந்தான். அதிகன் அங்ஙனம் இருத்தல் அவன் வீரத்திற்கு ஒவ்வாது என்று கருதிய ஔவையார், அவனை அணுகி அவனுடைய வீரத்தை நினைவூட்டினர். "மழவர் பெருமானே! புலி சீறின் அதன் முன் மான் நிற்குமோ? சூரியன் முன் இருள் நிற்குமோ? அதேபோல், உன்முன் பகைவர் நிற்பரோ?" என்று ஔவை யார் கூறக்கேட்டதும், அதிகமான் சீறிபெழுந்து போருக்குப் புறப்பட்டான். போர்க்களத்தே சென்ற அவன் பகைவர்களை வெட்டி வீழ்த்தி வெற்றி கொண்டான். அஞ்சியின் வீரர்களோ எனில், சிறுகோலுக்கு அஞ்சாத அரவு போன்ற சீற்றத்தார் என்று ஔவையார் புகழ்ந்து பாடியுள்ளார்.

சான்றோர்கட்குச் சினம் வருதல் அரிது; ஒருகால் அச் சினம் வரினும் அது விரைவில் தணியும் இயல்புடையது. இவ் வுண்மையை ஔவையாரது வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சி புலப் படுத்துகிறது. அதிகமான் நெடுமான் அஞ்சியும் ஔவையா

ரும் மனமொத்த நண்பர்கள் என்பது முன்னரே கூறப்பட்டது. ஔவையார் ஒருகால் அதிகமானைக் காணச் சென்றார். அதிகன் புலவர்க்குப் பரிசில் தருவதில் இணையற்றவன். அதிலும் ஔவையாருக்குப் பரிசில் தருவதற்குச் சிறிதேனும் தயங்குவானா? ஆயினும், அவன் பரிசில் கொடாது காலம் தாழ்த்தினன். காரணம் யாதெனில், பரிசில் தந்தால் ஔவையார் தன்னை விட்டு நீங்கிப் பிறிதொரு மன்னரின் அவைக்குச் சென்று விடுவாரே என்ற எண்ணமேயாகும். ஆனால் இக்காரணத்தை அறியாத ஔவையார், பரிசில் கொடாது தம்மை அவமதித்தானென்று கருதி அஞ்சியைச் சினந்துகொண்டார்; அச்சினத்தை அதிகனது வாயில் காப்போனிடம் காட்டினார். இதனை அறிந்த அதிகன் ஔவையாரிடம் தன் கருத்தை எடுத்துக் கூறி அவர் மன்னிப்பை வேண்டினான்; மேலும் அவருக்குச் சிறந்த பரிசுகள் பல தந்து உபசரித்தான். ஔவையாரும் அவற்றை ஏற்று மகிழ்ந்தார். "மனமே! வருந்தாதே. நம் அஞ்சியை என்னவென்று எண்ணினாய்? அவனிடம் எத்தனை முறை சென்றாலும், முதன்முறை கண்டபோது எத்துணை அன்புடையவனாய் ஏற்று உபசரிக்கின்றானோ அத்துணை அன்புடனே வரவேற்றுப் பரிசில் ஈவான். புலவர்க்குத் தருவதில் சலியாதவன் அஞ்சி. யானைக் கோட்டில் வைத்த உணவு அதன் வாயில் செல்லுதல் எங்ஙனம் தவறாதோ அதே போல அவன் பரிசில் தருவதும் தவறாது நடைபெறும். ஆகவே, அவன் மேன் மேலும் வெற்றி பெற்று இன்பமாக வாழ்வானாக" என்று அம்மையார் வாழ்த்தினார். ஔவையாருக்கு இருந்த சினம் தணிந்து அவர் பாடிய திறத்தினை நோக்கும்போது, "நீர் கிழிய எய்த வடுபோல மாறுமே சீர் ஒழுகு சான்றோர் சினம்" என்னும் முதுமொழி நம் நினைவிற்கு வருகின்றது.

ஔவையார் நிலவுலகில் நெடுநாள் உயிர் வாழ்ந்தமைக்குக் காரணமான செய்தியை அறிதற்குப் புறநானூறு பெருந்துணை செய்கிறது. ஒருநாள் அதிகமான் தன் நகருக்கு அருகே இருந்த ஒரு மலைக்குச் சென்றான். அம்மலைச் சாரலில் ஒரு பெரும் பிளவு தென்பட்டது. அப்பிளவில் ஒரு கரு நெல்லிக்கனி பழுத்து விளங்கிக்கொண்டிருந்தது. அக்கனியின் சிறப்பியல்பை அதிகன் நன்குணர்ந்தவன். அக்கனியை உண்பார்

நீண்ட ஆயுள் பெறுவர் என்னும் உண்மையை உணர்ந்த அதிகன் மிக முயன்று அக்கனியைப் பறித்தான். ஆனால் அவன் அதை உண்ணவில்லை. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனை அவன் அக்கனியை ஔவையாருக்குத் தரும்பொருட்டு ஊருக்குக் கொணர்ந்தான். "நாம் இதைத் தின்று நெடுநாள் வாழ்ந்தாலும் இவ்வுலகு எவ்வாறு பயனடைய முடியும்? இதை ஔவைப் பிராட்டியார் உண்பாராயின், அவர் நீண்ட காலம் வாழ்ந்திருந்து தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும், அரிய தொண்டாற்றுவர். ஆகவே, அவருக்கு இக்கனியைத் தருவதே சாலச் சிறந்தது" என்று எண்ணியது அவனுள்ளம். அவ்வாறே ஔவையாரைக் கண்டு அக்கனியை அளித்தான். அவரும் அதை உண்டு மகிழ்ந்து அவனை மனமாரப் பாராட்டினார். "போர்த்தொழிலில் வல்ல அதிகனே! ஒரு மலைச்சாரலில் உள்ள ஒரு பிளவில் பெறுதற்கரிய ஒரு நெல்லிக்கனியைப் பெற்றும், அதனை உண்டால் நெடுநாள் உயிர் வாழலாம் என்று அறிந்தும், என் வாழ்நாள் நீடிப்புக் கருதி எனக்கு அதை ஈந்தனை. ஆகவே சிவபெருமானைப்போல நீ என்றென்றும் வாழ்வாயாக" என்பது அப்போது அவர் பாடிய பாட்டின் பொருள். அப்பாடல் பின் வருமாறு :

"போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே! தொல்நிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி......
சாதல் நீங்க எமக்கீந்தனையே"

இவ்வரலாற்று உண்மையினைச் சிறுபாணாற்றுப் படை என்னும் நூலில் காணலாம். அங்கு அதிகனைப்பற்றிக் கூறுமிடத்து "அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த அதிகன்" என்று புலவர் பாராட்டுகின்றார்.

ஒருமுறை அதிகன் பொருட்டு ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றனர். அதிகன் காலத்தில் காஞ்சியம் பதியில் தொண்டைமான் அரசுபுரிந்து வந்தான். அதிகனது ஆற்றலை உணராத அவன் தன் படைகளைத் திரட்டிக்கொண்டு போர் தொடுக்க எண்ணினான். இதனை அறிந்த அதிகமானுக்

குத் தன் பகைவன்மீது சினந்தோன்றவில்லை. அவன் அழிந்து போவானே என்ற இரக்க உணர்ச்சி மேலிட்டது. உடனே ஒளவையாரை அழைத்துத் தன் பகைவனிடம் தூது அனுப்பினான். தொண்டைமானிடம் சென்று தன் ஆற்றலை அறிவித்து, வீணே போர்வீரர்களை மடியச் செய்வதை ஒழித்து, அவனுக்கு நற்புத்தி புகட்டுமாறு அதிகன் ஒளவையாரை வேண்டினான். மூதாட்டியாரும் அவ்வாறு செய்ய உடன்பட்டனர்.

ஒளவையைக் கண்ட தொண்டைமான் அவருக்கு நல்வரவு கூறி மகிழ்ச்சியுடன் வரவேற்றனன்; பின்னர் அவரை அழைத்துக்கொண்டுபோய்த் தனது ஆயுதசாலைகளைக் காண்பித்தனன். அவ்வாறு செய்தால் தன் படைப் பலத்தைப் புலவர் அறிந்து கொள்வார் என்பது அரசன் கருத்து. ஆயுதசாலைகளை கண்ணுற்ற ஒளவையார், "தொண்டையர் கோவே! உனது படைக்கலங்கள் யாவும் புத்தம் புதியனவாக உள்ளன. உறையினின்று எடுக்கப்படாமல் உள்ளேயே இருக்கின்றன. நன்கு நெய் தடவப்பட்டு, கூர் மழுங்காது, பீலி அணியப்பட்டு விளங்குகின்றன. ஆனால் அதிகமானுடைய ஆயுதங்கள் பகைவரது உடலில் பாய்ந்து இரத்தக்கறை படிந்து, கூர் மழுங்கி, கைப்பிடி தளர்ந்து, பழுதுபார்த்து மீண்டும் சரிப்படுத்த வேண்டிக் கொல்லனது உலைக்களத்திற்குச் சென்றுள்ளன" என்று கூறினார். தொண்டமான் போர்க்களம் சென்றறியாதவன் என்பதையும், அதிகன் போர்செய்து வெற்றிகொள்ளும் செம்மல் என்பதையும் விளக்கும்வகையில் தொண்டைமானைப்புகழ்வது போல இகழ்ந்தும், அதிகமானை இகழ்வதுபோலப் புகழ்ந்தும் பேசியது எவ்வளவு வியத்தற்குரியது! இக்குறிப்பை எளிதில் உணர்ந்த தொண்டமான் தன் செருக்கு ஒழிந்து, போர்செய்ய வேண்டும் என்னும் தன் கருத்தை விட்டொழித்தனன்.

இவ்வாறெல்லாம் ஒளவையாரால் புகழப்பட்ட அதிகமானுடைய வாழ்வுக்கும் ஒரு முடிவு வந்தது. "முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒருபிடி சாம்பலாய் வெந்து மண்ணாவது திண்ணம்" என்னும் விதிக்கு அதிகன் விலக்காக முடியுமா? மலையமானோடும், சேரமான் கணைக்கால் இரும்பொறையோடும் செய்த போரில் அதிகமான் உயிர் நீத்

தான். அவனுடைய முடிவைக் கேட்ட ஔவையார் உள்ளம் துடித்தார்; அவனுடைய ஈகையைக் குறித்தும் வீரத்தைக் குறித்தும் எண்ணி எண்ணி வருந்தினர். மதிப்பிற்குரிய பொருள் சிறிதளவில் கிடைப்பின், அதனை அவன் நுகராது தனக்குக்கொணர்ந்து தருவான் என்றும், மிகுதியாகக் கிடைப்பின் பலர்க்கும் ஈந்து மிகுந்ததை அவன் கொள்வான் என்றும் அவனுடைய ஈகையை ஔவையார் பலபடப் பாராட்டியுள்ளார். அவன் மார்பை ஊடுருவிச் சென்ற அம்பு தம்போன்ற புலவர், பாணர் ஆகியோரது பாடும் நாவையும், ஏற்கும் பாத்திரத்தையும் ஊடுருவியது என்று மூதாட்டியார் கூறியுள்ளார். "இனி பாடுவாரும் இல்லை, பாடுவார்க்கு ஒன்று ஈவாரும் இல்லை" என்று மனமுருகிப் பாடியுள்ளார் ஔவையார். அதிகனது உடல் தீயில் இடப்பட்டபோது, "அவன் உடலைத் தீ உண்ணும். ஆயினும் அவனுடைய புகழ்உடல் சூரியனது ஒளிபோல எக்காலத்தும் நிலைத்து நிலவுவதாக" என்று அவர் பாடி அமைந்தார்.

# 4. இயற்கைப் பாட்டு

[டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், M.A., M.O.L., (Ph.D.)]

புலவர்கள் இயற்கைக் காட்சிகளைக் கண்டுகண்டு களிக்கும் இயல்புடையவர்கள். இயற்கையின் திருக்கோயிலாக 'மண்ணெழுந்து விண் காட்டும்' மலைகள் அவர்கள் உள்ளங் கவரும் ஆற்றல் உடையவை. ஆதலால் கபிலர்போன்ற பெரும் புலவர்கள் குறிஞ்சி வளத்தை மிகுதியாய்ப் பாடியுள்ளனர்.

புலவர் பெருமக்கள் நேரில் கண்டறிந்த காட்சிகளை உள்ளத்தே பதித்துப் பாடுதலும் உண்டு; கேட்டறிந்த காட்சிகளைக் கற்பனை செய்துகொண்டு பாடுதலும் உண்டு; ஒரு நிகழ்ச்சியின் முடிவாகக் கண்ட சிறுபகுதியைக் கொண்டு நிகழ்ச்சி முழுமையும் உய்த்துணர்ந்து பாடுதலும் உண்டு. அவ்வாறு பெருங்குன்றூர் கிழார் பாடிய பாட்டொன்று அகநானூற்றில் உள்ளது.[1]

விடியற்காலையில் புற்று உள்ள ஒரு வழியாகப் புலவர் சென்றார். அவ்வழி இதற்குமுன் சிலமுறை சென்று பழகியதே. ஆனாலும் அன்று காலையில் புலவர் அந்தப் புற்று வேறுபட்டிருத்தலை உணர்ந்தார்; சிறிது சிதைவு கண்டார்; மண் குறைப்பட்டுத் தோன்றுவதை அறிந்தார்; அதன் அருகே ஒரு பாம்பு உடல் கிழிந்து செத்துக் கிடப்பதைக் கண்டார். மலையில் பழகினவர்களுக்கு இவற்றின் காரணமெல்லாம் தடையின்றி விளங்கும். ஆதலால் புலவர் எளிதில் காரணம் உணர்ந்தார்; இரவு நடந்த காட்சியைக் கற்பனை யுலகில் காண முயன்றார். காட்சி அமைந்தது :

அப்புற்றினுள் ஈசல்கள் வளர்ந்திருந்தன. அவற்றின் புற்றாஞ் சோறும் உடன் கிடந்தது. புற்றின் உட்புறத்தை ஆராய்ந்தவர் யார்? அங்கே சிதல்கள் அமைத்த அமைப்பு எத்தகையதோ? அவற்றின் அரிய முயற்சியால் எழுந்த கோபுரம் போன்ற செந்நிறப் புற்றைக் கண்ட பாம்பு அதனிடம் ஒதுங்க வந்தது; ஒதுங்குமிடமாகப் பெற்ற புற்றையே வாழ்மனையாகக் கொள்ளத் தொடங்கிற்று. சிதல்களின் பெரு முயற்சியாலான புற்று, ஒரு முயற்சியும் இல்லாத

பாம்பிற்கு உயர்ந்த வீடாயிற்று. ஆனால் அது கொடுமை அல்லவா? முயற்சி ஒருவரது! பயன் மற்றொருவரது! உயர் திணையாகிய மக்களிடத்து இத்தகைய கொடுமை இயல்பாகக் காணப்படுகிறது; பொருளால் வலியாரும் அறிவால் வலியாரு மாக இருதிறத்தாரும் கூடி இயற்றும் சட்டங்கள் முயற்சிக்கும் பயனுக்கும் தொடர்பு நேராதவாறு காக்கின்றன. ஆனால் அஃறிணை உயிர்களிடத்தும் இத்தகைய அநாகரிக முறை காணப்படல் வேண்டுமோ? வலியார் வலிமையால் மெலியார் அடங்குதல் போல, பாம்பின் வீற்றிருக்கையால் புற்றினுள் கிடந்த உயிர்கள் எப்பாடு பட்டனவோ? மெலியார் என்று இரங்கத்தக்காரிடையே புரட்சி செய்யும் பெரியோர் தோன்று கின்றனர். இத்தகைய நிகழ்ச்சி உலகில் அஃறிணை உயிர்க ளிடத்தும் நிகழ்கின்றது. புற்றின் புரட்சி ஒரு நாள் நள்இரவில் நிகழ்ந்தது. புரட்சி நடத்தியவர் கரடியார். கரடியின் பெரிய கைகளில் அமைந்த கூரிய நகங்களே புரட்சிப் படைகள். புற்றி னுள்ளே பாம்பு இருந்தது. அதற்கஞ்சிய உயிர்கள் இன்னும் உட்பகுதியில் அடங்கிக் கிடந்தன. கரடி வந்தது; படை கொண்டு வந்தது. அதற்கு விருப்பமான உணவாகிய புற்றாஞ் சோறு புற்றினுள் கிடைக்கும் என்று கரடி நாடி வந்தது. அது நாடியது ஒன்று; அதற்காகச் செய்த செயலே புரட்சியாக முடிந்தது; கூரிய நகங்களையுடைய கையைப் புற்றினுள் விட்டது; அங்கே கிடைத்தவற்றை நகங்களால் கிளறியது. இருந்த பாம்பு நகங்களுக்கிடையே அகப்பட்டது. பாம்பின் மெல்லிய உடல் கூரிய வலிய நகங்களை எதிர்த்து என்ன செய்ய முடியும்? பாம்பு சிதைந்து செத்தது. நகங்கள் பாய்ந்த இடங்களில் குருதி வடிந்து கறைபடிய, தன் கையோடு பாம் பின் உடலும் வெளிவர, அதனை உதறிவிட்டுத் தன் உணவைத் தின்று சென்றுவிட்டது கரடி.

கிளறிக் கிடந்த புற்றும், செத்துக்கிடந்த பாம்பும் விடியற்காலையில் புலவர் கண்ணில் பட்டன. புலவர் எண்ணி னார்; அறிந்தார்; இரவு நடந்ததை அவ்வாறே கற்பனை யுலகில் காணவைத்தார்.[2]

மற்றொரு நாள் அண்மையிலுள்ள மலைமீதேறிச் செல்லும்போது புலவர் வேறு சில கண்டார். மலையடுக்கத்தில்

பலாமரங்கள் நெருங்கி வளர்ந்து நின்றன. மூங்கில்கள் ஓங்கி வளர்ந்து நின்றன; காற்றால் ஒன்றோடொன்று தாக்கி ஒலித்தன. புலவர் வழியெல்லாம் இரத்தக்கறை படிந்திருத்தலைக் கண்டார்; ஆங்காங்குச் சில தசைத்துண்டுகளுடன் கூடிய எலும்புகளும் கண்டார்; சிதைந்த தலையும் கண்டார்; அதனை உற்று நோக்கிக் காட்டுப் பன்றியின் தலை என்று அறிந்தார்; முந்திய இரவு புலி ஒன்று பன்றியைக் கொன்று பலாமரச் செறிவின் வழியே இழுத்துச் சென்றிருக்க வேண்டும் எனத் தெளிந்தார்.[3]

அந்தக் காட்சியை மறவாதவராய்ப் புலவர் அப்பால் சென்றார்; அங்கே வாழைமரங்களும், சுரபுன்னை மரங்களும் செழித்து வளர்ந்திருந்த காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். அழகிய காட்சிகளைக் கலைஞர் மறப்பதும் உண்டோ?

அழகு மிக்க அந்தக் காட்சிகளை நினைந்து நினைந்து இன்புற்றவராய்ப் புலவர் மலைமீது ஏறிச்சென்றார்; உச்சியை நோக்கி மேற்சென்றார்; அங்கே ஒரு குகையின் அருகே பரப்பினாற்போற் கிடந்த பாறையின்மேல் இருந்தார்; சுற்றிலும் உள்ள காட்சிகளையும் வானத்தே தோன்றும் முகில்களையும் எல்லையற்றுப் பெருமை பெற்று விளங்கும் வெட்டவெளியினையும் நோக்கி நோக்கி அமைதிக் கடலுள் ஆழ்ந்தார். திடீரென ஓர் ஓசை கேட்டது. 'தட ததந்தயம் தம்' என்ற எதிரொலி அவர் அமைதியைக் கலைத்தது.

ஓசை கீழிருந்து வருதலை உணர்ந்து புலவர் கீழ் நோக்கிப் பார்த்தார். அவர் கண்ணிற்கு ஒன்றும் புலப்படவில்லை; மலைக் காட்சி போதும் என்று எண்ணி இறங்கத் தொடங்கினார்; வரும்போது சிறிது தொலைவில் களிறும் பிடியுமாக இரண்டு யானைகள் செருக்குடன் செல்வதைக் கண்ணுற்றார்; அவை சென்ற பிறகு தொடர்ந்து இறங்கிச் சென்றார்; செல்லும்போது ஓர் எண்ணம் எழுந்தது. அந்த உச்சியிற் கேட்ட எதிரொலிக்குக் காரணமான ஓசை இந்த யானைகளின் செயலால் எழுந்ததோ என்று எண்ணினார்; எண்ணிக்கொண்டே புன்னைமரங்களும் வாழைமரங்களும் செறிந்த சாரலில் வந்துற்றார்; ஏறும்போது தம் உள்ளத்தைக் கவர்ந்த மரச் செறிவை இறங்கும் இப்போது உற்று நோக்க விழைந்

தார் ; மரச் செறிவினிடையே சிதைவு கண்டார் ; சில வேறு பாடுகளும் கண்டார் ; நன்றாக அமைந்திருந்த நிலம் புழுதியாய்க் கெட்டிருத்தலைக் கண்டார் ; அங்கே யானைகளின் அடிச்சுவட்டையும் நோக்கினார் ; அந்த யானைகளே இந்த மரங்களை ஒடித்துப் போட்டிருக்க வேண்டும் என்று கருதினார் ; மரச் செறிவினிடையே புகுந்தார் ; அங்கே உயர்ந்தோங்கிய தேக்குமரங்களும் சந்தனமரங்களும் குறிஞ்சி மரங்களும் கிளை கிளையாய் ஒடிந்து சாய்ந்து இருக்கக் கண்டார் ; அருகில் உள்ள ஒரு பள்ளத்தில் மண் சரிந்து வீழ்ந்திருப்பதையும், அப்பள்ளத்தினுள்ளே மரக் கிளைகள் பல அடுக்கிக் கிடப்பதையும் கண்டார் ; கண்டதும் அங்கே திகைத்து நின்றார் ; மரங்களை ஒடித்து இப்பள்ளத்தில் இட்ட காரணம் என்னவோ என்று ஆராய்ந்தார் ; பள்ளத்துச் சரிவில் களிற்றின் பெரிய அடிச்சுவடுகளைக் கண்டு ஒருவாறு தெளிந்தார்.

"வாழைமரங்களின் வழியாக வரக்கண்ட அந்தக் களிறு இச்சரிவில் அகப்பட்டுப் பள்ளத்தே வீழ்ந்தது ; மேல்வர முடியாமல் வருந்தியது; உடன் வந்த பிடி அதற்காக வருந்தியது; பெருமரங்களின் கிளைகளையெல்லாம் ஒடித்துப் பள்ளத்தினுள்ளே இட்டு அடுக்கியது. அடுக்கிய மரத்துண்டுகளையே படியாகக் கொண்டு கால் வைத்து வைத்து மெல்ல மெல்லக் களிறு மேலே ஏறிவிட்டது; பிடி மகிழ்ந்தது. இவ்வாறு வெற்றி பெற்றதே அவற்றின் செருக்கிற்குக் காரணம்போலும்! இம்மரங்களை ஒடித்த ஓசையே உச்சியில் எதிரொலித்தது. 'தட ததத் தயம் தம்' என்ற எதிரொலிக்குக் காரணம் இதுவே. ஆ! எங்கிருந்து எழுந்த ஓசை எங்கே எதிரொலித்தது! யானைகளின் ஆற்றலே ஆற்றல்! இடுக்கண் உற்றபோது உதவும் அவற்றின் அறிவே அறிவு! அவற்றின் காதல் வாழ்வு எத்தகையது!" என்று இவ்வாறு புலவர் வியந்தார்; அந்த எதிரொலி அவர் செவியுனுள்ளே விடாது ஒலிக்கக் கேட்டார்: கேட்கும் போதெல்லாம் இந்நிகழ்ச்சியைக் கற்பனையாக அமைத்துக்கொண்டார்.[1]

இவ்வளவும் இயற்கைப் பொருள்கள்: இயற்கை நிகழ்ச்சிகள். சுற்றிலும் உள்ள மலை முதலிய நிலங்களையும்

அவற்றில் வாழும் உயிர்களையும் பாடுதல் இல்லதே. அஃது இயற்கைப்பாட்டு எனப்படும்.

---

1. பாட்டு 8. இதன் ஒரு பகுதியே இங்கு விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

2. "ஈயற் புற்றத்து ஈர்ம்புறத் திறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்"

3. "கேழல் அட்ட பேழ்வாய் ஏற்றை
பலாஅமல் அடுக்கம் புலர ஈர்க்கும்
கழைநரல் சிலம்பின் ஆங்கண்."

# 5. பசிக்குப் பகைவன்

[திரு. மொ. அ. துரை அரங்கசாமி, M.A. M.O L.]

நெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பால், அச் சோலையில் அவன் தன் மனைவிமக்களோடு தங்கினான். காற்றுத் தண் ணென வீசியது. மரமடர்ந்த சோலையாதலின், நறுமணமும் குளிர்ச்சியும் களைப்பை வெகு விரைவில் போக்கின. யாழும் குழலும் பிற இசைக்கருவிகளும் அடங்கிய காவடியைக் கட்டிக் கொண்டு அவன் புறப்பட எழுந்தான். 'இனி, நம் பசியும், வறுமையும் ஓட்டம் பிடிக்கப் போகின்றன,' என்ற எண்ணத் தால் அவன் முகத்தில் களிப்பு மிக்கது.

வயிறு வற்றிக்கிடக்க அவன் முகத்தில் களிப்புக் குறி யைக் கொண்டு, அவனிடம் ஏதோ சிறப்பு இருக்கவேண்டு மென்று எண்ணி, விரைந்து வந்து அவன் முன் நின்றான், அவன் இனத்தான் ஒருவன். அவனும், யாழ் குழல் முதலிய இசைக் கருவிகளைக் காவடியில் கட்டித் தோளில் ஏந்தியிருந் தான். வந்தவனை இதற்கு முன்பு அவன் அறியான்; அவனை யும் வந்தவன் அறியான்.

வந்த பாணன் இருந்த பாணனை உற்று நோக்கினான்! இருந்தவனிடம் பொருளோ உணவோ ஒன்றும் இல்லை. வந்த வனுக்கு அவனை ஏதாவது கேட்கவும் வாய்வரவில்லை. அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான். காரணமில்லாமல் பாணன் களிப்புக் கொள்வானானால், ஒரு வேளை வெறிபிடித்தவனோ என்று கூட வந்தவன் நினைத்திருக்கலாம்.

இருந்த பாணனுக்கு வந்த பாணனின் திகைப்பு வெளிச்ச மாயிற்று. அவனுக்கு உண்மை கூற, இருந்த பாணன் விரும் பினான்; தான் பெறப்போகும் இன்பத்தை அவனும் பெற நினைத்தான். பாண் சாதியர் இயல்பு அது.

'உனக்கு வறுமை தீரவேண்டும் என்ற விருப்பம் இருப் பின் என்னோடு வருகிறாயா ஈர்ந்தூருக்கு!" என்றான் இருந்த பாணன்.

"ஈர்ந்தூரா? அஃது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?"

"இதோ அருகில்தான் உள்ளது."

"அப்படி ஒன்றும் அருகில் பெரிய நகரமாகக் காணப் படவில்லையே! ஒரு சிறிய ஊராகத்தானே காணப்படு கிறது. அங்கே நம்முடைய இசையைப் போற்றும் அரசர் உளரோ? நம் வறுமையைப் போக்க அரசரால் அன்றோ கூடும்?"

"அறியாது கூறினாய்! 'பாண்பசிப் பகைஞன்' என்றே பட் டந் தாங்கிய ஒரு வள்ளல் ஈர்ந்தூரில் இருக்கின்றான். அவன் அரசன் அல்லன் என்பது உண்மையே; பாண்டியனிடம் படைத் தலைவனாக இருப்பவன். அம் முடிமன்னன் அவன் சிறப்புக் கண்டு ஈர்ந்துரை அவனுக்கு உரிமையாக்கி யிருக் கிறான். ஆகவே, அவனை ஈர்ந்தூர் கிழான் என்று வழங்குவர். ஆனால், அவன் தோயன் மாறன் என்ற பெயருடையவன்."

அப்படியா நான் அறியாது போனேன். பாண்டியன் படைத்தலைவனிடம் செல்வம் மிகவே இருக்கும். எனவே, நம் வறுமை தீரும். புறப்படலாம்!"

"புறப்படலாம் என்றது தக்கதே! ஆனால், அவனிடம் செல்வம் மிகவே இருக்கும் என்று கருதுகின்றாயே, அதுதான் இல்லை. அவனிடம், நாடோறும் விடாது தொடர்ந்து கொடுப்பதற்குரிய செல்வம் இல்லை."

"அப்படியானால், உனக்கு வேண்டுமானால், சிறிது கிடைக் கலாம். எனக்கு 'இல்லை' என்ற பதில்தானே வரும்!"

"அதுவும் இல்லை. தன்னை அடைந்தவர்க்கு 'இல்லை' என்று சொல்லி வெறுங்கையோடு அனுப்பவும் மாட்டான் அப்பெருமான்."

"நீ சொல்வது வியப்பாகவும் இருக்கிறது! முன்னுக்குப் பின் முரணாகவும் இருக்கின்றதே!"

"அவன் இயல்பு தெரிந்தால், நீ அவ்வாறு கருதமாட் டாய். அரசனுக்குப் பகைவரால் துன்பம் வருவது தெரிந்தால், உடனே அவன் போருக்குத் தானே புறப்பட்டுப் போவான்; பகைவர் பலராக அவனைச் சூழ்ந்துகொண்டாலும் வீரங் குன்றான். பகைவர் வாள் அவன் உடலைச் சுவைக்க எண்ணும். உடலைத் திருப்பிக்கொள்ள அவன் எண்ணான்; நன்றாகச்

சுவைக்க இடந்தருவான். அம்புகள் அவன் குருதி நாடிகளில் தோய்ந்து சுவையுறப் பருக எண்ணும். அவற்றிற்கும் தாகந்தீர அவன் இடமளிப்பான். ஊர் நடுவே மருந்து மரம் ஒன்று இருந்தால், ஊரிலுள்ளார், தமக்குத் தேவை நேர்ந்தபோதெல் லாம் அம்மரத்தின் பட்டையைச் செதுக்கிக்கொள்வது நாம் யாண்டும் காணும் காட்சியன்றோ? மரம், தன்னிடம் பட் டையை வெட்டிக்கொள்ளுதல் கூடாது என மறுத்தல் உண்டோ? அதனால் அது பட்டுப்போவதும் உண்டோ? அதுபோல், முகத்திலும், மார்பிலும், இனி வேறு ஒரு வாளோ அம்போ, வில்லோ வடுச் செய்வதற்கு இடமில்லை யாகும்படி முன்னரே அவன் வடுக்களைப் பெற்றுள்ளவன். அவ் வடுக் களே அவன் உடலை அழகு செய்யும் அணிகள். அத்தகைய வீரன், இல்லோர் யாரேனும் தன்னை நோக்கி வருவாரோ என்று பார்த்தவண்ணம் இருப்பான். அவன் ஒரு பெரிய வள்ளல்."

"வள்ளலாக இருக்கலாம்! கொடுக்க எண்ணம் இருக்க லாம்! பொருள் இல்லாவிட்டால் கொடுப்பது எப்படி? எனக் கொன்றும் புரியவே யில்லையே! நான் வேறு எங்கேயாவது போகிறேன். உன்னுடன் வருவதிற் பயனொன்றும் ஏற்படாது என்பதை நான் தெளிவாக அறிந்துகொண்டேன்."

"உண்மையை அறிந்துகொள்ளும் இயல்பு உன்னிடம் உள்ளது. நம் பாணர் குலத்திற்கே உண்மையறியும் உணர்வு நெருங்கிய தொடர்புடையது. ஆனால், நான் கூறுவதிலும் உண்மையிருக்கிறது என்பதை உணர்ந்து என்னுடன் வா."

"என்ன ஐயனே! பொருளில்லாதவன் பொருள் எப் படிக் கொடுக்க முடியும்? அவனைப் பார்த்தால், கேட்கத் தான் எப்படித் தோன்றும்?"

"நம் குல இயல்பு, கேட்டுப் பெற்று உண்டு உவகை கூர் வதே! ஆகவே, யான் அவனிடம் செல்வேன். அவனிடம் பொருள் இராதுதான்! அவனை நான் இரக்கவும் பின்வாங் கேன். உடனே கொல்லனை அவன் வரவழைப்பான்."

"கொல்லனையா? எக் கொல்லனை? எதற்காக? இன்ப புரிக்குப் பயணச் சீட்டுத் தருவதற்கா?"

" அப்படியெல்லாம் அந்த வள்ளலைப்பற்றி நினைப்பது பெரும் பாவந்தரும். போர் வாள் வில் முதலியன வடித்துத் தரும் இருப்புக் கொல்லனைத்தான் அவன் வரவழைப்பான்."

" வரவழைத்துப் பின் யாது செய்வான்?"

" நான் மாறனை இரந்த முறையில், மாறன் கொல்லனை இரப்பான்."

" கொல்லனை இரந்தால் பொருள் கிடைக்குமோ? அவனிடம் பொருள் மிகுதியும் உண்டா?"

" திருத்தமான நிலையையுடைய நீண்டதொரு வேலை வடித்துத் தருவாயாக!" என்று மாறன் கொல்லனை இரப்பான்.

" வேல் எதற்கு? ஒரு வேல்கூடவா படைத்தலைவனுக்குப் பஞ்சம்?"

" வேல் எதற்கா? அது பொருள் தரும்! வேலை ஏந்திக் கொண்டு, உடனே பகைநிலத்தில் உள்ள ஊரில் செல்வமிக்கவர்களை அடைந்து அவன் பொருள் கேட்பான்; இல்லையென்று மறுத்தால் வேலைக் காட்டுவான்; அதற்கும் இசையார் எனின், வேலிற்கு அவர்களை உணவாக்கிப் பொருள் கொண்டுவருவான். எல்லாம் நொடிப் பொழுதில் நிகழும். பெரும்பான்மையாக, யாவரும் கேட்டவுடனே பொருள் கொடுப்பதில்லை. ஆகவே, வேல் அடிக்கடி பகைவர் மார்பில் புகுந்து கூர்மையிழக்கும்; சிறிது சிதையவும் சிதையும். ஆகவே, படைகள் எல்லாம் ஓயாமல் வேலை செய்து செய்து கொல்லன் கூடத்திற்கே திரும்பிச் செல்லுமே ஒழியப் படைக்கலக் கொட்டிலில் சிறிதுநேரமும் தங்கி ஓய்வு பெறா. அங்ஙனமாக, அவனால் ஒருவேல்கூட நல்ல நிலையில் வைத்திருக்க முடிவதில்லை."

" அதற்கு இரப்பானேன்? 'வடித்துக்கொண்டு வா' என்று அதிகாரத்தோடு கொல்லனைக் கேட்கலாகாதா?"

" பலமுறை வடிப்பவனுக்கு வெறுப்புத் தோன்றலாமன்றோ! அது கண்டால், இரக்கச் செல்லும் நமக்கும் மனவேதனை ஏற்படுமே! 'ஏன் அங்கே இரக்க வந்தோம்' என்றுகூட எண்ணிவிடுவோம் அல்லவா? ஆகவே நம் சுற்றத்தார் பசியால் சுருங்கிக் கிடக்கும் வயிற்றைச் சுட்டிக் காட்டி, இனிய

சொல்லினால், 'அருள் கூர்ந்து உடனே ஒரு வேலை வடித்துத் தருவாயாக', என்று இரப்பு மொழியிலேயே அவன் கூறுவான் 'இரக்க இரத்தக்கார்க்காணின்' என்பது அருமறையன்றோ?"

"உண்மையிலேயே நல்ல வள்ளல்! பண்பாடு மிக்க வள்ளல்! அறியாது கூறிவிட்டேன். எழு போவோம்."

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே;
இறையுறு விழுமம் தாங்கி, அமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து,
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடைஎதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்;
இன்மை தீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ முதுவாய் இரவல!
யாந்தன் இரக்குங் காலைத் தானெம்
உண்ணு மருங்கு காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே."

(புறநானூறு 180)

[நிரப்பாது கொடுக்கும் - நாடோறும் தொடர்ந்து கொடுக்கும்; விழுமம் - துன்பம்; இரும்பு - படைக்கலம்; விழுப்புண் - சிறந்தபுண்; கருங்கை - வலியகை.]

# 6. வாழ்க்கையும் கலைகளும்

[திருமதி. ருக்மணி தேவியார்]

வாழ்க்கையில் கலைகள் பெற்றுள்ள இடம் யாது? வாழ்க்கைக்கு அவை ஏன் அவசியமாகும்? இதனை ஆராய்வோம்: இக்காலத்தில் கலைகளுக்காகப் பாடுபடுகின்றவர்களுக்குச் சில வசதிகளும் பல இடையூறுகளும் தோன்றியுள்ளன. இந்தியா அழகுக்கு இருப்பிடமாக இருந்தபோதிலும், பல வேறு துறைகளில் கலை அழகைப்பெற்றிருந்த போதிலும், கலைகளின் இன்றியமையாமையை ஒரு காலத்தில் உணர்ந்திருந்த போதிலும், தற்கால இந்தியாவில் சில காலமாகக் கலைகளையும் அவற்றைப் பற்றிய கொள்கையையும் நாம் மறந்துவிட்டோம். இப்பொழுது தான் நாம் விழித்துக்கொண்டு நிதானமாகக் கலையுணர்ச்சியை வளர்க்கத் தொடங்கியுள்ளோம். இந்த ஆக்க வேலை நமக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. ஏனென்றால் மனித சமூகத்துக்கு ஆத்மிக உணர்ச்சி தோன்றினாலொழிய உண்மைக் கலையுணர்ச்சியை உண்டாக்க இயலாது. வாழ்க்கையும் கலையும் ஒன்றியுள்ளன. ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தல் இயலாது.

## ஆத்மிக வாழ்வு

மனித சமூகம் என்று ஆத்மிக வாழ்வைப்பெறுகின்றதோ அன்றே அது அருங்கலைகளை உண்டாக்கக்கூடும். மனித சமூகம் என்று அருங்கலைகளை, அழகினைத் தோற்றுவிக்கின்றதோ, அன்றே அது ஆத்மிக வாழ்வை அடையக்கூடும். கலையும் ஆத்மிக வாழ்வும் இங்ஙனம் ஒன்றோடொன்று தொடர்புடையதாகும். இதனை அறியாத பலர், "கலை ஒரு பொழுது போக்கு, அது ஒரு விநோதம்" என்று கருதுகிறார்கள். உண்மையில் அது பொழுது போக்கும் விநோதமும் அன்று. இந்த எண்ணம் ஒழிந்து கலையும் வாழ்வும் ஒன்று என்ற உணர்ச்சி வந்தாலொழிய மகிழ்ச்சியை-கலைகளினின்றும் பழுத்து வரும் மகிழ்ச்சியை-வாழ்க்கையை அழகுபடுத்தும் மகிழ்ச்சியை நாம் நன்கு உணர்ந்துகொள்ள இயலாது. இக்கொள்கை இந்தியாவுக்குச் சிறப்பாகப் பொருந்தக் கூடியது. இந்திய சரித்திரத்தில் ஒரு புதிய கட்டத்தை நாம் இப்பொழுது அடைந்திருப்பதனால்

இந்தியாவுக்குத் தொன்று தொட்டு உரிமையாயிருக்கும் ஆத்மிக வாழ்வைப் பழையபடி நாம் கொண்டுவர முயலவேண்டியவர்களாகிறோம். ஆத்மிக வாழ்வோடு, ஆத்மிக அழகையும் பழையபடி உயிர்ப்பிக்கக் கூடும் என்பது என் துணிவு.

**கலை**

நிறம், வடிவம், ஒலி முதலியவற்றுள் உள்ளது கலை என்று நினைப்பது சரியாகாது. வாழ்க்கையின் உண்மைத் தத்துவமே கலை ; உள்ளமைந்துள்ள ஆத்மிக அழகின் வெளித் தோற்றமே-சாரமே - அது. பகவத் கீதையில் நாம் எதனைக் காண்கிறோமோ, உபநிஷத்துக்களிலும் இராமாயணத்திலும் எதனைப் பார்க்கிறோமோ, பெரும்புலவர்களின் கவிகளில் எதனைக் கண்ணுறுகிறோமோ, இந்தியாவில் வழங்கும் பலவேறு மொழிகளிலுள்ள அரிய நூல்களில் எதனைப் பார்க்கிறோமோ, மற்றும் பெரிய யோகிகளின் இருதயத்தில் தங்கியுள்ளது எதுவோ, வாழ்க்கையின் உயரிய தத்துவத்தை நூல்களின் வாயிலாகக் காட்டும்படி மகான்களைத் தூண்டியது எதுவோ அத்தகையதொன்று சிலைகளிலும், சிற்பங்களிலும், நிறங்களிலும் இசையிலும், நாட்டியத்திலும் பலவேறு ரூபங்களுடன் பரிணமித்துள்ளது. எப்படியென்றால், யோகிகளுக்கு நடராஜருடைய நாட்டிய தத்துவம் நோக்கமாகிறது; பக்தர்களுக்கு இசையுணர்ச்சி உயிரளிக்கிறது ; தியானிகளுக்கு நிறத்திலும் பாட்டிலும் உருவம் புலப்படுகின்றது; சாதாரண மக்களுக்கு அவர்கள் அணியத்தக்க அழகிய உடைகளிலும், களிமண்ணால் செய்யப் பெற்ற அழகிய மண்பாண்டங்களிலும் பிற கைத் தொழிலின் பயனாகத் தோன்றியுள்ள பலவேறு செய்பொருள் களிலும் அக்கலை காட்சியளிக்கிறது. இந்தவிதமாகக் கலையானது எல்லாருக்கும் உரிய பொருளாக இருக்கிறது.

உலகிலுள்ள அறிவாளிகளுக்கு எப்படியோ, அப்படியே சாதாரண மக்களுக்கும் கலை சொந்தமாக இருக்கிறது. வாழ்க்கைக்கு இது மிகவும் இன்றியமையாதது என்று நாம் உணரும் போது வாழ்க்கையிலிருந்து மதத்தையோ, வேதாந்தத்தையோ கல்வியையோ, கலையையோ, வாழ்க்கையிற் காணப்படும் சகஜமானவற்றையோ வேறு பிரித்தல் சாத்தியமாகாது. இவை எல்

லாம் ஒன்றோடொன்று பிணைப்புண்டுகாணப்படுவன. நாம் ஓர் உடலைப் பெற்றிருக்கிறோம்; உணர்ச்சிகளை உடலின் மூலமாகக் காட்டக் கூடியவர்களாக இருக்கிறோம்; சாதாரண வீடுகளில் வசிக்கிறவர்களாக இருக்கிறோம். வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவையும் அதனைப் போன்ற பிற பொருளையும் உபயோகிக்க வேண்டியவர்களாகின்றோம். இதே சமயம் அழகின் சூழ்வைப் பெற்றுள்ள ஆத்மிக வாழ்க்கையும் இன்றியமையாததாகிறது. ஏனெனில் அழகொன்றே ஆத்மாவைத் திருப்திப்படுத்தத் தக்கது. ஒன்றை உண்டுபண்ணும் சக்தியை இருதயங்களுக்கு அளிப்பதும் அவ்வழகுதான். இவ்வழகு கலையுருவில் மேலே கூறியவற்றிலெல்லாம் பரிணமித்துள்ளது.

## அழகின் தத்துவம்

"கலைகள் இருந்து என்ன பயன்? கலைகளைவிட முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள் இல்லையா? முதலில் அவசரமாகச் செய்யத்தக்கது வேறொன்றும் இல்லையா?" என்று சிலர் கேட்கக்கூடும். அவசரமாகச் செய்யத் தக்க வேறு காரியம் உண்டு என்பது உண்மையே; ஆனால் அவசரமாக உள்ளதன் பொருட்டு நாம் உழைப்போமானால் எதிர்கால நாகரிகப் பண்பாட்டுக்காக உழைப்பவர் ஆகமாட்டோம். அநாகரிகத்தை உண்டுபண்ணுபவர் ஆவோம். கலையின்றி அழகின்றி நாம் செயலாற்ற இயலாது.

அழகின் தத்துவம் தனிமையானது; முதன்மையானதும் அதுதான். அழகென்பது கண்களாலும் காதுகளாலும் அறியக்கூடிய ஒன்று அன்று; அது ஆத்மிகப் பொருள். ஐம்புல நுகர்ச்சிக்கு உட்பட்டதன்று. எனினும் ஐம்புலன்களால் அதனை உணர்ந்து கொள்ளுதல் சாத்தியமே. அதற்கு ஓர் உருவம் இருந்தபோதிலும் அது ஆத்மாவாலேயே அறியப்படுகிறது. அதனாலேயே நுகரவும்படுகிறது. இத்தகைய கலைக்கு இலக்கணம் கூற இயலாது.

ஏனெனில் ஒரு சிற்பத்தைக்கண்டு ஒருவர், "இது அழகாக இருக்கிறது" என்றால் மற்றொருவர் அதனையே 'அழகில்லை' என்கிறார். இவற்றைக் கேட்ட சாதாரண மனிதர், "நாம் எவர் பேச்சை நம்புவது?" என்று திகைக்கிறார். இந்த விதம் நம்முள்

இருவர் ஒரு விஷயத்தில் மாறுபடுகிறோம். வக்கீல்களும் அரசியல் வாதிகளும் போலவே கலைஞர்களும் தம்முள் அபிப்பிராயபேதம் கொள்கின்றனர். அடிப்படைத் தத்துவங்களில் எவருக்கும் வேறுபாடு தோன்றுவதில்லை. புலன்களுக்கு எட்டாத தோற்றமும் உண்டு. அத்தகையவற்றின் நுகர்ச்சியில் இருவருக்கு வேற்றுமை காணப்படுவதில்லை. ஏனெனில் பேதத்தைக் காட்டும் கண்கள் அதனைக் காண்பதில்லை; வேற்றுமைப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்ட காதுகள் அதனைக் கேட்பதில்லை. பயிற்சி பெற்ற மனத்தால் நுகர்கிறோம். அதனை அநுபவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். அறிந்து கொள்ள வழி தேட வேண்டும். எங்ஙனம் அறிவது? பண்பாடிருந்தாலொழிய ஒருவர் அதை அறிய முடியாது. அழகின் சூழ்வில்லாதவர் பண்பாட்டைப் பெற முடியாது. அவருடைய சூழ்வு அழகாக இருக்க வேண்டுமானால் அவர் பண்பாடுடையவராக வேண்டும். இப்படி இவை ஒன்றையொன்று பிணைந்துள்ளன.

### நாகரிகம்

நாகரிகம் என்பது யாது? கலைகள் நாகரிகத்துக்கு எப்பொழுதேனும் உதவியிருக்கின்றனவா? நாகரிகம் எதை உண்டாக்கியிருக்கின்றது? அது சிறந்த பண்பாட்டை உண்டாக்கியிருக்கின்றது. எங்கெங்கே நாகரிகம் உயர்ந்துள்ளதோ அங்கங்கே கலைகளும் சிறந்து விளங்கும். கலைகள் ஜீவசத்து: சமூக இயல்பைக் காட்டுவன. "கலைகள் நமக்கு என்ன சாதித்து விட்டன?" என்று ஒருவர் கேட்கலாம். இந்தியா பழங்கால முதல் மகான்களை உண்டாக்கியது; அறிஞர்களைத் தோற்றுவித்தது: அறிவின் கருவூலமாகத் திகழ்ந்தது! அத்தகைய இந்தியாவில் இன்று பிணக்கும் பூசலும் கொடுமையும் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன! கலையுணர்ச்சி இன்மையே இவ்வளவுக்கும் காரணம். "கலைகள் நமக்கு என்ன சாதித்து விட்டன?" என்று கேட்பதற்குப் பதிலாக, "கலைகள் இல்லாவிட்டால் சமூக நிகழ்ச்சிகள் எங்ஙனம் இருக்கும்?" என்று ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள்!

இக்காலத்தில் உலகம் கொடுமை நிறைந்துள்ளது அதனால் எத்தேசத்தாரும் தற்சமயம் நாகரிகம் உடையவர்கள்

என்று நான் நினைக்கவில்லை. ஒரு சமயம் ஜவாஹர்லால் நேரு, 'இந்தியா ஒரு சேற்றுக் குழம்பு' என்று கூறினர். அவர் கூறிய சந்தர்ப்பத்துக்கு அவ்வுருவகம் பொருத்தமானதே. ஆனல்; சேற்றுக் குழம்பு என்று நாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்க முடியுமா? இச்சேற்றுக் குழம்பில் நல்ல தாமரை மலர் எழுக் கூடும் அல்லவா? சேற்றிற் பிறந்த தாமரைபோல் வருங்கால இந்திய வாழ்க்கை விளங்கக்கூடும். பழங்காலப் பெருமை மீளும் நாள் உதயமாகி விட்டது! பழைய இந்தியாவைப் புதுப்பிக்கும் நாள் தோன்றிவிட்டது! கலைகளின் பண்பு அந்த ஆக்க வேலைக்கு உதவி செய்ய வேண்டும். அழகு தேசியத் தோடு இணைப்புண்டு நின்றுவிடுவதன்று. பழங்கால கிரீஸ் தேசத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். கிரேக்கக் கலைகளை, கிரேக்கருடைய கவிதையை, நாடகத்தை நோக்குங் கால் கிரேக்க நாடு உலகத்துக்கே புது பெருக்கு கொடுத்தது நம் நினைவுக்கு வருகின்றதல்லவா! அங்ஙனம் எந்த நாட்டிலும் சிறந்த கலைகள் ஓங்குமாயின் அந்நாட்டின் பிணிப்புக்குள் மற்றைய நாடுகள் வசமாய்விடும். பல சமூகத்தினர் அன்பு முறையில் பழக அப்பொழுது வாய்ப்பு ஏற்படும்.

### நவ பழங் கலைகள்

உண்மைக் கலைகளுக்கு ஜாதி மத தேச நிற வேறுபாடுகள் இல்லை; அவை ஆத்மிகமானவை; அடக்கமுள்ளவை; தூய்மையானவை. இத்தகைய இந்தியக் கலைகளை ஆத்மிக வாழ்க்கைக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாம் இந்தியாவுக்கு உண்மைத் தொண்டாற்றினவர் ஆவோம். நம் பழங்கலைகளை உயிர்ப்பிக்காமல் பிறநாடுகளின் மாதிரிகளை இங்கேயும் உண்டாக்க நாம் முயன்றால், இந்தியா ஒரு காலத்திலும் மற்ற தேசங்களின் முன்னிலையில் விளக்கம் பெருது. மற்றொரு சமூகத்தாருக்கு அடிமைகளாக இல்லாதபடி நாம் சுதந்தரத்தைப் பெற்றுவிட்டோம் என்ருலும் அந்நிய நாடுகளின் கருத்துக்களுக்கு நாம் அடிமைகளாக இன்னும் இருந்து வரும்வரையில் ஆத்மிக அடிமையிலிருந்து நீங்கினவர்கள் ஆக மாட்டோம். நாளடைவில் நமமுடைய பழந் தூய உணர்ச்சிகளை-புதியனவற்றை உண்டாக்கும் சக்திகளை இழந்துவிடுவோம்.

கலையைத் தவிர அதி முக்கியமான காரியம் இல்லை என்று கூற முடியாது. ஒவ்வொரு செயலும் முக்கியமே. கலை கல்வியைவிட முக்கியமானதென்று சொல்ல முடியுமா? ஆனால் உண்மையை நோக்கும்போது கலையின்றிக் கல்வியில்லை. கலையையும் கல்வியையும் தனித்தனியே பிரித்துக் காண்பது இயலாது. ஒருவர் சர்வகலாசாலையில் பல பட்டங்களைப் பெற்றிருக்கலாம். பட்டதாரிகளெல்லாம் பண்பாடுடையவர்கள் என்று சொல்வதற்கில்லை. பண்பாடற்ற பட்டதாரிகள் 'கற்றவர்' ஆவதெப்படி? உண்மைக் கல்வி ஆத்மிகமானது; வாழ்க்கையின் அழகிய நுட்பங்களைக்கண்டு வியக்கக் கூடியது அது. இந்தப் பொருளில் எல்லாரும் கற்றவர்கள் ஆகவேண்டும்.

நம் நாட்டில் பெண்மையினிடம் அழகு இருக்கின்றது. அழகுக்குப் பெண்மையே எடுத்துக்காட்டு. அழகின் உருவைத் திருமகளாகக் கொண்டது இந் நாடு. திருமகள் தாமரையில் உதயமானாள். தாமரை அழகின் சோலை. அத்திருமகள் இன்று எங்கே உள்ளாள்? அவள் கடலில் மூழ்கியிருக்கிறாள். இது நீர்க்கடலுமன்று; பாற்கடலுமன்று. கொடுமைக் கடல் துன்பக்கடல்; துக்கக் கடல். அவளை மீட்டுக்கொண்டு வரும் முயற்சிகள் நாட்டில் நடைபெற வேண்டும். ஒப்புரவு, அன்பு அருள் எங்கும் இவைகள் மலிந்தால் அவ்வழகி தானாக வந்து விடுவாள்.